# கலைக் கல்வி
# வளநூல்

**எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை**

கேரள அரசு
கல்வித் துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்களுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

State Council of Education Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala.
website : www.scert.kerala.gov.in
email : scertkerala@gmail.com
phone : 0471-2341883, Fax : 0471-2341869
First Edition : 2014
Printed at : KBPS, Kakkanad, Kochi

நண்பர்களே,

கல்வி உரிமைச் சட்டத்தின்படி, கலைக்கல்வி பிற பாடங்களின் அதே முக்கியத்துவத்துடன் நடைமுறையில் வரப்போகிறது. இதனடிப்படையில் ஒன்றாம் நிலை முதல் ஒழுங்கு முறையிலான பாடத்திட்டம் உருவாக் கப்பட்டுள்ளது. இதற்கேற்ற வகுப்பறைச் செயல்பாடுகளுக்கு உதவும் வகையில் ஆசிரியர்களுக்கான வளநூற்கள் எஸ். ஸி. ஆர். டி தயாரித் துள்ளது.

ஓவியக்கலை, இசை, நடனக்கலை, நாடகம் ஆகிய நான்கு துறைகள் கலைக்கல்வியில் உள்ளடங்கி உள்ளன. இவை ஒவ்வொன்றினுடைய வும் கற்றல் அடைவுகளும், கருத்துகளும், திறன்களும், கற்றல் செயல் பாடுகளும், மதிப்பீட்டு முறைகளும் இங்கே விளக்கப்பட்டுள்ளன. ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை, ஐந்தாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை, எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை என மூன்று புத்தகங்களாக வளநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நமது பொதுக் கல்வி நிலையங்களில் கலைக்கல்வி, செயல்பாட்டுத் திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கு இது அதிக அளவில் உதவும் என எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**

இயக்குநர்,

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## Text Book Committe Members

- Kunji Raman, Puthussery, Chathothu, Lectues, DIET, Ernakulam
- R. K. Ramadhas, Lecture, DIET, Thiruvananthapuram
- N. Prasad, Lecture, DIET, Kollam
- Dr. K.S. Vasudevan. Lecture, DIET, Kozhikodu
- Sunil kumar, Lecture, DIET Kannoor
- Dr. Gokuldason Pillai, Curriculam Expert (Rtd) SCERT Kerala
- Dr. Venugopu, Reserch Officer ( Rtd) SCERT kerala
- Dr. M.S. Radhakrishnan Seniar Lecture, (Rtd) DIET
- Dr. K. G. Rajan, Senior Lecture (Rtd) DIET
- Dr. Vineetha, Nedunkadi
- C. Rajendran, A.V.Govt. B.H.S.Thazhava
- B. Karthikayan Pillai G. V. H. S.S Poruvazhi
- B. Sunilkumar, Pavandoor, H.S .S Kozhikodu
- Madhusudhanan. Govt. M. H. S. S. Koyilandi
- V. Vargese Kalathil GVHSS Pallikkunnu, Kannoor
- Dr. Abdul Latheef GVHSS NGO Querters, Kozhikode
- Swarna Chandroth, Thottada North LPS kannoor
- B. Premalatha. GVHSS Kottakkulangara, Chavara
- M. Jeyakrishnan GUPS Manjeri
- T. Pradheepkumar CHM KMHS Kavananeer, Malappuram
- M.P. Balakrishnan, GVHSS North, Edappalli
- M.G. Sethunathan Pillai GVHSS Vadakkathukavu, Adoor.
- C. V. Anoop SSDHSS, Lakkidi
- P. D. Revamma, KPRGHSS Kalyeseri, Kannoor
- G. S. Jeyalakshimi, Govt. HSS Karikullam
- R. Prasannakumar Govt. HSS Kadammenitta
- M. V. Sindhu GVHS Agali
- Kalamandalam Sathyavrithan, M K K R Girls HSS Chelannor
- Dr. P. A.Mary Litty CCPL MAIHS Perumanoor , Ernakulam
- C. S. Rajendran HSA ( Rtd)
- M. Sreeharsan Nambrthukara UPS Koyilandi, Kozhikode
- Ramesh Kavil Govt. LPS Azhchavottam, Kozhikode
- Subash Chandra Bose D. P. GHSS. Konni

## Acadamic Co- Ordinator

- Dr. N. Gopalakrishna Piillai. Research Officer SCERT, Kerela.

# உள்ளடக்கம்


1. கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013 - பொதுஅணுகுமுறை ........ 7
2. கலைக்கல்வி- முக்கியத்துவம் ........ 32
3. கலைக்கல்வி அணுகுமுறை ........ 36
4. கலைக்கல்வி- பல்வேறு துறைகள் ........ 40
5. கலைக் கல்வி- மதிப்பீடு ........ 45
6. கலைக்கல்வி- அமைப்பு ........ 50
7. கலைக் கல்வி - உள்ளடக்க விவரங்கள் ........ 51

7.1 ஓவியக் கலை ........ 52
- எட்டாம் நிலை ........ 54
- ஒன்பதாம் நிலை ........ 75
- பத்தாம் நிலை ........ 99

7.2 இசை ........ 116
- எட்டாம் நிலை ........ 118
- ஒன்பதாம் நிலை ........ 136
- பத்தாம் நிலை ........ 156

7.3 நடனக்கலை ........ 180
- எட்டாம் நிலை ........ 182
- ஒன்பதாம் நிலை ........ 191
- பத்தாம் நிலை ........ 199

7.4 நாடகம் ........ 211
- எட்டாம் நிலை ........ 213
- ஒன்பதாம் நிலை ........ 220
- பத்தாம் நிலை ........ 230

பிற்சேர்க்கை - 1 செயல்பாட்டு நாட்காட்டி ........ 240
பிற்சேர்க்கை - 2 மாதிரி வினாத்தாள் ........ 252

# 1. கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013 பொது அணுகுமுறை

## 1.1 முன்னுரை

இந்தியாவில் வாழ்க்கைத் தரத்தில் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் மாநிலம் கேரளமே. பொதுக்கல்வி, கேரள மக்களின் சுகாதாரம் இவற்றின் மேன்மை களே கேரளத்தின் இச்சிறப்புக்கு காரணம். சமூகத்திலுள்ள எல்லா குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்திருந்தாலும் அவர்களுக்கு தரமான கல்வி அளித்தல் என்பது கல்வித் துறை எதிர்கொள்ளும் மிக்பெரிய சவாலாகும். 1986- இல் ஆரம்பிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின்படி தரமான கல்வியை நோக்கமாகக்க கொண்டு அடிப்படை வச திகளும் ஆசிரியர் பயிற்சிகளிம் நடத்தப்பட்டன. இத்துடன் பாடத்திட்டத்தைக் குழந்தை மையமாகவும், செயல்பாட்டு வழியிலும், செயல்முறை அடிப்படையிலும் காலத்திற்கேற்ப மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்தன. இதன் பயனாக அறிவாக்கம் குழந்தைகளிடம் சுயமாக நடக்கும் செயல்முறை என்பதை நாம் கண்டடைந்தோம். இதன்முலம் குழந் தையை மையமாகக் புதிய கற்றல் செயல்முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் அன்றாடம் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற் கேற்ப கற்பிக்கும் முறை, கற்றல் உளவியல், கற்றல் துணைக்கருவிகள், கற்றல் அனுப வப பரிமாற்றம், மதிப்பீடு போன்றவற்றிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அனைத்து பிரிவு குழந்தைகளின் கற்றல் வளர்ச்சியை நாம் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

“வேறுபட்ட சமூக பொருளாதாரச் சூழல்களிலிருந்து வரும் குழந்தைகளாலும் வேறு பட்ட உடல் உள்ளத் திறனுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பதற்கும் பள்ளிக்கூ டங்களில் வெற்றி கல்வியில் பெறுவதற்குமான வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஆண், பெண், சாதி, மொழி, பண்பாடு, மதம், உடற்குறைகள் இவைமூலம் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளை எதிர் கொள்ளும் கொள்கைகளும் சட்டங்களும் மட்டும் போதாது. மாறாகக் குழந்தைப் பருவம் முதலே பொருத்தமான கற்றல் நோக்கங்களையும் கற்பித் தல் முறைகளையும் தேர்ந்தெடுத்து வடிவமைக்க வேண்டும்” (N.C.F. 2005 Page-27)

- பலதரப்பட்ட சமூக பொருளாதாரச் சூழலை உடையவர்கள்
- பலதரப்பட்ட உடல் உளத் திறனுடையவர்கள்.

இவ்வாறு எல்லா பிரிவைச் சார்ந்த குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற கற்றல் செயல்முறைகளின் எல்லா மண்டலங்களிலும் நுட்பமாகவும் நுணுக்கமாகவும் மாற்றங்களை

ஏற்படுத்த வேண்டுமென NCF கூறுகிறது . காலத்திற்கேற்பப் பாடத்திட்டத்தைச் சீரமைத்து கல்வியைச் செயல்படுத்தும் அமைப்புகள் சீராகச் செயல்பட்டால் மட்டுமே இந்த நோக்கத்தை அடைய முடியும். இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் தற்போது பாடப்புத்தகம் சீரமைக் கப்படுகிறது. கல்வித் தொடர்பாக செயல்படும் வல்லுனர்களின் அனுபவங்களையும், கண்டு பிடிப்புகளையும், ஆராய்ச்சிகளையும் ஒருங்கிணைத்து இச் சீரமைப்பு நடைபெறுகிறது. சரி யானதிலிருந்து மிகவும் சரியானதை நோக்கி என்ற அணுகுமுறையே இங்குக் கடைபிடிக்கப் பட்டுள்ளது.

## 1.2 பாடஏற்பாடு சீரமைப்பின் முக்கியத்துவம்

கடந்த 5 வருட காலமாகக் கல்வித்துறையில் ஏராளம் நவீன கொள்கைகள் உருவாகி உள்ள ன. இந்தியாவில் 2009 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி உரிமைச் சட்டம் குழந்தைக ளுக்குத் தரமான கல்வி அவர்களின் உரிமை அடிப்படையிலான பள்ளிக்கூடம் (Right based Educational Institution) என்ற நோக்கத்தை அடைய முழுப் பள்ளி மேம்பாட்டுத் திட் டத்தை நடைமுறைப்படுத்த நமது ஏற்பாட்டை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டும். சர்வ தேச தரம் என்பது ஏதேனும் ஒரு நாட்டின் நிலையல்ல. மாறாக ஒரு குறிப்பிட்ட கால அள வைக் கடந்து செல்லும் குழந்தை உலகில் எங்கிருந்தாலும் காலத்திற்கேற்ற அறிவுகளையும் , கற்றல் அனுபவங்களையும் பெற வேண்டும். ஆகவ் உலகளாவிய நிலையில் செயல்ப டுத்தப்பட்ட நவீனமாக சிறந்த கற்றல் கற்பித்தல் உத்திகள் கேரளக் குழந்தைகளுக்கும் கிடைக் கும் வேண்டும்..

கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பாட ஏற்பாடு, மதிப்பிடுதல் ஆகியவை தொடர் பான சட்டங்களை பாடத்திட்ட சீரமைப்பிற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

---

### கல்வி உரிமைச் சட்டம் – 2009
### பிரிவு – 29 (அத்தியாயம் 5)
### பாடஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும்

*(1) ஆரம்பக் கல்விக்கான பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும் அரசு அறிக்கை மூலம் குறிப்பிடும் ஒரு கல்வி அமைப்பினால் செயல்படுத்தப்பட வேண்டும்.*

(2) கல்வி அதிகார நிலை 1- ம் துணைபிரிவின்படி பாடத்திட்டமும் மதிப்பீட்டையும் செயல்முறை வரிசையையும் செயல்படுத்தும் போது கீழே வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் :-

*(a) அரசியலமைப்பில் வலியுறுத்தப்படுகின்ற மதிப்புகளுக்கு பொருத்தமாக அமைதல் வேண்டும்.*

*(b) குழந்தையின் பன்முக வளர்ச்சி*

*(c) குழந்தையின் அறிவும் திறனும் புலமையும் படிப்படியாக வளரச் செய்தல்.*

*(d) உடல் உளத் திறமைகளின் முழு வளர்ச்சி*

*(e) குழந்தைக்கு நெருக்கமானதும் குழந்தைமையமானதுமான செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் இவற்றின் மூலம் கற்றல்.*

*(f) கற்பிக்கும் மொழி குழந்தையின் தாய்மொழியில் அமைய வேண்டும்.*

(*g*) *பயம், மனதைக் தாக்கும் சூழல் ஆதங்கம் போன்றவற்றிலிருந்து குழந்தையை விடுவித்து, சுதந்திரமாகக் கருத்தை வெளியிடக் குழந்தைக்கு உதவ வேண்டும்.*

(*h*) *குழந்தை பெற்றுக் கொண்ட அறிவுரை அதைச் செய்படுத்தும் திறமை இவற்றை மதிப்பீடு செய்தல்.*

---

கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில் தொடர்ச்சி மற்றும் முழுமையான மதிப்பீட்டை நடத்துவது நமது தலையாய கடமையாகும். இதை உறுதி செய்யும் வகையில் பாடத்திட்டத்தைச் சீரமைப்பது இன்றியமையாதது. இந்தச் சூழலின் அடிப்படையில் தான் நாம் பாடத்திட்ட சீரமைப்பைப் பார்க்க வேண்டும்.

கேரளப் பள்ளிப் பாடத்திட்டம் (2013) இன் தனித்தன்மைகள் என்னவென்று பார்க்கலாம்.

1. குழந்தை மையமானதும் செயல்முறைகளுடன் இணைந்ததும் சிறந்த செயல்பாடுகளுடையதும் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டதுமான பாட ஏற்பாட்டை அமைக்க வேண்டும்.

2. பௌதீக நிலையிலும் செயல்முறையிலும் மனநிலையிலும் குழந்தைகளைச் சென்றடைய வேண்டிய கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்தும் அளிக்க வேண்டும்..

3. அறிவாக்கம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

4. கல்விப் பரிமாற்றச் செயல்களில் பலவிதமான யுக்தி பூர்வமான கற்றல் உத்திகளைக் கையாளவும் உபயோகிக்கவும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும்.

5. கற்றல் அடைவு, பொருளடக்கத் தன்மை குழந்தைகளின் பல்வேறு தரம் போன்றவற்றைப் பிரித்தறிந்து பல்வேறு கற்றல் கற்பித்தல் உத்திகளைச் செயல்படுத்த வேண்டும்.

6. இலவசமாக அனைவருக்கும் கல்வி அளித்தல் என்பது போலவே அனைத்துக் குழந்தைகளின் கற்றல் அடைவுகளை உறுதி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

7. மழலைப் பள்ளி முதல் மேனிலைப் பள்ளி வரை ஒன்றாகக் கருத்திற் கொண்டு பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு வகுப்பிலும் வெவ்வேறு பாடங்களின் உள்ளடக்கம் தேசிய அளவில் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களுக்கு இணையாக கேரளத்திலும் புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்..

9. தேசிய அளவிலுள்ளதைப் போன்று ஒன்று இரண்டு வகுப்புகளில் தாய்மொழி ( சுற்றுச்சூழல்- கல்வியை உட்கொண்டு கணிதம் ஆங்கிலம் என மூன்று பாடப்புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.

10. 1 முதல் 4 வரையுள்ள வகுப்புகளுக்கு ஆங்கில வழி புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.

11. செம்மொழி என்ற நிலையிலும் தாய்மொழி என்ற நிலையிலும் தமிழ்மொழி கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் அறிக்க வேண்டும்.

12. மழலைப் பள்ளி கல்விக்காக ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை உருவாக்கி மழலைப் பள்ளியை அங்கீகரிக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் பகுதியாக மாற்ற வேண்டும்.

## இலவசமும் கட்டாயமுமான கல்விக்கான குழந்தைகளின் உரிமை– கேரளச் சட்டங்களும் துறைகளும் 2011

### அக்காதமிக பதவி மையம்

1. 29 -ம் பிரிவின் தேவைக்காக மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) ஆகும் அக்காதமிக பயிற்சி மையம்.

2. (1) -ஆம் துணைச் சட்டத்தின் கீழ் அறிக்கை செய்யப்பட்டுள்ள அக்காதமிக பதவி மையம், பாட ஏற்பாடும், மதிப்பீட்டுச் செயல்முறைகளும் உருவாக்கும் போது இந்தச் சட்டத்தின் 29-ம்பிரிவின் (2) -ம் துணை பிரிவின் துணைப் பாகம் (a) முதல் (f) வரை யிலான வரையறைகளுக்கு தீங்கு விளைவிக்காத விதம்

(a) சிறப்பானதும் எளிமையானதுமான பாடத்திட்டத்திற்கும் பாடப்புத்தகங்களுக்கும் அடிப்படை வாழ்க்கைத் திறனை பகிர்ந்து கொடுப்பதற்குத் தேவையான கற்றல் துணைக்கருவிகளுக்கு உருவம் அளிப்பது.

(b) ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தேவை யான குறைந்கபட்ச கற்றல் விளைவை நிர்ணயிக்க வேண்டியதும், குழந்தைகளுக் கான மேன்மையான தரநிர்ணயக் குறிப்புகள் வளரச் செய்வதுடன் குழந்தைகளின் கற்றல் விளைவிற்கான ஆசிரியரின் பொறுப்புணர்வின் எல்லைகளுக்கு வடிவம் அளிப்பதும்

(c) கற்றல் கற்பித்தல் விளைவின் அடிப்படையில் ஆசிரியரின் பணியிடைப் பயிற்சி தொடர்பான பொருட்கள் வளரச் செய்வது;

(d) 1995 – ல் ஊனமுற்ற நபர்கள் ( சம உரிமைகள், உரிமைகளின் பாதுகாப்பும், முழு மையான பங்கேற்பும்) சட்டத்தின் வரையறைகளுக்கேற்ப ஊனமுற்ற குழந்தைக ளுக்கு கல்வி அளிப்பதற்காக ஆசிரியருக்கு பணி பயிற்சி (Pre- Service) பணியி டைப் பயிற்சி ஆகியவற்றிற்கு வடிவம் அளிப்பதும்;

(e) தொடர்ச்சியானதும் முழுமையானதுமான மதிப்பீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் தயாரிப்பதும்;

(f) நயத்திட்டங்கள், நிகழ்ச்சிகள், பாட ஏற்பாடு குழந்தைகளின் கற்றல் விளைவு ஆகி யவை குறித்த ஆராய்ச்சிளும், கற்றல்களும் பொறுப்பேற்கவும் அது கமிஷன் செய் வதும். .

13. தகவல் தொழில் நுட்பத்தை (ICT).ஒரு தனியான பாடம் என்பதற்கு மேலாக பிற பாடங்களின் பரிமாற்றத்திற்கான கருவியாகவும் உபயோகிக்க வேண்டும்.

14. தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வெவ்வேறானதும் புதியதுமான கற் றல் உத்திகளை உருவாக்கிச் செயல்படுத்துவதுடன் வெவ்வேறு மதிப்பீட்டுச் செயல்பாடுக ளையும் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

15. கற்றல் அடைவுகளின் அடிப்படையிலான ஒருங்கிணைந்ததும் தொடர்ச்சியானதுமான மதிப்பீட்டை (CCE) உறுதி செய்ய வேண்டும்.

16. சுகாதார உடற்கல்வி, கலைக்கல்வி, பணி அனுபவக் கல்வி போன்ற பாடங்களைக் கட்டாயப் பாடப்பகுதிகளாகக் கட்டாயப் பாடப்பகுதிகளாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

17. மேனிலைப் பிரிவில் காலத்திற்கேற்ற பாடப்புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்.

18. தேசியக் கல்விச் சட்டத்தின்படி கல்வி பெறும் உரிமையை உறுதி செய்தல் வேண்டும்.

19. எல்லா ஆசிரியர்களும் ஒரு நெறியாளர் (Mentor) என்ற நிலையில் உயர்ந்த செயல் பாட்டுத் தேவையான வாய்ப்புகளையும் வசதிகளையும் பள்ளிக்கூடத்திலும் வகுப்பறையி லும் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும்..

20. ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிச் சட்டங்களுக்கு (Code of Professional Ethics for School Teachers) முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

21. 21-ம் நூற்றாண்டிற்கு ஏற்றமுறையில் கற்றல் திறன்களை (21st Century Learning Skills) காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும்.

22. நற்பண்புகளைக் கடைபிடிக்கும் தலைமுறையை உருவாக்கத்தக்க வகையில் பாடத் திட்டம் அமைய வேண்டும்.

23. சமவாய்ப்பும் சமத்துவமும் (Equity and Equality) கிடைக்கும் வகையில் பாடத்திட் டம் அமைய வேண்டும்.

இயல்பான கற்றலை உறுதிப்படுத்தக் குழந்தைகளின் உடல் மன அளவிலும் செயல்பாட்டு முறையிலும் பன்முக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அறிவு, எண்ணம் செயல் இவற்றிற் கேற்ற பாடஏற்பாடு (Curriculum for the harmony of Head, Heart and Hand) வேண்டும். எனில், பாடத்திட்ட அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டும்? அதன் கொள்கையும் நடை முறையும் எவ்வாறு இருக்க வேண்டும்?

## 1.3 பாட ஏற்பாடு- அணுகுமுறை

ஐம்புலன்களை உபயோகித்துச் சூழ்நிலைகளிலிந்து சுயமாகவே கற்கும் திறமைகளுடன் ஒரு குழந்தை பிறக்கிறது. உலகத்தைப் புதிய நோக்கில் காண்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் செயல்படுவதற்கும் மதிப்பிடுவதற்கும் வாய்ப்புகள் முறைசார்ந்த கல்வி மூலம் குழந்தைக ளுக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து கிடைக்க வேண்டும்.

குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைச் சூழல்களுக்குத் தீர்வு காண்பதன் வழியாகவே கற்றல் நடைபெறுகிறது. பாடத்திட்ட பரிமாற்ற அணுகுமுறையின் சிறப்பியல்புகள் எதுவாக இருக்க வேண்டும்?

- செயல்பாட்டு அடிப்படையிலானது
- செயல்முறை தொடர்பானது
- கற்றலை உறுதிப்படுத்தும் விதம்.
- கற்றல் அடைவுகளை அடைய உகந்தது.
- சூழலுக்கு ஏற்றது
- வளர்ச்சி மண்டலங்களை உட்படுத்தியது
- கற்பவரின் விருப்பத்திற்குப் பொருத்தமானது.
- கற்றலுடன் மதிப்பிடலும் ஒருங்கிணைந்து அமைந்தது..

அறிவு உருவாக்கக் கோட்பாட்டின் அடிப்படையிலான கற்றல் முறையே பாடத்திட்டத் தின் அடிப்படை. குழந்தையின் அறிவு, கருத்து, சூழல் இவற்றைக் கருத்தில் கொண்டு சிறந்த கற்றல் செயல்பாடுகள் உருவாக்குவதன் மூலம் இயல்பாக அறிவு பெற இயலும் என்பதே இதன் சிறப்பு.

### கற்றல் அனுபவங்கள்

வெவ்வேறு வாழ்க்கைச் சூழலிலி ருந்து வரும் குழந்தைகளின் அறிவுஸ கிறமை ஆர்வம் போன்றவை வேறுபட் டதல்லவா? தனிநபர் வேறுபாட்டையும் பன்முக அறிவையும் கருத்தல் கொண்டு கற்றல் அனுபவங்களை உருவாக்குவ தற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

### கற்றல் சூழல்

குழந்தைகளின் ஆர்வத்தையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு வேறுபட்ட கற்றல் செயல்பாடுகளில் பங் கேற்க இயலும் விதம் வகுப்பறை செயல்பாட்டை அமைக்க வேண்டும். குழந்தை மையமான கற்றல் செயல்பாடு களைச் செயல்படுத்த எவ்வாறு கற்றல் செயல்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

### கற்றல் செயல்முறை

- குழந்தைகள் ஒவ்வொருவரும் அவர்களுடைய முன் அறிவுகளு டன் தொடர்புபடுத்தி அறிவு உரு வாக்கம் (Knowledge construction) நடத்துகின்றனர்.
- அறிவு உருவாக்கத்தைத் தனிநபர் நிலையிலும் சமூக நிலையிலும் பார்க்க வேண்டும்.
- பலவித கற்றல் நடைகளைக் (Learning Styles) கருத்தில் கொண்டு ஐம் புலன்கள் மூலம் பல்வேறு அனுப வங்களை (Multi sensory experiences) கொடுப்பதன் மூலம் கற்றல் சிறப்படைகிறது..
- குழுவாக கலந்துரையாடல் நடைபெ றும் போது கற்றல் கூடுதல் மேன்மை யடைகிறது.
- கற்றல் வேகத்தை கருத்தில் கொண்டு கற்றல் அனுபவங்களை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் கற்றல் மேம்படுகிறது.
- பாடப்பொருள்கள் ஆர்வத்தைத் தூண்டுவதும் பொருள் உடையது மாக அமைவதன் மூலம் கற்றல் மேலும் சிறப்பாக அமையும்..

*குழந்தைகள் அறிவு உருவாக்கும் கட்டத்தில் ஆசிரியர் சிறந்த முறையில் செயல்பட்டால் அது குழந்தைகளுக்குக் கிடைக்கும் அறிவினை உறுதிப டச் செய்யும். கற்றலில் ஈடுபடும் குழந்தை தனது அறிவை சுயமாகவே உருவாக்குகிறது. தனது பள் ளியில் கற்கும் கருத்துகளை வெளியில் நடக்கும் காரி யங்களுடன் தொடர்புப்படுத்தி த் தேவையான கேள் விகளைக் கேட்க குழந்தைக்கு வாய்ப்பளிக்க வேண் டும். மனப்பாடம் செய்து ஒரு சரியான விடையை அளிப்பதற்கு பதிலாக தனது அனுபவங்கள் வாயி லாகத் தனது வாக்கியங்களில் விடை அளிக்க ஊக் குவிக்க வேண்டும். இவையாவும் குழந்தைகளின் அறிவா வளரச் செய்ய உதவும் முக்கியமான படிக ளாகும். அறிவுபூர்வமாக ஊகித்தல் என்பது ஒரு கற் றல் உத்தியாகும். இதை நாம் ஊக்குவிக்க வேண்டும். பலவேளைகளிலும குழந்தைகளின் அன்றாட அனு பவங்களிலிருந்தும் ஊடகங்களிலிருந்தும் அவர்க ளின் மனதில் சில கருத்துகள் உருவாகி இருக்கலாம். ஆனால் ஆசிரியர் எதிர்பார்க்கும் வாக்கியங்களில் அவர்களால் கூற இயலாது. அறிந்த அறிவிற்கும் அறியப்போகும் அறிவிற்கும் இடையில் தான் புதிய அறிவு உருவாக்கப்படுகிறது. பலவேளைகளிலும் பள் ளிக்கு வெளியிலோ அல்லது சமூகத்திலோ புதிய அறிவு உருவாகிறது. இவ்வாறு உருவாகும் எல்லா அறிவுகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அறிவும் பொறுமையும் உடைய ஆசிரியை இதைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டும். குழந்தை யின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் செயல் பாடுகள் அளித்தும் கேள்விகள் கேட்டும் குழந் தையை ஆசிரியரால் வழி நடத்திச் செல்ல முடியும்*

*தேடல்கள், கேள்விகள் கேட்டல், விவாதங்கள், கொள்கைகள் உருவாக்குதல், கருத்துகள், நிலைபா டுகள் இவைகளின் உருவாக்கத்திற்கு வழிநடத்தும் செயல்களும் சிந்தையும் ஆசிரியர்களின் பங்கேற் பினால் ஏற்படுகின்றன. பள்ளிக்கூடங்கள் கேள்வி கேட்கவும், விவாதங்கள் செய்யவும் தேடல்களுக்கும் ஊகித்து புதிய கருத்துகளை உருவாக்கவும் வாய்ப் பளிக்க வேண்டும்*

*(N. C. F. 2005, பக்கம் – 41, 42)*

- கற்றல் அனுபவங்களைச் சுழற்சிமுறையில் (Spiralling) அமைப்பதன் மூலம் கற்றல் கூடுதல் சிறப்புடையதாக மாறுகிறது
- கற்றல் செயல்பாடுகளை நெகிழ்வு (Flexibility), கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் அமைத்தல் (Adaptations), கற்றல் செயல்பாடுகளைத் தேரந்தெடுத்தல் (Selection) இவற்றின் மூலம் வேறுபட்ட கற்றல் தேவையுள்ளவர்களையும் விருப்பம் உள்ளவர்களையும் கருத்தில் கொள்ள முடியும்
- போதுமான கற்றல் அனுபவங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும் போது மட்டுமே கற்றல் அடைவு (Learning outcome) உறுதிப்படுத்தப்படுகிறது.
- கற்றலும் மதிப்பிடலும் ஒருங்கிணைந்து நடைபெறவேண்டும்.
- பாடத்தோடு தொடர்புடைய உள்ளடக்கமும் (Content), குழந்தைகளின் கற்றல் தேவைகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் கற்பித்தல் செயல்முறைகளும் உத்திகளும் உபயோகிக்கும் போது எல்லாக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளை(Learning outcome) அடைய முடியும்.
- ஒவ்வொரு குழந்தையின் பண்முக வளர்ச்சியையும் (All-round development) நோக்கமாகக் கொண்டு கற்றல் செயல்கள் திட்டமிடப்பட வேண்டும்.

## 1.4 கற்றல் அடைவுகள் (Learning Outcomes)

பலவித பாடங்களின் கற்றல் செயல்களின் மூலம் அறிவு திறன்கள், மனநிலைகள் கருத்துகள் என்பவை குழந்தையிடம் உருவாகின்றன. இவற்றுள் சில குறுகிய கால அளவிலும் சில நீண்ட காலத்திலும் கிடைப்பவை ஆகும். இவ்வாறு குழந்தையிடம் உருவாக வேண்டிய மாற்றங்களை முன்னரே நம்மால் தீர்மானிக்க முடியும். பாடத்திட்டம் உருவாக்கும் போது பள்ளிக்கூடக் கல்வியின் வாயிலாகப் பல நிலைகளில் குழந்தை அடைய வேண்டிய இலட்சியங்களே கற்றல் அடைவுகள் ஆகும். கற்றல் செயல்பாடுகளின் வாயிலாக ஒவ்வொரு அலகிலும் பெறுகின்ற கற்றல் அடைவுகள் வளர்ச்சி அடைந்து வகுப்பின் இறுதியில் கற்றல் அடைவுகளாக மாறுகின்றன. கல்வி கற்கும் கட்டத்தில் குறிப்பிட்ட கால அளவில் கற்றல் அடைவுகளாக வளர்ச்சி அடைகிறது. கற்றல் அடைவுகளின் முக்கியத்துவம் என்னவென்றால் அவற்றை உற்றுநோக்கவும் (Observable) அளவிடவும் (Measurable) இயலும். ஒவ்வொரு அலகிற்கும் பருவத்திற்கும் வகுப்பிற்கும் முடிவில் குழந்தை அடைய வேண்டிய அறிவு திறன்கள், கருத்துகள், மனப்பான்மை போன்றவைகளை மதிப்பிடக் கற்றல் அடைவுகளைப் பகுத்தாய்ந்தால் போதும். பாடத்திட்டத்தின் சிறப்பான பரிமாற்றம் மூலம் அனைத்துக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற்றுள்ளனர் என்று உறுதிப்படுத்த வேண்டும்..

*கற்றல் அடைவுகளின் சிறப்பியல்புகளை இவ்வாறு தொகுக்கலாம்:*

- பாடத்தோடு தொடர்புடைய கற்றல் வழியாகக் குவந்தை பெற வேண்டிய அறிவு (knowledge), திறன்கள் (Skills), மனப்பாங்குகள் (Attitudes), மதிப்புகள் (Values) என்பவையே கற்றல் அடைவுகள்
- கற்றல் அடைவுகள் உற்றுநோக்கக் கூடியதும் (Observable) அளவிடக்கூடியதுமாக இருக்க வேண்டும் (Measurable) ஆக்ஷய்ஸ்ரீய்கில்ஜ்.
- குறுகிய நீண்ட காலங்களில் பெற்ற கற்றல் அடைவுகள் உள்ளன.

## 1.5 கற்றல் ஆதாரங்களும் கற்றல் அமைப்புகளும்

பாடத்திட்டத்தைப் பரிமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற பல நிலைகளே கற்றல் உறைவிடங்கள் கற்றல் செயல்முறை முழுமை பெற பலதரப்பட்ட கற்றல் உறைவிடங்களைப் பயன்படுத்த வேண்டும்.

- நூலகம்
- ஆய்வுக்கூடம்( கணிதம், அறிவியல்)
- கற்றல் துணைக்கருவிகள்
- அறிவிப்பு பலகைகள்
- கணினி ஆய்வுக்கூடம்
- தகவல் தொடர்புக் கருவிகள்
-

இதற்கு மேலாகக் குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள். பள்ளிக்கூடங்களில் உண்டல்லவா? அவற்றையும் கற்றல் அடைவுகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்

- சிறுவர் மன்றம்
- காலைக் கூட்டம்
- மன்றங்கள்
- விவாதமேடை
- கல்விச்சுற்றுலா
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (SPC, NSS, Scout, NCC)
-

குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு இது போன்ற அமைப்புகள் இன்றியமையானவையாகும்.

## 1.6 கலைக் கல்வியும் பணி அனுபவக் கல்வியும்

### கலைக்கல்வி

படைப்பாற்றல் உற்றுநோக்கும் திறன் மாற்றுச் சிந்தனை போன்றவற்றை குழந்தைகளிடம் வளரச் செய்யக் கலைக்கல்வி இன்றியமையாததாகும். புதிய பாடத்திட்ட அணுகுமுறையில் பொதுவான பாடங்களைப் போன்ற முக்கியத்துவம் கலைக்கல்விக்கும் அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிப் பாடத்திட்டத்தில் கலைக்கல்வியில் இசை. நடனம், படம் வரைதல். சிற்பங்கள் உருவாக்குதல் நாடகம், திரைப்படம் போன்றவை உட்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளின் இந்தத் குறைகலிலுள்ள திறமைகளைத் தெரிந்து கொண்டு அவற்றை வளரச் செய்ய வேண்டும்.

*கலைக்கல்வியின் பொதுவான இலக்குகள்:*

- குழந்தைகளிடம் மறைந்திருக்கும் கலைத்திறன்களைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும்.
- கலைகளைப் பிரித்தறியவும் குழந்தைகளின் திறமைக்கேற்பக் கலைகளைப் பயிற்றுவிக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டும்.
- பல்வேறு கலைகளை இரசிக்கவும் கலைகளின் அழகை உட்கொள்ளவும் வேண்டும்.
- கலையை இரசித்து சமூக வாழ்க்கையில் மனித நேயத்தை உருவாக்க வேண்டும்.
- பண்பாட்டு வேறுபாட்டைப் பிரித்தறிந்து பண்பாட்டு விழிப்புணர்வை வளர்க்க வேண்டும்..
- கலையின் கருத்தை உட்கொண்டு புதுமையான சிந்தனைகளில் ஈடுபடவும் இணையான சமூகச் செயல்களில் ஈடுபடவும் வேண்டும்.
- கலைப் பயன்படுத்தி பிற பாடங்களின் கற்றலைச் சிறப்புடையதாக்க வேண்டும் (Art applied learning).
- பன்முக அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு அறியவேண்டும்.

- பல்வேறு திறமைகள் உள்ள குழந்தைகளைக் கற்றல் செயல்பாடுகளில் ஆர்வமடையச் செய்ய வேண்டும்
- குழந்தைகளின் இரசிப்புத் தன்மையை வளரச் செய்ய வேண்டும்..

### பணி அனுபவக் கல்வி

உணர்வு, அறிவு போன்ற மண்டலங்களின் ஒருங்கிணைப்பும் முன்னேற்றமும் உருவாகப் பணி அனுபவக் கல்வி உகந்தது..

ஒவ்வொரு பணி அனுபவக் கற்றல் வகுப்பும் அடிப்படை மனிதவள மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எல்லாக் குழந்தைகளின் திறன்களும் தனித்தன்மைகளும் நாட்டு நன்மைக்கு ஏற்ற வகையில் வளர வேண்டும் என்பதே மனிதவள மேம்பாட்டின் நோக்கம், தொழிலை நேசிப்பதும் தொழில் செய்பவர்களை மதிப்பதும், சமூக உணர்வுடைய புதிய தலைமுறையை உருவாக்குவதும் பணிஅணுபவக் கற்றலின் முக்கிய இலக்குகளாகும்.

- மனிதவள மேம்பாடு
- தேசிய முன்னேற்றம்
- தொழில் ஆர்வம்
- உற்பத்திதுறையில் தனித்துவம்
- பன்முகத் தனிநபர் வளர்ச்சி
- நற்பண்புகளையும் மனநிலைகளையும் வளர்த்தல்

கலைக்கல்விக்கும் பணிஅனுபவக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்துப் பாடத்திட்டப் பரிமாற்றம் நடைபெற வேண்டும். இவைகளின் தனித்தன்மைகளையும் வாய்ப்புகளையும் உட்படுத்திப் பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்வது அவசியமாகும்.

## 1.7 விளையாட்டு உடல் நலக் கல்வி

உடல்- மன வளர்ச்சியின் அடிப்படை உருவாவது தொடக்க நிலையிலாகும். எனவே இந்தக் கால அளவில் எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் அனுவங்கள் கிடைத்துள்ளன என்பதை உறுதி செய்ய வேண்டும். குழந்தையின் ஆரோக்கிய, விளையாட்டு முன்னேற்ற நிலைகளை அறிவியல் முறையில் வளரச் செய்யவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளும் மனநிலைகளும் வளரச் செய்தல் என்பதே ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் முக்கிய நோக்கம், ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் வாய்ப்புகளை நிலைநிறுத்துவதோடு வெவ்வேறு பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்யவும் வேண்டும்.

*ஆரோக்கிய- உடலநலக் கல்வியின் முக்கிய இலக்குகள் இவை:*

- பல்வேறு குழந்தைகளில் பொருத்தமான முறையில் உடலை அசைப்பதற்கான திறனைப் பெற்றுக் கொள்வது,
- உடல் அசைவை கட்டுப்படுத்தும் பல்வேறு கட்டங்களைப் பிரித்தறியவும் உடலைப் பன்முக அசைவுகளின் ஊடகமாக முன்னேறவும் செய்வது.
- சமூகக் கடமைகள் குறித்த விழிப்புணர்வு உருவாக்கவும் மக்களாட்சி முறையிலான வாழ்க்கை முறைகளைக் கடைபிடிக்கவும்.
- குழந்தையின் பன்முக வளர்ச்சியை உறுதி செய்வது

## 1.8 உட்படுத்திய கல்வி (Inclusive Education)

*தங்கள் வகுப்பிலுள்ள சக மாணவனுக்கு வீடு இல்லை; வழியோரத்தில் குடி நீர்க்குழாயிலி சேர்த்துக் கட்டிய தகரமே அவனுடைய வீடு என்ற தகவலைப் பற்றிக் குழந்தைகள் கலந்துரையாடினார்கள். கவலைகளைப் பங்கிடுவதன் வழியாகத் தீர்வு காண இயலாது எனப் புரிந்து கொண்ட குழந்தைகள் ஆசி ரியரின் உதவியுடன் சேகரித்த தொகையை உபயோகித்து நண்பனுக்கு வீடு உருவாக்கிக் கொடுத்து அந்தப் பள்ளிக்கூடம் நல்ல மாதிரியாக அமைந்தது.*

*(ஒரு பள்ளி அனுபவம்)*

வகுப்பறையில் எல்லாக் குழந்தைகளையும் உட்படுத்தி யாரையும் புறக்கணிக்காமல் ஒரு கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். நமது பள்ளிக்கூடங்களில் இரு பிரிவினருக்கும் தனிக் கவனமும் கற்றல் உதவியும் அளித்து சமசீரான தரமான கல்வி (Equitable Quality Education) உறுதி செய்யப்பட வேண்டும்..

*தனிக்கவனமும் கற்றல் உதவியும் பாதுகாப்பும் தேழைப்படுவோர் யார்?*

(அ) சமூகப் பொருளாதாரக் காரணங்களால் புறக்கணிக்கப்பட்டவர்களின் குழந்தைகள்

- பல்வேறு பாகுபாடுகளால் சமூகப் பண்பாட்டுக் குடும்பப் பின்னனியில் புறக்கணிக்கப் பட்ட குழந்தைகள் வறுமையில் வாடுபவர்கள், ஆதிவாசிகள், பெண் குழந்தைகள், தாழ்த் தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள், நிலையாகத் தங்கும் வசதியற்றவர்கள் போன்ற அனேகப் பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் இதில் அடங்குபவர்.

  இவ்வாறான குழந்தைகளின் குறைகளையும் குறைபாடுகளையும் பிரித்தறிந்து அவர் களை அங்கீகரித்து மதித்து நடப்பதாக நமது அணுகுமுறை இருக்க வேண்டும். பள்ளி களில் குழுச் செயல்பாடுகள் வழியாக இவர்களின் பிரச்சினையை ஓரளவு தீர்க்க முடியும்.

(ஆ) உடல்- மனக் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகள்

உடல்- மன அளவிலான குறைபாடுகள் குழந்தைகளுக்கும் கற்றலில் சிரமம் அனுபவிக்கும் குழந்தைகளுக்கும் சிறப்புக் கவனம் தேவை (Special Educational Needs). கேள்விக் குறை வு, பார்வைத் திறன் குறைவு, புத்திக் குறைவு, கை, கால் ஊனம், கற்றலில் பின் தங்கிய நிலை ஆட்டிசம், செரிபிரல் பால்சி, பன்முகக் குறைபாடு மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள், கவனக் குறைவுள்ளவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.

*இவர்களுக்காகப் பாடத்திட்டத்தின் பரிமாற்ற வேளையில் கையாள வேண்டியவை எவை?*

- கற்றல் தேவைகள், ஆர்வம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கற்றல் செயல்பாடுக ளைத் திட்டமிடுதல்.
- கற்றல் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளும் பங்கேற்கும் வகையில் பாடத்திட்ட மிடல் சீரமைக்கப்பட வேண்டும்.
- பல்வேறான கற்றல் வேகம், கற்றல் முறை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஐம்பு லன்களுக்குட்பட்ட அணுகுமுறையை (Multisensory Approach) நடைமுறைப்ப டுத்துதல்.
- குறைநீக்கும் செயல்பாடுகள் (Remedial Practices), ஊக்கச் செயல்பாடுகள்

(Enrichment Practices) போன்றவற்றை ஒவ்வொரு குழந்தைக்கும் தேவைக் கேற்பத் திட்டமிட்டுச் செயல்படுத்துதல்

- பல்வேறு மதிப்பீட்டு வாய்ப்புகளை நெகிழ்வுடன் (Flexibility) செயல்படுத்துதல்.
- சிறப்பு வள ஆசிரியர்கள் மற்றும் வல்லுணர்களின் உதவியை உறுதி செய்தல்
- குழந்தையின் கல்வி பாதுகாப்பு ஆகியவற்றில் பெற்றோரின் தொடர்ச்சியான உதவியை உறுதி செய்தல்.

இந்த இரு பிரிவுகளிலுமுள்ள குழந்தைகளைத் தவிர சிறப்பு கவனமும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டிய குழந்தைகளே தனிப்பட்ட திறனும் புத்திக்கூர்மையும் மிகுந்த குழந்தைகள் (Gifted Children). எல்லாப் பிரிவிலுள்ள குழந்தைகளையும் கவனத்தில் கொண்டு பள்ளிச் செயல்பாடுகளையும் சூழல்களையும் சிறப்பாக அமைக்க வேண்டும்..

## 1.9 தகவல் தொழில் நுட்பக் கல்வியின் வாய்ப்பு (ICT)

தகவல்களைப் பரிமாறுவதற்கு ஏராளமான முறைகள் நடைமுறையில் உண்டல்லவா? இதில் முக்கியமானது ICT கல்வி. குழந்தைகள் பல்வேறு வழிமுறைகளில் இந்தத் தொழில் நுட்பத்தை ஏறக்குறைய தெரிந்திருப்பார்கள். இந்த அறிவை வகுப்பறைக் கற்றலில் உபயோகப்படுத்த வேண்டும். கற்றலை எளிமையாக்கவும் உற்சாகமாக்கவும் இதன் வழி இயலும்.

### ICT இன் தேவை

பாடத்திட்டப் பரிமாற்றத்திற்காகப் பொருத்தமான சூழல்களில் ICT துணைக் கருவிகளை தேவைக்கேற்ப உட்படுத்த வேண்டும். பாடப்புத்தகத்தின் குறைகளாகிய அசைவு இன்மை, ஒலிகள் கேட்க இயலாத நிலை போன்றவற்றை ICT வாய்ப்புகள் உட்படுத்தி எதிர் கொள்ள முடியும். ICT இன் தேவை எந்தெந்தச் சூழல்களில் வேண்டும் என்பதையும் அதை எப்படிச் செயல்படுத்தலாம் என்பதையும் திட்டமிட ஆசிரியர் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

### பொருத்தம்

குழந்தையின் படைப்பாற்றலையும் அறிவின் பன்முக தன்மைகளையும் ஊக்குவிக்க ICT வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும். பாடங்களில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நிலை நிறுத்துவதற்காக ICT வாய்ப்புகளை அமைக்க வேண்டும். ICT இன் உபயோகம் ஐம்புலன்களில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அதிகமான பயனளிக்கிறது. ஒலி வழியாகவும் பார்வை வழியாகவும் கருத்துகளை அதிகமாக உட்கிரகிக்க ICT பயன்படுகிறது. வெவ்வேறு கற்றல் திறனுடைய குழந்தைகளைக் கருத்தில் கொண்டு கற்றல் அனுபவங்களை ICT மூலம் அளிப்பதற்கு இது உதவுகிறது.

### நம்பகத்தன்மை

தகவல் தொடர்பு ஊடகங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். அரசு வலைதளங்கள், கல்வி வலைத்தளங்கள் Portal, Blog, Social Net Work போன்றவற்றிலுள்ள தகவல்களை அதிகாரபூர்வமாக உறுதி செய்ய வேண்டும். வகுப்பறை பரிமாற்றத்திற்கு உபயோகிக்கக் கூடிய கருவிகளின் செயல்பாட்டுத் தன்மையை உறுதி செய்ய வேண்டும். இத்தகைய கருவிகள் செயல்படுவதற்குப் பொருத்தமான மென்பொருள் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் உபயோகிக்க இயன்றதாகவும் இருக்க வேண்டும். ICT வாய்ப்புகள் குழந்தைகளின் வயது, மனநிலை போன்றவற்றிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

## 1.10 மதிப்புகள், மனநிலைகள், கடமையுணர்வு போன்றவற்றை வளர்க்க உதவும் மண்டலம்

குழந்தைகள் மனித நேயதேதைப் பற்றியும் அரசியலமைப்பின் மதிப்புகளைப் பற்றியும் விழிப்புணர்வு உடையவர்களாக வளர வேண்டும். சமூக வாழ்க்கையை ஊக்குவிக்கும் மனநிலையை உருவாக்குதல் சமூக கடமையுணர்வை வளர்த்தல் போன்றவை பாடத்திட்டத்தில் முக்கியமாக உட்படுத்த வேண்டிய பகுதிகளாகும். இவற்றை வளரச் செய்ய மேற்கூறிய கருத்து மண்டலங்களில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### மக்களாட்சி உணர்வு

பல்வேறு பாடங்களின் உள்ளடக்கத்தைத் தேர்வு செய்யும் போது மக்களாட்சி தொடர்பான கண்ணோட்டத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். கற்றல் செயல்பாடுகளின் திட்டமிடுதலிலும் பரிமாற்றச் செயல்களிலும் மக்களாட்சி அணுகுமுறை அமைய வேண்டும். மக்களாட்சி முறையிலான வகுப்பு, பள்ளி இடங்கள் ( மக்களாட்சி அரங்குகள்) மக்களாட்சி வாழ்க்கை அணுகுமுறை போன்றவை வழியாக மக்களாட்சி உணர்வு உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் இலக்காகும்.

### அரசியலமைப்பு இலக்குகள்

நம்முடைய அரசியலமைப்பு கூறும் மதிப்புகளும் இலக்குகளும் பாடத்திட்டத்தில் பிரதிபலிக்க வேண்டும். அரசியலமைப்பு, மதிப்புகளை மாணவன் அடைவதற்கு உகந்த உள்ளடக்கதைதையும் மரிமாற்று செயல்பாடுகளையும் தேர்வு செய்ய வேண்டும்.

### மதசார்பற்ற மனநிலை

மதசார்பற்ற மனநிலையை வளர்க்க உதவக்கூடிய பாட மண்டலங்களை உள்ளடக்கத்தில் சேர்க்கவும் அதற்கு உதவும் வகையிலான பரிமாற்ற முறையைக் கையாளவும் வேண்டும்.

### சகிப்புத் தன்மை

பொருத்தமானவர்கள் மட்டுமல்ல பொருத்தமற்றவர்களோடும் சகிப்புத் தன்மை காட்ட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைப் பாடத்திட்டம் இலக்காகக் கொள்ளவேண்டும்.

### செயலாக்க- படைபாற்றல் சிந்தனை

மாணவர்களிடம் செயலாக்கமும் படைப்பாற்றலுமான சிந்தனையும் தேடலையும் வளரச் செய்ய வேண்டும். பாடத்திட்டத்தின் உள்ளடக்க மண்டலங்களிலும் கற்றல் உத்திகளிலும் படைப்பாற்றல் வழியான தேடலுக்கான வாயப்புகள் இருக்க வேண்டும். பன்முக அறிவின் (Multiple Intelligence) தலங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

### பண்பாட்டுடனும் பாரம்பரியங்களுடனும் உள்ள ஆதரவு

நமது பண்பாடு, பாரம்பரியம், வரலாறு இவற்றிற்கு ஆதரவு காட்டும் மனப்பான்மையை உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

### சமத்துவம் என்ற கருத்து

பல்வேறு சூழ்நிலைகளிலும் கற்றல் செயல்பாடுகளிலும் சமத்துவம், சமநிலை போன்றவற்றை உறுதி செய்ய வேண்டும்.

## தலைமைப் பண்பு

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர் கொள்ளவும் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் தகுந்த தலைவர்களை உருவாக்கப் பொருத்தமான கற்றல் உத்திகளை உருவாக்க வேண்டும். வகுப்பறைச் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளின் பங்கேற்பையும் உறுதி செய்து தலைமையேற்கும் திறனை வளர்க்க உதவும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

## வாழ்கைத்திறன் கல்வி

அன்றாட வாழ்க்கையில் தனிநபர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் சவால்களையும் திறம்பட எதிர்கொள்ள உதவும் சாதகமான மற்றும் திறமையான பண்புகளே வாழ்க்கைத் திறன்கள், தன்னைஅறிதல், சகஊடுபாடு, கருத்துப் பரிமாற்றத் திறன், தனிமனித உறவு, படைப்பாற்றல் , விமர்சிக்கும் திறன், முடுவுகளை எடுத்தல். தீர்வு காணுதல், உணர்வுகளைக் கட்டுப்படுத்துதல் மன அழுத்தத்தைக் கையாளுதல் போன்றவை முக்கியமான வாழ்க்கைத் திறன்களாகும். குழந்தைகளின் சூழ்நிலைகளோடு தொடர்புபடுத்தி இந்த மண்டலங்களின் காரணிகளைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் அணுகவும் முன்னேறவும் இத்திறன்கள் குழந்தைகளுக்கு உதவுகின்றன.

## குடிமகனின் கடமை

நாட்டிற்கு மக்களிடம் உள்ளதைப் போன்று குடிமக்களும் நாட்டிற்காகச் சில கடமைகளையிம் பொறுப்புகளையும் கடைபிடிக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சி என்பது மனிதத் திறனின் வளர்ச்சி என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்தக் காலகட்டத்தில் நாட்டிற்கு உதவும் நல்ல குடிமகனை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கம். ஒரு சுதந்திரமான சமூகத்தை உருவாக்குவதுடன் ஒழுக்கமான பொறுப்புள்ள சமூகத்தை உருவாக்கும் குடிமக்களைப் படைப்பதே கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

## மனித உரிமைகள்

தனிமனிதன் என்ற நிலையில் மதிப்புடன் வாழ்வதற்கான உரிமையே மனித உரிமை. ஐக்கிய நாட்டுச் சபையின் மனித உரிமை விளம்பரத்தின் மூலம் உலகமெங்கும் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளுக்குப் பாடத்திட்ட உருவாக்கத்திலும் அதன் பரிமாற்ற வேளையிலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

.

## குழந்தைகளின் உரிமைகள்

குழந்தைகளின் எல்லாவித உரிமைகளையும் பாதுகாப்பது நமது கடமையாகும்.

## இயற்கை- இயற்கைப் பாதுகாப்பு- சுற்றுப்புறத் தூய்மை

இயற்கை- இயற்கைப் பாதுகாப்பு, சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றைப் பாதுகாக்கக் கடைபிடிக்க வேண்டிய அடிப்படைக் கண்ணோட்டங்களை ஆரம்ப வகுப்பு முதலே உட்படுத்த வேண்டும். தனிமனிதத் தூய்மையைப் போன்று முக்கியமானதே சுற்றுப்புறத்தூய்மை என்பதையும் தூய்மையுணர்வு குடிமகனின் கடமைகளில் அடிப்படையானது என்ற உணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். இயற்கை மனிதனின் தேவைக்கு மட்டுமுள்ளதல்ல. இயற்கையின் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் எதிர்காலத்தில் சீரழிவுகள் ஏற்படக் காரணமாகும் என்ற மனப்பான்மையைக் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பும் சுற்றுப்புறத் தூய்மையும் உருவாக்குவதற்குத் தகுந்த செயல்பாடுகளை அளிக்க வேண்டும்.

## சமாதானக் கல்வி

தனிப்பட்ட முறையிலும் பிறரோடு சமாதானமாகவும் அன்பாகவும் பழகும் திறனையும் மனப்பான்மையையும் உருவாக்குவதே சமாதானக் கல்வியின் நோக்கம். கலவரங்களையும் கலவரங்களைத் தூண்டும் சூழல்களையும் தவிர்க்கவும் அமைதியை நிலைநாட்டவும் சமாதானம் அன்பு இவற்றின் வாய்ப்புகளைப் பாடத்திட்டத்தில் பல்வேறு பாடங்களின் வழியாகச் செயல்படுத்த வேண்டியது சமாதனக் கல்வியின் நோக்கமாகும்..

## சட்ட அறிவு

சட்டங்கள் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஒரு குடியரசு நாட்டில் வாழும் பொது மக்கள் கொண்டிருக்க வேண்டும். சட்ட அறிவு குழந்தைகளுக்குக் கிடைக்கும் விதத்தில் பாடப் பகுதிகளில் இவற்றை உட்படுத்த வேண்டும். சட்ட உதவி மன்றம், சட்ட கிளப், சட்ட கிளினிக், சட்ட விழிப்புணர்வு போன்ற பல்வேறு செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

## சைபர் குற்றங்கள்

தகவல் தொழில் நுட்பத்துறை வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலத்தில் அன்றாட வாழ்வில் இவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதும் குற்றச் செயல்களும் நடைபெறுகின்றன. குழந்தைகள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடாமலிருக்க உதவும் விழிப்புணர்வுச் செயல்களைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். இணையதளம், சமூக வலைதளம், மின்னஞ்சல் போன்றவைகளைப் பயன்படுத்துவது தொடர்பான தெளிவான அறிவும் பகுத்தறிந்து செயல்படும் தன்மையும் மாம் படத்திட்டத்தின் மூலம் அளிக்க வேண்டும். சைபர் குற்றங்களுக்கு வழங்கும் தண்டனைகளைப் பற்றியும், இணைய தளத்தை ஞுறையாகப் பயன்படுத்தும் அறிவையும் பாட ஏற்பாட்டில் உட்படுத்த வேண்டும்.

## ஊடக விழிப்புணர்வு

நமது சமூகம் ஒலி, ஒளி ஊடகங்களுக்கு அதிகமுக்கியத்துவம் அளிக்கிறது. குழந்தைகளிடம் ஒளி ஊடகம் பெரும் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. எனவே, ஊடக விழிப்புணர்வை உருவாக்கும் பல்வேறு கூறுகளைப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்..

## நிலைமுன்னேற்றக் கண்ணோட்டம்

நாம் வாழும் பூமி மனிதனுக்கு மட்டும் உரிமையானதன்று என்ற சுற்றுப்புற விழிப்புணர்வைப் பாடத்திட்டம் அளிக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கு ஊறுவிளைவிக்கும் மனிதனின் பழக்க வழக்கங்கள் சுற்றுப்புறத்தை இத்தகைய வீழ்ச்சிகளிலிருந்து எப்படிக் காப்பாற்றலாம் என்றும் அறிதல் இக்காலகட்டத்தில் முக்கியமானதாகும். சுற்றுப்புறமும் முன்னேற்றமும் எப்படி ஒருங்கிணைந்து செல்லலாம் என்ற ஆராய்ச்சியும் நிலைமுன்னேற்றம் தொடர்பான கண்ணோட்டமும் ஆராய்ச்சிகளும் பாடத்திட்டம் வெளிக் கொணர வேண்டியதாகும். ஒருங்கிணைந்த சுற்றுப்புற விழிப்புணர்வு உருவாக்குவதென்பது பாடத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

## இளைஞர் கல்வி

குழந்தை உளவியல் வல்லுஞர்கள் சுகாதார சேவையாளர்கள். மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சிகள் வழியாக இளைஞர் கல்விக்குப் பொருத்தமான உள்ளடக்க மண்டலங்கள் பல்வேறு பாடங்களில் உட்படுத்துவதற்கான வாய்ப்பைக் கருத்திற் கொள்ள வேண்டும். கற்பவர்களின் உடல்நிலை, தூய்மை போன்றவை தொடர்பான சந்தேகங்களும் தெளிவின்மையும் அறிவியல் நிலையில் கருத்தில் கொள்ளுவது பொருத்தமானதாகும்.

## நுகர்வோர் பண்பாடு- விளைவுகள்

நுகர்வோர் பண்பாட்டின் தீய விளைவுகள் குறித்த உண்மைகள் தொடக்க வகுப்புகளில் முதல் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். நுகர்வோர் என்ற நிலையில் நமது உரிமைக ளும் நுகர்வோர்ச் சட்டங்களும் பாடத்தோடு தொடர்புடையதாக அமைய வேண்டும்.

## போதைப் பொருள் எதிர்ப்பு மனப்பான்மை

மது, போதை மருந்துகள், புகையிலை போன்றவற்றின் பயன்பாடு புதிய தலைமுறையின் ஆரோக்கியத்தைப் பாதிப்படையச் செயகிறது என்பதை நாம் உணர வேண்டும். வருங்கால தலைமுறையை இவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும். இதற்காகப் போதைப்பொருள் உப யோகத்தின் உடல் மன உளைச்சல்களையும் விபத்துகளையும் சித்தரிக்கும் படங்கள், சிறு குறிப்புகள், காட்சிகள் போன்றவை உள்ளடக்கத்தில் உட்படுத்த வேண்டும். போதை எதிர்ப்பு மனப்பான்மையை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கம்.

## ஆண், பெண் சமத்துவம்

பாட ஏற்பாடு ஆண் பெண், சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆண் பெண் வேறுபாடு பாட ஏற்பாட்டில் இருந்தல் கூடாது. பாடநூலில் உள்ள பாடங்களில் கூட ஆண் பெண் சமத்துவம் இருக்க வேண்டும். கற்றல் செயல்பாடுகளை நடத்தும் போது ஆண் பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.

## சேமிப்பு மனப்பான்மை

ஆரம்பக் கல்வி முதலே குழந்தைகளுக்குச் சிக்கனமாக செலவு செய்து சேமிக்கும் மனப் பான்மையைப் பற்றிக் கற்பிக்க வேண்டும். சிக்கனத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். சிக்கனப் பண்பினைக் கடைபிடிப்பதற்கான செயல்பாடுகளைச் செய்ய வேண்டும்.

## சாலைப் பாதுகாப்பு

சாலை விதிகள், சாலை விபத்தைத் தடுப்பதற்கான அறிவுரைகள், செயல்கள் போன்றவை சாலைப் பாதுகாப்பு காரணிகளாகும். சாலை என்பது ஒரு பொது இடமென்றும் நம்மைப் போலேவே மற்றவர்களுக்கும் சாலையைப் பயன்படுத்துவதற்குச் சுதந்திரம் உண்டு என்ற மனப்பான்மையையும் உருவாக்க வேண்டும். சாலையைப் பாதுகாப்போடி தொடர்புடைய செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பாடஏற்பாட்டில் இந்தத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அனுபவங்களை உறுதிப்படுத்த வேண்டும். பலவித பாட பாகங்களின் உட்கருத்துகளைத் தேர்ந்தெடுக்கும் போதும் இதற்கு செயல்பாடுகளை முறைப்படுத்தும் போதும் தேவையான முன்னுரிமை கிடைக்க வேண்டும். கற்றல் செயல்பாட்டின் போது இது தொடர்பான அறிவு, நற்பண்புகள் மனப்பாங்கு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தொடர் மதிப்பீடு மூலம் இந்த இலட்சியங்களை அடைய முடிந்ததா என்று பார்க்க வேண்டும். பலவித மன்றங்களின் செயல்பாடுகள் SPC, NCC, Scout & Guides, JRC, வித்யாரங்கம்- கலை இலக்கிய மன் றம் காந்தி தர்ஷன் ஆகிய இயக்கங்கள் மாணவர்களிடையே நல்ல மனப்பான்மைகளும், கடமை உணர்வும், நற்பண்புகளும் வளர வழிவகுக்கின்றன.

## 1.11 உரிமை அடிப்படையிலான கல்வி (Right based Education)

குழந்தைகளின் உரிமைகளைத் தீர்மானித்து அவற்றை உலகமெங்கிலும் நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய நாட்டு கல்வி சமூக பண்பாட்டு அமைப்பு (UNESCO) முன் வந்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏராளமான சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தேசிய கல்வி உரிமைச் சட்டம் 2009- ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும். குழந்தைகளின் எல்லாவிதமான உரிமைகளையும் பாதுகாக்கின்ற பொறுப்பு பெரியவர்களின் கடமையாகும். கல்வி உரிமைச் சட்டத்தைப் பற்றிக் கூறும் போது அவற்றை முக்கியமாக மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தலாம்.

- பங்கேற்பு (Participation)
- வாயப்பு (Provision)
- பாதுகாப்பு (Protection)

தனக்கு கிடைத்த உரிமைகளைப் பற்றி குழந்தை எவ்வாறு சிந்திக்கும்?

### பங்கேற்பு (Participation)

- குழந்தைகளோடு தொடர்புடைய எல்லாத் தீர்மானங்களைப் பற்றியும் என்னிடம் கலந்தாலோசிப்பது உண்டு.
- எடுக்கக் கூடிய முடிவுகளில் எனது கருத்துகளுக்கு முக்கியத்துவம் கிடைப்பதுண்டு.
- என்னுடைய திறன்களையும் வரைமுறைகளையும் அறிந்து செயல்பாடுகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கின்றன.
- எனது திறன்கள் வளரவும் , வரைமுறைகளுக்கு அப்பாற் செல்லவும் உதவும் கற்றல் செயல்முறைகளை செயல்முறைகள் எனக்குக் கிடைக்கிறது.
- எனது கருத்துகளுக்கு முன்னுரிமை கிடைக்கிறது.
- எனக்கும் எனது நண்பர்களுக்கும் வகுப்பில் நடக்கும் செயல்பாடுகளில் நல்ல முறையில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கிறது.
- எனது திறன்களை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது.

### வாய்ப்பு (Provision)

- தகுந்த கல்வித் தகுதியுடைய, காலத்திற்கேற்ப அறிவை வளர்க்கும் ஆசிரியர்களின் சேவை எங்களுக்கு கிடைக்கிறது.
- ஒதுக்கப்பட்டுள்ள நேரம் முழுவதும் கற்றல் அனுபவங்கள் எங்களுக்கு கிடைக்கின்றன.
- உடல் மன வளர்ச்சிக்குப் பொருத்தமான வகுப்புச் சூழல் எங்களுக்கு கிடைக்கிறது.
- எங்கள் ஆசிரியர்களால் கற்றல் செயல்பாடுகளுக்கு உகந்த கற்றல் கருவிகளைப் பொருத்தமான நேரத்தில் அளிக்க முடிகிறது.

- கலை, விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கத் தேவையான கருவிகளும் வாய்ப்பு களும் எங்களுக்கு கிடைக்கின்றன.

**கல்வி உரிமைச் சட்டம் (2009) இப்படி கூறுகிறது**

- *1* முதல் 5 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 200 வேலை நாட்களும் 800 மணிநேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.
- 6 முதல் 8 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 220 வேலை நாட்களும் 1000 மணி நேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.

### பாதுகாப்பு (Protection)

- பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் நான் எந்தவிதமான பாகுபாடுகளையும் அனுபவிப்ப தில்லை.
- என்னை யாரும் எந்தவொரு வகையிலும் புறக்கணிப்பதில்லை.
- உடல் மனரீதியில் யாரும் என்னைத் துன்புறுத்துவதில்லை.
- பயமின்றி ஆசிரியர்களுடன் பழக முடிகிறது.
- குழந்தை என்றாலும் எனக்கு தனித்துவம், உரிமை உண்டு என்று அனைவரும் அங்கி கரிக்கின்றனர்.
- பள்ளியிலும் வீட்டிலும் நான் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறேன் என்று என்னால் உறு தியாகக் கூற முடியும்.

**கேரள மாநில பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம்**

*2002 -இல் மே மாதம் சேர்ந்த ஐக்கிய நாட்டுச் சபையின் குழந்தைகளுக் கான சிறப்பு மாநாட்டில் குழந்தைகளுக்கேற்ற ஒரு உலகம் என்னும் தலைப் பில் சட்டம் கொண்டு வரப்பட்டது. 2005 -ஆம் ஆண்டில் மத்திய அரசு உருவாக்கிய பாலர் உரிமை பாதுகாப்புக் குழு சட்டம் 2012 இல் கேரள மாநி லப் பாலர் உரிமைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் கேரள மாநில பாலர் உரிமை ஆணையம் செயல்படுகிறது. அரசியலமைப்புச் சட்டம் உறு திப்படுத்தும் பாலர் உரிமைகளைப் பாதுகாப்பதே இந்த ஆணையத்தின் முக் கிய கடமையாகும்.*

குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்த என்னால் என்ன செய்ய முடிந்தது. நான் இனி என்னென்ன செய்ய வேண்டும் என ஒவ்வொரு ஆசிரியரும் சிந்திக்க வேண்டும்.

## 1.12 நெறிப்படுத்துதல்

தேசிய கல்வி உரிமைச் சட்டத்தில் ஆசிரியர் ஆசிரியை ஒரு நெறியாளர் (mentor) என்று கருதப்படுகின்றார். பள்ளியின் முழுமையான வளரச்சிக்கு நெறியாளர் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த நல்ல வழிகாட்டுதல் தேவை.

கற்பித்தல் செயலில் முக்கிய காரணிகளான ஆசிரியர் - குழந்தை உறவில் இன்று நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆசிரியரை அறிவை அளிக்கும் நபராகக் கருதாமல் குழந்தைகள் தாமாகவே அறிவை அடைய உகந்த பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தும் நபராகக் கருதி அவர் செயல்பட வேண்டும்.

சரியாகக் கூறினால் பள்ளிக்கூடம் என்பது தனது வீடு போன்று வேறொரு வீடாகும். எனில் ஆசிரியர்கள் பெற்றோர்களைப் போல செயல்பட வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து கிடைக்கும் அன்பு, அரவணைப்பு, முக்கியத்துவம், பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் இவை ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும். இவற்றைப் பிரித்தறிந்து ஒவ் வொரு குழந்தைக்கும் தேவையின் அடிப்படையில் ஆசிரியர் அளிக்கும்போது தான் அவ ரது பொறுப்பு முழுமையடைகிறது. அப்போது தான் பள்ளி வீடாக மாறுகிறது.

ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட குடும்பச் சூழலைத் தெரிந்து கொள்ள கீழே கொடுக் கப்பட்டுள்ளவற்றை ஆசிரியர்கள் செய்தல் வேண்டும்.

- குழந்தைகளின் வீடுகளுக்குச் செல்லுதல்.
- பெற்றோர்களுடனான கருத்தப் பரிமாற்றம்
- குழந்தையைத் தொடர்ச்சியாகக் கவனித்தல்
- 
- 

இவ்வாறு குழந்தைக்கு அன்பும் அரவனைப்பும் பாதுகாப்பு உணர்வும் அங்கீகாரமும் அளித்து ஒரு பெற்றோர் போல் நடந்து கொண்டு, குழந்தைகளுக்குக் கற்றல் அடைவுகள் கிடைக்க உதவும் நபராக நாம் மாறும்போது தான் இந்தப் புதிய காலகட்டத்தின் ஆசிரயராக மாறுகிறோம்.

நெறிப்படுத்துதல் மூலமாக வழிகாட்டுதல், அறிவுரை வழங்குதல், ஆதரவு கொடுத்தல் மேம்படுத்துவதற்கான வாயப்பளித்தல் இவற்றை ஆசிரியர் குழந்தைகளுக்கு அளிக்கிறார். அனுபவம் வாய்ந்த நபர் என்ற முறையிலும் பின்பற்றத் தகுந்த மாதிரி நபர் என்ற முறையி லும் நெறியாளர் குழந்தைகளுடன் பழக வேண்டும். கற்றலுக்குத் தேவையான உத்திகளும் ஆலோசனைகளும் அளிக்க வேண்டும். குழந்தைகளிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டுவர ஒரு நல்ல நெறியாளரால் மட்டுமே முடியும்.

. *நெறிப்படுத்துதல் வாயிலாக;*

- ஆசிரியருக்கும் குழந்தைகளுக்கும் சிறந்த கல்வி அனுபவங்கள் கிடைக்கின்றன.
- ஆசிரியர் மற்றும் குழந்தைகளின் அறிவு மண்டலம் வளர்ச்சியடைகிறது.
- குழந்தை பள்ளி உறவு வலுவடைகிறது.
- குழந்தையின் கற்றல் வளர்ச்சியும் ஆளுமை வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- ஒன்று சேர்ந்து சிந்திக்கவும் முடிவு எடுக்கவும் செயல்பாடுகள் செய்யவும் இயலுகின்றது
- பெற்றோருக்கும் பள்ளிக்குமிடையே தொடர்பு வலுப்படுகிறது. குழந்தையின் கற்றல் நிலைப் பற்றிய அறிவு பெற்றோருக்கு கிடைக்கிறது..
- கலை விளையாட்டு. சுகாதாரம், பணி அனுபவக் கல்வி போன்ற மண்டலங்களில் குழந் தையின் பங்கேற்பும் மதிப்பிடலும் வலுப்படுகின்றன.

நெறிப்படுத்துதல் நடக்க உதவும் விதத்தில் பதிவேடுகளை உருவாக்கிப் பதிவு செய்ய வேண்டும் . பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களையும் நெறியாளர்களாகவும் எல்லாக் குழந் தைகளையும் நெறிப்படுத்துபவர்களாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் சிறு குழுக்களாகக் கருதி ஒவ்வொரு குழுவின் வளர்ச்சியை உறுதிப்படுத்த அந்த வகுப்பாசிரியருக்குப் பொறுப்பை அளிக்கலாம்.

## 1.13 ஆசிரியர் தொழில் ரீதியாகக் கடைபிடிக்க வேண்டிய விதி முறைகள் (Code of Professional Ethics for School Teachers)

### 1. ஆசிரியர்களின் கடமைகள்

*1.1 எல்லா மாணவியரிடமும் அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும்.*

- எல்லாக் குழந்தைகளுடனும் ஒரே போல் அன்புடன் பழக வேண்டும்.
- கல்வியில் பின் தங்கிய குழந்தைகளுக்குத் தனிப்பட்ட கவனம் அளிக்க வேண்டும்..
- குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை, ஆர்வம், எதிர்பார்ப்பு உருவாகும் விதம் நடந்து கொள்ள வேண்டும்.

*1.2 ஜாதி, மத, இனம், நிறம், பொருளாதார நிலை, மொழி, ஆண்- பெண் வேறுபாடு, பிறந்த இடம் இவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் நீதியுடன் பாரபட்சமின்றி நடந்து கொள் ளுதல்.*

- ஆசிரியர்கள் ஜனநாயகக் கொள்கை, பொறுமை. சமூக நீதி மீதான நம்பிக்கை ஆகிய வற்றைக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நம்பிக்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருந் தால் அது பள்ளிக்கூடத்தை மிகவும் பாதிக்கும்.

*1.3 குழந்தையின் உடல் உள உணர்வு, பண்பாடு சமூக ஆன்ம வளர்ச்சிக்கு ஏற்றசூழலை உருவாக்குதல்.*

- உடல், உளத் திறன்கள் முழு வளர்ச்சியடை.யும் காலம் தான் பள்ளிக்காலம்.
- கல்வியால் அறிவு மண்டலம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது.
- முழுமையான தனிமனித வளர்ச்சியே கல்வியின் முக்கிய நோக்கம்.

*1.4 பள்ளி வாழ்க்கையில் எல்லா நிலையிலும் குழந்தையின் தனித்துவத்திற்கு மதிப்பளிக்கப் படுகிறது.*

- மனிதன் என்ற நிலையில் ஒரு குழந்தையின் ஜனநாயக உரிமைகளும் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஆசிரியரிடமிருந்து உருவாகும் மோசமான செயல்கள் குழந்தைகளின் அபிமானத் திற்கு இழுக்கு ஏற்படுத்திக் கற்றலைப் பாதிப்படையச் செய்கிறது.
- பள்ளியின் எல்லாச் செயல்பாடுகளிலும் எல்லாக் குழந்தைகளின் முழுமையான ஈடு பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.
- ஐக்கிய நாட்டுச் சபை அங்கீகரித்து இந்தியா ஒப்புதல் அளித்த குழந்தைகளின் உரிமை விளம்பரத்தையும் குழந்தைகளின் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தின் அறிக்கை யையும் ஆசிரியர்கள் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும்.
- பள்ளிகளில் ஒழுக்கம் கட்டுப்பாடு இவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக் கிய சட்டங்கள் குழந்தைகளின் உரிமைகளை மறுக்கக் கூடியவனாக இருக்கக் கூடாது.

*1.5 குழந்தைகளின் பரம்பரைத் திறன்களும் சிறப்புத் திறன்களும் வெளிப்படும் வகையில் திட்டமிட்ட ஒழுங்குபடுத்திய செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.*

- ஒவ்வொரு குழந்தையின் கற்றல் அடைவுகளை மட்டுமன்றிக் குழந்தையின் திறன்களையும் சிறப்புத் திறன்களையும் தெரிந்து கொள்வது ஆசிரியரின் முக்கிய கடமையாகும்.
- ஒரு குழந்தையின் எல்லாத் திறன்களும் வளரத் தேவையான செயல்பாடுகளை அவர் அளிக்க வேண்டும்.

*1.6 அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கின்ற மதிப்புகளையும், மனப்பான்மைகளையும் உட்கொள்ளும் விதத்தில் பாடத்திட்டம் அமைய வேண்டும்.*

- ஜனநாயகம், மத நல்லிணக்கம், சமத்துவம், நீதி சுதந்திரம் ஆகிய அரசியலமைப்பு மதிப்புகள் பாட ஏற்பாட்டின் முக்கிய கூறுகளாக அமைய வேண்டும்.
- அரசியலமைப்பில் குடிமகன்களின் கடமைகளைப் பற்றிக் கூறும் 51 A புரிந்து கொண்டு அதில் A முதல் K வரையுள்ள பத்திகளை உட்கொண்டு அதன்படிச் செயல்பட வேண்டும்.

*1.7 குழந்தைகளின் தேவைக்கேற்ப ஆசிரியர்/ ஆசிரியையின் கற்பித்தல் முறை புனரமைக்கப்படுகிறது.*

- தொசர் மதிப்பீட்டின் அடிப்படையில் குழந்தைகளின் தன்மை, பெற்ற அடைவு, விருப்பம், கற்கும் முறை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு கற்பித்தல் உத்திகளில் தேவையான மாற்றங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

*1.8 குழந்தைகளின் தனிப்பட்ட தகவல் இரகசியங்களைப் பாதுகாத்து அந்தந்த தகவல்களைச் சட்டப்படியாக யாருக்குத் தெரிவிக்க வேண்டுமோ அவர்களிடம் தெரிவித்தல்.*

- ஒரு கவுன்சிலராக செயல்படும் ஆசிரியருக்குக் குழந்தைகளின் தனிப்பட்ட தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும்.
- இந்தத் தகவல்களைக் குழந்தைகளின் நன்மைக்காகப் மட்டும் அறிவுபூர்வமாக பயன்படுத்த வேண்டும்..

*1.9 குழந்தைகளைப் பயமுறுத்துதல், உடல் ரீதியாகத் தண்டனை அளித்தல், மனரீதீயாகவும், உணர்வு ரீதியாகவும் துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது.*

- குழந்தைகளைப் பாலியல் கொடுமைகளிலிலிருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கும் கடமை ஆசிரியருக்கு உண்டு.
- தண்டனை அளித்தால் குழந்தைகள் நன்றாகப் படிப்பார்கள் எனும் கருத்தை மாற்ற வேண்டும்..
- இவ்வாறான சூழலில் குழந்தைகளுக்கு கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

*1.10 எல்லாவிதமான பாலியல் கொடுமைகளிலிருந்தும் குழந்தையைப் பாதுகாக்க வேண்டும்*

- எல்லா விதமான பாலியல் கொடுமைகளும் உடல்காயங்களை மட்டுமன்றி நீண்ட காலம் நிற்கும் மனக்காயங்களையும் ஏற்படுத்துகின்றன.
- வேலை செய்யும் இடங்களிலும் பள்ளிகளிலும் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றமும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் விதித்துள்ள விதிகளை ஆசிரியர்கள் மதித்து நடக்க வேண்டும்..

## 2. பெற்றோர்களிடமும் சமூகத்தோடும் உள்ள கடமைகள்

*2.1 பெற்றோர்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் தொடர்பு கொள்ள வேண்டும்..*

- ஆசிரியர்கள் குழந்தையைப் பற்றி நன்றாகத்தெரிந்து கொள்ள அவர்களின் பெற்றோர்களுடன் நல்ல உறவுகளை வளர்க்க வேண்டும்.
- ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள சிறந்த தொடர்பு குழந்தையை ஆசிரியருடன் கூடுதலாக நெருங்க முடியும்.
- பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிச் செயல்களைப் பற்றி ஆசிரியர்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆவலாக இருப்பார்கள்
- குழந்தையில் வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்படும் தவறுகளையும் மேன்மைகளையும் பெற்றோர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது பெரிய ஆபத்துகளைக் கூட தடுக்க முடிகிறது.

*2.2 குழந்தைகளின் தன்மானத்திற்கு தீங்கு விளைவிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது.*

- பிற குழந்தைகளின் முன்னிலையில் குழந்தைகளின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் பேசக்கூடாது.
- அதுபோலவே பெற்றோர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது.
- ஏதாவது ஒரு பிருவு குழந்தைகளின் சூழலை ( ஜாதி, மதம் பொருளாதாரம் ) புகழ்வது மற்ற குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்.

*2.3 குழந்தைகள் இந்தியாவின் பண்பாட்டைக் குறித்துப் பெருமைப்பட ஆவண செய்ய வேண்டும்.*

- ஏராளமான பண்பாடு மொழி, மதம் நம்பிக்கை கொண்ட நாடே இந்தியா இது ஒவ்வொரு வகுப்பிலும் பிரதிபலிக்க வேண்டும்..
- இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை கடைபிடிக்கப்படுகிறது.
- பரஸ்பர சகிப்புத் தன்மையும் எல்லாக் கலாச்சாரங்களையும் மதிக்கும் மனப்பான்மை வேண்டும்.
- இந்தக் கொள்கைகள் பாடத்திட்டத்தின் மூலம் வளரச் செய்ய முயற்சிக்க வேண்டும் .

*2.4 பல்வேறு பிரிவினரிடையே ஏற்படும் எதிர்ப்பை உருவாக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.*

- வகுப்பறையில் எல்லா மதத்தினரையும் நம்பிக்கைகளையும், மொழிகளையும் சமமாக மதிப்பளிக்கும் விதத்தில் செயல்பாடுகளை அமைக்க வேண்டும்.
- தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படை முதலில் இந்தியன், பின்னர் மட்டுமே ஒரு பிரிவின் அங்கம் என்ற கருத்து.
- ஏதாவது ஒரு பிரிவினரின் விளம்பரத்திற்காகப் பள்ளி/ வகுப்பறையைப் பயன்படுத்தக் கூடாது
- தற்கால சமூக அரசியலைப் பற்றி உரையாடும் போது ஆசிரியர்/ ஆசிரியை ஏதாவது ஒரு பிரிவினருக்காகப் பேசக்கூடாது.

## 3. ஆசிரியர் என்ற தொழிலோடும் சக ஆசிரியர்களோடும் ஆற்ற வேண்டிய கடமை.

*3.1 தொழில் திறன் வளரத் தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டும்.*

- ஒரு குழந்தைக்கு நிரந்தரமாகக் கற்பிக்க முயலும் ஆசிரியரும் அதே போன்று கற்க வேண்டும்,
- எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கும் அறிவு மண்டலங்களைக் குறித்தும் கற்பிக்கும் முறைகளைக் குறித்தும் தககவல்களைத் திரட்டிச் செயல்படுத்த வேண்டும்.
- எங்கிருந்தெல்லாம் தனக்கு புதிய அறிவுகள் கிடைக்குமென்று விசாரிப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

*3.2 பிற ஆசிரியர்களோடும் மற்றுள்ளவர்களோடும் கருத்துப் பரிமாற்றம் நடத்த வேண்டும்.*

- கல்வித் தொடர்பான உணர்வு உருவாக்குவதற்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னாலான படைப்புகளை உருவாக்கும் வண்ணம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்.
- இவ்வாறான உணர்வு உருவாக்கத் திட்டமிடலும், பயனுள்ள ஒத்துழைப்பும் ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கவும் செயல்படவும வேண்டும்.
- ஆசிரியர்கள் மட்டுமன்றிப் பள்ளிக்கூடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருபவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தல் வேண்டும்.

*3.3 சக ஆசிரியர்களோடு பெருமையோடும் மரியாதையோடும் பழகுகிறேன்.*

- பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களையும் அவர்களின் கல்வித் தரத்தையோ அவர்கள் கற்பிக்கும் பாடத்தையோ கருத்தில் கொள்ளாமல் பெருமையோடும் மதிப்போடும் பழகுதல் வேண்டும்.

*3.4 ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்தவோ தனியார் நிறுவனங்களில் செயல்படுவதோ இல்லை.*

- ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துவது அவருடைய பள்ளிக்கூட செயல்பாடுகளைப் பாதிக்கின்றது.
- சொந்தச் செயலை மேம்படுத்துவதற்கான நேரம் இல்லாமல் போகிறது.
- சொந்த மாணவர்களுக்குத் தனியாக டியூசன் கொடுக்கும் போது பள்ளிக்கூடத்தின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிராகச் செயல்படுவது போன்று ஆகிறது.

*3.5 தன்னுடைய செயல்களிலும் தீர்மானங்களிலும் தாக்கம் செலுத்தி விடுவார்கள் என்பதால் எந்த விதமான பரிசுகளோ வேறு உதவிகளோ வாங்குவதில்லை*

- பலனை எதிர்பார்த்துக் கொடுக்கப்படும் விலை உயர்ந்த பரிசுகளை ஆசிரியர்கள் மானவர்களிடமிருந்தோ பெற்றோர்களிடமிருந்தோ வாங்கக் கூடாது.

*3.6 சக ஆசிரியர்கள் குறித்தோ, பெரிய அதிகாரிகள் குறித்தோ தேவையற்ற குற்றம் கூறுவதில்லை*

- ஒருவருக்கொருவர் குற்றம் கூறுகின்ற குழுக்கள் ஆசிரியர்களுக்கிடையில் தேவை யற்றதாகும்.
- சக ஆசிரியர்களுக்கு எதிராக நீருபிக்க முடியாத குற்றங்களைக் கூறுதல் கூடாது.
- ஏதாவது ஒரு சக ஆசிரியர்/ ஆசிரியையிடமிருந்து தவறு தென்படுமெனில் அதனை மூத்த ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.

*3.7 சக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களின் முன்னிலையில் சக ஆசிரிய ரைக் குற்றம் கூறுவதில்லை*

- ஆசிரியர்கள் குறித்து வேறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால் அவற்றை வெளிப் படுத்தும் முறை சரியானதாக இருக்க வேண்டும்.
- சக ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையைக் குற்றம் கூறும் விதம் பேசக் கூடாது.

*3.8 சக ஆசிரியர்களின் கற்பிக்கும் முறைகளை மதிக்கிறேன்.*

- சிறப்பாகக் கற்பிப்பவர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தவும் அப்படிப்பட்ட சிறப்பை உட்கொள்ளவும் வேண்டும். ஆனால் அவற்றை முழுவதும் கண்மூடித்தன மாக ஏற்றுக் கொள்ளக்கூடாது.

*3.9 சக ஆசிரியர்கள் குறித்து தனிநபர் விவரங்களை இரகசியமாக வைக்கவும், சட்டரீதியா கத் தேவைப்படும் போது மட்டும் வெளிப்படுத்த வேண்டும்.*

- ஏதாவது தேவைக்காகச் சேகரிக்கின்ற சக ஆசிரியர்களின் தனிநபர் விபரம் இரகசிய குணம் உடையதெனில் அவைகளைச் சட்ட ரீதியான செயல்களுக்கு மட்டுமே வெளி யிடுதல் வேண்டும்.

## 1.14 கற்பித்தல் கையேடு

ஒரு கற்றல் அடைவுகளை இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் சுயமா னமுறையில் செயல்பாடுகள் உருவாக்க இயலவேண்டும். பாடநூலிலும், கற்பித்தல் கையேட் டிலும் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளைத் தன்னுடைய வகுப்பறையில் உள்ள குழந்தை களுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்தும், கூடுதல் சேர்த்தும் செயல்படுத்தியும் சிறப்படைய வேண்டும். ஒவ்வொரு கற்றல் அடைவை அடையவும் தேவையான செயல்களைத் திட்டமி டலில் உட்படுத்த வேண்டும்.

கற்றல் செயல்பாடுகளுடன் மதிப்பிடலையும் ஒன்று சேர்த்துத் திட்டமிட்டுச் செயல்பக் கத்தில் எழுத வேண்டும்.

தொடர் மதிப்பீட்டின் வழியாகக் கிடைக்கின்ற விவரங்களை அடையாளப்படுத்துவதே மதிப்பீட்டுப் பகுதியில் அமைய வேண்டும்.

அடுத்து வரும் ஒரு வாரத்திற்குத் தேவையான கற்பித்தல் கையேடு பள்ளி வளக்குழு, பாடக்குழு இவைகளில் வெளியிடுவது நன்று. ஒரு வார காலத்திலுள்ள மதிப்பிடுதல் பகுதியி லுள்ள விவரங்களை அடிப்படையாக்கி ஆசிரியர் ஒரு சிறு பிரதிபலிப்புக் குறிப்பு (Reflection Note) தயாராக்கவும் SRG/Subject Council யில் விவாதிக்கவும் செய்யலாம். இந்தக் குறிப்பின் அடிப்படையில் ஆசிரியரின் தொடர் திட்டமிடல் குறிப்பு தயாராக்க வேண்டும்.

*கற்பித்தல் கையேட்டின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

**கற்பித்தல் கையேடு**

ஆசிரியர்/ ஆசிரியையின் பெயர் :
வகுப்பு :
பாடம் :
அலகு/ மண்டலம்
நேரம் :
கற்றல் அடைவுகள் :
கருத்து :
பாடம் சார்ந்தது :
பணி அனுபவம் சார்ந்தது :
திறன் :
பாடம் சார்ந்தது :
துணைக் கருவிகள் :

| செயல்முறைப் பக்கம் | மதிப்பீட்டு பக்கம் |
|---|---|
| (செயல்பாடுகளும் மதிப்பீடும் அடங்கிய செயல்முறை | மதிப்பீட்டு விபரங்களை இங்கே எழுத வேண்டும் |

தலைமை ஆசிரியரின் கையெழுத்து          ஆசிரியரின் கையெழுத்து

## பிரதிபலிப்புச் சிந்தனை (Reflections)

**எனது கண்டுபிடிப்புகளும், பகுத்தறிவும்**

(கற்றல் செயல்பாடுகளின் மதிப்பீட்டு செயல்முறை வழியாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில்)

- 
- 
- 
- 

தொடர் செயல்பாடுகளும், தீர்வுச் செயல்பாடுகளும்

- 
- 
- 
- 

**பிரதிபலிப்புச் சிந்தனை ( பிரதிபலிப்புக் குறிப்பு ) எதற்கு?**

குறிப்பிட்ட கற்றல் அடைவுகளுக்கேற்ப கற்றல் செயல்பாடு முழுமையாக நிறைவடைந்த பின்னரே பிரதிபலிப்பு தயாராக்குதல் வேண்டும்.

- இந்தக் குறிப்புகளை SRG கூட்டத்தில் வெளிப்படுத்த வேண்டும்.
- தொடர் திட்டமிடலுக்கு வழிவகுத்தல்
- நிலைத் தேர்வின் தொடர் மதிப்பீட்டு ஒருங்கிணைப்பு.

# 2. கலைக்கல்வி- சிறப்பும் முக்கியத்துவமும்

கலை என்பது உலகின் எந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கும் கருத்துப் பரிமாற்றம் செய்ய இயலும் உலகளாவிய மொழியாகும். கலை வழியாக ஒரு நபர் தன்னைத்தானே பகுத்தறியவும். உலகில் தன்னுடைய இடத்தைப் புரிந்து கொள்ளவும், வாழ்க்கையின் பொருளைக் கண்டுபிடிக்கவும் செய்கிறார் எனக் கூறலாம். எனவே கலைக் கல்வி என்பது சுய நிறைவடைதலுக்கான ஒரு கருவியாகும் என மதிப்பிடலாம்.

நலம் விசாரிக்கும் ஆர்வத்திலிருந்து, தனக்குச் சுற்றிலுமுள்ள அழகின் உலகிற்கு குழந்தையை கொண்டு செல்லும் முக்கியமான பங்கை கலைக்கல்வி நிறைவேற்ற வேண்டியுள்ளது. தனியாகவும், குழுவாகவும் உள்ள செயல்பாடுகள் வழியாகப் பல்வேறு சமூக வாழ்க்கைத் திறன்களுக்கு உயர்த்திச் செல்வதற்கு கலைக்கல்வி உதவுகிறது. பண்பாட்டு விழிப்புணர்வு, மதிப்புணர்வு, தன்னம்பிக்கை ஆகியவை அளிப்பதற்கும் கலைக்கல்வி பயன்படுகிறது.

கல்வியின் முக்கிய நோக்கம் ஒருவரின் முழுமையான வளர்ச்சியென்றும், அறிவும்...... மண்டலத்தைப் போலவே உணர்வுபூர்வமாகவும் வளர்ச்சி அடையவேண்டுமென்று உளவியல் சித்தாந்தங்கள் உலகிற்கு எடுத்துரைத்துள்ளது. இதன்மூலம் கலைக்கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட பல்வேறு நாடுகள் தங்களின் பாடத்திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறவும் செய்துள்ளது. பன்முக அறிவு சித்தாந்தத்தின் அடிப்படையில் அறிவின் பல்வேறு நிலைகள் வளர்ச்சியடைவதற்கு மிகப் பொருத்தமான ஊடகம் கலை ஆகும். இசை இயற்கைச் சார்ந்ததும், உள்ளுணர்வு சார்ந்ததுமான புத்திமண்டலங்களின் வளர்ச்சிக்கான வாய்ப்பை கலைக்கல்வி முன்வைக்கிறது. இத்துடன் மொழிசார்ந்த, கணிதம் சார்ந்த அறிவு வளர்ச்சிக்கான கருத்துகளை உருவாக்குகிறது.

கலைகளுக்கு மனித மனதை விரிவடையச் செய்து வாழ்க்கையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் தனித்திறன் உள்ளது. பள்ளிகளிலிலிருந்து கலையை மாற்றி நிறுத்துவதென்பது நாம் இராம ராஜ்ஜியத்திற்கு பதிலாக இராவண இராஜ்யமாக இருக்குமென்று காலத்தால் அழிக்கமுடியாத சிறந்த ஆசிரியரும் தீர்க்கதர்சியுமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் உற்றுநோக்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குழந்தைகளை கர்மயோகிகளாகவும், அதிக உற்சாகமுள்ளவர்களாக ஆக்குவதற்கான அதிக சக்தியை சரியான வழியில் திசை திருப்பி விடாமலிருந்தால் அது தீய சக்தியை வெளிப்படுத்தும். குழந்தைகளின் இத்தகைய அதிக சக்தியை கலை இரசனையிலும், கலையை வெளிப்படுத்துவதிலும் திருப்பி விடுவோமெனில் அது அவர்களுக்கும் சமுகத்திற்கும் ஒரு முதலீடாக மாறும்

செல்வாக்கும், பரந்ததும், வேறுபாடுகள் நிறைந்ததுமான கலைப் பாரம்பரியம் இந்தியாவிற்கு உள்ளது. சங்கீதம், நாட்டியம், சிற்பம், நாடகம் முதலிய கலைகள் பாரத மக்களின் வாழ்கை யுடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைந்திருந்தது. நாட்டிய சாஸ்திரம் போன்ற முழுமை யான மிகப்பெரிய நூல்கள் தோன்றியதே கலைத்திறனுக்கும், கலைக்கல்விக்கும் இங்கு நில வியிருந்த முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறது. குருகுல கல்வி முறையிலும், புத்தமத கால கட்டத்தில் நிறைந்திருந்த கல்விக்கூடங்களின் பாடத்திட்டத்திலும் கலைக்கல்வி முக்கிய பாடமாக இருந்தது.

நவீன கல்விமுறை இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் பாடத்திட் டத்தில் கலைக்கல்வி இடம் பெற்றிருந்தது. காந்தியடிகள் அறிமுகம் செய்த அடிப்படைக் கல்வித்திட்டத்திலும் கைத்தொழிலுடன் கலைகளும் இடம் பெற்றிருந்தன. சுதந்திர இந்தி யாவின் பல்வேறு பாடத்திட்ட சீரமைப்பு கட்டங்களிலும் கலைக்கல்வி இடம் பெற்றிருந்தா லும் அதை நடைமுறைப்படுத்தும் போது ஒதுக்கப்படவே செய்தது. கேரள மக்களின் சமூக வாழ்க்கையில் கலையுடனான உயிரோட்டமான உறவைக் காணலாம். விவசாயத்திலும், பிற தொழில் துறைகளிலும் நம்பிக்கைகளுடன் தொடர்புடைய கலைகள் குருகுல சம்பிரதாயத் திலுள்ள கலைத் திறன்கள் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு கைமாறி வந்ததாக சரித் திரம் கூறுகிறது.

நவீன கல்வியின் ஆதிக்கம் வரை குருகுல கல்வி முறையே கலைக்கல்வி கற்றலி லும் இருந்தது. அருபதாம் ஆண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தில் ஒன்றுமுதல் 8 வகுப்பு வரையிலுள்ள மாணவர்களுக்கு பெயிண்டிங், மோடலிங், சங்கீதம் போன்ற துறைகளில் கற்றல் அனுபவங்கள் கொடுப்பதற்கான அறிவுரை வழங்கப்பட்டிருந் தது. தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பல்வேறு வகுப்புகளுக்கான விரவான பாட ஏற்பாடு உட்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் நடை முறைப்படுத்திய பாடத்திட்ட சீரமைப்புகளில் எல்லாம் கலைக்கல்வி அவசியமான ஒரு காரணி என்ற நிலையில் உட்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர் இல்லாததும் நிலவில் இருந்தவர்களுக்கு பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு தேவையான பயிற்சி கிடைக்காததும் இந்தத் துறையை புறக்கணிப்பதற்கு காரண மாக இருந்தது. கலைக்கல்வியை சரியாக மதிப்பீடு செய்யவோ கற்றல் அடைவுகளை பெற் றோருடன் பங்கிடவோ செய்வதில்லை. இதனால் சமூகமும் இந்தத் துறையை கற்றலின் பாகமாக ஏற்றுக்கொள்ளாத நிலை ஏற்பட்டது.

சர்வதேச அளவில் கலைக்கல்விக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி யுனஸ்கோ போன்ற அமைப்புகள் அறுதியிட்டு கூறிய காரியத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறவேண்டும். இந்தியாவிலுள்ள பல்வேறு கல்விக்குளுக்களும், அறிக்கைகளும் கலைக்க கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுபடுத்தியுள்ளது. இந்த சூழலில் கேரளத்தில் கலைக்கல்வி பாட்த்திட்டத்தில் காலத்திற்கேற்றவாறு சீர்திருத் தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### *கலைக்கல்வி- பல்வேறு உற்றுநோக்கல்கள்*

கலைக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சர்வதேச அளவிலும், சேசிய அளவி லும் பல்வேறு குழுக்களும், அமைப்புகளும் முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான கருத்து களை கூறியிருக்கிறது. குழந்தைகளில் தன்னம்பிக்கை, சுய அறிவு, பிறரை அங்கிகரித்தல் போன்ற குணங்கலை விரிவடையச் செய்வதில் கலைக்கல்வியின் பங்கினைப் பற்றி யுனஸ்கோ எடுத்துரைக்கிறது. கலைக் கல்வியினால் குழந்தைகளில் மனவெழுச்சியும், சமூ கமுன்னேற்றமும் ஏற்படுமென்று யுனஸ்கோ கருதுகிறது.

பாரதத்திலுள்ள பல்வேறு கல்விக் குழுக்கள் குழந்தைகளின் பன்முக வளர்ச்சிக்கு கலைக் கல்விக்கு முக்கியமான பங்களிப்பு உள்ளதென்று தெளிவுபடுத்தியுள்ளது.

முதலியார் கமிஷன் அறிக்கை (1952–53) இவ்வாறு கூறுகிறது:

'Release of creative energy among the students so that they may be able to appreciate cultural heritage and cultivate rich interest, which can pursue in their leisure and, later in life'

பள்ளிக் கல்வி பாட ஏற்பாட்டில் ஓவியம், கைத்தொழில், சங்கீதம்,, நாட்டியம், நாடகம் போன்றவைகளுக்கு முக்கிய இடம் வழங்க வேண்டுமென்று கமிஷன் கூறுகிறது.

கோத்தாரி கமிஷன் அறிக்கையில் (1962–64) இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

'Adequate facilities for the training of the teachers in music and the visual art do not exist. The neglect of the arts in education impoverishes the educational process and leads to decline of aesthetic tastes and values'

கோத்தாரி கமிசன் சிபாரிசின் அடிப்படையில் கலைக் கல்வியின் அவலநிலையையும், வாய்ப்புகளையும் படிப்பதற்காக வல்லுனர்களின் சிறப்புக் குழு பின்னர் உருவாக்கப்பட்டது.

1986 ன் தேசிய கல்விக் கொள்கையின் பாகமாக 1992 ல் ஏற்படுத்திய செயலறிக்கை (POA) கலைக் கல்வியைப் பற்றி இவ்வாறு கூறுகிறது:

'An illustrated view on the cultural perspective inter linking education and culture in order to promote the process of child personality development particularly in terms of discovering the inherent potentialities of the child'.

இவ்வாறாக மழலையர் பள்ளிமுதல் உயர்கல்வி வரையுள்ள கல்விமுறையில் பாடத் திட்டத்தை சீரமைப்பதற்கான தீர்மானம் ஏற்பட்டது.

என். ஸி. இ. ஆர். டி தயாராக்கிய பாடத்திட்ட வரைவுச் சட்டத்தில் கலைக்கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.2005 ன் தேசிய பாடத்திட்ட வரைவுச் சட்டத்தில் கலைக் கல்வியைப் பற்றிய கருத்தை மறு சீரமைக்கவும் அதனுடைய வாய்ப்புகளை பலமுறைகளில் விளக்கவும் செய்யப்பட்டுள்ளது.

- கலைக் கல்வியை கணிதம், அறிவியல் போன்றவையுடன் ஒரு அடிப்படை பாடத் திட்டமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது.
- கலைகள் அக்காடமிக பாடங்களுடன் தொடர்புடைய அறிவு பெறும் செயல்பாடுகளை வேகப்படுத்துவதற்கு மட்டுமே உதவி செய்கிறது என்ற பரம்பரை கருத்தை திருத்தியுள்ளது.
- கலை என்பது அறிவு மண்டலம், மனவெழுச்சி, இரசித்தல் வாயிலாக குழந்தைகளில் உட்புகும் செயல்பாடாக மாறுகிறது.
- புதிய கற்றல் செயல்பாடுகளாக வளரவேண்டிய ஒரு மண்டலமாகும் கலைக்கல்வி என்ற கண்ணோட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது

- குழந்தைகளின் கலைத்திறன் வளர்ச்சியும், மேம்பாடும் நன்றாக பிரதிபலிப்பதற்கு உதவியாக மதிப்பீட்டுத் தந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்துடன் கலைக்கல்வி தொடக்க மேல்நிலை வகுப்புகளில் கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும் சிபாரிசு செய்கிறது.

அறிவுருவாக்க செயல்பாடுகளில் சுயத்திறனையும் விருப்பங்களையும் உபயோகப் படுத்துவதற்கு குழந்தைகளை தகுதியுள்ளவனாக மாற்றுவதில் கலைக்கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி 2007 ன் கேரள பாடத்திட்ட வரைவுச் சட்டம் எடுத்துக் கூறுகிறது.

இந்த சிபாரிசுகளின் அடிப்படையில் நடந்த ஒவ்வொரு பாடத்திட்ட சீரமைப்பிலும் தொடர்ந்து அதை நடைமுறைப்படுத்துவதிலும் கலைக்கல்விக்கு எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றமடைய முடியவில்லை. தொழில் வாய்ப்புகளை மட்டும் முன்வைத்து முன்னேறும் பள்ளிக் கல்வியின் இன்றைய நிலையில் குழந்தைகள் சமூக தீமைகளிலும் என்பதைக் காணலாம். கலையின் மூலம் குழந்தைகள் பெற வேண்டிய முக்கிய சமூக வாழ்க்கைச் சூழலையும் கலாச்சார அறிவையும், முழு வளர்ச்சியையும் ஏற்றுக் கொள்ளாமல் போவது ஒரு முக்கிய காரணமாகும். இந்த சூழ்நிலையில் பிற பாடங்களைப் போன்று கலைக்கல்வியும் அறிவுமண்டலத்தில் ஒரு பாடமாக வேண்டிய ஒரு சரிசமமான கல்விமுறையை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது

2009 ன் கல்வி உரிமைச் சட்டம் இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு மைல்கல்லாக மதிப்பிடப்படுகிறது. குழந்தையின் முழு வளர்ச்சி என்பது அவனுடைய அடிப்படை உரிமையாக மாறியுள்ளது என்பதை எடுத்துக்கூற வேண்டியதாகும். இந்த சூழ்நிலையில் கலைக்கல்வி உட்படும் காரியங்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது இந்தக் காலகட்டின் அவசியமாகும்.

# 3. கலைக்கல்வி - கற்றல் அணுகுமுறை

கலைக்கல்வி பாடத்திட்டத்தின் அவசியமான பகுதியாக அங்கிகரிக்கப்பட்ட சூழ்நிலையில் கற்றல் அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டுமென்ற சரியான கருத்து இருக்க வேண்டும். முன்காலங்களில் அறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு மண்டலம் என்ற நிலையில் கலைகல்வியின் அணுகுமுறை இருந்தது. நவீன உளவியலின் கண்ணோட்டத்தில் ஒரு நபரின் முழு வளர்ச்சி என்பது அறிவின் பல்வேறு நிலைகளின் வளர்ச்சியாகுமென்று உணர்ந்துள்ளோம். அறிவு வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை ஆழமாக சுவாதீனிப்பதும் பரம்பரையான வேரோட்டமுள்ளதுமான கலைகள் தனிநபர் ஆளுமையை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மழலையர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரையுள்ள பள்ளிக்கல்வியில் ஒரு முக்கிய பாடஏற்பாடு என்ற நிலையில் கலைக்கல்வியை அணுகவேண்டும்.

நம்முடைய கல்வித்திட்டத்தில் கலைகள் கற்பிப்பதை ஊக்குவிப்பதில்லை என்று மட்டுமின்றி குழந்தைகளை கலைக்கல்வியிலிருந்து பின்வாங்கச் செய்கிறோம் என்ற பாடத்திட்ட வரைவின் ( 2005) உற்றுநோக்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கலை விழாக்களுக்கான தயாரெடுப்புகளும் அதன்மூலம் கல்வி நிலையங்களுக்கு கிடைக்கும் அங்கிகாரம் என்ற குறுகிய இலட்சியத்தில் பெரும்பாலும் கலைக்கல்வி சுருங்கிவிடுகிறது. பள்ளிக்கூடத்தில் சேரும் அனைத்து குழந்தைகளையும் இலட்சியமாகக் கொண்ட கற்றல் அணுகுமுறையையே பின்பற்ற வேண்டும். அதுமட்டுமன்றி ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ள சிறந்த கலை ஆர்வத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

குழந்தை மையக் கல்வித்திட்டம் பொதுவாக அங்கிகரிக்கப்பட்டிருந்தாலும் கலைக்கல்வியின் விசயத்தில் அந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக காண முடியவில்லை. ஒவ்வொரு குழந்தையின் திறமைகளையும் வாய்ப்புகளையும் பிரித்தறிந்து முழு திறன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் பாடத்திட்ட செயல்பாடுகள் உருவாக்கப்படும் போது தான் குழந்தை மையக்கல்வி முழுமையடைகிறது. குழந்தைகளின் கலை என்பது பல்வேறு சிறப்புகளுள்ள ஒன்றாகும். குழந்தையின் கற்பனையில் பொருட்களின் எதார்த்தமான படங்களோ பாவனைகளோ சப்தங்களோ அதே போல் இருக்க வேண்டுமென்பதில்லை. ஒவ்வொரு காரியத்தையும் குழந்தையின் கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கான திறன் ஆசிரியைக்கு வேண்டும். குழந்தைகளின் பாவனைகளை புரிந்து கொள்ளுதல் என்பதுதான் குழந்தை மையக் கலைக்கல்வியின் நோக்கமாகும். குழந்தைகளுக்கு அறிமுகமான சூழலிலிருந்துதான் எப்பொழுதும் கலைக்கல்வி தொடங்கவேண்டும்.பழக்கமான

குழந்தைக்கு இசையுடன் தொடர்புடைய அனுபவ சூழல் என்பது நாட்டுப்புறப் பாடல்கள், சினிமா பாடல்கள் போன்றவையாகும் . இவ்வாறான பாடல்களுக்கோ வாய்மொழி சிந்துகளுக்கோ ஏற்ற தாளத்துடனான அசைவுகளே குழந்தையின் நாட்டியத் திறனுக்கான அடிப்படையாகும். பிறருடைய தூண்டுதல் இல்லாமல் சுயமாக குழந்தை வரையும் படத்தைப் பார்க்கும் பெரியவர்களுக்கு அந்த நேரத்தில் படம் முழுமையற்றதும், அளவில்லாததுமாக தோன்றக் கூடிய படங்களே ஓவியக் கலையில் அவர்களின் அடிப்படையாகும்.

இவ்வாறு இயல்பாக தோன்றக் கூடிய கலைஞானத்தை ஆசிரியர்கள் கண்டறிந்து கை கொடுத்து உதவியும் அதை வளரச் செய்தும் சிறந்த கலைஞனாக மாற்ற வேண்டும். இத்துடன் அந்தந்த பகுதியின் கலாச்சார பொக்கிஷம் என்ற நிலையில் வளர்ச்சியடைந்துள்ள இசை, நாட்டிய நாடக கலைகளையும் கலையம்சம் கொண்ட கைத் தொழில்களையும் குழந்தையின் அனுபவ அறிவுச் சூழலுடன் ஆசிரியர்கள் புரிந்து கொள்ளவேண்டும். குழந்தைகள் இவ்வுலகை அறிந்து கொள்வது ஐம்புலன்களின் மூலமாகும். பார்த்தல், தொடுதல், கேட்டல் போன்றவற்றின் வாயிலாக இயற்கையை முழுமையாக உட்கொள்ளும் போது தான் கலைத் திறன் மேம்படுகிறது. பிற பாடங்களை கற்பதற்கும் அன்றாட வாழ்க்கைக்கும் கலைகல்வியின் முலம் பெற்றுக் கொள்ளும் உற்றுநோக்கல் திறன் மிக அதிகமான பலனைத் தருகிறது.

பள்ளிக்கூடங்களில் கலைத் திறன்களுக்கே எப்பொழுதும் முன்னுரிமை கிடைக்கிறது. ஒலி ஒளிக் காட்சிகளின் அழகுணர்வை புரிந்து கொள்ளவும் இரசிக்கவும் வேண்டுமென்பதே கலைக் கல்வியில் நாம் மேற்கொள்ளும் அணுகுமுறையாகும். ஒவ்வொரு நபரும் திறமைகளை வெளிக்காட்டுவதில் வேறுபட்டவர்களானதால் இரசனையிலும் திறன்களை வெளிக்கொணர்வதிலும் வேறுபாடு இயல்பானதாகும். ஒவ்வொரு குழந்தையும் அவரவர் திறமையை முடிந்தளவு உயர்த்துவதற்கான வாய்ப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். இயல்பான வளர்ச்சி என்ற நவீன கண்ணோட்டமும் திரும்பத் திரும்ப கற்றலும் ஒன்றுக்கொன்று பொருத்தமுடையதன்று. முடிந்தளவிற்கு குழந்தைகளின் முழு வளர்ச்சியை கருத்தில் கொண்டு இயல்பான வளர்ச்சியை நோக்கிச் செல்லும் முறையாக இருக்க வேண்டும். இதற்காக ஒருங்கிணைந்த கற்றல் முறைகளை முதலாவதாக ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் தொடக்கம் முதலே கலைக் கல்விக்கு அதற்குரியதான அடித்தளம் உள்ளது. பிற பாடங்களுடன் ஒருங்கிணைந்த வாயப்புகளை பயன்படுத்துவதுடன் கலையின் பல்வேறு நிலைகளுக்கிடையில் ஒருங்கிணைப்பதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கலைக்கல்வியில் சங்கீதம். நடனம், ஓவியம், நாடகம் போன்ற பகுதிகள் அடங்கியிருக்கிறது.

மழலையர் பள்ளிக்குழந்தைகள் (3–5 வயது) எதையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் சுறுசுறுப்பும் உள்ளவர்கள். குழந்தைகளின் இத் தன்மையை பல்வகைத் திறன்கள் மூலம் கற்றலுக்கு உபயோகப்படுத்தலாம். இந்த கட்டத்திலும் முதல் இரண்டாம் வகுப்புகளில் முழுமையாக ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறையையே பயன்படுத்த வேண்டும். தொடர்ந்துள்ள கட்டங்களிலும் பலவிதமான கலை வடிவங்களின் மூலம் குழந்தையின் மனதிலுள்ள திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். பல்வேறு கலைத்துறைகளில் நிபுணத்துவமும் பயிற்சியும் பெற்றவர்களின் சேவையை எல்லா கட்டங்களிலும் பயன்படுத்த வேண்டும்.

நிகழ்த்து கலைகள் (Performing Arts) காணொளி கலைகளும் கற்றல் வழிமுறைகள் என்ற நிலையில் பயன்படுத்துவதை மேல்நிலைகல்வி வரை தொடரலாம். ஆனால்

இது முடிந்த அளவிற்கு போலிதனமற்றதாக செயல்படுத்த வேண்டும். தேசிய பாடத் திட்ட சட்டக்கூடு. –2005 ன் கலைக்கல்வி பொசிஷன் பேப்பர் எடுத்துரைக்கும் கருத்து கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பல்வேறு பகுதிகளிலுள்ள வகுப்பறைகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் சுட்டிக்காட் டுவது என்னவென்றால் குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுத்தால் அவர்களின் கலைத்தி றனில் சிறந்த முன்னேற்றம் தோன்றுகிறது. குழந்தையின் சிந்தனைத் திறனுக்கு மங்கல் ஏற்படாத வகையில் படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கான ஒரு அணுகுமுறையை ஆரம் பத்திலிருந்தே கடைபிடிக்க வேண்டுமென்ற முக்கியத்துவத்தையே இது தெளிவுபடுத்து கிறது.

கற்றலில் ஆசிரியரின் பங்களிப்பை போன்றே பெற்றோர்களின் பங்களிப்பும் பொது வாக அங்கிகரிக்கப்பட்டுள்ளதல்லவா. கலைக்கல்வியின் முக்கிய சிறப்பம்சங்கள் பொது சமூகம் சரியான முறையில் புரிந்து கொள்ளவில்லை. அதனால் பெற்றோர்களின் உதவி ஒத்தாசைகளை உறுதிப்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். உள் ளூர் வளங்களை (Local Resources) கண்டறியவும் அதைப்பயன்படுத்தி கலைக்கல் வியை கூடுதல் மேம்படுத்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும்.

## கலைக்கல்வி- பல்வேறு உற்றுநோக்கல்கள்

கலை தனிநபர் அனுபவமாகும். குழந்தையின் கலைத்திறன் ஆளுமை வளர்ச்சிக்கு தேவையான ஊக்கமும், செயல்பாடுகளும், அறிவுரைகளும், உதவியும் கலைக்கல்வி வகுப்பறையின் வாயிலாக குழந்தைக்கு கிடைக்க வேண்டும். அதற்காக நிறம், வடிவம், உருவம், அசைவு, தாளம் சப்தம் போன்றவற்றின் அழகை பிரித்தறியவும் அவற்றுடன் பிரதிபலிப்பதற்கான இரசிப்புத்தன்மையை உருவாக்கவும், வளர்க்கவும் செய்யும் பல் வேறு கற்றல் அனுபவங்களை கலைக்கல்வி வகுப்புகளில் உட்படுத்த வேண்டும். இசை, நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், சினிமா போன்ற பல்வேறு மண்டலங்களாக இவற்றை ஒழுங்குபடுத்தலாம்.

ஒரு பாடத்திட்டம் என்ற நிலையில் கலைக்கல்வியின் இலட்சியங்களையும், நோக் கங்களையும் கீழ்வருமாறு எடுத்துரைக்கலாம்.

- பிறவியிலேயே குழந்தைகளிடம் காணப்படும் கலைத்திறனை கண்டறிந்து வளரச்செய் தல்.
- பல்வேறு கலைகளை இரசிப்பதற்கும் அழகுணர்வை உட்கொள்வதற்கும்.
- கலைகளை இரசித்து அதனை மனதில் கொண்டு சமூக வாழ்க்கையில் மனிதத்துவ கண்ணோட்டத்தை உருவாக்குவதற்கும்.
- கலாச்சார வேறுபாட்டை பிரித்தறிந்து கலாச்சார அறிவை வளர்ப்பதற்கும்.
- கலையின் சக்தியை மனதில் கொண்டு சிந்தனைகளை நவீனமயமாக்குவதற்கும் பரா பட்சமின்றி சமூக சேவைகளில் ஈடுபடுவதற்கும்.
- கலையைப் பயன்படுத்தி பிற பாடங்களை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்து வதற்கும்.
  (Art applied learning)
- பன்முக அறிவு வளர்ச்சியின் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும்.
- கற்றலில் பலதரக் குழந்தைகளை ஒரே போல் கற்றல் செயல்பாடுகளில் விருப்பமுள் ளவர்களாக்குவதற்கும்.

- உருவமற்ற அனுபவங்களை உருவமுள்ள பிம்பங்களாக மாற்றுவதன் மூலம் மனதில் உற்சாகம் ஏற்படுவதற்கும்.
- பல்வேறு கற்றல் செயல்பாடுகளின் ஒருமித்த வாய்ப்புகளை கண்டடைவதற்கும் உப
- குழந்தைகளின் இரசிப்புத் தன்மையை உயர்த்துவதற்கும்.
- பல்வேறு கலைகளில் தனித்திறனுள்ள குழந்தைகளின் திறமையை வளர்ப்பதற்கும்.
- பல்வேறு கலைகளின் மீது ஆதரவு காட்டுவதற்கும்.
- கலைஞர்களை தெரிந்து கொள்ளவும் அவர்களுடைய நன்கொடைகளை அறிந்து மதிப்பளிப்பதற்கும்.
- பெற்றுக் கொண்ட கலைஞானத்தை தகுந்த சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கும்.
- பல்வேறு கலைகளை சமூக சீர்திருத்த இலட்சியத்துடன் உபயோகிப்பதற்கும்.
- பல்வேறு கலைகளின் தொழில்நுட்ப நுணுக்கங்களை பிரித்தறிவதற்கும் உபயோகப்ப டுத்துவதற்கும்.

# 4. கலைக்கல்வி - பல்வேறு மண்டலங்கள்

மனித இனத்தின் வளர்ச்சியோடு வளர்ந்ததாகும் கலைகள். சுற்றிலுமுள்ள இயற்கையிலிருந்து புலன்கள் வாயிலாக மனதில் உருவான பிரதிபலிப்புகளே கலையாக உருமாறுகிறது. அதனால் வாழ்க்கையின் தவிர்க்க முடியாத ஒரு காரணியாகும் கலை. இயற்கையின் இயல்பு நிலையும், வேறுபட்ட பாவனைகளும் மனிதரிடம் உருவாக்கிய மனவெழுச்சியின் தாக்கமே கலைகளிலும் பிரதிபலிப்பதைக் காணலாம். ஐம்புலன் அனுபவங்கள், காட்சிகள், சப்தங்கள், அசைவுகள், நடத்தைகள் போன்ற அனுபவங்களின் பிரதிபலிப்புகள் முறையே ஓவியமாகவும், சங்கீதமாகவும், நடனமாகவும், நாடகமாகவும் உருமாறியது. அதனால்தான் இக் கலைகளில் பங்காளிகள் ஆவதற்கும் இரசிப்பதற்கும் உள்ள திறன் வளர வேண்டியது வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

இந்த நான்கு மண்டலங்களின் வாயிலாகவே கலைக்கல்வி செயல்படுகிறது. குறிப்பிட்ட திறன்களும் திறமைகளும் வளர்ச்சியடைவதே இவற்றைக் கற்பதன் நோக்கமாகும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு மண்டலங்களிலும் வேறுபட்ட நிலையிலுள்ள கற்றல் செயல்பாடுகள் நடைபெறுமாறு அவைகளின் கற்றல் செயல்பாடுகள் நடைபெறுமாறு அவைகளின் கற்றல் அடைவுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுகளின் தன்மைக்கும் குழந்தைகளின் குழந்தைகளின் தகுதிக்கும் ஏற்ப ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவைப் பற்றிய சில விளக்கங்கள் கீழே சேர்க்கப்படுகிறது.

## 4.1 ஓவியம்

கோடுகளும் வண்ணங்களும் ஒன்றுக்கொன்று கூடிக் கலர்வதே ஓவியமாகும். இரு பரிமான மேற்பரப்பில் வெளிச்சத்தையும், நிழலையும் பொருத்தமாக இணைத்து உருவாக்கப்படும் உருவங்கள் தோற்றுவிக்கும் பாவனையை இரசிகனிடம் பகிர்ந்தளிக்கும் செயலே இங்கே நடைபெறுகிறது. கோடுகளும், வண்ணங்களுமே ஓவியனின் சிறப்பம்சங்களாகும். சுற்றிலுமுள்ளவற்றை உற்றுநோக்கி மனதில் தோன்றும் காட்சிகள் ஏற்படுத்தும் பிரதிபலிப்புகளை தனக்கே உரிய கண்ணோட்டத்துடன் அவர் வரைகிறார். அதற்குப் பொருத்தமானதென்று அப்பொழுது தோன்றும் ஊடகங்களை ஓவியர் ஏற்றுக்கொள்கிறார்.

ஓவியத்தின் பல்வேறு நிலைகளை ஒவ்வொரு கட்டத்திலும் அறிமுகம் செய்வதும் பயிற்சி தருவதுமே ஓவியக் கலையின் முக்கிய நோக்கமாகும். மனிதர்கள் குகைகளில் வாழ்ந்திருந்த காலம் முதலே வளர்ச்சியடைந்த சரித்திரம் ஓவியக் கலைக்கு உரியதாகும். வரலாற்றுடனும் வாழ்க்கை கலாச்சாரத்துடனும் இந்த கலைக்கு பிரிக்கமுடியாத உறவை ஏற்றுக்கொள்வதே ஓவியக் கலையின் ஒரு பகுதியாகும்.

***கற்றல் நோக்கங்கள்***

- ஓவியக் கலையின் பல்வேறு கட்டங்களை புரிந்து கொண்டு ஓவியம் வரைவது.
- பலவிதமான ஓவியமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் கருத்துகளை அடைவதற்கும்
- ஓவியம் வரைவதன் மூலம் கிடைக்கும் அறிவை உல்லாச வேளைகளாக்கவும் (Infotainment) ஓவியம் வரைவதன் வாய்ப்புகளை உபயோகப்படுத்தி கிடைக்கும் அறிவை (edutainment) உல்லாசமாக்குவதற்கும்.
- ஓவியர்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் வரலாற்றுக் கருத்துகளை உருவாக்குவதற் கும்.
- பிற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஓவியத்தின் வாய்ப்புகளை பயன்படுத்துவதற்கான கருத்தை உருவாக்குதல்,
- படங்களை உற்றுப்பார்ப்பதற்கும் இரசிப்பதற்குமான திறனை வளர்ப்பதற்கும்.
- பலவிதமான சிற்பங்களை பார்ப்பதற்கும் சிற்பங்களை வடிப்பதற்கும்.

$ சிற்பக் கலைக் கூடங்களை பார்வையிடுவதற்கும் அவைகளின் கலாச்சார முக்கியத்து வத்தை அறிந்து கொள்வதற்கும்.

- சிற்பக் கலையின் வரலாற்றை சேகரிப்பதற்கும் புதிய தேடல் மண்டலங்களை கண்ட டைவதற்கும்.

***பல்வேறு பகுதிகள்***

- பென்சில் ஓவியம், கிரையான்கள், கலர் பென்சில்கள். ஸ்கெச் பேனாக்கள் போன்றவற்றை உபயோகித்து வண்ணப்ப படங்கள், வாட்டர் கலர், ஆயில் கலர் போன்றவற்றாலான ஓவியங்கள் வரைகிறார்கள்.
- கோட்டுப் படங்கள், பெயிண்டிங்குகள், கார்ட்டூன்கள், காரிக்கோச்சர்கள் போன்ற பல வகை ஓவியங்கள் உண்டு.
- பல்வேறு மேற்பரப்பில் பலவிதமான கருவிகளைப் பயன்படுத்தி படங்கள் வரையப்ப டுகிறது.

## 4.2 சங்கீதம்

இயற்கையின் இன்பமான ஒலிகளே நாதங்கள். நாதங்கள் முறையாக சேர்வதே இசை. ஆதி காலம் முதல் இசை உள்ளது. மனிதர்கள் மாற்றமடைந்ததற்கு ஏற்ப இசையும் மாற்றமடை யத் தொடங்கியது. சத்தம், வாரத்தை, அசைவு போன்றவற்றின் ஒருங்கிணைப்பே சங்கீதம். இது ஒரே நேரத்தில் கலையாகவும் அறிவியலாகவும் உள்ளது. மனித உணர்வுகளை மொழிக்கு அப்பாற்பட்டு வெளிப்படுத்த முடியுமென்பதே இசையின் சிறப்பம்சமாகும்.

குழந்தைகளின் மனதை பிரித்தறிந்து நல்ல குணமுள்ளவனாக மாற்றுவதில் இசை முக் கிய பங்கு வகிக்கிறது. மனதை தூய்மையாக்கவும் அறிவை வளர்க்கவும் அதன் மூலம் பாவனையை உயர்த்தவும், திறன்களை வளர்க்கவும் இசைக்கல்வியினால் முடியும். அறிவு வளர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் இசைக் கல்வியின் மூலம் பெறமுடியும்.

பல்வேறு கட்டங்கள் மூலமே ஒரு குழந்தை இசைக்கல்வியில் முன்னேறுகிறது. சரி யான நுணுக்கமான உற்றுநோக்கல், கருத்துப் பரிமாற்றம், வெளியீடு, இரசனை, செயல் பாடு போன்றவையாகுமிது. தாள அறிவும், சப்த எழுங்கமைவும் இசைக்கல்விக்கு தேவை யானதாகும். தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை ஏற்படவும் அறிவு கிடைக்கவும் செய்வதே இசைக்கற்றல் செயல்பாட்டின் மூலம் நடைபெற வேண்டும். குழந்தைகளின் திறமைகளை அறிந்து கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் ஊக்குவிக்கவும் பெரியவர்கள் தயா

ராகும் போது தான் இசை முழுமையான வளர்ச்சி அடைகிறது. பிற பாடங்களைப் போன்று தெரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும், வெளியிடவும், வாய்ப்புகள் ஏற்படவும், ஏற்கவும் வேண்டும்.

பிற பாடங்களின் கற்றல் செயல்பாடுகளுடன் இசைக் கல்வியை பயன்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் இசைத் திறன்களையும், சாதனைகளையும் சமூகத்தில் எடுத்துரைக்கவும், உபயோகப்படுத்தவும் முயற்சிக்க வேண்டும்.

***கற்றல் நோக்கங்கள்***

- பல்வேறு இசைவடிவங்களை அறிமுகம் செய்வதற்கும் இரசிப்பதற்கும்
- குழந்தைகளுக்கு இசையின் மேல் ஆர்வம் ஏற்படுத்துவதற்கு
- இசை வடிவங்களை அறிமுகம் செய்வதன் மூலம் கலாச்சார தனித்தன்மைகளை பிரித்தறிவதற்கும் கலாச்சார உணர்வை வளர்ப்பதற்கும்
- தேச பக்திப் பாடல்களை பாடுவதற்கும் தேசிய உணர்வை உருவாக்குவதற்கும்
- இசையமைப்பாளர்களை தெரிந்து கொள்வதற்கும் அவர்களுடை நன்கொடைகளை அறிந்து கொள்வதற்கும்
- இசையின் சரித்திரத்தை புரிந்து கொள்வதற்கும்
- இசைக் கருவிகளைப் பற்றி தெரிந்துகொண்டு அவற்றை இசைப்பதற்கான திறனை வளர்ப்பதற்கு
- தனியாகவும் குழுவாகவும் பல்வேறு பாடல்களை பாடுவதற்கு
- இசையின் தாளங்களையும், ராகஙகளையும் அறிந்து கொள்வதற்கு
- இசையின் வாய்ப்புகளை உபயோகப்படுத்தி பிற பாடங்களை இரசிப்பதற்கு.

***பல்வேறு பகுதிகள்***

- வாய்மொழி சிந்துகள்
- குழந்தை பாடல்கள், விடுகதைப் பாடல்கள், பழமொழிப் பாடல்கள், கதைப் பாடல்கள்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- மெல்லிசைப் பாடல்கள்
- பல்வேறு கலை வடிவங்களுடன் தொடர்புடைய பாடல்கள்
- தேசிய கானம், தேசபக்திப் பாடல்கள்
- வாத்திய சங்கீதம்

## 4.3 நாட்டியம்

உடலே நாட்டியத்தின் ஊடகம். உடல்,பிரத்யாம்கம், உபாம்கம் போன்ற எல்லா உறுப்புகளும் உடல் அசைவில் உட்படுகிறது. மனவெழுச்சியே நாட்டியம் என்றாலும். நாட்டியத்தின் மூலம் மனவெழுச்சி உணர்வு தோன்றவும் செய்கிறது. சுய வெளிப்பாடென்பதால் நாட்டியமாடுபவரும் பார்பவரும் ஒரே போல் இன்பம் அனுபவிக்கிறார்கள்.

அழகியலுணர்வு வளரவும், தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும், ஒழுக்கத்தை கடைபிடிப்பதற்கும் அறிவியல் முறையிலான தாள அறிவு உண்டாவதற்கும் நாட்டியக்கல்வி உதவுகிறது. ஒருமித்த உணர்வு உண்டாவதற்கும் புத்துணர்ச்சியும் சமூக ஒற்றுமையும் ஏற்படுவதற்கும் நாட்டியம் உதவுகிறது..

எல்லா குழந்தைகளுக்கும் நடனத்தில் ஆர்வத்தை ஊட்டுவதே பள்ளிகளில் நடன வகுப்புகளின் நோக்கமாகும். நடனத்தில் ஆற்றல் மிக்கவர்களுக்கு அவர்களுடைய

திறமையை வளர்ப்பதற்கும் நாட்டிய வகுப்பிற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். பல்வேறு நாட்டிய முறைகளையும் நுணுக்கங்களையும் அறிமுகப்படுத்துவதுடன் பாரத, கேரள நடனங்களின் மேன்மைகளையும் அறிந்து கொள்வதே இதன் நோக்கமாகும்.

***கற்றல் நோக்கங்கள்***

- நான்கு விதமான நடிப்புகளைப் பற்றிய அறிவு உருவாவதற்கு.
- பல்வகையான நடனமுறைகளை தெரிந்து கொள்வதற்கு
- நடனத்தை இரசிப்பதற்குமே நடன விழாக்களில் பங்கேற்பதற்கும்
- பல்வேறு நடனங்களின் கலாச்சார மேன்மைகளின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதற்கு
- நாட்டியத்தின் வரலாற்றுக் கருத்துகளை உருவாக்குவதற்கும் கலையுடன் தொடர்புடைய தேடுதல் செயல்களில் அதிகமாக ஈடுபடச் செய்வதற்கும்
- காணொளிக் காட்சிகளை ஏற்படுத்துவதற்கும் கற்றலை இரசிப்பதற்கும்

***பல்வேறு பகுதிகள்***

- நாடோடி நடனங்கள்
- கிளாசிக் நடனங்கள்
- செமி கிளாசிக் நடனங்கள்

## 4.4 நாடகம்

செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு கலையே நாடகம். உள்ளுணர்வுகளை உணர்ச்சி ததும்ப வெளியிடும் ஓர் அரங்க கலையாகவும் நாடகத்தைக் குறிப்பிடலாம். நாடகத்தின் வெளிப்பாடுகள் மனவளர்ச்சிக்கு ஆக்கம் தருவதாக அமையவேண்டும். ஒவ்வொரு நாடகத்திற்கும் அதற்கே உரிய ஓர் உட்பொருள் அமைந்திருக்கும். அந்த உட்பொருளைப் பார்வையாளர்களுக்கு மறைமுகமாக உணர்த்துவதற்கே நாடக ஆசிரியரும் இயக்குனரும், நடிகரும் முயற்சிக்கின்றனர்.

செயல்களுக்கு ஏற்ற பின்புலங்களும் நாடகங்களுக்கு இன்றியமையாததாகும். கதையின் நோக்கம் கதாபாத்திரம் பிரச்சினைகள், உரையாடல் என்னும் நான்கு அடிப்படைக் கூறுகள் ஒன்றோடொன்று இனைந்து வெளிப்படும் போது ஒரு நல்ல நாடகம் உருவாகின்றது. ஓவியம், சிற்பம், இசை, நடிப்பு, நடனம் முதலான எல்லாக் கலைகளும் நாடகத்தில் ஒருங்கிணைந்திருக்கக் காணலாம்.

***கற்றல் நோக்கங்கள்***

- பல நாடகங்களைப் பார்ப்பதற்கும் அதிலுள்ள சமூக முக்கியத்துவத்தை உணர்வதற்கும்
- எளிய நாடகங்களில் நடித்து நடிப்பைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கும்
- நாடகங்கள் எழுதுவதற்கும் நடிப்பதற்குமான ஆர்வத்தை வளர்ப்பதற்கும்
- நாடகத்தின் தொழில்நுட்ப நுணுக்கங்களை பிரித்தறிந்து நாடகங்களை அரங்கேற்றுவதற்கும்
- நாடகத்துடன் தொடர்புடைய காரணிகளை ( மேடை அமைப்பு, உரையாடல், நடிப்பு, இசை...)பிரித்தறிவதற்கும். நாடக நடிப்பின் மூலம் இரசிப்புத் தன்மையை உட்கொள்வ .தற்கும், கலையுடன் தொடர்புடைய கூடுதல் ஆராய்சிகளில் ஈடுபடுவதற்கும்.

- பலவிதமான நாடகக் கூறுகளை புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நடிப்பதற்கு.

- நாடகத்தின் கலாச்சாரக் கூறுகளை பிரித்தறிவதற்கு.
- பல்வேறு பாடப் பகுதிகளில் நாடகத்தின் வாய்ப்புகளைப் பிரித்தறிந்து பயன்படுத்து வதற்கும் கற்றலை இன்பமுள்ளதாக்குவதற்கும்

*பல்வேறு பகுதிகள்*

- ஓரங்க நாடகங்கள்
- தனிநபர் நாடகங்கள்
- தெரு நாடகங்கள்

# 5.கலைக்கல்வி - மதிப்பீடு

கலை, கற்பவரின் இரசிப்புத் தன்மையை எப்போதும் வளர்த்துக் கொண்டிருக்கும் முக்கியமான காரணியாகும். நடிப்பதற்கு (Preformance) மிகமுக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும் கலை. வளர்ந்து வரும் தலைமுறையிலுள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் மனச்சிக்கல்களையும், மன அழுத்தங்களையும் குறைப்பதற்கு கலைக்கல்வியின் வாய்ப்புகளை பிரித்தறிய வேண்டும். பள்ளி அளவிலான கலைக்கல்வியில் ஓவியம் (drawing), இசை (music), நடனம் (dance), நாடகம் (drama) போன்றவை உட்படடுகிறது. இந்த நான்கு மண்டலங்களின் சமஅறிவும் பாடத்திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது. கலைக்கல்வி தொடபாக பல்வேறு வகுப்புகளில் குழந்தைகள் அடையவேண்டிய கற்றல் அடைவுகள் (Learning outcomes) தயாராக்கப்பட்டுள்ளது. பள்ளிப்பாடத்திட்டத்திலுள்ள பொதுவான பாடங்களான மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்றவைகளில் கூறப்படும் கற்றல் முறைகளே கலைக்கல்வியிலும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை குழந்தைகளுக்கு வழங்கவேண்டும். கலைக்கல்வியின் எல்லா மண்டலங்களிலும் கிடைக்கும் அறிவு குழந்தைகளின் விருப்பத்தைக் கண்டடைவதற்கும் திறமையை வெளிப்படுத்தும் மண்டலத்தில் குழந்தையை வழிநடத்தி செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டின் முக்கிய காரணியாகும் மதிப்பீடு. கலையுடன் தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை திருப்திகரமாக நிறைவேற்றுகிறார்களா? குழந்தைகளின் விருப்பத்தைக் கண்டுபிடிக்கவும் கற்றலை ஆனந்தமுள்ளதாகவும் மாற்ற முடிந்துள்ளதா? போன்றவற்றை மதிப்பீட்டின் மூலமாக மதிப்பிடப்பட வேண்டும். கலைக்கல்வியின் மதிப்பீடு பற்றிய விளக்கங்களையே இங்கே கலந்துரையாடுகிறோம்.

## மதிப்பீடு என்றால் என்ன?

கலைதொடர்பாக பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் குழந்தை அடைந்த திறனும், திறமையும் எவ்வளவு சிறப்பாக அடைய முடிந்தது என்ற தேடலே மதிப்பீடாகும். கற்றல் அடைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மதிப்பீடே வேண்டும். மதிப்பீடு கலைக்கல்வியின் முன்னேற்றத்திற்கான மதிப்பீடாக இருக்க வேண்டும். தவறுகளை சுயமாக திருத்திக் கொண்டு குழந்தைக்கு எந்தளவிற்கு முன்னேற முடிந்தது என்ற மதிப்பீடாக இருக்க வேண்டும்.

## மதிப்பீடு எப்படி?

கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பாடத்திட்டமே 2013 ல்தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மதிப்பீடு செய்யும் போதே கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கலைக்கல்வியுடன் தொடர்புடைய கற்றல் அடைவுகளை திருப்திகரமாக அடைந்துள்ளார்களா என்ற மதிப்பீட்டை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும்.

அதற்காக நிரந்தரமானதும், முழுமையானதுமான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இம்முறையிலான ஒரு மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தும் போது கலைக்கல்வியின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் தொடர்புபடுத்தி இரண்டு

வகையான மதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்

- வகுப்பறையில் கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீடு
- வெளியிடுதல் (Performance) மதிப்பீடும் அறிவுசார் மதிப்பீடும்

இவை ஒவ்வொன்றையும் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

1. வகுப்பறையில் கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீடு ( தொடர் மதிப்பீடு (**C.E**):

### A. *செயல்பாடுகளை மதிப்பிடுதல்*

கற்றல் செயல்பாடுகளை செயல்படுத்தும் போது ஆசிரியரின் உற்றுநோக்கல், வகுப் பறையில் குழந்தைகளின் செயல்கள், கலைக்கல்வியுடன் தொடர்புடைய விவரசேகரிப் பு, கலைக்கல்வி- நாட்குறிப்பு, போர்ட்போளியோ அலகு மதிப்பீடு முதலியவற்றை அடிப் படையாகக் கொண்டு கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீட்டை நடத்த வேண்டும். கற்றல் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கு பொதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு களைப் பயன்படுத்தலாம்.

- செயல்பாட்டில் பங்களிப்பு
- கருத்துப் பரிமாற்றம்
- திறன்கள் அடைதல்
- செயல்/வெளியீடு
- அடையாளப்படுத்துதல்/தயாரித்தல்

சமூக, மனவெழுச்சி மண்டலங்களின் திறன்களை மதிப்பிடுதல் செயல்பாட்டு மதிப் பீட்டின் பாகமாக நடத்தப்பட வேண்டும்..

கீழே கொடுக்கப்பட்டுள்ள திறன்களை அந்தந்த குறிப்புகளை ஏற்றுக் கொள்ளும் நேரத் தில் மதிப்பீடு செய்து ஆசிரியர் கற்பித்தல் கையேட்டில் அடையாளப்படுத்த வேண்டும்

- ***<u>குழந்தையின் கலைக்கல்வி நாட்குறிப்பு</u>*** :குழந்தையின் கலைக்கல்வி நாட்

| *குறிப்புகள்* | *திறன்கள்* |
|---|---|
| செயல்பாட்டில் பங்களிப்பு | சுயம்அறிதல், தலைமைப்பண்பு, பொறுப்புணர்ச்சி |
| கருத்துருவாக்கம் | கற்றல் திறன்கள் |
| திறன் அடைதல் | தீர்மானம் எடுத்தல், பிரச்சினை தீர்க்கும் திறன், |
| செயல்/வெளியீடு | கருத்துப் பரிமாற்றத் திறன் |
| அடையாளப்படுத்துதல்/தயாரித்தல் | விமர்சிக்கும் திறன் |

குறிப்பு/ நோட்டுப் புத்தகம் போன்றவற்றை செயல்பாடுகளின் மதிப்பீட்டிற்குள்ள தெளி வாக உபயோகப்படுத்தலாம். இதை அவ்வப்போது பரிசோதனை செய்யவும் அறிவுரை கூறவும் வேண்டும் இதைப் பற்றிய குறிப்புகளை ஆசிரியர் கையேட்டில் எழுத வேண்டும்

**B)** ***போர்ட்போளியோ மதிப்பீடு*** : கற்றலைப் பற்றி குழந்தைக்கும், பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் பின்னூட்டம் அளிக்கும் செயலையே போர்ட்போளியோ செய்கிறது. இது கற்றலை வேகமாக்கும். கற்றல் செயல்பாடுகளின் வழியாக கடந்து செல்லும் போது உருவாகும் எல்லா படைப்புகளையும் போர்ட்டோளியோவில் உட்படுத்தி மதிப்பீடு செய்யவேண்டும். பாடவாரியான கற்றல் தெளிவுகள் இதில் உட்படும்.

போர்ட்போளியோவின் உள்ளடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- கலைக்கல்வி நாட்குறிப்பு/ நோட்டுப் புத்தகம்
- பிற படைப்புகள்
- படங்கள்/ சேகரிப்புகள்
- பயிற்சித் தாள்கள்

மிகவும் சிறந்தது/ சிறந்தது/ சராசரி/ இனியும் தெலிவு பெற வேண்டும் 4/3/2/1 இவ்வாறு மதிப்பெண்கள் கொடுக்கலாம்.

**கற்பித்தல் கையேடு (TM)** :செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கு கற்பித்தல் கையேட்டை(TM) பயன்படுத்தலாம். TM ன் பிரதிபலிப்பு பக்கத்தில் உள்ள குறிப்புகளை இதற்குப் பயன்படுத்தலாம்.

**C.*அலகு மதிப்பீடு*** :அலகுடன் தொடர்புடைய வாய்மொழி மதிப்பீடு, செயல்பாட்டின் மதிப்பீடு, அலகின் பொதுவான மதிப்பீடு, வினாடி வினாப் போட்டிகள் போன்றவற்றின் வாயிலாக அலகு மதிப்பீடு செய்ய வேண்டும்..

## தொடர் மதிப்பீடு (CE) தரக்குறிப்பு

கலைக்கல்வியில் செயல்பாட்டு மதிப்பீடு( கலைக் கல்வி நாட்குறிப்பு, கற்பித்தல் கையேடு, ஆசிரியரின் உற்றுநோக்கல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு) போர்ட்போளியோ மதிப்பீடு, அலகு மதிப்பீடு ஆகிய ஒவ்வொன்றின் தரப்புள்ளிகள் 10 ற்கு கண்டுபிடித்து பிறகு அவற்றின் தொகை காணவேண்டும். இத்தொகைக்கு சமமான தரம் கொடுக்கவும். இதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| *புள்ளிகள் (30 ற்கு)* | *சதவீதம்* | *தரம்* |
|---|---|---|
| 23 - 30 | 75 – 100 | A |
| 18 - 22 | 60 - 74 | B |
| 14 - 17 | 45 - 59 | C |
| 10 - 13 | 33 -44 | D |
| 10 ற்கு கீழ் | 33 ற்கு கீழ் | E |

உதாரணமாக ஒரு குழந்தைக்கு கலைக்கல்வியில் செயல்பாடு, போர்ட்போளியோ, அலகு மதிப்பீடு போன்றவற்றில் புள்ளி 10 ற்கு 8,7,7 எனில் மொத்தப் புள்ளிகள் 8+7+7 = 22 ஆகும். அட்டவணைப்படி இதன் CE தரம் B ஆகும்

2. ***செயல்பாட்டு மதிப்பீடும் அறிவு மதிப்பீடும் (பருவ மதிப்பீடு)***:

கலைக்கல்வியில் செயல்பாட்டு மதிப்பீட்டிற்கே மிக முக்கியத்துவம் உள்ளது. ஒவ்வொரு மண்டலத்தையும் தொடர்புபடுத்தி வகுப்பு வாரியாக செயல்பாட்டு வாய்ப்புக

ளுக்கும் கற்றல் அடைவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கண்டுபிடிக்க வேண்டும். பாடத்துடன் தொடர் புடைய, முக்கியமாக தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை அறிவுகள் இத்துடன் பரிசோதனை செய்ய வேண்டும்.

இவ்வாறான செயல்பாட்டு- அறிவு மதிப்பீட்டின் மாதிரிகள் SCERT தயாரித்து கொடுக்கும்.

## மதிப்பீட்டிற்கான படிவம்

தொடர் மதிப்பீடு (CE), பருவ மதிப்பீடு (TE), போன்றவற்றை பருவ மதிப்பீடாக பதிவு செய்வதற்கான படிவம்

பருவம் : 1/2/3

பாடம்: வகுப்பு: பிரிவு ::

:

| வ. எண் | மாணவர் பெயர் | CE பிரிவுகள் | | | CE தரம் | TE தரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | செயல் பாடு | படைப்புத் தொகுப்பு | அலகு மதிப்பீடு | | | |
| | | | | | | | |

## தேர நிர்ணய முறை

ஆரம்பப் பள்ளிகளில் தொடர் மதிப்பீட்டிற்கும், பருவ மதிப்பீட்டிற்கும் தனித்தனியாக தரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்காக கீழேகொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன் படுத்தலாம்

| தரம் சதவீதம் | தரம் |
|---|---|
| 75 - 100 | A |
| 60 - 74 | B |
| 45 - 59 | C |
| 33 -44 | D |
| 33 க்கு கீழே | E |

## மதிப்பீடும் ஆண்டு ஒருங்கிணைப்பும்

பருவ மதிப்பீட்டிற்கான CE புள்ளிகள்/ தரங்களை பரிசோதிக்கும் போது மூன்று பருவத்திலும் குழந்தைக்கு கிடைத்த மிக உயர்ந்த புள்ளிகள் தரம் ஆகியவற்றை CE யின் ஆண்டு மதிப்பீட்டின் ஓவரால் கிரேடாக கணக்கிடலாம்.

### *TE கிரேடு :*

மூன்றாம் பருவத்தில் மாணவருக்கு கிடைத்த கிரேட் ஆகும் TE கிரேட்

CE கிரேட், TE கிரேட்டை இவ்வாறு பதிவு செய்வதுடன். சமூக, மனவெழுச்சி, மண்டலங்களிலும் சிறப்பானவற்றை அடையாளப்படுத்துவதும் ஆண்டு மதிப்பீட்டு படிவத்தில் அடையாளப்படுத்த வேண்டும்.

சமூக, மனவெழுச்சி மண்டலங்களில் மாணவர்களின் சிறப்பைப் பற்றி அடையாளப்ப டுத்தும் போது சிறந்தவற்றை மட்டும் அடையாளப்படுத்தினால் போதும், எதிர்மறையான வற்றை அடையாளப்படுத்த வேண்டியதில்லை.

| வ. எண் | மாணவர் பெயர் | *CE* பிரிவுகள் | | | | *CE தரம்* | *TE* | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்பாடு *(20)* | படைப்புத் தொகுப்பு *(20)* | அலகு மதிப்பீடு*(20)* | *மொத்தம் (60)* | | *புள்ளிகள்(100)* | *தரம்* | |
| | | | | | | | | | |

# 6. கலைக்கல்வி - பின்துணை அமைப்புகள்

சிறந்த பின்ுணை அமைப்புகள் இருந்தால் மட்டிமே கலைக்கல்வி சிறப்புடையதாகும்.

**பல்வேறு நிலைகள்**

*1. பள்ளியில்/ வகுப்பறையில்*

பள்ளியில் எஸ்.எம்.சி.யும் பி.டி.எ.யும் இன்று வலுவானதாகும். வகுப்பறையில் எம். பி. டி. எ. உள்ளது. இந்த அமைப்புகளுக்கு கலைக்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும். குழந்தையின் கற்றல் அடைவுகளை விவாதிக்கவும் வேண்டும். கலைக்கல் விக்குத் தேவையான வகுப்பறை வசதிகளும், உபகரணங்களையும், செயல்முறைக்கும், பார்வைக்கும் வைப்பதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு இத்த கைய அமைப்புகளை முடிந்தளவுக்குப் பயன்படுத்தலாம். அந்தந்த பகுதிகளிலுள்ள கலை ஞர்களுடன் பழகுவதற்கும் அவர்களுடைய கலைத்திறனை இரசிப்பதற்கும் பள்ளியிலுள்ள அமைப்புகள் முயற்சிக்க வேண்டும்.

*2. பஞ்சாயத்து/ சி. ஆர். சி. நிலையில்*


நடைமுறையிலுள்ள வளமையங்களை மையமாகக் கொண்டு பொருட்களை சேகரிக் கவும் பங்கிடவும் வேண்டும். சி. ஆர். சி. களுடையவும், பஞ்சாயத்துகளுடையவும் கலைக் கல்வி கூடுதல் மேன்மையடைவற்கு உதவும் கட்டமைப்பு வசதிகளை பெருக்கவும் பொருட் கள்/ நபர்களுடையவும் சேவைகளை ஒழுங்குபடுத்தவும் வேண்டும்.

*3. உபமாவட்டம்/ பி. ஆர். சி. நிலையில்*

பி. ஆர். சி களில் பிற பாடங்களைப் போன்று கலைக்கல்விக்கும் உதவிகளும், பொருட் களை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்களும் தேவையாகும். பி. ஆர். சி அல விலான கூட்டங்களும் பயிற்சிகளும் கலைக்கல்வி ஆசிரியர்களுக்கும் போதுமான இடை வேளைகளில் வழங்கவேண்டும்.

*4. மாவட்ட அளவில்*

மாவட்ட அளவில் கலைக்கல்வி ஆசிரியர்களின் ஒரு ரிசோழ்ஸ் பூல்/ ஒரு டி. ஆர். சி அமைப்பும் அவசியமாகும்.



# ஓவியக்கலை



# ஓவியம்

## முன்னுரை

ஓவியக்கலையின் வழியாக ஒரு பகுதி தனித்தன்மை வாய்ந்த முறையில் எடுத்துரைக்கப்படுகிறது.நமது காட்சியைத் தனித்தன்மை வாய்ந்த ஒரு இடத்திற்குக் கொண்டு செல்லவும் அதன் வழி மனதில் வேறுபட்ட காட்சிகள் உருவாக்குவதுமே ஓவியங்களைக் காண்கின்ற போது ஏற்படும் அனுபவம். ஓவியக்கலையின் அடிப்படை என்பது ஒளியின் தனித்தன்மை ஆகும். அது பார்வையாளர்களோடு நேரடியாகச் செயல்படுகிறது. ஓவியம் வரைதலும்,ஓவியத்தைப் பார்த்தலும் என்பது மனதிற்கு இன்பத்தையும், உற்சாகத்தையும் தருகிறது. குழந்தைகளின் தனிநபர் மேம்பாட்டிற்கு ஓவியக்கலை கல்வி மிகவும் உதவுகிறது.

கோடுகளுடையவும், நிறங்களுடையவும் ஆச்சரியத்தை மிக வியப்போடு பார்க்கவும் அதனை அனுபவிக்கவும் செய்வதில் குழந்தைகள் உற்சாகமாக இருப்பர். விரல்களை இணைத்துப் பயன்படுத்தத் துவங்குவது முதல் அவர்கள் வரைகின்றனர், நிறம் உருவாகின்ற எந்த பொருளைப் பயன்படுத்தியும் தரையிலும், சுவரிலும் வரைகின்றனர், அறிவு வளர்ச்சியும் முதல்கட்டத்தில் மனதில் பதிகின்ற முதல் தகவல்களை வரைந்தும், நடித்தும், ஆடியும், பாடியும் வெளியிடுவதன் பாகமாக குழந்தைகள் இதுபோன்ற செயல்களில் ஏற்படுகின்றனர். இதற்கு தொடர்ச்சி கொடுக்கவும் தனிமனித மேம்பாட்டின் பாகமாக முறைப்படுத்தவும் செய்ய வேண்டியது கல்விச் செயல்பாட்டின் தர்மமாகும்.

கோடுகளும் நிறங்களுமே ஓவியக்கலையின் அடிப்படை நிலைகள். நிறங்கள் இயற்கையில் உள்ளதெனில் கோடுகள் ஓவியனின் படைப்பாகும். பிறவியிலேயே அல்லது உள்ளுணர்வு வழியாக கிடைப்பதாகும் இது. சிறு வயதுள்ள குழந்தைகள் சாதாரணமாக வரைந்த கோடுகளில் சிறிய குறிக்கீடு செய்து தடங்கள் ஏற்படுத்தாமல் இருப்பதே ஓவியக்கலை கற்றலின் முதல்படியாகும். ஆனால் நிறங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அளிக்கவும் அதனை ரசிப்பதற்கான வாய்ப்பு அளிக்கவும் வேண்டும். கற்பனை வடிவம் உருவாக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

வடிவங்களைக் குறித்துள்ள குழந்தைகளின் கற்பனை பெரியவர்களிலிருந்து மாறுபட்டு காணப்படும். வடிவத்தின் அளவுகளில் பெரியவர்களிலிருந்து வேறுபட்டு காண்கின்ற விதம் அவர்களின் கோடுகளில் காணப்படுகிறது. அதனை புரிந்துகொண்டு குழந்தைகளின் கோடுகளை பார்க்கவேண்டும். இவ்வாறு அவர்கள் சுயமாகக் கண்டடைந்த வடிவத்தின் தனித்தன்மை குறையாமல் அதனை மேம்படுத்தியெடுக்க உதவுகின்ற விதத்தில் இருக்க வேண்டும் ஓவியக் கல்வி, ஆரம்ப நிலையிலுள்ள ஓவியக்கலைக் கல்வியிலிருந்து தொழில் நுட்பமுறையைப் பெரும்பாலும் மாற்றி அமைக்க முயல வேண்டும். சுற்றுமுள்ளவற்றை நன்றாக உற்றுநோக்கவதற்கும் அதே போன்று வரையவும் ஓவியங்களைக் கண்டு இரசிப்பதற்குமான வாய்ப்புகள் கொடுக்க வேண்டும்.

# கற்றல் அடைவுகள்

## எட்டாம் வகுப்பு

- இயற்கையை நுட்பமாக உற்றுநோக்கி காட்சிப்படுத்துவதற்கான திறனைப் பெறுகின்றனர்.
- இயற்கைப் பற்று, அழகுப் பார்வை ஆகியன வலுவடைகிறது.
- படம் வரைதலில் நிழலினுடையவும், ஒளியினுடையவும் முக்கியத்துவத்தை ஆழமாகப் புரிந்து கொள்கின்றனர்.
- கேரளக் கலை வரலாற்றைப் புரிந்து கொள்கின்றனர்.
- மனித உருவங்களின் குறிப்பிட்ட விதத்திலான படக்காட்சியை பாவ அசைவுகளுடன் வரைகின்றனர்
- சமுக நன்மைகளுடையவும், சமூக பிரச்சினைகளுடையவும் அடிப்படையில் நடைசார்ந்த படங்கள் வரைகின்ரனர்.
- கணினி கிராபிக்ஸ், அனிமேஷன், எடிட்டிங் வாயப்புகளை அறிந்து கொள்கின்றனர்
- முப்பரிமாண கலைவடிவங்களைப் பல்வேறு ஊடகங்கள் பயன்படுத்தி உருவாக்குகின்றனர்.
- கற்பனை சார்ந்த சுதந்திரமான வரைதல் வழியாகக் கருத்தை வெளியிடுகின்றனர்.
- கலைப்படைப்புகளையும், கலை விமர்சனங்களையும் சேகரிக்கின்றனர்.

## ஒன்பதாம் வகுப்பு

- கருத்துகளை உற்றுநோக்கிப் படைப்பாற்றல் சார்ந்த ஓவியங்கள் வரைகின்றனர்.
- படத்தை உற்றுநோக்கி விமர்சனமுறையில் எதிர்கொள்கின்றனர்.
- படம் வரைதலில் நிழலினுடையவும், ஒளியினுடையவும் முக்கியத்துவத்தை ஆழமாகப் புரிந்து கொள்கின்றனர்.
- மனித உருவங்கள் உட்பட்ட படங்கள் வரைந்து வண்ணம் தீட்டுகின்றனர்.
- படத்தை உற்றுநோக்கி வரைவதற்கு பயன்படுத்திய ஊடகங்களைப் பிரித்தறிகின்றனர்.
- ஓவிய, சிற்பக் கலை வரலாற்றை அறிந்து கொள்கின்றனர்
- பல்வேறு ஊடகங்கள் உபயோகித்து முப்பரிமாண படங்கள் உருவாக்குகின்றனர். நவீன தொழில் நுட்பம் உபயோகித்து ஓவியம் வரைகின்றனர்
- புகைப்படம் எடுக்கும் கருவி ( கேமரா) வீடியோ கேமாரா ஆகியவை உபயோகித்து நகைச் சுவைப் படங்கள் உருவாக்குகின்றனர்
- சிந்தனையையும், சிரிப்பையும் தூண்டும் கருத்துகளில் ஊன்றிய தற்கால முக்கியத்துவம் வாய்ந்த கேலிச்சித்திரங்கள் வரைகின்றனர்.
- கலைப் படைப்புகளை இரசிக்கவும் பாதுகாக்கவும் செய்கின்றனர்.

## பத்தாம் வகுப்பு

- படவாசிப்பு வழியாக விமர்சனமுறையில், தன்னம்பிக்கையுடன் செயல்படுகின்றனர்.
- தன்னுடையதான கருத்துகளையும், நிலைகளையும் தெளிவுபடுத்துகின்றனர்.
- கருத்தை உட்கொண்டு படங்களும் சிற்பங்களும் வரைகின்றனர்.
- ஓவிய சிற்பக் கலை வரலாற்றைத் தெரிந்து கொள்கின்றனர்
- கலை என்பது கலை சார்ந்த மாற்றங்களுக்கு உட்பட்டது எனப் பிரித்தறிகின்றனர்.
- ஓவியக் கலையுடன் தொடர்புடைய மென்பொருளைப் பயன்படுத்திப் படம் வரைகின்றனர்.
- சுதந்திரமாக வரைவதன் வழியாக சமூகத்தை எதிர் கொள்கின்றனர்.
- சிந்தனையை தூண்டக்கூடிய கேலிச்சித்திரங்களும் ( காரிக்கோச்சரும் வரைகின்றனர்.
- போட்டோ கிராபி, வீடியோகிராபி வாய்ப்புகள் பயன்படுத்தி நகைச்சுவைப் படங்கள் உருவாக்குகின்றனர்

# எட்டாம் வகுப்பு

## அலகு – 1 : நிழலும் ஒளியும்

பார்வையின் அடிப்படை ஒளியாகும். ஒளியிருந்தால் மட்டுமே பொருட்களைப் பார்க்கமுடியும். ஒரு பொருளில் ஒளி விழும்போதுதான் அந்தப் பொருளின் அமைப்பைக் குறித்த அறிவு நமக்கு கிடைக்கிறது. ஒளியின் சக்தியில் வரக்கூடிய மாற்றங்கள் இயற்கையிலும், பொருட்களிலும் காட்சி சார்ந்த பெரிய மாற்றங்களை உருவாக்குகின்றன. அதைப்போன்று நிறங்களைப் பகுத்தறிவதற்கும் ஒளி தேவையாகும். சுருக்கமாகக் கூறினால் பார்வையின் ஆதாரமே ஒளியாகும். ஒளியினுடையவும், நிழலினுடையவும் சரியான படக்காட்சி வரையும் பொருளுக்கு உண்மையான பொருளுடன் மிக நன்றாகப் பொருந்த இயலும்.

### கற்றல் அடைவுகள்

- படம்வரைதலில் நிழலினுடையவும், ஒளியினுடையவும் முக்கியத்துவத்தை ஆழமாகப் புரிந்து கொள்கின்றனர்.

### கருத்து, அறிவு

- பொருட்களை நாம் பார்ப்பது அதில் விழக்கூடிய ஒளியின் அடிப்படையிலாகும்.
- ஒளியினுடையவும், நிழலினுடையவும் சரியான படக்காட்சி வரைந்த பொருளுக்கு முப்பரிமாணத் தன்மை தோன்ற உதவுகிறது.
- ஒளியின் உறைவிடம் மாறுவதற்கேற்ப ஒளியும் நிழலும் பிம்பமும் சக்தியானதும் மோசமானதாகும்.
- ஒளியின் தீவிரத்திற்கு ஏற்ப பொருளின் நிறம் தெளிவாகவும், மங்கலாகவும் காணப்படுகிறது

.

### கற்றல் செயல்பாடுகள்

#### நிலை-1


- வகுப்பறையில் ஜன்னலின் அருகேயும், தொலைவிலுமாக வைக்கப்பட்டுள்ள இரு பொருட்களை உற்றுநோக்கல் ( பூக்கூடை, பானை ஆகியவை) இரு பொருட்களிலும் விழக்கூடிய ஒளியினுடையவும், நிழலினுடையவும் தனித்தன்மைகளை விவாதித்தல். அட்டவணைப்படுத்துதல் உற்றுநோக்கல் குறிப்பு தயாரித்தல்.

**நிலை-2**

- வெயலில் நிற்கக்கூடிய மரங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை உற்றுநோக்கு தல். ஒளியின் உறைவிடத்தில் நிழலும், விழக்கூடிய நிழலின் இடமும் உற்று நோக்கல்

**நிலை-3**

- வகுப்பறையில் ஜன்னல் அருகே வைக்கப்பட்டுள்ள பூக்கூடை/ பானை உற் றுநோக்குதல்.
- பொருளின் வடிவம், அளவு இவற்றைக் கவனமாக வரைதல், கட்டங்களாக வரைவது உகந்தது. ஏழு டோண்கள் புரிந்துகொள்ளுதல்



- பூக்கூடையை உற்றுநோக்கி நிழலுக்கும் ஒளிக்கும் ஏற்ப நிழலிடுதல்
- நிழலிட 3B, 5B, 8B ஆகிய பென்சில்களைப் பயன்படுத்துதல்.
- நிழலிடும் முறையான Hatching, Cross hatching, Dotted style, Rough Style, Photographic ஆகிய முறைகளைப் பயன்படுத்தலாம்.( ஆசிரியர் செய்து காட்ட வேண்டும்)

**நிலை-4**

- *காட்சி*
  - வரைந்த படங்களைக் காட்சிப்படுத்துதல், சுயமாகவும் ஒன்றுக்கொன்றும் மதிப்பீடு செய்தல்.
  - மதிப்பீட்டிற்குப் பின் படத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனில் அதற்கும் அல்லது புதிய படம் உருவாக்குவதற்கும் தொடர் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்
  - முதலில் வரைந்த படமும், இரண்டாவது வரைந்த படமும் ஒப்பிட்டு சுய மதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்க வேண்டும். உருவான வளர்ச்சியைக் குறித்து சுயமாக உணர்வடைய வேண்டும். இலையும் பூக்களும் மாதிரியாக வைத்து நீர்ச்சாயம் பூசிப் பார்க்கவும்.

## மதிப்பீடு செய்தல்

- கற்றலின் எல்லா நிலையிலும் மதிப்பிடுதல்.
- ஒளியினுடையவும், நிழலினுடையவும் விழிப்புணர்வு/ உற்றுநோக்கும் தன்மை
- நிழலிட்ட முறை, நடை.
- பொருளின் தன்மையோடுள்ள பொருத்தம்.
- முழுமையில் ஊன்றிய சிறந்த மதிப்பீடு

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடையமுடிந்தது?*

- நிழலையும், ஒளியையும் குறித்த அறிவு
- பொருளின் வடிவத்தைக் காட்சிப்படுத்தவும், புரிந்து கொள்வதற்கும் உள்ள திறன்
- பல்வேறு நிழலிடும் முறைகளைக் குறித்த அறிவு.
- பல்வேறு முறையிலும், நடையிலும், பென்சிலும், பேனாவும் பயன்படுத்துவதற்கான திறன்.

# அலகு – 2 : கேரளக் கலை வரலாறு

கலை காலத்திற்குட்பட்டது.ஒவ்வொரு கலையும் பரவுவது அந்தந்தக் காலத்தின் பொருளாதார, சமூக, சமுதாய, பண்பாட்டு மாற்றங்களுக்கேற்ப ஆகும். அவ்வாறு அல்லாமல் உருவாகும் கலைகளோ, கலைவடிவங்களோ நிலைநிற்பதில்லை. எனவே கலைவரலாற்றைப் படிக்க வேண்டுமெனில் அந்தக் கலைவடிவம் உருவான கால கட்டத்தின் வரலாறு சமூக பண்பாட்டைக் கற்பது என்பதே பொருள்.

கலைவடிவங்களை நேசிப்பது என்பது பண்பாட்டை நேசிப்பது என்பதாகும். கேரளக் கலை வரலாற்றை அறிந்து கொள்வது என்பது, கேரளப் பண்பாட்டை அறிந்து கொள்ளவும், அந்த ப் பண்பாடு உருவாக உதவியாக இருந்தவர்களை நினைவுகொள்வதும், ஆதரிப்பதும் அந்த பண்பாட்டில் பெருமை கொள்ளவும் செய்தல் என்பதாகும்.

## கற்றல் அடைவு

- கேரளக் கலை வரலாற்றைச் சுருக்கமாகப் புரிந்து கொள்கின்றனர்.

## கருத்துகள்

- கலை வரலாறு என்பது மனிதப் பண்பாட்டின் நோக்கமாகும்.
- வரலாற்றில் குறிப்பிட்டுள்ள குறியீடுகளும், வடிவங்களும் அந்தக் கால கட்டத்தைக் குறித்து நம்மோடு பேசுகிறது.
- கேரளத்திற்கு அதனுடையதான சிற்ப ஓவிய, கலை பாரம்பரியம் உண்டு. அதன் எச்சங்கள் இன்றும் நிலைநிற்கின்றன.
- காலத்தை எதிர் கொள்ளும் எழுத்து நடை, நிறப்பயன்பாடு, பண்பாட்டுத் தனிமை, உயர்ந்த உற்றுநோக்கல் ஆகியவை நமது வரலாற்றைப் பெருமைப்படுத்துகின்றன.

## கற்றல் செயல்பாடுகள்

- கலை வரலாற்றை உணர்த்தும் குறுந்தகடு காட்சி, விவாதம்
- கலை வரலாற்றின் எச்சங்கள் நிலைநிற்கும் இடங்களுக்கான கற்றல் சுற்றுலாக் கள், கல்விக் குறிப்புகள், விவாதங்கள், மேற்பார்வை
- வரலாற்று ஆசிரியர்கள்/ ஓவியர்கள் இடையிலான நேர்க்காணல் விவாதங்கள்
- வரலாற்றுடன் தொடர்புடைய. செய்தித்துணுக்குகள், படங்கள் ஆகியவற்றின் சேக ரிப்பு, காட்சி ஒருங்கிணைப்பு, வலைப் பக்கங்கள், பத்திரிக்கை...
- கேரள ஓவியக்கலையுடன் தொடர்புடைய கருத்தரங்கு அறிக்கை தயாரித்தல்
- விவர சேகரிப்பு ( சேகரித்த பொருட்கள்) நிகழ்த்துதல் விவாதம் மேம்படுத்துதல்
  - குகை ஓவியங்கள்:- எடைக்கல் குகை
  - சுவர் ஓவியங்கள்:- குருவாயூர், மட்டாஞ்சேரி. திருச்சூர். தொடீக்குளம். கிருஷ் ணபுரம், பத்மனாபுரம் அரண்மனைகள்
  - நிர்வாண ஓவியங்கள்:- களங்கள், சர்ப்பக்களம், கோலங்கள், படையணிக் கோலங்கள்.
  - முக எழுத்து :- தெய்யம், கருடன், பறயன்துள்ளல், கதகளி ஓட்டன்துள்ளல். சீதங்கன் துள்ளல்.
  - நாட்டுப்புறக் கலைகள்:- தெய்யம், படையணி, முடியேற்று, கண்ணியார்களி, சிம்மனாக்களி ஆகியவை.
  - அரண்மனை ஓவியர்கள்:- அழகிரி, நாயுடு போன்றோர்

- இராஜ ரவிவர்மா ஓவியம் வரலாறு
- இராஜ ரவிவர்மா, மங்களபாய் தம்புராட்டி, கெ. சி. எஸ். பணிக்கர், மதராஸ் ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ், தந்திரிக் ஆர்ட், எம். வி. தேவன், சி.என் கருணா கரன், அக்கிதம் நாராயணன், அக்கிதம் வாசுதேவன், சி. கெ. ரா, எஸ். எல். லாரியல், கானாயி பாலன் நம்பியார், மாதவமேனோன், டி.கெ. பத்மினி. எம். ஆர். ஆர். டி தத்தன், பி. டி. தத்தன், புலிஞ்சித்தாய், பாரிஸ் விஸ்வநாதன், கலாதரன்
- வரைபட ஓவியர்கள்:- நம்பூதிரி, எ. எஸ். நாயர், எம். வி. தேவன், மதனன், ஷெரிப்

## மதிப்பீடு

- கற்றலின் எல்லா நிலைகளிலுமுள்ள மதிப்பீடு
- வரலாற்றுடன் உள்ள ஆர்வம்
- ஒருங்கிணைப்பு, கருத்தரங்கம், அறிக்கை தயாரித்தல், நிகழ்த்துதல் இவை அடிப்படையிலான தர மதிப்பீடு.

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகள் எந்த அளவில் அடைய முடிந்தது?*

- கலை வரலாற்றுக் கல்வி வழியாகப் பண்பாட்டை அறிந்து கொள்வது. அந்தப் பண்பாட்டு உருவாக உதவிய பெரியோர்களைக் கண்டறிவது, ஆதரிப்பது. அந்தப் பண்பாட்டால் பெருமைக் கொள்ளக்கூடிய குடிமகனாகிறேன் என்ற உள்ளுணர்வு.

# அலகு – 3 : மனித உருவங்கள்

ஓவியக் கலையில் மனித உருவம் உட்பட்ட படங்கள் வரைவதென்பது முக்கிய மானது. அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புடைய எந்த படம் வரைந்தாலும் மனித உருவம் உட்படுத்துவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனவே மனித உருவ அமைப்பு, விகிதம் ஆகியவற்றைக் கவனமாக வரைவதென்பது மிக முக்கிய மான ஒன்றாகும். அதைப்போன்று ஓவியத்திற்கு மெருகூட்ட வரையக் கூடிய மனிதனின் பாவம், அசைவு ஆகியவை பெரும் பங்கு வகிக்கின்றன.

## கற்றல் அடைவு

- மனித உருவங்களின் விகிதம் சார்ந்த படக்காட்சியை பாவ அசைவுகளுடன் செயல்படுத்துதல்.

## கருத்து, அறிவு

- மனித உடலின் ஒவ்வொரு உறுப்பும் சரியான விகிதத்திலாகும்..

- தலை அளவின் அடிப்டையில் உடல்பகுதிகளின் அளவைக் கணக்கிடலாம்.
- மனிதனை வரையும் போது அசைவு பாவம் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும்.


## கற்றல் செயல்முறை

### நிலை-1

- மனித உடலின் அளவுகளை தலை அளவின் அடிப்படையில் புரிந்து கொள்ளுதல், விவாதம், ஒருங்கிணைப்பு.
- முழு வளர்ச்சி அடைந்த ஒரு மனிதனின் தலை ஒரு நீள் வட்டத்தில் அடங்குகிறது.
- இந்த வட்டத்தின் உடரம் 71/2 பாகம் சமமாக கீழ்நோக்கி வரைந்தால் தலைக் குப் பொருத்தமான மனித உடலை வரைய இயலும்(இது ஒரு சராசரி கணக்காகும்)
- தலை உட்பட்ட நீள்வட்டத்தின் உயரத்தின் அடிப்படையில் மனித உடலின் மீதி பகுதிகளை அடையாளப்படுத்த வேண்டும்.


### படிநிலை-2

- ஒரு மாணவனை மாதிரியாக்கி தலை அளவின் அடிப்படையில் உடல் பகுதிகளை அளந்து புரிந்து கொள்கின்றனர் (முழு வளர்ச்சியடைந்த நபருக்கு ஏழரையடியடியாக இருந்தால் குழந்தைகளுக்கு ஐந்தாக இருக்கும்.)




படிநிலை-3

- அசையும் மனித உருவம் வரைவதற்காகப் பல்வேறு நிலைகளில் குழந்தை களை மாதிரியாக்கி ஸ்கெலிட்டன் முறையிலான படம் வரைதல்.



படிநிலை-4

- வரைந்த படங்களை இரட்டைக்கோடு முறைப் பயன்படுத்தி சரியான மனித உருவத்திற்கு ஒப்பாக்குதல்



*ஆண் பெண் வேறுபாட்டையும் ஸ்கெலிட்டனில் குறிப்பிடலாம்*

படிநிலை-5

- படங்களைக் காட்சிப்படுத்துதல், மதிப்பீடு செய்தல்.
- குறைகளை அகற்றி மீண்டும் வரைந்து முழுமையாக்குதல்.

படிநிலை-6

- ஒரு வட்டத்திற்குள்ளே கண்களும், நாக்கும் மாற்றி வரைந்து பல்வேறு பாவங்களை உருவாக்க முயற்சி செய்தல்.
- சிறிய மாற்றங்களால் பாவங்கள் மாறுவதை உணரச் செய்தல்.
- படம் வரைதல் காட்சிப்படுத்துதல்.

## மதிப்பீடு

- கற்றலின் எல்லா நிலையிலும் மதிப்பீடு செய்ய வேண்டும்.
- உடல் பகுதியின் அளவுகள், வெவ்வேறு அசைவுப் படக்காட்சிகள், வெவ்வேறு முக பாவ நிகழ்த்துதல்கள்.
- முழுமை
- குழுவாகக் காட்சிப்படுத்தும் திறன். இவை அடிப்படையிலான சிறந்த மதிப்பீடு

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைய முடிந்தது?*

- உடலின் விகிதத்தைக் குறித்த அறிவு
- தனியாகவும், குழுவாகவும், மனித உருவம் வரைவதன் வழியாகக் கருத்தை வெளியீட்டிற்கான திறன்
- முகபாவ வேற்றுமைகள் காட்சிப்படுத்தவும் அதன் வழியாகக் கருத்துகளுக்கு முழுமை அளிப்பதற்குமுள்ள திறன்.

# அலகு-4 : இயற்கையழகு

இயற்கையைக் காட்சிப்படுத்துவதற்கு இயற்கையிலுள்ள ஒவ்வொரு பொருளையும் நுட்பமாக உற்றுநோக்க வேண்டும். ஒவ்வொரு பொருளினுடையவும் வடிவமைப்பு/ தன்மை/ நிறம் ஒரே பிரிவில் உட்பட்ட பொருட்களுக்கு இடையிலான வேற்றுமைகள் போன்றவற்றைக் குறித்துச் சரியாக உணர்வடைய வேண்டியது இன்றியமையாததாகும்.

## கற்றல் அடைவு

- இயற்கையை நுட்பமாக உற்றுநோக்கிக் காட்சிப்படுத்துதல்.

## கருத்து, அறிவு

- ஒரே சூழலில் உட்பட்ட வெவ்வேறு பொருட்கள் ஒன்றுக்கொன்று அமைப்பிலும் தனித்தன்மையிலும் மாறுப்பட்டுள்ளது( எ.கா இலை என்ற குழுவில் மாவிலையும் பலா இலையும் இடையிலான வேறுபாட்டைப் பிரித்தறியவும்.)

- சரியான படம் வரைதலுக்கு இயற்கையில் பல்வேறு பொருட்களின் வடிவ நிற வேற்றுமைகளை நுட்பமாகப் பிரித்தறிய வேண்டும்.
- இயற்கையில் பார்க்கக் கூடிய நிறவேற்றுமைகளுடன் காட்சிப்படுத்துவதற்கு நிறங் களின் சரியான இணைப்பு தேவையாகும்.

## திறமை

- இயற்கையை நுட்பமாக உற்றுநோக்கும் திறன்
- வேறுபட்ட தனித்தன்மைகளுடன் இயற்கையின் வடிவங்களை உட்படுத்தி படம் வரைவதற்கான திறன்.
- வெவ்வேறு நிறங்களை இணைத்து இயற்கையிலுள்ள பொருட்களுக்குப் பொருத் தமான நிறங்களை உருவாக்குவதற்கான திறன்

## கற்றல் செயல்முறை

### படிநிலை-1

- ஒரு குழந்தையிடம் கரும்பலகையில் ஒரு இலை வரையும் படிக் கூறவேண்டும்.
- வரைந்த இலை- எந்த இலை என கூறும்படியாகப் பிற குழந்தைகளிடம் கூறவும்.
- வெவ்வேறு கருத்துகளுக்குப் பின்பு வரைந்த படம் ஒரு குறிப்பிட்ட இலை எனக் கண்டறிய இயலாவிட்டால் சரியான ஒரு வகை இலை- மாவிலை/ பலா இலை/ ஆல் இலை ஆசிரியர் கரும்பலகையில் வரையவோ, இலையைக் காட்டிக் கொடுக்கவோ செய்யலாம். தனித்தன்மையைப் பிரித்தறிகின்றனர்.

### படிநிலை-2

- இத்தகைய வடிவங்களில் பார்க்கக் கூடிய தனித்தன்மைகளைப் பிரித்தறிவதற்கு இயற்கையிலுள்ள பொருளை / பொருட்களை நுட்பமாக உற்றுநோக்குவதற்கான வாய்ப்பளித்தல்

  *(வடிவம், தன்மை, நிறம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்)*

### படிநிலை-3

- முன்னால் பார்க்கக் கூடிய ஒன்றோ இரண்டோ பொருட்களை உற்றுநோக்கி படம் வரைகின்றனர். வடிவங்களைச் சரியாக வரைந்து ( செடி , மரம், வீடு மனிதன்...) சரியான நிறங்கள் அளித்தல் ( நீர்ச்சாயம் மெழுகு பென்சில், பேஸ்டல்ஸ்... போன்றவை)
- இவ்வாறு பொருட்களை நுட்பமாக உற்றுநோக்கிப் படம் வரைவதற்கு அறிவுரை வழங்குதல்.



படிநிலை-4

- வரைந்த ஓவியங்களை ஒருவருக்கொருவர் பார்ப்பதற்கான வாய்ப்பு. கருத்துகள்/ பிற்சேர்க்கைகள். கடைசியில் ஆசிரியர் வரைந்த படத்தைக் காட்டுதல்

## மதிப்பீடு

- பொருட்களின் நுட்ப அமைப்பு ஒழுங்கைப் பிரித்தறியும் திறன்.
- நிறங்களின் பயன்பாடு/ நிற உணர்வு.
- உற்றுநோக்கும் திறன்.

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகள் எந்த அளவில் அடைய முடிந்தது?*

- இயற்கைப் பொருட்களின் சரியான பகுத்தறிவு
- பொருட்களின் நிறங்களைக் குறித்த அறிவு

## அலகு-5 : சுதந்திரமாக ஓவியம் வரைதல்

சமூகப் பிரச்சினைகளில் விமர்சனபரமான நிலைகளைக் கைக்கொண்டு மக்களிடமிருந்து என்றும் ஓவியர்கள் தங்கள் ஓவியங்களால் எதிர்கொள்கின்றனர். ஓவியர்களும், பிற கலைஞர்களும் சமூகத்தின் பகுதி எனவும். சமூகத்திற்கு ஏற்படும் பிரச்சினைகளை தங்களுடைய பிரச்சினைகளாகக் கருதி எதிர்கொள்ள வேண்டியது தங்களுடைய கடமை எனவும் கலை சமூகம் நம்பிக்கை கொண்டிருந்தது. கிராபிட்டி கலை என்ற கலைப்பிரிவு இதிலிருந்து உருவானதாகும். மாணவர்களிடம் இத்தகைய பிரதிபலிப்புதிறன் உருவாக வேண்டியது உறுதியான நாளைய சமூக படைப்புக்கு உதவுகிறது. மாணவர்களும் சமூகத்தின் பாகம் என்ற சிந்தனை வளரவேண்டியுள்ளது. சமூக கடமையுணர்வும் பிரதிபலிப்புத் திறனும் வாய்ந்த சமூக உருவாக்கத்திற்கு இது இன்றியமையாதது .

### கற்றல் அடைவு

- சமூக நிகழ்ச்சிகளின் அடிப்படையில் சுதந்திர நடையில் படங்கள் வரைகின்றனர்.

### கருத்து, அறிவு

- ஓவியங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கும், கருத்து வெளியீட்டிற்கும் உள்ள ஊடகங்களாகும்.
- சமூகத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் சுதந்திர நடையில் பிரதிபலிக்க வேண்டியது நமது கடமையாகும்.
- படங்களை வேற்றுமைப்படுத்த சுயநிலைகளை எடுத்துரைக்கும் நடையும், வரைமுறை உத்திகளும் கையாளலாம்.
- தனக்குக் கிடைக்கக்கூடிய எந்த ஒரு ஊடகத்தையும் இதற்காகப் பயன்படுத்தலாம்.

### கற்றல் செயல்முறை

#### படிநிலை-1

- சமூகப் பிரச்சினைகளுக்கு அடிப்படையான பத்திரிக்கைச் செய்தி, வாசித்தல்.
- விவாதம், பிரதிபலிக்க வேண்டியதின் தேவையுணர்வு
- ஓவியம் வரைதல்.
- வரைந்த ஓவியங்களைக் காட்சிப்படுத்துதல். கருத்துத் தொடர்பான விவாதங்கள்- மதிப்பீடு ( சுய, ஒன்றுக்கொன்று)
- மதிப்பீட்டிற்குப் பின் வரைந்த ஓவியத்தில் குறைகள் இருப்பதாகத் தோன்றினால் திருத்தல் செய்வதற்கும் மாற்றி வரைவதற்கும் உள்ள வாய்ப்பு இருக்க வேண் டும். முதல் படத்திலிருந்து இரண்டாவது படத்திற்கான வளர்ச்சியைக் குறித்து சுய உணர்வு அடைய வேண்டும்
- ஓவியம் மாற்றி வரைதல்/ உணர்வடைதல்.



**படிநிலை2**

- சார்ட் தாளை நீளத்தில் இணைத்துப் பெரிய கான்வாஸ் உருவாக்கி குழந்தைகள் குழுவாக ஒரே நேரத்தில் படம் வரைகின்றனர். பள்ளியில் வகுப்பின் உள்ளேயோ, வெளியேயோ தனியாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்திலோ ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு/ கருத்து அடிப்படையில் படம் வரையலாம். சார்க்கோள், கிரேயான், ஸ்கெட்ச் பென், டிரை பாஸ்டல்ஸ் போன்று குழந்தைகளுக்கு விருப்பமான ஊடகங்களைப் பயன்படுத்தலாம்.

**படிநிலை-3**

- காட்சி- பாராட்டுதல்

## மதிப்பீடு

தர மதிப்பீடு.

- கருத்தைக் கண்டறிதல்
- விவாதங்களில் பங்கேற்பு
- கருத்தைக் காட்சிப்படுத்துவதற்கான திறமை/ திறன்/ நடை
- ஊடகங்களைப் பயன்படுத்தும் திறன்
- கருத்து வெளியீட்டிற்குத் தேவையான குறியீடுகளைத் தேர்வு செய்யும் திறன்

## அடையவேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடையமுடிந்தது?*

- ஒவ்வொருவரும் சமூகத்தின் பகுதி எனவும், சமூகத்தில் பிரச்சினைகள் தன்னுடைய பிரச்சனைகள் என்றும் உள்ள பகுத்தறிவு.
- கருத்தைக் காட்சிப்படுத்துவதற்கான திறன்
- கருத்துக்கேற்ப ஊடகங்களைத் தேர்வு செய்து பயன்படுத்தும் திறன்.

# அலகு-6 : கேலிச்சித்திரங்கள்

சமூகத் தீங்குகளுக்கு எதிரான ஒரு ஆயுதமாகும் கேலிச் சித்திரங்கள். இந்த நுட்பமும் படம் வரைதலின் ஒரு பிரிவாகும். நேர்மையான கருத்தும், படக்காட்சியும் இதில் முக்கியமானது. பெரும்பான்மை மக்களும் இதை அதிகம் விரும்புவர். காலத்திற்கேற்ற நிகழ்ச்சிகளில் கேலிச்சித்திரம் வரைந்தால் அனைவராலும் அதிகமாக கவரப்படும். ஐ. டி. வாயப்பு கார்ட்டூண் அனிமேஷன் என்ற பிரிவு மக்கள் மத்தியில் அதிக ஆர்வத்தை உருவாக்கியுள்ளது. தூய்மையானதும் தீங்குகளை தடுப்பதுமான ஒரு தலைமுறையை உருவாக்குவதற்குக் கேலிச்சித்திரங்களால் இயலும்.

## கற்றல் அடைவு

- சிந்தனையும். சிரிப்பும் தூண்டக்கூடிய கருத்துகளின் அடிப்படையில் தற்போதைய முக்கியத்துவம் வாய்ந்த கேலிச்சித்திரங்கள் வரைகின்றனர்.

## கருத்து, திறன்

- வாசித்தலும் அத்துடன் கருத்துகளைப் பாதுகாத்தலும் இங்கே முக்கியமானதாகும்.
- தற்போது வாழ்ந்து வருபவர்களும், காலஞ்சென்றவர்களுமான சிறந்த கேலிச் சித்திரம் வரையும் ஓவியர்களின் ஓவியங்களைப் பார்க்கவும். அவர்களைக் குறித்து அறியவும் வேண்டும்.
- ஒவ்வொரு ஓவியருடையவும், வரையும் நடையும் வாழ்க்கைக் கால கட்டமும் அறிந்து கொள்ள வேண்டும்.
- சமூக விமர்சனம், அரசியல் விமர்சனம் ஆகியவற்றை நகைச்சுவையுடன் வெளியிட வேண்டும்.
- கார்ட்டூன் அனிமேஷன் என்ற தனிப்பிரிவு ஐ. டி. பிரிவின் தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டும். ( CTP-Cartoon Television Programme)

## கற்றல் செயல்முறை

### படிநிலை-1

- பார்வைக்கு அழகூட்டுவதற்குக் கறுப்பு மையும் வெள்ளை மேற்பரப்பும் மிகச் சிறந்தது என்று உணர்ந்து கொள்ளுதல்.

- நுட்பமாக உற்றுநோக்குவதற்குக் குழந்தையைத் திறமையடையச் செய்வதற்காக மனிதன், பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றைக் குறித்து கூடுதல் அறிந்து கொள்ளும்படிச் செய்தல்.
- முக பாவம், அசைவு இவற்றைப் பார்த்துப் புரிந்து கொள்ளும்படிச் செய்தல்.
- விமர்சனத்துடனும், நகைச்சுவையுடனும் கேலிச்சித்திரம் வரைவதில் குழந்தைகளைப் பங்கேற்க வைத்தல்
- வரைந்தவற்றைக் காட்சிப்படுத்துதல்
- ஒன்றுக்கொன்று கருத்துகளை ஆராய்தல்
- நிபுணர்கள் பங்கேற்கும் வகையிலான கேலிச்சித்திரங்கள் வரைதல்.
- கலந்துரையாடுதல் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான அறிவுரைகளைக்கேட்டல்.
- சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிதானா? கேலிச்சித்திரத்தில் உள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**படிநிலை-2**

- செய்தித்தாள் வாசித்து செய்திகளை சேகரிக்கும்படிக் கூறுதல்.
- குறிப்புகள் தயாரித்தல், கருத்துகள் கண்டுபிடித்தல்
- நகைச்சுவை, விமர்சனம் இவை இணைந்து கேலிச்சித்திரம வரையும்படிக் கூறுதல்.
- படங்களை சேகரித்து வகுப்புக் காட்சிகளை உருவாக்குதல்
- விவாதமும் விம்சனமும் நடைபெற வேண்டும்.
- மேன்மையடைவதற்கான அறிவுரைகள் வழங்க வேண்டும்.

**படிநிலை-3**

- நிபுணர்களை உட்படுத்தி கற்றல் கலையும், வரைதலும் நடைபெற வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பார்க்கும்படியான வாய்ப்பளிக்க வேண்டும்.
- கேலிச்சித்திரம் வரையும் நிபுணர்களையும், கேலிச் சித்திரங்களையும் குறித்தறிவதற்கு ஐ. டி. வாய்ப்பு, உதவி நூல்கள் ஆகியவற்றை அறிமுகம் செய்ய வேண்டும்.

## மதிப்பீடு

- கற்றலின் எல்லா நிலைகளிலும் மதிப்பீடு தேவை
- கேலிச் சித்திரங்களோடுள்ள ஆர்வம்.
- சேகரிப்புகள், உதவி நூல்கள், கற்றல் சாலைகள்
- இணைந்த மதிப்பீடு.

### அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடையமுடிந்தது?*

- ஒரு பண்பாட்டின் பாகமாகக் கேலிச் சித்திரம் வரையும் நிபுணர்கள் உருவாகிறார்கள்
- பிரதிபலிக்கும் திறன் உருவாகிறது..
- வாசிப்புப் பழக்கமும், சேகரிப்பு மனப்பான்மையும் உயருகிறது.
- நாட்டுப்பற்றுள்ள ஒரு குடிமகனாக மாறமுடிகிறது
- அதிகமாகப் பார்ப்பதற்கும் தெரிந்து கொள்வதற்கும் cartoon academy blogspot.com

# அலகு-7 : கற்பனை வளரும்போது

ஓவியக்கலை என்பது ஓர் உலகளாவிய மொழியாகும். கருத்து வெளியிடுவதற்கான ஓர் ஊடகமாக மொழி பயன்படுத்தப்படுகிறது. எனவே ஒரு படம் வரைவதென்பது வரையக்கூடிய நபரின் மனதில் உருவாகும் கருத்தை மற்றொருவருக்கு அல்லது சமூகத்தோடு பகிர்ந்து கொள்வதும், வெளிப்படுத்துவதுமாகும். எனவே ஓவியக் கலையை ஒரு மொழி என்ற முறையில் பயன்படுத்த வேண்டும், வரைந்த ஓவியத்தைக் காட்சிப்படுத்தும்போது வரைந்த நபர் வெளியிட முயன்ற கருத்து அதன் வெவ்வேறு வழிகள் வழியாக பயணித்த பார்வையாளரின் நிலைக்கு இணையாக புதிய கருத்து மண்டலங்களுக்கு பயணம் செய்கிறது. எனவே ஒரு ஓவியம் முழுமையடைவது பார்வையாளரின் மனதில் ஆகும் என்று கூறுவதன்று.

## கற்றல் அடைவு

- கற்பனை சார்ந்த சுதந்திர ஓவியம் வரைதல் வழியாகக் கருத்தை வெளியிடுதல்.

## கருத்து, அறிவு

- படம் வரைதல் என்பது கருத்து சார்ந்த கண்ணோட்டத்தின் முழுமையாகும்.
- கருத்து சார்ந்த வரைதல் என்ற ஓவியப் பிரிவு நடைமுறையில் உள்ளது.
- கருத்து பரிமாற்றத்திற்கான ஊடகமாக ஓவியத்தைப் பயன்படுத்த வேண்டும்.
- சமூகக் கண்ணோட்டம் சுதந்திரமான வரைதலுக்கு உதவுகிறது.
- காட்சிப்படுத்துவதற்கு பென்சில், நிறப் பென்சில் சார்க்கோள் வண்ணம் ஆகிய எந்த ஊடகங்களையும் பயன்படுத்தலாம்.
- சிறந்த ஓவியங்களையும் சிறந்த ஓவியர்களையும் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்காக இணையதளமும், விக்கிபீடியாவும் பயன்படும்.

## கற்றல் செயல்முறை

### படிநிலை-1

- கருத்து அடிப்படையில் வரையப்பட்ட படங்களின் காட்சி (Projecton பயன்படுத்தலாம்)
    - கோர்ணிக்கா- பிக்காசோ
    - Here papa comes-Ravivarma
    - Gipsis-Ravivarma
    - Gujarnica-Yousaf Arakkal
    - Bird and Nest-Tagore
    - Yellow Christ-Paul Guagin
    - The Screen-Edverd Munch
    - The Harvest-Vanghogh

- பட வாசிப்பைப் போன்று ஒவ்வொரு ஓவியத்தையும் பார்க்கவும், வரைந்த கால கட்டம், சமூக அமைப்பு, வரைந்த முறை, கருத்து ஆகியவற்றை இணைத்து

தயாரித்து வெளியிட வேண்டும். மைக்கலாஞ்சலோ, ராபேல், டீஷ்யன், ரம்பி ராண்ட், ஜி. டி. போள்ராஜ், அமித் கபூர் போன்றவர்களின் ஓவியங்களைக் கற்றலுக்குப் பயன்படுத்தலாம்.

- ஒவ்வொரு ஓவியரும் குறிப்பிடுகின்ற கருத்து சார்ந்த கண்ணோட்டங்களை விளக்குதல்.
- உள்ளார்ந்த கலகங்கள், போர், பட்டினி, மதம் சார்ந்த கருத்துப் போர்கள், சமூகம் சார்ந்த தனிமை, தொழில்புரட்சி ஆகியவற்றை விவாதத்தில் உட்படுத்த வேண்டும்

படிநிலை-2

- முன்பு நடைபெற்ற செயல்பாட்டின் அடிப்படையில் இன்றைய சூழலில் உங்கள் மனதில் உருவாகும் நிகழ்ச்சிகளில் கருத்து சார்ந்த படக்காட்சிக்கு முயற்சி செய்யலாம்.
- தற்போதைய சமூக அமைப்பை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்? பிரதிபலிப்பு என்ற முறையில் படம் வரைவதற்கான கருத்தைக் கண்டுபிடிக்கலாமா?

  மிக முக்கியமான நிகழ்ச்சிகள் எவை? விவாதம்
- காட்சிப்படுத்துவதற்கு மிக எளிமையான நிகழ்ச்சி எது? அதைக் காட்சிப்படுத்துவதற்குத் தேவையான வடிவங்கள் எவை?

  (குழந்தைகள் அட்டவணைப்படுத்துகின்றனர். ஒவ்வொரு வடிவத்தினுடையவும் பாவம் அமைப்பு ஆகியவற்றில் கோடு வரைகின்றனர்)
- கிடைத்த அறிவுகளின் அடிபிபடையில் படம் வரைகின்றனர். விரும்பிய ஊடகத்தை பயன்படுத்தலாம்.
- படத்தைக் காட்சிப்படுத்துகின்றனர்.

  சுயமாக ஒன்றுக்கொன்று மதிப்பீடு செய்கின்றனர்.
- கருத்து சார்ந்ததும், வெளிப்படையானதுமான விவாதம்.

  சுய- ஒன்றுக்கொன்றுள்ள மதிப்பீட்டிற்குப் பின் குறைகளை நிவர்த்தி செய்து படத்தை முழுமையாக்க வாய்ப்பளிக்க வேண்டும்
- இரண்டாவது படம் வரைந்த பின்பு, முதல் படத்துடன் ஒப்பீடு செய்து வளர்ச்சியை சுயமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இறுதியில் ஆசிரியர் வரைந்த படங்களைக் காட்டலாம்.

## மதிப்பீடு

- கருத்து கண்டுபிடித்தல்
- விவாதத்தில் பங்கேற்பு
- வரைந்த முறை, நடை, கருத்து, வெளியீட்டிற்கான திறன் முழுமை ஆகியவற்றின் அடிப்படையிலான மதிப்பீடு.

## அடைய வேண்டிய கற்றல் மேன்மைகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் மேன்மைகள் எந்த அளவில் அடையமுடிந்தது?*

- கற்பனையிலிருந்து படங்கள் உருவாக்கும் திறன்
- மொழி என்ற முறையில் ஓவியத்தைப் பயன்படுத்துதல்
- வெவ்வேறு ஊடகங்களை கருத்துக்கேற்ப பயன்படுத்தும் திறன்.
- சுதந்திரமாக சிந்திப்பதற்கும் வரைவதற்கும் உள்ள திறன்.
- ஓவியக்கலையை முழுமையாகக் குழந்தைகள் புரிந்து கொள்ளட்டம். கற்ற பின்பு அவர்களை ஒரு இசத்திலும் தெரிந்து கொண்டு திருப்பிவிடக்கூடாது. குழந்தை களின் விருப்பங்களையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

# அலகு-8 : விமர்சனங்கள்

கலைப்படைப்புகள் காலத்தின் பிரதிபிம்பங்களாகும். காலத்தின் சிறப்புகள் நிறைந்து நிற்கும் படங்கள் சேகரித்து பாதுகாக்கும் போது அந்த காலத்தின் சிந்தனைகளேயே நாம் பாதுகாத்து வைக்கிறோம். இவ்வாறு பாதுகாப்பவற்றை மீண்டும் பயன்படுத்துவது எதிர்காலத்திற்கு நல்லது. ஒரு கலைவடிவத்தை மீண்டும் பாதுகாக்கும்போது அதைக் குறித்து கூடுதல் கற்க முடிகிறது. அத்துடன் சேகரித்த படங்களை விமர்சனபரமாக அணுகி குறிப்புகள் தயாரித்து ஒப்பீடு செய்வது கலை, பண்பாடு சார்ந்த சிந்தனை களை தூண்டுகிறது.

## கற்றல் அடைவு

- கலைப்படைப்புகளும், கலை விமர்சனங்களும் சேகரிக்கின்றனர். விமர்சனங்கள் தயாரிக்கின்றனர்.

## கருத்து, அறிவு

- படவாசிப்பு கலை இரசித்தலின் முதல்நிலையாகும்.
- படவாசிப்பு வழியாக, படம் வரைந்த காலகட்டம் வழியாக பண்பாட்டிற்கு நேராகச் செல்லலாம்.
- சேகரிப்பு வழியாக வெவ்வேறு நடைகள், ஊடகங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு மீண்டும் பயன்படுத்தலாம்.
- சுதந்திரமான விமர்சனம், கலையையும், காலத்தையும் குறித்து கூடுதல் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்தலாம்.

## கற்றல் செயல்முறை

**படிநிலை-1**

- சமாகரண புத்தகம் தயாரித்தல்.
- கலைப்படைப்புகள், விமர்சன சேகரிப்பின் தேவை என்ன?
- விவாதம், மேற்பார்வை
- எவை? யாருடையவை? எப்படிப்பட்டவை?
- சேகரித்த படங்களை மீண்டும் எளிதாக எடுப்பதற்கு மீண்டும் எந்த வரிசையில் பாதுகாக்க வேண்டும்?
- ஊடகம், வருடம், அகராதி ஒழுங்கு ( சமாகரணத்திற்கும் கற்றலுக்கும் இணைய தளத்தைப் பயன்படுத்தலாம்

## படிநிலை-2

- படத்தொகுப்பு உருவாக்குதல், காட்சிப்படுத்துதல், விரிவுபடுத்துதல்.
- மதிப்பீடு
  படத்தொகுப்பின் லே அவுட்
  உள்ளடக்கத்தின் வேறுபாடு
  ஒழுங்குபடுத்துதல் இவை அடங்கிய தரமதிப்பீடு.
  செய்து காட்டுதல்

## படிநிலை-2

- சிறந்த ஓவியர்களின் யாராவது ஒருவருடைய ஓவியத்தைக் காட்டுதல்.



எ.கா இரவிவர்மாவின் " மில்க் மெய்டு"

- கோர்ணிக்கா
  பிக்காசோ காலகட்டம்
  கோர்ணிக்க பட்டணம்
  ஸ்பானிஷ் கலகம்
  குண்டு வீச்சு
  ஜனரல் பிராங்கோ
  600 ஸ்கெச்சஸ், கருப்பும் வெள்ளையும், சாம்பல் நிறங்கள், அளவு.

- குறியீடுகள், மாடு, மாட்டுச் சண்டை, குதிரை, ஈட்டி, செய்தித்தாள், உடைந்த சிற்பம், கைவாள். குழந்தையுடன் அழும் தாய், கண், பல்பு, விளக்குடன் நோக்கிப் பார்க்கும் பெண், நொறுங்கிய கட்டத்திலிருந்து வெளியே விழும் பெண். இவ்வாறு எலெமெண்ட்ல் பேஸ் செய்தி படத்தை வாசிக்க வேண்டும்.
- ஓவியத்தையும், ஓவியரையும். காலகட்டதையும் குறித்து குழந்தைகளுக்குத் தெரிந்தவற்றைக் கூறட்டும். அட்டவணை செய்தல், ஒருங்கிணைத்தல். கூடுதல் கருத்துகளை ஆசிரியர் பங்கு வைத்தல்.
- ஓவியத்தைக் குறித்து உங்கள் மனதில் தோன்றுபவை எவையென குறிக்கவும்–குறிப்புகளை வெளியிடுதல்.
- வெளியீட்டிற்குப் பின் உங்கள் படத்தொகுப்பிலுள்ள ஓவியச் செய்திகள், விமர்சனங்கள் வாசிப்பீர்களா? அந்த நடையும், முறையும், நீங்கள் எழுதிய குறிப்பும் ஒப்புமை செய்து பார்ப்பீர்களா?
- அப்படியெனில் நீங்கள் எழுதிய விமர்சனக் குறிப்புகளுக்கு மாற்றங்கள் தேவையல்லவா?
- கூடுதல் குறிப்புத் தேட்டம்?

  பள்ளி நூலகத்தின் உதவியை நாடலாம். ஓவியக் கலை ஆசிரியரின் உதவியும் கிடைக்கும்.
- குறிப்புதேட்டம் உதவியுடன் மேன்மையான முறையில் விமர்சனங்கள் தயாரித்தல்–வெளியிடுதல்.
- சிறந்த ஓவியங்களை இணையதளத்திலிருந்து எடுத்து லாப்டாப்பில் வகுப்பில் கொண்டு காட்ட வேண்டும். ஆசிரியர் வண்ணம் தீட்டியதும் குழந்தைகளைக் காட்ட வேண்டும்.

## மதிப்பீடு

- ஓவியத்தை விமர்சனபரமாக அணுகும் திறன்.
- ஓவியத்தை வாசிக்கும் திறன்
- குறிப்புகள் தயாரிப்பதற்கும் குறிப்புத் தேட்டம் பயன்படுத்துவதற்கும் உள்ள திறன்
- வெளியிடும் திறன்

  இவை அடிப்படையிலான தர மதிப்பீடு

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடையமுடிந்தது?*

- ஓவிய வாசிப்பு வழியாக வரலாற்றை, பண்பாட்டைப் புரிந்து கொள்ளுதல்.
- சேகரித்தல் வழியாக ஓவியப் பாதுகாப்பு உணர்வு வளர்தல்.
- குறிப்புத் தேட்டம் பயன்படுத்தவும், குறிப்புகளை மேன்மைப்படுத்தவும் உள்ள திறன்

# அலகு-9 : முப்பரிமாண வடிவங்கள்

கருத்து வெளியீட்டிற்கான முக்கிய ஊடகமாகும். முப்பரிமாணச் சிற்பங்கள். ஒரு சிற்பி தனது மனதில் உருவாகும் ஒரு கருத்தைச் சிற்பவடிவில் உருவாக்கும் போது தனக்கு உலகுக்கு கூறுவதற்கான ஒரு புதிய கருத்தின் வெளியீட்டு வடிவமாக சிற்பம் மாறுகிறது. இயல்பாகவே ஒரு மனிதனின் கருத்து வெளியீட்டு ஊடகங்களில் சிற்பத்திற்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. அதுமட்டுமல்ல ஒரு கற்றல் பாடமாக சிற்பம் உருவாக்கும்போது மிகநுட்பமான உற்றுநோக்கும் கற்றல்கள் தான் செய்ய நினைக்கும் கருத்தின் முப்பரிமாண வடிவத்தின் தொடர்பாக கட்டாயமாக நடைபெற வேண்டும். சுருக்கமாகக் கூறினால் பௌதிகமாக ஈடுபடவேண்டிய ஓர் ஊடகமாகும் சிற்பக்கலை. குறிப்பாக ஒரு கருத்தை மையப்படுத்தி சிற்பம் செய்யும் போது. எனவே மாணவர்கள் மிக நுட்பமாக இந்தத் துறையில் கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டும்.

## கற்றல் அடைவு

- முப்பரிமாண கலைவடிவங்கள், வெவ்வேறு ஊடகங்கள் பயன்படுத்தி உருவாக்குதல்

## கருத்து, அறிவு

- சிற்பம் என்பது கருத்தை வெளியிடுவதற்கான ஒரு ஊடகமாகும்.
- அதற்கு முப்பரிமாணத் தன்மை உண்டு. அதன் அழகு புதுமையானது
- சிற்பம் உருவாக்கும்போது பொருளில் எல்லா பக்கத்திலிருந்தும் உள்ள கற்றல் தேவையாகும்.
- சிற்ப உருவாக்கத்திற்கு தடி/ களிமண் ஆகிய பரம்பரை பொருட்கள், சிமெண்ட், பைபர், காகிதக்கூழ், பிளாஸ்டிக், மெழுகு, மரப்பொடி, பசை போன்ற நவீன ஊட கங்களும் பயன்படுத்துகின்றனர்.
- உயர்ந்து நிற்கக்கூடிய சிற்பங்கள் உருவாக்கும் போது விழாமலிருப்பதற்காக பெடஸ்டல் ஆர்மேச்சர் உட்பட்ட அமைப்புகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.
- சிற்பத்தின் தன்மைக்கேற்ப ஊடகத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.
- சிற்பத்திற்கு பயன்படுத்தக்கூடிய ஊசிகள் டெமான்ஸ்ட்ரேஷன் ஆகியவை இணைய தளத்திலிருந்து எடுத்துக்காட்டலாம்.

## கற்றல் செயல்முறை

- பல்வேறு ஊடகங்களில் செய்த சிற்பங்களைப் பார்க்க டெமான்ஸ்ட்ரேசன் சி. டி., காட்சி சாலை ஆகியவற்றை வாய்ப்பளிக்கின்றன.
- சிற்பம் செய்வதற்கான கருத்துகள்/ பொருட்கள் ஆகியவை கண்டுபிடிப்பதற்கான விவாதம், அட்டவணைப்படுத்துதல்

  *விவாதக் குறிப்பகள்*

  1. சிற்பம் உருவாக்குவதற்கான உருவங்களின் அட்டவணை
     எ.கா- பந்து, சதுரக்கட்டை, பிரமிடு போன்ற வரிசைகள்
  2. கருத்துகள் எ.கா-கிளிகள், முயல், எலி, தவளை, நாய், யானை, அடையிருக் கும் கோழி, பறவைகள்.

3. எந்தெந்த ஊடகங்களைப் பயன்படுத்தலாம்?
   கயிறு, நூல் ஆகியவை யானையின் நான்கு பக்கத்திலுருந்தும் எடுத்த படங்களைக் கற்றலுக்கு உட்படுத்த வேண்டும். களிமண், பிளாஸ்டர் ஆப் பாரிஸ் பள்ப் ( கூழ்).
4. தடி இழக்கும் யானை, பாறையின் மேலிருக்கும் சிங்கம், பிச்சைக்காரன்...
   (தடி இழுக்கும் யானைக்கு நல்ல செய்கை இருக்கும்படி கவனிக்க வேண்டும். உருவாக்கத்திற்கு ஒன்று அல்லது அதற்கதிகமான ஊடகங்களைப் பயன் படுத்தலாம்.)

- களிமண், தடி,
- கண்டுபிடித்த கருத்தை/ பொருட்களை உருவாக்க எந்தெந்த ஊடகங்களைப் பயன் படுத்தலாம். அட்டவணைப்படுத்துதல்
  எ.கா– ஒரு மரபொந்தின் மீது கூடுகட்டி முட்டையிட்டு கரைந்து கொண்டிருக்கும் பறவையின் சிற்பம்
- மரப்பொந்தும், பறவையும், களிமண், பிளாஸ்டர் ஆப் பாரிஸ் இவற்றைப் பயன்படுத்தி உருவாக்கலாம். கூட்டிற்கு சகிரி, கோலி போன்றவை பயன்படுத்தலாம்.
- சிற்பத்திற்குத் தேவையான வரைபடம் தயாரித்தல் அதை வெளியிட்டு விவாதித்து தேவையான மாற்றங்கள் செய்தல்
- ஊடகத்தை சீர்ப்படுத்துதல், தேவையான பெடஸ்டல் ஆர்மேச்சர் உருவாக்குதல். அதற்காகக் களிமண், கம்பி, ஈர்க்கில் குச்சி, நூல் ஆகியவை பயன்படுத்தலாம்.
- சிற்பம் உருவாக்குதல்/ வெளியிடுதல்
- சிற்பிக்குக் கருத்துப் பகுப்பாய்வு/ வெளியீட்டிற்கு வெளிப்படையான விவாதங்கள் செய்யலாம்.
- பாராட்டுதல், மதிப்பீடு செய்தல்
- மதிப்பீட்டிற்கு பின், சிற்பங்களின் குறைகளைச் சரி செய்வதற்கும் அல்லது புதிய சிற்பம் உருவாக்குவதற்கும் உள்ள வாய்ப்பு இருக்க வேண்டும்

## மதிப்பீடு

- சிற்ப உருவாக்கதிற்கான கருத்து கண்டுபிடித்தல்/ கருத்தின் தற்போதைய முக்கியத்துவம்.
- ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கும். தேர்வு செய்வதற்கும் உள்ள திறன்.
- உறுதியான உருவாக்க முறை/ பெஸ்டல் ஆர்மேச்சர் உருவாக்கம்.
- முழுமை, டீட்டெய்ல்ஸ், டெக்ஸ்சர் ஆகியவற்றிலுள்ள ஆர்வம்.
  இவை அடிப்படையிலான சிறந்த மதிப்பீடு

# ஒன்பதாம் வகுப்பு

## அலகு – 1 : ஓவியம் வரைவோம்

ஒரு நபர் மையமான கருத்து வெளியீட்டிற்குப் படைப்பாற்றல் குறிப்புகள் உதவுகின்றன. எந்த ஒரு ஊடகத்தையும் எந்த நடையையும் குழந்தைக்குப் பயன்படுத்துவதற்கும்.

### கற்றல் அடைவுகள்

- கருத்துகளை உட்கொண்டு படைப்பாற்றல் முறையில் ஓவியங்கள் வரைகின்றனர்.

### கருத்து, அறிவு

- ஓவியத்தின் தன்மை, தனிமை, நடை ஆகியவற்றின் அடிப்படையிலான குழந்தையின் சொந்த நடையாகும். மற்றொருவரின் ஓவியமோ புகைப்படமோ இதற்கு இணையாகாது. தன்னுடைய நடையைக் கடைபிடிக்கும் குழந்தைக்கு கருத்து வெளியீட்டிற்கான வேகம் கூடுகிறது. மேலும் கருத்தைப் பிறரிடம் அடையச் செய்வதற்கு இயலுகிறது. பரம்பரை முறைகளை அறிமுகம் செய்யவும் வேண்டும்.

### கற்றல் செயல்பாடுகள்

*படிநிலை – 1*

- சிறந்த ஓவியர்களின் படங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பளித்தல். செவ்வியல் படங்களும் சமகாலப் படங்களும்



அபனிந்திரநாத் தாகூரின் 'த ஜேனி என்ட்ஸ்' என்ற ஓவியம்

- ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ள ஓவியர்களின் நடையையும் காட்சிப்படுத்தும் முறையை கலை ஆசிரியர் குழந்தைகளுக்கு விளக்கிக் கொடுத்தல்.
- படைப்பின் மகிமை, பார்த்து எழுதும் நூற்களுக்கு ஒருபோதும் இருப்பதில்லை எனக் குழந்தையை உணர வைக்க வேண்டும்.
- ஓவியக் காட்சிகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- ஐ. டி துறையை இதற்காகப் பயன்படுத்தலாம்.

*படிநிலை – 2*

- வகுப்பறைச் செயல்பாடாக எல்லாக் குழந்தைகளும் ஏதேனும் ஒரு கருத்து அடிப் படையிலான படம் வரையக் கூறுதல்.
- படங்களை ஒன்றுக்கொன்று மாற்றுவதன் வழியாகக் குழந்தைகள் சுயகற்றலில் உட்படும்படிக் கூறுதல்.
- ஓவியத்தைக் குறித்து ஒவ்வொரு குழந்தையும் தங்கள் கருத்தைக் கூறவும்
- இவ்வேளையில் கலை ஆசிரியரின் ஈடுபாடு அதிகமான கருத்து வெளியீட் டிற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.
- ஓவியங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பாக்கலாம்.
- ஓவியங்களை வகுப்பறையில் காட்சிக்காக வைக்கலாம்.

ஒவ்வொரு ஓவியம் குறித்தும் குழந்தைகளுடையவும் ஆசிரியருடையவும் விளக்கம் கிடைக்கும் போது ஓவியங்களுக்கு மேன்மையும் கருத்தும் அதிகரித்ததாக குழந்தை களுக்கு உணரவும், ஓவியம் வரைவதற்கான ஆர்வமும், விருப்பமும் பெருகவும் செய்கிறது. குழந்தைகள் கண்டுபிடிக்கும் கருத்துகளை ஆசிரியர் வரைந்து காட்டுதல்.

## மதிப்பீடு

- சுயமதிப்பீட்டின் பின்னிணைப்பாகக் கலை ஆசிரியரின் மதிப்பீடு.
- பாடத்துடன் உள்ள தொடர்பு
- பயன்பாட்டு முறை ( சொந்தமுறையா? அல்லது வேறு யாரையாவது தழுவியதா?)
- நிற உணர்வு
- கருத்து
- முழுமை( முழுமையில்லாவிட்டால் காரணத்தை ஆராய வேண்டும். குறைகளை நிவர்த்தி செய்வதற்கான அறிவுரைகளை வழங்க வேண்டும்)
- குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டிய அடைவுகள் தொழில்நுட்ப மேன்மைகள்
- உடல், உளம் சார்ந்த வளர்ச்சி,
- ஓவியக் கலையோடுள்ள ஆர்வம்
- சிறந்த குடிமகனை உருவாக்குதல்
- ஜன்மவாசனை வளர்த்தல்

**கூடுதலாக வரைய விரும்பும் குழந்தைகளுக்கு**

மனதிலுள்ள கருத்துகளை வடிவங்களாக குறிப்பிட்ட இடங்களில் வரையும் போது ஓவியமாகிறது. வடிவத்திடம் ( ஆகாரம்) நிழலும், ஒளியும், அகலமும், விகிதமும் இணைந்து வரும் போது அது சிறந்த ஓவியமாக மாறுகிறது.

**கற்றல் அடைவு**

கருத்துகள் உட்கொண்டு படைப்பாற்றல் முறையிலான ஓவியங்கள் வரைதல்

**கருத்து, அறிவு**

எதையும் சுயமாக வரைய இயல்வது என்பதே வரையக்கூடிய ஒவ்வொருவருடையவும் முக்கிய மான கனவு. அது சிறப்பாக இருந்தால் அதிலிருந்து கிடைக்கும் மனமகிழ்ச்சியை எடுத்துக்கூற இயலாது. ஏதேனும் பிரச்சினைகள் இல்லாத மனிதன் உண்டா? இல்லை எல்லாக் கவலைகளையும் ஒரு நிமிடம் மறக்கச் செய்வதற்கான மருந்தாகும் ஓவியம் வரைதல். நல்ல ஓவியத்தைப் பார்த்தாலும் இந்த மகிழ்ச்சி கிடைக்கிறது.


ஆனால் இந்த நிலையில் ஓவியம் வரைவதற்கான பயிற்சி தேவை. அதற்குத் தேவையான வடிவங்களை நமக்கு இயற்கையிலிருந்து கற்கலாம். கருத்து என்பது வாழ்க்கையிலிருந்தும் கிடைக்கிறது. அனுபவங்களிலிருந்தும் கிடைக்கிறது. மனதை உணர்வடையச் செய்ய வேண்டும்...... ஓவியம் முறையாகச் சரியாகும்.

**கற்றல் செயல்பாடுகள்**

- 'வயல்' என்ற ஒரு சொல்லை ஆசிரியர் கரும்பலகையில் எழுதியிருந்தார். இத்துடன் தொடர் புடைய எவற்றையெல்லாம் நாம் வரையலாம் ஆலோசித்து அட்டவணைப்படுத்தக் கூறுதல்.
- ஒரு சிலர் அதை வாசித்தல். கரும்பலகையில் எழுதுதல். பிற குழந்தைகள் கூடுதல் கருத்துக ளைச் கூட்டிச் சேர்த்தல்.

எ. கா: வயல், வயலில் வேலை செய்யும் பெண்கள், வரம்பு தோண்டும் ஆண்கள், வரம்பின் அருகே குடை விரித்து நிற்கும் ஜமின்தார். அறுவடை செய்யும், மிதிக்கும் ஆட்கள், நெல்லைப் பதராக அடிப்பவர்கள், குடிசை, மாடுகள், எருமைகள், உழுதல், டிராக்டர், அறுவடை இயந்திரம், பச்சையான வயல், விளைந்த வயல், கொக்குகள், வயலின் கரையில் உள்ள வீடு என ஏராளமான கருத்துகளைக் குழந்தைகள் பட்டியலிடுவர். அவற்றில் உங்களால் வரைவதற்கு இயலக்கூடிய ஒரு நிகழ்ச்சியை வரையும்படிக் கூறுதல்.

- அவர்கள் வரையத் தொடங்கும் போது ஆசிரியர் சில விளக்கங்களை அளித்தல்.



படம் வரைவதற்கான காகிதத்தை/ கான்வாசின் நீளமும் அகலமும் மூன் றாகப் பிரிக்கவும். அப்போது கிடைக் கும் 4 புள்ளிகளில் ஒன்றின் பாகமாக முக்கிய கதாப்பாத்திர்த்தை வரைவது நல்லது இதை Centre of Interest எனக் கூறுவர்

- முக்கிய கதாப்பாத்திரத்தை துண்டிக்காமல் வரைவது நல்லது
- இனி நமக்கு வரையத் தொடங்கலாம்.........குழந்தைகள் வரையட்டும். இப்போது வரையவேண்டிய முறையைக் கூறலாம்.......மனதிலுள்ள கருத்துகளைக் கான்வாசில் காட்டுவது சற்றுக் கடினமான.

ஒன்றாகும். அதைஎதிர்கொள்வதற்கு ஒரு உத்தியைக் கையாளலாம். மனதிலுள்ள வடிவத்தை மூன்று அல்லது நான்கு கோடுகளால் வேகமாக வரையவும். அதற்கு முழுமை தோன்று வதில்லை. பரவாயில்லை. இதைச் செய்த பின் யோசிக்கவும். செய்தவற்றில் ஏதேனும் தவறு உண்டா.... இங்கே தானா இது வரைய வேண்டியது----இப்படித்தானா வரைய வேண்டியது---மனதில் எழக்கூடிய மாற்றங்களைக் செய்யவும். இதைப் பென்சில் உபயோகித்து அல்லது நேரடியாக நீர்ச்சாயத்தில் Yellow ocher அடர்த்தி குறைவாககளக்கி வண்ணம் பூசலாம். சரி யான வண்ணம் கிடைத்தவுடன் கருமைநிறம் கொடுக்க வேண்டிய பகுதிகள் (dark) கருமை நிறமும் கொடுத்து ஓவியத்தை முழுமையாக்கலாம்.

- ஆசிரியருக்கு இந்த முறையை விளக்கிக் கொடுக்கலாம். சரியான செய்கையும் அழகும் கிடைப் பதற்கு இந்த முறை சிறந்தது. உரைத் துரைத்து வரைந்து சரியான பகுதியை தெளியக் கொண்டு வரும் முறையை யே ஆங்கிலேயர் கூடுதல் விரும்புவர்.
- குழந்தைகள் வரையும் போது ஆசிரியர் வரைந்த ஸ்கெச்சும் காட்டலாம்.
- வரைந்து முடிந்தவர்களும் முடியாதவர்களும் ஆசிரியரின் வடிவ வரைவை பார்த்து தன்னுடைய ஓவியத்தை வீட்டில் கொண்டு சென்று மேம்படுத்தி வரட்டும். அவற்றின் வெளியீட்டிற்குப் பின் ஆசிரியர் நீர்ச்சாயம் செய்து கொண்டு வந்த ஓவியத்தைக் காட்டலாம்.



- ஆசிரியரின் ஓவியம் குழந்தையும் மீண்டும் வரைவதற்கான ஆர்வத்தை உருவாக்குகிறது. அவர்கள் வரையாதது கருத்துகளின் குறைபாட்டினால் அல்ல. மாறாக வரைவதற்கான பயமும் தொழில்நுட்பம் சார்ந்த அறிவின்மையும் நிவர்த்தி செய்தால் போதும்.
- குழந்தைகள் அட்டவணை செய்த நிகழ்ச்சிகளில் அவர்கள் தேர்வு செய்யும் வேறொரு ஆசிரியர் மாதிரியாக வரைந்தால் குழந்தைகளிடமிருந்து சிறந்த ஓவியங்கள் உருவாகும். சிறந்த ஓவியர்களும் உருவாகலாம்.
- இணைய தளத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்கள் மடிக்கணினியில் மாற்றியும். கலர்லேசர் அச்சு எடுத்தும் குழந்தைகளுக்குக் காட்டலாம்.

**மதிப்பீடு**

- எதையும் வரையலாம் எனத் தோன்றுகிறதா?
- வரைவதற்கான பயம் நீங்கிவிட்டதா?
- வடிவங்கள் குழந்தைகளுக்கு இசைந்தால் பின்பு நிறமும் நிழலும் ஒளியும் அகலமும் சேர்ந்து காட்சிப்படுத்துவதற்கு ஆசிரியர் உதவ வேண்டும்.

## அலகு – 2 : வரைவோம், நிறம் தீட்டுவோம்

இயற்கையைக் காட்சிப்படுத்திவதற்கு மிகச் சிறந்த முறையாகும் உற்றுநோக்கிக் காட்சிப்படுத்துதல். காட்சிப்படுத்துவதற்காக வளர்ச்சி அடைந்த தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தி எளிமையாக இயற்கையின் திட்ட வரைவை வளர்த்தெடுக்க உதவும். முன்னில் பார்க்கக் கூடிய பொருட்களின் அமைப்பிலும் தன்மையிலும் நிறங்களிலும் ஒழுங்கு செய்வதுடன் ஓவிய தளத்தில் அவற்றின் வளர்ச்சியும் கவனிக்க வேண்டியுள்ளது. பொருட்களுக்கு இடையிலான அளவு வேற்றுமைகளும், நேரமும் நிழலும் ஒளியும், நிறவேற்றுமைகளும் ஓவியத்தில் அமைந்திருக்க வேண்டும்

### கற்றல் அடைவு

- இயற்கையை உற்றுநோக்கி தொழில் நுட்பமுறையில் நிறங்கள் கொடுத்து காட்சிப் படுத்துதல்

### கருத்து அறிவு

- உற்றுநோக்கல் வரைவு விகிதம் படஇணைப்பு சமநிலை ஆகிய தொழில்நுட் பங்களைப் பயன்படுத்தினால் ஓவியம் வரைதலைச் சிறப்புடையதாக மாற்றலாம்.
- காட்சிப்படுத்துதலின் வேறுபட்ட பொருட்களை அவற்றின் சரியான விகிதத் தில் வரைய வேண்டும்.
- வடிவங்களின் ஒழுங்கிற்கு வடிவியல் உருவங்களைப் பயன்படுத்தலாம்.
- நிறங்களின் பயன்பாட்டில் இணைப்புடன், தூரப் பார்வையிலும் நேரத்திலும் நிழலற்ற ஒளியிலும் உருவாகக் கூடிய மாற்றங்களுக்கேற்ப காட்சிப்படுத்த வேண்டும். ( கலை ஆசிரியரின் உதவியுடன்)

### திறன்

- தொழில்நுட்பங்களைப் புரிந்துகொண்டு இயற்கையைக் காட்சிப்படுத்துவதற்கான திறன்.

### கற்றல் செயல்பாடுகள்

*படிநிலை-1*

- இயற்கையைக் காட்சிப்படுத்துவதில் புரிந்து கொள்ள வேண்டிய தொழில்நுட்ப உத்திகள் எவை?
- குழந்தைகளின் பிரதிபலிப்புகளுக்கு வாய்ப்பு.
- உற்றுநோக்கல் வரைவு விகிதம், பட இணைப்பு சமநிலை ஆகிய தொழில் நுட்ப உத்திகள் குழந்தைகளிடம் அறிவை உருவாக்குகின்றன.
- விவாதம், ஒருங்கிணைப்பு.

*படிநிலை-2*

- இயற்கையை உற்றுநோக்குவதற்கு வாய்ப்பளித்தல்
- பொருட்கள்/ தனித்தன்மைகள்



- ஒளியும் நிழலும்
- நிறவேற்றுமைகள், நேரம்
- இடம், அகலம்
- சட்டம்- பார்க்கும் பார்வையில் ஓவியத்திற்கு தேர்வு செய்யும் பொருட்கள்
- சட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பொருட்களின் திட்ட வரைவு வரைதல் (தொழில் நுட்பத் தளங்களை கவனிக்க வேண்டும்.)
- ஒவ்வொரு பொருளின் நுட்பத் தளங்களைக் காட்சிப்படுத்துதல்.
- ஒளியும், நிழலும் சரியாக ஒழுங்குபடுத்தப்படுகிறது.

*படிநிலை-3*

- ஒவ்வொரு பொருளினுடையவும் அளவு வேற்றுமை, தூர வேற்றுமை, நிற வேற்றுமை போன்றவற்றைப் பகுத்தறிந்து காட்சிப்படுத்துல்
- பொருத்தமான ஊடகத்தைத் தேர்வு செய்தல் ( நீர்ச்சாயம், மெழுகு, ஆயில், பேஸ் டல்ஸ், அக்ரிலிக்)
- பொருத்தமான நிறங்கள் கண்டுபிடித்தல்
- பொருத்தமான முறையில் நிறங்களை இணைத்தல்.
- இயற்கையின் நிறங்களுக்கேற்ப ஓவியத்தில் பயன்படுத்துதல்.

## மதிப்பீடு

- இயற்கைக் காட்சியுடன் ஒப்புமை உள்ளது
- தொழில் நுட்பம்

- இயற்கையின் நிறங்களே அளிக்கப்பட்டுள்ளன.
- முழுமை
- கவர்ச்சித் தன்மை.

**அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்**

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைய முடிந்தது?*

- இயற்கைக் காட்சியைத் தனது கண்ணோட்டத்தில் உட்கொண்டு மீண்டும் படைத்தல்.
- ஓவியம் வரைதலில் தொழில்நுட்ப உத்திகளைப் புரிந்து கொள்ளுதல்.

## அலகு – 3 : ஓவியப் பிரதிபலிப்பு

மொழிக்கும், எழுத்துகளுக்கும் முன்பு கருத்து வெளியீட்டிற்காக பயன்படுத்தப்பட்ட ஊடகம் ஓவியங்களாகும். எந்த மொழியைப் பயன்படுத்துபவர்களும் எந்த பூகண்டத்தில் வசிப்பவர்களும் ஒன்று போல புரிந்து கொள்ளக் கூடியது ஓவியங்களாகும். எனவே ஒவ்வொரு ஓவியமும் சமூகத்தில் நேயர்களின் முன் ஒரு கருத்தை வழங்குகிறது. அல்லது ஒரு கருத்தைச் சமூகத்திற்குப் பகிந்து கொடுப்பதற்காகத்தான் ஓவியங்கள் வரையப்படுகின்றன. ஓவியத்தை நுட்பமாக உற்றுநோக்கும் போது அந்த ஓவியத்தின் காரணிகள் எந்தக் கருத்தை வரைந்த காலகட்டத்துடன் தொடர்பு படுத்தியதன் தற்போதைய முக்கியத்துவத்தை விமர்சனத்துடன் விவாதிக்க வேண்டும். அப்போது அந்த ஓவியம் காலகட்டத்துடனும் சமூக பண்பாட்டுத் துறையுடனும் எந்த அளவில் இணைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

### கற்றல் அடைவு

- ஓவியத்தை உற்றுநோக்கி இரசித்தல், விமர்சனபரமாக பிரதிபலித்தல்.

### திறன்

- ஒவ்வொரு ஓவியமும் காலகட்டத்தின் அடிப்படையில் வாசிக்க வேண்டியதாகும்.
- ஓவியம் ஒரு கருத்தை நமக்கு அளிக்கிறது. அதைப் போன்று வரைந்த காலத்தையும் அன்றைய பண்பாட்டையும்.
- ஓவியம் கூறும் கருத்தைப் புரிந்து கொண்டு விமர்சனத்துடன் மதிப்பீடு செய்யவும், பிரதிபலிக்கவும் இயலுகிறது.

### கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு- 1*

- தெரிந்த ஓர் ஓவியத்தை ஆசிரியர் காட்டுதல்
- ஓவியத்தை நுட்பமாக உற்றுநோக்குதல்.

- ஓவியத்தில் எந்தெந்த மூலகங்கள் வரையப்பட்டுள்ளன/ ஓவியம் வரைந்த கால கட்டம்/ சமூக அமைப்பு?
- இந்த ஓவியம் முன் வைக்கும் கருத்து என்ன?
- ஓவியர் யார்? வரைந்த காலகட்டம், ஊடகம், கருத்து ஆகியவை கண்டுபிடித்துக் குறிப்பு எழுதவும். இந்த ஓவியரின் பிற நூற்களும், பிற ஓவியர்களின் ஓவியங் களும் இணைய தளத்திலிருந்தும், விக்கிபீடியாவிலிருந்தும் எடுத்துப் பார்க்கவும்
- நீங்கள் பார்த்தவற்றைக் குறித்து எழுதவும். மீதியானதை ஆசிரியர் கூறுவார். இராஜாரவிவர்மா. ஜி. ஜி போள்ராஜ், டாவிஞ்சி, ரம்பிராண்ட், ஜோண்வில்லியம், கோர்ட வாட், டானியல் ரிட்ஜ்வே நைட் ஆகியோரின் ஓவியங்கள் இன்று வாழ்ந்து வரும் அமித்கபூர், அஜய் ரய் போல், செர்கிழிபோய், டோவ்னோவ் ஆகியோரின் ஓவியங்களைப் பார்க்கவும். செர்கியின் மெருகு, கோட்வாடின் முழுமை அழகு, நைட்டின் இயற்கையழகு ஆகியவற்றைக் காணாவிடில் அது ஓர் இழப்பாகும்.

### *செயல்பாடு- 2*

- முன் நடைபெற்ற செயல்பாடுகளின் அடிப்படையில் ஒன்பதாம் வகுப்புப் பாடப் பகுதியுடன் தொடர்புடைய வின்சன்ட் வான்கோகின் " பொட்டற்றோ ஈட்டர்ஸ் " என்ற ஓவியத்தைக் காட்சிப்படுத்தி பட வாசிப்பு
- ஓவியத்தைக் குறித்த இரசனைக் குறிப்பு தயாரித்தல்
- வெளியிடுதல், விவாதம்.

### *செயல்பாடு- 3*

- முன்பு நடைபெற்ற படவாசிப்பில், படத்தில் குறியீடுகள் பயன்படுத்துவதன் தொடர்பாகக் கிடைத்த பகுத்தறிவிலிருந்து சொந்தமாக கருத்து அடிப்படை யிலான ஓவியம் வரைதல்.

### *செயல்பாடு- 4*

- வரைந்த ஓவியங்களைப் பார்வைக்கு வைத்தல். தேர்வு செய்யப்பட்ட ஓவியங் களைத் தர நிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் பட வாசிப்புக்கு உட்படுத்து தல்.

  *விவாதக் குறிப்புகள்*

  - நிறங்கள்
  - வடிவங்கள்
  - குறியீடுகள்
  - ஒழுங்குகள்

## அடையவேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைய முடிந்தது?*

- இரசிப்புத் தன்மை வளர்கிறது.
- வரையும் திறன் வளர்கிறது.
- வரலாற்றைப் புரிந்து கொள்ள முடிகிறது.
- ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள ஓவியர்களைக் குறித்தும் ஓவியத்தைக் குறித்தும் காலகட்டத்தைக் குறித்தும் உணர்வடைகின்றனர்.
- நிழலினுடையவும் ஒளியினுடையவும் பயன்பாட்டுமுறை
- ஓவியக் கலையின் வளர்ச்சி ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் உருவாகி வளர்ந்தது எப்படி என்ற விழிப்புணர்வு.
- உற்றுநோக்கலுக்கும் மதிப்பீடு செய்வதற்கும் அதிகமாக முயற்சி செய்தல்.
- பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ப ஓவியக்கலையின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ளுதல்.
- நல்ல ஒரு குடிமகனை உருவாக்குவதில் கலைகளுக்கு முக்கியத்துவம் உண்டு என்ற கோட்பாடு உருவாகிறது.

## அலகு – 4 : மனிதக் கோடுகள்

மனித உருவங்களின் விகிதம் ( பிறந்த குழந்தை முதல் முதுமையடைந்த மனிதன் வரை) ஒழுங்காகவும் அவருடைய வேறுபாட்டை அடையும்முறையும் நுட்பமாக உற்றுநோக்கி தனி ஓவியமாகவும், குழு ஓவியமாகவும் கருத்து அடிப்படையில் காட்சிப்படுத்துவதற்கு வாயப்பளித்தல், அத்துடன் இயல்பான வேறுபாட்டிற்கு நிறங்களைக் குறித்த அறிவும் அமையவேண்டும்.

### கற்றல் அடைவு

- மனித உருவங்கள் உட்பட்ட ஓவியங்கள் வரைதல்

### கருத்து அறிவு

- மனித உருவங்களின் அமைப்பு, அசையும் தன்மை, வயது, பாவம், வேடம் ஆகியவை ஓவியத்திற்கு உயிரூட்டுகிறது.
- மனித உருவங்களைக் காட்சிப்படுத்தும் போது குறிப்பிட்ட விகிதத்தில் காட்சிப்படுத்துவதற்கு இயலவேண்டும்
- ஒன்றிற்கு அதிகமான மனித உருவங்களுக்கு இடையேயுள்ள அகலமும் விகிதமும், ஒன்றோடொன்றுள்ள தொடர்பும் காட்சிப்படுத்தலாம்.

- மனித உருவங்களுக்குப் பொருத்தமான பின்னணியும் வேண்டும்.

## திறன்.

- குறிப்பிட்ட விகிதத்தில் மனித உருவங்களைக் காட்சிப்படுத்தும் திறன்.
- நிகழ்ச்சிக்கேற்ப மனித உருவமும், பின்னணியும் முழுமையாகக் காட்சிப்படுத்தும் திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு- 1*

- அசைவுடன் கூடிய மனித உருவங்கள் உட்பட்ட ஓவியம்/ புகைப்படம் காட்சிப்படுத்துதல்.
- ஓவியத்தில் எத்தனை மனித உருவங்கள் உள்ளன? ஆசிரியர் கேட்கிறார்.
- குழந்தைகளின் பிரதிபலிப்பு.
- ஒவ்வொருவரும் என்ன செய்கின்றனர்?
- அசைவுத் தன்மையுடைய மனித உருவங்களைக் காட்சிப்படுத்தும் போது எவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும்?
- அமைப்பு சார்ந்த அளவுகளைப் பாதுகாக்க வேண்டும்
- செயல்பாடுகளுக்கேற்ற அசைவு ( கை கால்கள், உடல் தலை)சாய்வு ஆகியவை பொருத்தமாக வேண்டும்.
- வயதிற்கேற்ற உடல் அமைப்பு வேண்டும்
- வயதிற்கும் தொழிலிற்கும் பொருத்தமான வேடம் வேண்டும்.
- பின்னணியில் எவையெல்லாம் உள்ளன?
- அவை எதைக் குறிப்பிடுகின்றன?
- கருத்துகளுக்குப் பொருத்தமான பின்னணியும் வேண்டும்.

### *செயல்பாடு- 2*

- இத்தகைய ஓர் ஓவியம் வரைந்தால்? (கருத்து கண்டுபிடித்தல்)
- இந்தக் கருத்துச் சூழலில் எத்தனை மனித உருவங்கள் வேணடும்? எந்த வயதினர்? வேடம் என்னென்ன? என்ன செய்கின்றனர்?
- பின்னணியைக் குறித்து விளக்கலாமா?
- குழந்தைகளின் ஓவியம் உருவாகிறது.
- குழந்தைகளுக்கும் ஓவியம் வரைவதற்கான வாயப்பளித்தல் குழந்தைகள் ஓவியம் வரைவதில் ஈடுபடுதல், ஆசிரியரும்
- வரைந்த ஓவியங்களைப் பள்ளியில் காட்சிப்படுத்துதல்

### மதிப்பீடு

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- மனித உருவங்களை விகிதத்துடன் காட்சிப்படுத்தியுள்ளான்.
- பொருத்தமான வேடம் அசைவு, வயது ஆகியவை உள்ளன.
- பொருத்தமான பின்னணியும் உள்ளது.
- ஓவியத்தில் முழுமை உள்ளது.

### அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைய முடிந்தது?*

- வரையும் திறன் வளர்கிறது
- உடல் அமைப்பைக் குறித்துப் புரிந்து கொள்கின்றனர்.
- தொழிலும், தொழிலாளர்களுக்கு இடையேயான தொடர்பைப் புரிந்து கொள்கின்றனர்.
- மனித உடல் வளர்ச்சியின் மாற்றங்களைக் குறித்து உணர்வடைகின்றனர்.
- மனித உருவங்களை ஓவியத்தில் உட்படுத்துகின்றனர்.
- தோலின் பல்வேறு நிறங்களைக் குறித்துக் கற்கின்றனர்.
- ஆடைமுறையைக் குறித்து உணர்வடைகின்றனர்.

## அலகு – 5 : சிற்பக்கலை வரலாறு

கலை வரலாறு என்பதி ஒவ்வொரு காலகட்டத்தினுடையவும் வரலாறாகும். சமூக மாற்றங்களுக்கு ஏற்ப கலையும் மாறுகிறது. பண்பாட்டை உருவாக்குவதில் சிற்ப – ஓவியக்கலைகள் பெரும் பங்கு வகிக்கிறது. கலைகளை நேசித்தல், படித்தல், விளம்பரம் செய்தல், பாதுகாத்தல் என்றால் நாட்டையும், பண்பாட்டையும் நேசிப்பதாகும். கலையும், கலைகளும், இரசிகரும், விளம்பரம் செய்பவரும் பண்பாட்டை உயர்ந்த நிலையை அடையச் செய்யும் மேதைகள் என்ற பகுத்தறிவு குழந்தைகளின் பண்பாட்டு உயர்வுக்கு உதவுகிறது.

### கற்றல் அடைவு

- ஓவிய, சிற்பக் கலை வரலாற்றை ஆழ்ந்தறிதல்.

### கருத்து அறிவு

- கலை வரலாறு என்பது காலத்தின் வரலாறாகும். எல்லாக் கலையும் நம்மிடம் நமது பண்பாட்டு வரலாற்றைக் குறித்துப் பேசுகிறது

- இந்தியாவில் குறிப்பாகக் கேரளத்தின் கால கட்டத்தில் ஏராளம் கலை வடிவங்கள் உண்டு.
- மனிதன் குடியேறிய இடங்களில் எல்லா கலைப் படைப்புகளும் உருவம் கொண்டுள்ளன.
- ஒரு பிரதேசத்தின் பண்பாட்டை அங்கே பார்க்க முடிகிறது.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு- 1*

- கலை வரலாற்று நூல் கற்றலுக்கு உதவுகிறது.
- கலை வரலாற்று குறுந்தகடு காட்சி
- ஓவியம் சிற்பங்களின் புகைப்பட அச்சு சேகரிப்பு
- நாட்குறிப்புகள்.

### *செயல்பாடு- 2*

- வரலாற்று வல்லுநர்கள், ஓவியர்கள், சிற்பிகள் ஆகியோருடன் உள்ள விவாதங்கள், பேட்டி
- வரலாற்று எச்சங்கள் உள்ள இடங்களுக்கான கல்விச் சுற்றுலா
- கற்றல் குறிப்பு. விவாதங்கள், மேற்பார்வைகள்

### *செயல்பாடு- 3*

- கலைவரலாற்றுடன் தொடர்புடைய செய்தித் துணுக்குகள், ஓவியங்கள் ஆகியவற்றின் சேகரிப்பும் காட்சியும்.

### *செயல்பாடு- 4*

- கலை வரலாற்றுடன் தொடர்புடைய அறிக்கை தயாரித்தல், வெளியிடுதல், விவாதம், மேம்படுத்துதல்
    - ♦ குகை ஓவியங்கள்
    - ♦ சுவர் ஓவியங்கள்
    - ♦ நிர்வாண ஓவியங்கள்- களங்களும், கோலங்களும்
    - ♦ முக எழுத்துக்கள்- தெய்யம், கருடன் துள்ளல், பறயன் துள்ளல், திற, ஓட்டன் துள்ளல். கதைகளி ஆகியவை.
- இவை நாட்டுப்புறக் கலையில் உட்படுகின்றன.
- அரண்மனை ஓவியங்கள். (மன்னராட்சி காலம்)
- சிறந்த ஓவியர்கள், சிற்பிகள் ( ஐ. சி. டி. வாய்ப்புகளை பயன்படுத்தலாம்)

## மதிப்பீடு

- கற்றலின் எல்லா நிலையிலும் மதிப்பீடு தேவை
- கலை வரலாற்றுடன் உள்ள தொடர்பு.
- சேகரிப்பு, குறிப்புத் தேட்டம், கருத்தரங்கு, அறிக்கை தயாரித்தல்
- ஆசிரியருடையவும், மாணவர்களுடையவும் ஒன்றுக்கொன்று உள்ள மதிப்பீடு.

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைய முடிந்தது?*

- கலையும், கலைஞரும் ஒரு பண்பாட்டின் பாகமாகும் என அறிதல்.
- உதவிக்காகப் பெருகி வரும் மேதைகளைக் கண்டறிதல்.
- பண்பாட்டு உணர்வுடைய குடிமகனாக மாறுதல்.

# அலகு – 6 : வரைதலும் IT –யும்

தகவல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி கலைத்துறையையும் வளப்படுத்தியுள்ளது. நவீன ஊடகமான கணினியில் ஓவியம் வரைவதற்கும் அச்சுகள் எடுப்பதற்கும் இயலும். ஓவியக் கலையில் படைப்பாற்றல் உள்ளவர்களுக்கு இத்துறையில் அதிகமாக உயர்வதற்கு இயலும்.

### கற்றல் அடைவு

- நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தி ஓவியம் வரைதல்.

### கருத்து, அறிவு

- கணினியில் ஓவியம் வரைவதற்கு ஏராளமான மென்தளங்கள் நடைமுறையில் உள்ளன.
- சாதாரண பயன்பாட்டில் வரைவதற்கான பொருட்கள் கிடைப்பதைப் போன்று இதிலும் கருவிகள் கிடைக்கின்றன.
- கோட்டுப் படங்கள், வண்ண ஓவியங்கள் ( எல்லா ஊடகத்திலும்) நிழலும், ஒளியும், முப்பரிமாணம், சாயக் கலவைகள் அனைத்தும் கிடைக்கிறது
- இந்த துறை குழந்தைகள் மிகவும் விரும்பக்கூடியது.

### கற்றல் செயல்பாடுகள்

- மென்தளங்களைத் தேர்வு செய்தல். (GIMP)
- மவுஸ் உபயோகித்துக் கோட்டுப் படம் வரைதல்.(Tools, Layers)
- நிறங்கள் கொடுத்தல்.(Select, Fill, Gradient, Smudge )
- நிழலும் ஒளியும் குறிப்பிடுதல்.
- களர்டோண்கள் செய்தல்
- கருத்து அடிப்படையிலான ஓவியங்கள் வரைதல், மேற்தளத்தை தேர்வு செய் தல், ஓவியத்தைப் பாதுகாத்தல்
- அனுபவம் வாய்ந்தவர்களின் உற்றுநோக்க வாய்ப்பளித்தல்.
- ஓவியத்தின் அச்சு எடுத்தல், காட்சிப்படுத்துதல், விவாதித்தல்
- மதிப்பீட்டிற்குப் பின் ஓவியத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டு மெனில் புதிய ஓவியங்கள் வரைவதற்கான தொடர் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

- முதலில் வரைந்த ஓவியத்தையும், இரண்டாவது வரைந்த ஓவியத்தையும் ஒப்பிட்டு குறைகளையும் நிறைகளையும் புரிந்து கொள்ளவேண்டும்.

### மதிப்பீடு

- கற்றலின் எல்லா நிலைகளிலும் மதிப்பீடு இன்றியமையாததாகும். .
- துறைகளின் ஒழுங்கு, நிறம் கொடுத்தல், நிழலும் ஒளியும், வேகம் முழுமை தர மதிப்பீடு

### அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவிற்கு அடைந்த னர்?*

- நவீன உலகில் கணினியின் உதவியோடுள்ள ஓவியம் வரைதல் அதிக பயனுடையது.
- வேளாண்மைத் துறையின் வளர்ச்சியில் இந்த துறையின் வளர்ச்சி அதிகமாக உதவுகிறது.
- தொழிலடிப்படையிலான கற்றலாக மாறுகிறது.
- வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.
- திரைப்படத் துறையில் அதிக பயனுடையது
- இந்தக் கற்றல் வழியாக, வேகமாக ஓவியம் வரைக்கும் திறன் குழந்தைகளிடம் உருவாகிறது.

## அலகு – 7 : ஓவியங்களை இரசிப்போம்

கலைகளை இரசிப்பதற்கும் அவற்றை வரும் தலைமுறைக்காகப் பாதுகாக்கவும் செய்வது என்ற பாரம்பரியம் எல்லாத் தலைமுறைகளிலும் பார்க்கக்கூடிய ஒரு சிறப்பாகும். கலைகளைக் குறிப்பாக ஓவியக் கலையை இரசிக்கும் போது அந்த ஓவியயம் வழியாக ஓவியர் முன் வைக்கும் கருத்தை இரசிக்கவும் அது நம்மிடையே மாற்றங்களை உருவாக்கவும் செய்கிறது. ஓர் ஓவியம் உருவாவது, அந்த கால கட்டத்தின் சமூக, பண்பாட்டுத் துறையின் மாற்றங்களுக்கு உட்பட்டு இருக்கும். அப்போது ஓவியம் அது வரைந்த காலகட்டத்தில் நிலைநிற்கும் பிரதிநிதி ஆகும். அதை இரசித்தல், புரிந்து கொள்ளுதல் என்பது, அன்றைய பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும் அதில் பெருமையடையவும் செய்வதற்கு சமமாகும். அதைப் பாது காப்பதற்கான மனப்பான்மை என்பது நமது பண்பாட்டைப் பாதுகாப்பது என்ற மனப்பான்மைக்கு சமமாகும். அது பண்பாட்டின் தொடர்சியை நிலைநிறுத்துவ தற்கு இன்றியமையாததாகும்.

### கற்றல் அடைவு

- கலைப்படைப்பகளை இரசிக்கவும், பாதுகாக்கவும் உள்ள மனப்பான்மை வளர்கிறது.

## கருத்து, அறிவு

- கலைப்படைப்புகள் காலத்தினுடையவும், பண்பாட்டினுடையவும் எதிர் பிம்பங்கள்ஆகும்.
- கலைப்படைப்புகள் வழியாக அந்த காலகட்டத்தின் சிறப்புகளும், அதில் படைப் பாளரின் ஈடுபாடும், பிரதிபலிப்பும் வெளிப்படுத்துகின்றன.
- கலைப் படைப்புகளைப் பாதுகாப்பது என்பது நம்து பண்பாட்டைப் பாதுகாப்பதும், அதில் பெருமையடைவதும் என்பதாகும்.
- பாதுகாப்பு, பாரம்பரியத்தின் தொடர்ச்சியை நிலை நிறுத்துவதற்கு இன்றியமையாதது.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு- 1*

- இராஜாரவிவர்மாவின் ' ஜிப்சிகள்' என்ற ஓவியத்தைக் காட்டுதல்.
- இந்த ஓவியம் கூறும் கருத்து என்ன?
- வரைவதற்குப் பயன்படுத்தியமுறை, பொருட்கள் எவை?
- காலகட்டம் அதன் சிறப்புகள் எவை?.
- இந்தக் கருத்துகள் அடிப்படையிலான குழு விவாதம், குறிப்பு தயாரித்தல்.

  *விவாதக் குறிப்புகள்*

  - ஓவியர், வாழ்க்கைச் சூழல்
  - ஓவியம் குறிப்பிடும் கருத்து
  - ஓவியம் வரையப்பட்ட ஊடகம், தளம் பயன்பாட்டு முறை
  - கால கட்டம், சமூக அமைப்பு
  - சுய கண்ணோட்டம்.
- குறிப்பு வெளியிடுதல், ஒருங்கிணைத்தல்
- நடைபெற்ற செயல்பாட்டின் தொடர் செயல்பாடாக தனியாக இரசனைக் குறிப்பு தயாரித்தல்.
- தயாரித்த குறிப்பை, தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் குழுவில் வெளி யிட்டு விவாதித்து மேன்மையானதைத் தேர்வு செய்து வெளியிடுதல். விவாதம், மேம்படுத்துதல்.

*செயல்பாடு- 2*

- தொடர் செயல்பாடு என்ற நிலையில் வேறொரு ஓவியத்தைக் காட்டி குறிப்புக ளின் அடிப்படையில் குழுவாக விவாதித்து கருத்தரங்க அறிக்கை தயாரித்து பொதுவாக வெளியிடுதல்.
- ஓவியரின் பெயர், நாடு பிறந்த வருடம் போன்றவை.

*செயல்பாடு- 3*

- வகுப்பறையில் பழைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களில் காட்சி ஒழுங்கு செய்தல்.
- அழிந்து போன பொருட்களின் ( இப்போது பயன்படாத காட்சி எல். சி. டி பயன்படுத்தலாம்.)

- ♦ இந்த கருவியை உங்களுக்குத் தெரியுமா?
- ♦ இவை இப்போது பயன்படுத்தப்படுகிறதா?
- ♦ பின்பு எதற்காக இவை குறிப்பிடப்படுகின்றன?
- ♦ இவற்றை உருவாக்கியவர் யார்?

- இத்தகைய குறிப்புகளின் அடிப்படையிலான விவாதம்.
- கருத்துகள் அட்டவணைப்படுத்துதல்.
  - ♦ இந்தப் பொருட்களைப் பழைய தலைமுறையினர் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தியிருந்தனர்.
  - ♦ நவீன தொழில்நுட்பங்கள் இல்லாத காலத்தில் இயந்திரங்களின் உதவியின்றி உருவாக்கப்பட்டவையாகும் இவை.
  - ♦ இவை அக்காலப் பண்பாடாக உயர்ந்த ஒரு தலைமுறை உருவாக்கி பயன் படுத்தியிருந்ததாகும்
  - ♦ இத்தகைய கருவிகள் உருவாக்கவும், பாதுகாக்கவும் உள்ள மனப்பான்மை அவர்களுக்கு இருந்தது.
  - ♦ இவற்றை பாதுகாக்கப்பட்ட காரணமாக அந்த தலைமுறையின் பண்பாட்டு வளர்ச்சியும், கண்ணோட்டமும் உயர்ந்த சிந்தனையும் நம்மால் புரிந்து கொள்ள முடிந்தது.
  - ♦ இவை அழிந்து விட்டால் அந்தத் தலைமுறையைக் குறித்த அறிவுகள் தொடர்ச்சியின்றி இழக்க நேரிடும்.
  - ♦ இவற்றைப் பாதுகாப்பதன் வழியாக அந்த தலைமுறையின் உழைப்பை, படைப்பாற்றலை நினைவுகூரவும் அதை மதிக்கவும் அதில் பெருமைப் படவும் செய்ய வேண்டும்.
  - ♦ இன்று நாம் உபயோகிக்கும் எல்லாக் கருவிகளும், கலை வடிவங்களும் உருவாக்குவதன் அடிப்படை பழைய தலைமுறை பெற்றுக்கொண்ட திறனிலிருந்து உட்கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.
  - ♦ எனவே இன்றைக்கு உருவாக்கப்படும் கலைப்பொருட்கள், வடிவங்கள் ஆகியவை நாளைய தலைமுறைக்காகப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.
- பகுத்தறிவின் அடிப்படையில் இத்தகைய புராதன வரைவுகள் சேகரிக்கப்படும், பொருட்காட்சி சாலைகள் ஆகியவை பார்வையில் அதன் முக்கியத்துவத்தைக் குறித்து உணர்வடையச் செய்தல்.
- சேகரிப்பில் இத்தகைய பொருட்களின் படங்களை உட்படுத்த வேண்டும். இடைக்கல் குகை போன்ற இடங்களைப் பார்வையிட்டு அதன் நம்பகத்தன்மை குறித்து உணர்வடையச் செய்தல்

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைய முடிந்தது?*

- இரசிப்புத் திறன், உயர்ந்த சிந்தனை, விமர்சன உணர்வு ஆகியவை உருவாகிறது.
- விமர்சனபரமான கற்றல் உணர்வு கிடைக்கிறது.
- பண்பாட்டு பரம்பரையில் பெருமை கொள்ளவும். அதைப் பாதுகாக்கும்

பொறுப்பை வகிக்கவும் மனதளவில் தயாராகுதல்.

## அலகு – 8 : காட்சிப்படுத்துவோம்

நவீன உலகில் தவிர்க்க முடியாத ஊடகங்களாகும் நிலைப் புகைப்படக் கருவி, வீடியோ புகைப்படக் கருவி ஆகியவை. தொழில்நுட்பத்துறையிலும், சமூகத் துறையிலும் அதிக பிரதிபலிப்பிற்கு வாய்ப்பளிப்பவையாகும் இந்த இரு கருவி களும். சமூகவாழ்க்கையில் அதிகமாக வேலைவாய்ப்பு உடைய விரிவான ஒரு துறையாகும் இது. தொழில்நுட்பத்தில் சிறிய புலமையை வெளியிட இயலும். எவராலும் கலைசார்ந்த புகைப்படம், வீடியோ ஆகியவற்றை நன்றாகச் செய்ய இயலும். திரைப்படம் போன்ற பெரிய துறைகளுக்கான ஆரம்பம் என்ற நிலையில் இந்தச் செயல்பாடுகளைப் பார்க்க வேண்டும். நிகழ்கால உலகில் விவாதங்களுக்கு உட்பட்ட பல நிகழ்ச்சிகளும் வெளியே வந்தது மிகச்சிறிய நேரத்தில் உருவாக்கப் படும் கிளிப்புகள் வழியாகும். சமூகப்பிரதிபலிப்பின் உறைவிடங்களாகிய செய்தி ஊடக- சானல்கள் இது போன்ற தொழில்நுட்ப உதவியாலாகும் எனப் புரிந்து கொள்ள வேண்டும்

### கற்றல் அடைவு

- நிலைப் புகைப்படக் கருவி, வீடியோ புகைப்படக் கருவி ஆகியவை உபயோகித்து படக்காட்சி எடுத்தல்.

### கருத்து, அறிவு

- அசைவற்ற காட்சிகளை எடுப்பதற்கு நிலைப் புகைப்படக் கருவி பயன்படுத்தப் படுகிறது.
- அசையும் காட்சிகளுக்கு வீடியோ புகைப்படக் கருவி பயன்படுத்தப்படுகிறது.
- தயாரித்த திரைக் கதைகளுக்கு ( காலக்கோடு) ஏற்பத் திரைப்படக் காட்சிகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. (Open videoshot, Audacity)
- கணினி மென்தளங்களின் உதவியுடன் படத்தின் வீடியோ பதிப்பு, காலக்கோடு, ஒலி இணைப்பு ஆகியவை செய்யலாம்.
- புகைப்படக் கருவியை பயன்படுத்துவதற்குப் பயிற்சி தேவை. (6 Frames)

### கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு- 1*

- சிறந்த புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்களை வகுப்பில் காட்டுதல்( அச்சுகள், புரொஜக்டர் ஆகியவை பயன்படுத்துதல்.)
- சமூக முக்கியத்துவம் வாய்நத நிகழ்ச்சிகள் அதிகமாக வரக்கூடிய புகைப்ப டங்களைக் காட்டலாம். எ.கா. மதுராஜின் வெள்ளைக் கள்ளன் என்டோசல் பான் ஆகியவற்றின் ( பிரின்ட்) அச்சு மிக நன்று.
- லான்ஸ்கேப், போர்டிரெயிட், ஸ்டில்லைப் ஆகியவையும் பயன்படுத்தலாம்.

எந்தெந்த வகையிலான புகைப்படங்கள் உங்களிடம் உள்ளன?

- மீடியா போட்டாகிராபி, போர்டிரெயிட், புகைப்படம், லான்ட்ஸ்கேப், ஸ்டில் லைப், ஸ்போர்டஸ் ஆகியவை.
- புகைப்படம் எவ்வாறு உருவாகிறது?

  விவாதம், மேற்பார்வை
- புகைப்படக் கருவி, படச்சுருள் அச்சு, மெம்மரி கார்டு டெவலப்பிங் (சூம் லென்ஸ்) கணினி ,பிரிண்டர் ஆகியவை விவாதிக்க வேண்டும்.
  - எந்த வகையிலான புகைப்படங்களை நீங்கள் விரும்புவீர்கள்?
  - தனது விருப்பத்திற்கேற்ப புகைப்படம் எடுக்க முடியுமா?

### *செயல்பாடு- 2*

- ஒவ்வொருவருக்கும் விருப்பமான படங்களைத் தீர்மானித்தல். குழுவாக விரும்பும் பொருள், நிகழ்ச்சி ஆகியவற்றின் புகைப்படம் எடுத்தல்.
- புகைப்படம் எடுப்பதற்குப் புகைப்படக் கருவி, மொபைல் போன், லாப் ஆகியவை பயன்படுத்தலாம்.

### *செயல்பாடு- 3*

- புகைப்படக் கருவியிலுள்ள படங்களை எவ்வாறு பட ( அச்சு) வடிவில் மாற்ற முடியும்? விவாதம்
- கணினி, பிரின்டர், லாப், பிரின்ட ஆகியவற்றைக் குறித்த விவாதம்
- புகைப்படக் கருவியிலுள்ள படங்களைப் பதிப்பு ( எடிட்) செய்வதற்கு கணினியில் மாற்ற வேண்டும்.

### *செயல்பாடு- 4*

- புகைப்படக் கருவியைக் கணினியுடன் டேட்டா கேபிள் வழி இணைத்து கணினியில் பதிவேற்றம் செய்தல்.
- ஜிம்ப் மென்தளம் திறந்து எடுத்த படத்தைத் திறந்து Level, Brightnes, Contrast, Composition ஆகிய Editing work செய்து தேவையான அளவில் crop செய்து தனது folder -ல் file name கொடுத்து பாதுகாத்தல் print எடுத்தல் .

### *செயல்பாடு- 5*

- டெஸ்க்டாப்பை காட்டுதல். மதிப்பீடு செய்தல்.
- மதிப்பீட்டிற்குப் பின் குறைகளை நிவர்த்தி செய்து புகைப்படம் எடுப்பதற்கும், பதிப்பு செய்வதற்கும் வாய்ப்பு இருக்க வேண்டும்.

### *செயல்பாடு- 6*

- புகைப்படக் கருவியைப் பயன்படுத்தும் முறை
- காட்சிகளின் முழுமை.
- முழுமை, இணைப்பு
- பதிப்பு ஆர்வத்திறன் இவை அடிப்படையிலான தர மதிப்பீடு.

*செயல்பாடு- 7*

**L. C.D** புரொஜெக்டர் உதவியுடன் வகுப்பில் வீடியோக்களைக் காட்டுதல்.

- வீடியோ உருவாக்குவது எப்படி? விவாதம். ஒருங்கிணைப்பு.
- வீடியோ புகைப்படக் கருவி, Editing, Sound, Mixing, Titling, Dubbing, Shooting, Camara play, Time line, ஆகியவை
- உங்களுக்கு விருப்பான நிகழ்ச்சியின் வீடியோ தயாரிக்கலாம், படப்பிடிப்பு செய்ய வேண்டிய காட்சியைத் திரைக் கதை வடிவில் தயாரித்தல்

*செயல்பாடு- 8*

**புகைப்படக் கருவி உபயோகித்துப் படம் பிடித்தல்**

- குழுவாகச் செயல்பாடுகள் செய்ய வேண்டும்.

*செயல்பாடு- 9*

- படம்பிடித்த காட்சியை டேட்டா கேபிள் வழியாக கணினியில் பதிவேற்றம் செய்தல்
- Sound forge - மென்தளம் பயன்படுத்தி ஒலியைப் பதிவு செய்யலாம்.
- Sound ஐ Soundfile ஆக folder ல் சேமிக்கலாம்.
- Video Editer மென்தளத்தில் வீடியோ திறத்தல்.
- படம் பிடித்த காட்சியைப் Cut, Edit method பயன்படுத்தித் தேவையானவற்றை நிலைநிறுத்தி மீதியை delite செய்தல் தேவையான Sound mix செய்தல்
- டைட்டில்ஸ் உட்படுத்தி VCD, DV format களில் export செய்தல்
- folder ல் file name கொடுத்து save செய்தல்

*செயல்பாடு- 10*

- உருவாக்கிய படத்தை வெளியிடுதல்
- மதிப்பிடுதல், விவாதம்.
- மதிபிபீட்டிற்குப் பின்பு குறைகளை நிவர்த்தி செய்தல் மீண்டும் காட்சிப்படுத்துதல்.

## மதிப்பீடு

- திரைக்கதை, கருத்து வெளியீடு.
- புகைப்படக் கருவியைப் பயன்படுத்தும் திறன்
- காட்சிகளைப் பதிவு செய்யவும் ஒலி இணைப்பு செய்வதற்கும் உள்ள திறன்.
- குறும்படக் காட்சி உருவாக்கத்தைக் குறித்த அறிவு

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைந்தனர்?*

- புகைப்படக்கருவி, வீடியோ புகைப்படக் கருவி இவை பயன்படுத்தும் திறன்.
- திரைக்கதை எழுதுவதற்கான திறன். .
- கணினியில் எடிட்டிங், மிக்சிங், Sound Recording, Mixing இவற்றிற்கான திறன் அறிவு.

# அலகு – 9: சிற்ப உருவாக்கம்

சிற்ப உருவாக்கம் என்பது சிற்பத்தை உருவாக்குபவரின் மனதிலுள்ள ஒரு கருத்தின் உருவாக்கமாகும். சிற்பம் உருவாக்கும் போது குழந்தையின் பன்முக அறிவின் எல்லா மண்டலங்களும் ஒரே நேரத்தில் வளருகிறது. பார்க்கக்கூடிய வடிவத்தை அதே நேரத்தில் மீண்டும் உருவாக்குவதல்ல சிற்ப உருவாக்கம் என்ப தன் பொருள் உருவாக்கக் கூடிய சிற்பத்திற்கு ஆதாரமான பொருளை செய்யக்கூடிய நபரின் மனநிலைகளுக்கேற்ப மாற்றியமைக்கலாம் அல்லது அது வெறும் பிரதியெடுத்தல் மட்டுமாக மாறும் எனவும் செய்யக்கூடிய நபரின் படைப்பாற்றல் சார்ந்த திறன்கள் தான் உருவாக்கும் சிற்பத்தில் பிரதிபலிக்க வேண்டும் எனவும் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சிற்பமும், ஒவ்வொரு சிற்பியைப் போன்று நம்பிக்கையுடையதாகும் போது சிற்பியின் படைப்பாற்றலாக மாறுகிறது.

## கற்றல் அடைவு

- பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திக் கருத்து அடிப்படையிலான சிற்பங்கள் உருவாக்குதல்

## கருத்து, அறிவு

- சிற்பம், கருத்து வெளியீட்டிற்கான ஊடகமாகும்.
- சிற்பம் முப்பரிமாணத் தன்மையுடையது
- சிற்பம் உருவாக்கத்திற்கு நான்கு பக்கத்திலிருந்தும் உள்ள கற்றல் தேவையாகும்
- மேல்தளத்தில் எம்போஸ் செய்து அல்லது என்கிரேவ் செய்து சிற்பங்கள் உருவாக்கலாம்.
- சிற்ப உருவாக்கத்திற்காக களிமண், தடி, உலோகம், சிமிண்ட் ஆகிய பாரம்பரிய ஊடகங்களும், பிளாஸ்டாப் பாரிஸ், பைபர், வாக்ஸ் ஆகிய புதிய ஊடகங்களும் பயன்படுத்தலாம்.
- உயர்ந்து நிற்கக்கூடிய சிற்பங்கள் உருவாக்கும் போது விழுந்து போகாமலிருக்கும் படி பெடஸ்டல், ஆர்மேச்சர் போன்ற அமைப்புகளை செய்ய வேண்டும்.
- சிற்பத்தின் தன்மைக்கேற்ற ஊடகம் தேர்வு செய்யவும் அதன் சிறப்புகள் உட்கொள்வதற்குத் தேவையான கருவிகள் பயன்படுத்தவும் வேண்டும்( டெக்ஸ்டர் போன்றவை)

## கற்றல் செயல்பாடுகள்

- வெவ்வேறு ஊடகங்களில் உருவாக்கிய சிற்பங்களின் காட்சி டெமானஸ்ட்ரேஷன் குறுந்தகடு வெளியீடு
- சிறந்த சிற்பிகள், அவருடைய சிற்பங்களை அறிமுகம் செய்தல் ( LCD, IT வாய்ப்புகள் பயன்படுத்தலாம்)
- சிற்ப உருவாக்கத்திற்கான கருத்துகள்/ பொருட்கள் இவை கண்டுபிடிப்பதற்கான விவாதம் அட்டவணைப்படுத்துதல்.
- கண்டுபிடித்த கருத்தை/ பொருட்களை உருவாக்க எந்தெந்த ஊடகங்களைப்

பயன்படுத்தலாம்?

- சிற்பத்திற்குத் தேவையான வரைபடம் தயாரித்தல், வெளியிடுதல் தேவையான மாற்றங்கள் செய்தல்.
- ஊடகத்தை சமன் செய்தல், தேவையான பெடஸ்டல் ஆர்மேச்சர் உருவாக்க வேண்டும், பிளைவுட் கம்பி, ஈர்க்கில், நூல் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.
- சிற்பம் உருவாக்குதல்
- சிற்பம் உருவாக்கும் போது படைப்பாற்றல் ஈடுபாட்டிற்கான வாய்ப்பளிக்க வேண்டும். டெக்ஸ்டர், போம் வடிவம் இவற்றில் உருவாகும் மாற்றங்களை ஊக்குவிக்க வேண்டும். தேவையான கருவிகளை சுயமாக உருவாக்குவதற்கான தூண்டுதல் அளிக்கலாம்.
- காட்சிப்படுத்துதல்/ வெளிப்படையான கலந்துரையாடல், மதிப்பீடு, பாராட்டுதல்
- மதிப்பீட்டிற்குப் பின் சிற்பங்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் அவற்றில் புதியவற்றை உருவாக்குவதற்கும் உள்ள வாய்ப்பு இருக்க வேண்டும்..

## மதிப்பீடு

- சிற்ப உருவாக்கத்திற்கான கருத்தைக் கண்டுபிடித்தல்.
- ஊடகங்கள் தேர்வு செய்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உள்ள திறன்.
- உறுதியான உருவாக்க முறை பெடஸ்டல் ஆர்மேச்சர் உருவாக்கம்.
- முழுமை, டீட்டெயில்ஸ் டெக்ஸ்சர் ஆகியவற்றிலுள்ள ஆர்வம், இவை அடிப்படையிலான தர மதிப்பீடு

# அலகு – 10 : சிற்பக் கலை வரலாறு

காலகட்டதின் வரலாற்றுக் குறியீடுகளாகும் கலைகள். சமூக மாற்றத்தை ஓவியங்களும் சிற்பங்களும் அரசியல் சமூகத்துறைகளின் மாற்றத்தின் பாதை வெகு விரைவில் உட்கொள்கின்றனர். எக்காலமும் உருவாக்குவதற்கு, ஓவியர்களுக்கும், சிற்பங்களுக்கும் இயன்றுள்ளது, வரலாற்றைச் சோதித்தால் ஏராளமான நிகழ்ச்சிகளை இதற்கு எடுத்துக்காட்டாகப் பார்க்கமுடியும். ஓவியர்களுடையவும் சிற்பிகளுடையவும் காலகட்டதுடன் உள்ள கடமையுணர்வு எந்தக் காலங்களிலும் உன்னத நிலையை அடைந்துள்ளது. ஓவிய- சிற்பக்கலை வரலாற்றைக் குழந்தைகள் ஆழமாக அறியும் போது ஓவியமும், சிற்பியும் இரசிகரும், விளம்பரம் செய்பவர்களும் ஒரு நாட்டின் பண்பாட்டு பராம்பரியத்தை உன்னத நிலையில் அடையச் செய்தவர்கள் என அறிந்து கொள்கின்றனர்.

## கற்றல் அடைவு

- ஓவிய சிற்பக் கலை வரலாற்றை அறிதல்.

## கருத்து, அறிவு

- மனிதனின் எல்லா குடியேற்ற மையங்களிலும் ஓவியமும் சிற்பமும் உருவம் கொண்டுள்ளன.
- இந்தியாவில் குறிப்பாக கேரளத்தில் காலகட்டத்தின் எச்சங்களாகிய ஏராளம்

ஓவியங்களும் சிற்பங்களும் நிலைநிற்கின்றன.

- சிறந்த முறையிலான படைப்புகளை உருவாக்க தலைமுறைக்கு இயலவேண்டும் எனவும் இந்த எச்சங்கள் நம்மோடு அறைகூவல் விடுக்கிறது.
- கலை வரலாறு நாட்டின் வரலாறு எனவும் அவை சிறந்த பண்பாட்டிற்கான காலச்சுவடுகள் எனவும் குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டும்.
- மனிதநேயப் பண்பாட்டு உ.ருவாக்கத்தில் ஓவிய, சிற்பக் கலைகளின் பங்கு முக்கியமானது என்ற அறிவு குழந்தைகளிடம் உருவாகிறது.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு- 1*

- படசேகரிப்பு ( ஓவியக் கலையும், சிற்பக் கலையும்)
- ஓவியர்கள், சிற்பிகள் ஆகியோரின் புகைப்பட அச்சுகள்
- உதவி நூற்கள்.
- வரலாற்று ஆசிரியரின் உதவியுடன் இந்தியக் கலை வரலாற்றைக் குறித்த விவாதம்.
- ICT வாய்ப்பைப் பயன்படுத்தியுள்ள விளக்கத்தைக் கலையாசிரியர் அளித்தல்.

### *செயல்பாடு- 2*

- குழந்தைகளாகவே பொறுப்பேற்று இந்தத் துறையைக் குறித்த ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்தல்
- சேகரித்த ஆவணங்களின் காட்சி.
- கற்றல் செயல்பாட்டின் பாகமாக சிற்ப ஓவிய சேகரிப்பிற்கான பயணமும், குறிப்பு தயாரித்தலும்.
- விவாதமும், படத்தொகுப்பு தயாரித்தலும்

## மதிப்பீடு

- ஆராயும் அறிவு
- உற்றுநோக்கும் திறன்
- குழுச் செயல்பாடு.
- விவாதத்தில் பங்களிப்பு
- தெரிந்த கருத்துகளை விளக்குதல்.

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் மேன்மைகளை எந்த அளவில் அடைய முடிந்தது?*

- நாட்டின் வரலாற்றையும் சமகால ஓவியங்களையும் சிற்பங்களையும் குறித்து கற்பதற்கான ஆர்வம்
- தலைமுறைகளுக்காக ஓவியங்களும் சிற்பங்களும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு.
- பல்வேறு நாடுகளின் சிற்ப ஓவிய வரலாற்றைக் கற்றல்

# அலகு – 11 : கேலிச்சித்திரம்

கற்பனை வளமும், நகைச்சுவை முக்கியத்துவமும், சிந்தனையை தூண்டுவதும், விமர்சனபரமானதுமான ஒரு கலைத்துறையாகும் கேலிச்சித்திரங்களும், காரிக்கேச் சரும். சமூக நன்மைகளைப் புகழ்ந்து தீங்குகளை எதிர்த்தும் கேலிச்சித்திரங்கள் வரையப்படுகின்றன. கேலிச்சித்திரம் என்பது ஓவியக்கலையின் ஒரு பகுதியாகும். உலகில் ஏராளமான கார்ட்டூனிஸ்ட்டுகளும், காரிக்கேச்சரிஸ்டுகளும் உள்ளனர்.

நேர்மையான கருத்தும், காட்சிப்படுத்தலும் கேலிச்சித்திரத்தில் வேண்டும். இது மக்களோடிணைந்த ஒரு கலையாகும். பெரும்பான்மையான மக்களும் இதை அதிகமாக விரும்புகின்றனர். சமூகமாற்றத்திற்கு வித்திட்ட ஏராளமான கேலிச் சித்திரங்கள் உலகில் விவாதம் செய்யப்பட வேண்டும்.

## கற்றல் அடைவு

- சிந்தனையைத் தூண்டக்கூடிய கேலிச்சித்திரங்களும், காரிக்கேச்சரும் வரைதல். மிக எளிமையாக சிந்திக்க கேலிச்சித்திரங்களால் இயலும். அதற்குக்கோடுகளை விடக் கருத்திற்கு முக்கியத்துவம் உள்ளது.

## கருத்து, அறிவு

- வாசிப்பும் கருத்துப் பாதுகாத்தலும் முக்கியமானது.
- கேலிச்சித்திரம் வரைபவர்களுடையவும், கேலிச்சித்திரங்களுடையவும், காரிக் கோச்சரினுடையவும் வரலாற்றை ஆராய வேண்டும்.
- ஓவியம் வரைதலின் ஆழ்ந்த அறிவு கேலிச்சித்தரங்களுக்கு மிக இன்றி யமையாதது.
- சமகால, அரசியல், சமூகப் பின்னணியை அறிய வேண்டும்.
- செய்திகளின் சேகரிப்பு அதிக பயன்தரக்கூடியது.
- சமூகப் பிரச்சனைகளில் ஆழமான ஈடுபாடு கேலிச்சித்திரங்களை அதிக பலனு டையதாக்கும் என்ற உணர்வு உருவாக வேண்டும்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு- 1*

- பொருத்தமான ஒரு கேலிச்சித்தரத்தைக் காட்டுதல்
- நுட்பமாக உற்றுநோக்குதல்.
- பறவை மிருகங்கள் ஆகியவற்றினுடையவும், மனிதர்களுடையவும் அசைவை உற்றுநோக்கிப் புரிந்து கொள்ளுதல்
- முகபாவமும், அசைவும் உற்றுநோக்குதல்
- செய்தித்தாள் வாசிப்பும் சேகரிப்பும் நடைபெற வேண்டும்.
- முக்கிய நிகழ்ச்சிகள், அதில் வரக்கூடிய நபர்கள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.

*செயல்பாடு- 2*

- கேலிச்சித்திரங்களை காட்சிப்படுத்துதல், கேலிச்சித்திரங்களின் முக்கியத்து வத்தைக் குறித்து விவரித்தல்.

*செயல்பாடு- 3*

- கேலிச்சித்திரங்களைச் சேகரித்து வரும்படிக் கூறுதல்
- காட்சி நடத்துதல்.
- குழந்தைகளுக்கு விருப்பமான கேலிச்சித்திரங்களைக் குறித்து குறிப்பு தயாரித்தல்.
- விவாதித்தல், அவர்கள் கேலிச்சித்திரம் வரைதல் ஆசிரியர் உதவுதல்.

*செயல்பாடு- 4*

- மிகவும் புதிய அரசியல் நிகழ்ச்சியைக் குறித்து அல்லது சமூக நிகழ்ச்சிகளைக் குறித்து கேலிச்சித்திரம் வரைந்து வரும்படிக் கூறுதல்.
- கேலிச்சித்திரங்களைக் காட்சிப்படுத்துதல்.
- ஒவ்வொருவரும் வரைந்த கேலிச்சித்திரங்களைக் குறித்து விளக்கும்படி கூறுதல்.
- சமூக அரசியல் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையவை எவை என்பதைக் குழந்தைகள் கண்டுபிடிக்க வேண்டும்.
- தேர்வு செய்யப்பட்டவற்றின் சிறப்பை விளக்க வேண்டும்.
- குழந்தைகளுக்குத் தீர்வு காணும் முறையை ஆசிரியர் கூறவேண்டும்.
- அதிகமான நிகழ்ச்சிகள் அடிப்படையிலான கேலிச்சித்திரங்கள் வரையும்படிக் கூற வேண்டும்.

*செயல்பாடு- 5*

- சிறந்த கேலிச்சித்திர ஓவியர்கள் முன்னிலையில் கேலிச்சித்திரம்/ காரிக்கேச்சர் கற்றல் சாலை ( களரி) அமைக்கலாம்.
- கேலிச்சித்திரமும், காரிக்கேச்சரும் இடையிலான வேற்றுமைகளைக் குறித்து உணர்வடையச் செய்ய வேண்டும்.
- குழந்தைகள் ஒன்றுக்கொன்று காரிக்கேச்சர் வரைவதற்கான வாய்ப்பை உரு வாக்க வேண்டும்.
- காரிக்கேச்சர் வரையும் போது நுட்பமான கட்டுகளைக் குறித்து உணர்வடை யச் செய்ய வேண்டும்.
- நிபுணர்கள் வரைந்த கேலிச் சித்திரங்களும் காரிக்கேச்சரும் குழந்தைகள் வரைந்த கேலிச்சித்திரங்களும், காரிக்கேச்சரும் காட்சிப்படுத்தவும், விவாதித்து மதிப்பீடு செய்யவும் தொடர் செயல்பாட்டிற்கு நேராகத் தூண்டவும் வேண் டும்.

## மதிப்பீடு

- எல்லா நிலைகளிலும் மதிப்பீடு தேவை.
- கேலிச் சித்திரங்களோடும், காரிக்கேச்சருடனும் உள்ள ஆர்வம்

- வரையும் முறை
- கருத்துகளோடு உள்ள தொடர்பு
- சமூக அரசியல் நிகழ்ச்சிகளைத் தேர்வு செய்தல்
- குழுவான மதிப்பீடு.
- செய்தி சேகரிப்பதுடன் உள்ள ஆர்வம்.

### அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைந்தனர்?*

- வாசிப்புப் பழக்கம், சேகரிப்பு மனப்பான்மை ஆகியவை வளர்கின்றன.
- தனிநபர்களையும், சமூகத்தையும் நுட்பமாக உற்றுநோக்குதல்.
- கற்பனை வளர்ச்சி

## அலகு – 12 : லோகோ

பல்வேறு நிறுவனங்களை எளிதில் பிரித்தறிவதற்கான கருவியாக லோகோ பயன் படுத்தப்படுகிறது. லோகோ உருவாக்குவது படைப்பாற்றல் சார்ந்து ஒரு கலைச்செயல் பாடாகும். லோகோவில் ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டுத் தன்மை மண்டலம் ஆகியவை ஒரே முத்திரையிலிருந்து பிரதிபலிக்கச் செய்ய முடியும். கருத்துவளவும் எளிமையுமான முத்திரைகள் கவனத்தை கவருகிறது.

### கற்றல் அடைவு

- குழந்தைகள் லோகோ ( முத்திரை ) தயாரித்தல்.

### கருத்து, அறிவு

- ஒரு நிறுவனத்தைக் குறித்து இயன்ற அளவிலான தகவல்களைப் பிரதிபலிப் பதற்கு முத்திரைகளால் இயலவேண்டும்.
- முத்திரை இலகுவானதும் எளிதாக வாசிப்பதற்கு இயலுவதுமாக இருக்க வேண்டும்.

### கற்றல் செயல்பாடுகள்

***(லோகோ அறிமுகம் செய்தல்)***

- ஆசிரியர் சார்ட்டில் தயாரித்த ஒரு முத்திரையைக் காட்டுதல்.
- இது எந்த நிறுவனத்தினுடையது?
- குழந்தைகளின் பிரதிபலிப்பு.
- இந்த முத்திரையிலிருந்து உங்களால் வாசிப்பதற்கு இயன்ற கருத்துகளை தங்கள் குறிப்பேட்டில் எழுதுதல்.
- குழந்தைகள் குறித்த கருத்துகளை வெளியிடுதல். ஆசிரியர் ஒருங்கிணைத் தல்.

  இது ஒரு வங்கியின் முத்திரையாகும்

வங்கி ஒரு பொருளாதார நிறுவனமாகும்.

தாக்கோல் பழுது ( சாவித்துளை) இரு கருத்துகளைக் குறிப்பிடுகிறது.

உங்களுடைய பணம் இங்கே பாதுகாப்பாகும்.

உங்களுக்கு பணம் தேவைப்படும் போது இந்த வங்கி உங்களுக்கு உதவுகிறது

சாவித்துளையின் சுற்றுமுள்ள வடிவம் பாதுகாப்புத்தன்மை.

- இனி நாம் ஒரு முத்திரை செய்து பார்ப்போம்.
- ஏதேனும் ஒரு நிறுவனம் ( நிலவிலுள்ளது அல்லது இல்லாதது ) தேர்வு செய்யக் குழந்தைகளிடம் கூறுதல்.
- தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் செயல்பாட்டுத் துறை இந்த முத்திரையின் நேயர்கள் யார்யார் என்பதைக் குறிக்கிறது.
- முத்திரை உருவாக்கத்திற்குத் தேவையான குறியீடுகள் வடிவங்கள் ஆகியவை கண்டுபிடித்தல்.
- முத்திரை உருவாக்குதல்.
- உருவாக்கிய முத்திரைகளை வகுப்பு கலைக்கூடத்தில் காட்சிப்படுத்துதல்.
- ஒரு குழந்தை வரைந்த முத்திரையை வேறொரு குழந்தை வெளியிடுதல் ( அவ்வாறு எல்லா முத்திரைகளும் வகுப்பில் வெளியிடப்படுகின்றன)

## மதிப்பீடு

- முத்திரைகளை சுயமதிப்பீடு செய்தல்.
- ஒன்றுக்கொன்று மதிப்பிடுதல்.

*மதிப்பீட்டிற்கான தரநிர்ணயக் குறிப்புகள்*

- கருத்துகள் பிரதிபலிக்கிறது
- எளிமையான வரைமுறை
- முத்திரையின் முழுமை
- முத்திரையின் கவர்ச்சிதன்மை
- முத்திரையின் ஒருங்கிணைப்பு.

# பத்தாம் வகுப்பு

## அலகு 1 : ஓவிய வாசிப்பு

ஒவ்வொரு ஓவியத்திற்கும் வெவ்வேறு பாவங்களும் உணர்வுகளும் உள்ளன. ஒவ்வொரு கலைப்படைப்பிலும் படைப்பவரின் நடை வேறுபட்டதாக இருக்கும். அவ்வாறு அமையும் போது பொதுவான நம்பிக்கையும், ஒவ்வொரு ஓவியமும் இரசிகரிடையே உருவாக்கும் எண்ணங்களும், உணர்வுகளும் வேறுபட்டதாக இருக்கும். இரசிப்புத்திறன்/ உற்றுநோக்கும் திறன் ஆகியவை வேறுபட்டிருப்பதால் ஓவியத்தை உட்கொள்வது ஒவ்வொரு முறையிலாகும்.

குழந்தைகள் உன்னிப்பாக உற்றுநோக்கி படத்தின் கருத்தை புரிந்து கொண்டால் விமர்சனம் செய்யவும், மதிப்பீடு செய்யவும் ஆராய்வதற்குமான திறமை ஏற்படும். அதனால் படவாசிப்பிற்காக ஏராளம் படங்களைப் பார்ப்பதற்கும் ஓவியர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

### கற்றல் அடைவு

- ஓவிய வாசிப்பு வழியாக விமர்சனபரமான தன்னம்பிக்கையுடன் எதிர் வினையாற்றுதல்.

### கருத்து, அறிவு

- மனிதன் குடியேறிய எல்லா இடங்களிலும் முன்னோர்களின் சிறந்த ஓவியங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்ப்பதற்கும் உட்கொள்வதற்கும் உள்ள திறன் கிடைக்கிறது.
- ஓவியர்களைக் குறித்தும் அவர்களுடைய வாழ்க்கைச் சூழல்களைக் குறித்தும் வாசிப்பு வழியாகவும் நேரடியாகவும் புரிந்து கொள்ளும் திறனை அடைய வேண்டும்.
- நுட்பமாக உற்றுநோக்குவதற்கும், விமர்சனம் செய்வதற்கும் உள்ள வாய்ப்புகளை உருவாக்குவதன் வழியாகக் குழந்தையின் தன்னம்பிக்கை அதிகரிக்கவும் சுய மான கண்ணோட்டம் வழியாக விமர்சிப்பதற்கு திறனடையவும் செய்தல்.
- வெவ்வேறு ஓவியத் தொழில்நுட்பங்களைக் குறித்து குழந்தை அறிந்து கொள்ளுதல்.


### கற்றல் செயல்பாடு

*படிநிலை-1*

- உதவி நூற்களிலிருந்தும், இணைய தளத்திலிருந்தும் ஓவிய அச்சு சேகரித்தல்.



அமிர்தா ஷெர்கிலின் ஓவியம்



ஜாமினிரோயியின் ஓவியம்

- வெவ்வேறு ஓவியர்களின் ஓவியங்கள் ( அச்சுகள் ) சேகரித்தல்.
- ஓவியர்களைக் குறித்து குறிப்பு தயாரித்தல்.
- குழந்தைகள் தயாரித்த ஓவியங்களைச் சேகரித்தல்.
- கலையாசிரியரின் முன்னிலையில் சந்தேகங்களுக்குத் தீர்வு காணுதல்.

*படிநிலை-1*

- ஓவியத்தின் நிகழ்ச்சி என்ன என்பதைக் கண்டுபிடித்தல்.
- வரைவதற்கு ஏதுவான சூழல் என்ன என்பதைக் கூறுதல்.
- ஊடகத்தைத் தேர்வு செய்வதற்கு ஏதேனும் காரணம் உண்டா? எனக்கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.
- ஓவிய இணைப்பில் ஒழுங்கு உள்ளதா எனக் கூறவேண்டும்.
- சமூக வாழ்க்கையுடன் தொடர்புடையதா? என்பதை அறிய வேண்டும்.
- ஓவியத்திலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொள்கிறீர்கள்? என அறிய வேண்டும்.
- இந்த ஓவியத்துடன் தொடர்புடைய வேறு ஓவியங்கள் இந்தக் குழுவில் உள்ளதா? என்பதை அறிய வேண்டும்.

- இந்த முறையிலான ஓவியங்களை மீண்டும் வரைவதற்குத் தூண்ட வேண்டும்.
- ஓவியங்களைச் சேகரித்து மதிப்பீடு செய்யவேண்டுமெனக் கூறவேண்டும்.
- ஓவியத்திற்கு தற்கால முக்கியத்துவம் உள்ளதா? என்பதை அறிய வேண்டும்.
- பாசம் உழைப்பு, கவலை ஆகியவற்றை வெளியிடக்கூடிய ஓவியங்களை வரையும் படிக் கூறலாம்.
- ஓவியங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்கி நூலகத்தில் பாதுகாக்க வோ, சுயமாக பாதுகாக்கவோ செய்ய வேண்டும்.

## மதிப்பீடு

- ஒவ்வொரு நிலையிலும் விமர்சன முறையிலான மதிப்பீடு தேவை
- அறிவின் பாதையில் ஓவியம் வரைதலுக்கும் பங்கு உண்டு.
- ஓவியம் வரைதலில், சமூக, அரசியல் நிகழ்ச்சிகளின் பங்கு.
- ஓவியத்தின் அழகும், ஒழுங்கும்.

## அடைய வேண்டிய கற்றல் அடைவுகள்

*கீவே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைந்தனர்?*

- எல்லா மண்டலங்களிலும் ஓவியக் கலையின் வளர்ச்சி உருவாகிறது. .

ஈடுபாடுகள் உருவாகிறது

# அலகு – 2 : கலை ஒரு பன்முக வடிவம்

காலங்கள் மாறுவதுடன் இயற்கைக்கும் மாற்றங்கள் வருகின்றன. ஒரு விதத்தில் இயற்கையின் தொடர்ச்சியான மாற்றமே காலம் எனக் கூறுவதே சரியாகும். இயற் கையுடன் அங்குள்ள உயிரினங்களுக்கும் மாற்றம் ஏற்படுகிறது. மனிதனிலும், மனி தனின் வெவ்வேறான பன்முகங்களிலும் மாற்றம் வருகிறது. இயற்கையின் மீது தம் அறிவு வளத்தினால் செல்வாக்கு செலுத்தி மனிதன் இயற்கையை மாற்றுகிறான். புதியவற்றிற்கும், முன்னேற்றத்திற்குமான வேண்டியுள்ள இந்தச் செயல்பாடு வழியாக மனிதன் தனது பன்முக உருவங்களில் மாற்றம் செய்கிறான். கலை என்பது ஒரு பன்முக வடிவமாகும். எனவே கலையிலும் காலகட்டங்களுக்கேற்ற மாற்றம் இயல் பானது. முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய கலைகளே பண்பாட்டுத் துறையின் தேடல்கள்.

## கற்றல் அடைவு

- கலை காலத்திற்கேற்ற மாற்றங்களுக்கு உட்பட்டது என்பதைக் கண்டறிதல்.

## கருத்து, அறிவு

- இயற்கையின் மாற்றங்கள் மனிதரிலும் அவனுடைய பன்முக வடிவங்களிலும் மாற்றத்தை உருவாக்குகிறது.
- கலை ஒரு பன்முக வடிவமானதால் சிற்ப- ஓவியக்கலையிலும் காலகட்டத்திற் கேற்ப மாற்றங்கள் வரலாம்.

- கலைகளின் கருத்து அளவிலும், வரைதலுக்கான தொழில்நுட்ப தளங்களிலும் மாற்றங்கள் உருவாவதென்பது நாகரீகமான சமூகத்தின் அடையாளங்களாகும்.
- கட்டுப்பாடான வலைச்சட்டத்திலிருந்து, சுதந்திரமான தளங்களுக்கு நேராக கலைஞர்கள் இடம் பெயர்வது காலகட்டத்தின் மாற்றங்களுக்கான அறிகுறியாகும்.
- டிஜிட்டல் வரைவை நோக்கியுள்ள மாற்றம் காலகட்டத்தின் மாற்றமாக தொழில் நுட்பத்துறையில் உருவான மாற்றத்தின் அறிகுறியாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

- வெவ்வேறு காலகட்டங்களைக் குறிப்பிடும் பல்வேறு ஓவியங்களை உற்றுநோக்கு வதற்கான வாய்ப்பளித்தல்.
  - குகை ஓவியங்கள்
  - சுவர் ஓவியங்கள்
  - நிர்வாண ஓவியங்கள்
  - ஆயில்- கான்வாஸ் ஓவியங்கள் ( பல்வேறு வகைகள், நடைகள் )
  - டிஜிட்டல் ஓவியங்கள்
- உற்றுநோக்கிய ஓவியங்களில் ஊடகங்களின் வேறுபாடு காலகட்டங்களைக் குறிப்பிடுகிறதல்லவா?
- வேறு எவையெல்லாம் காலகட்டங்களைக் குறிப்பிடுகின்ற காரணிகள்?
  - கருத்துகளின் ஒழுங்கமைப்பு
  - கருத்துகளின் வேற்றுமை/ வளம்
  - சமூக- அரசியல் அமைப்புகள்
  - பண்பாட்டு அமைப்பு
  - நடையில் உருவான மாற்றங்கள்
- இவ்வாறு காலகட்டத்திற்கேற்ற பண்பாட்டு மாற்றங்கள் கலையிலும் பிரதிபலித் துள்ளது.
- இது தொடர்பான கலை- கால கட்டங்கள் வழியாக என்ற ஒரு குறிப்பு தயாரித்தல்?
- இந்தக் குறிப்பில் என்னென்ன காரணிகள் இருக்கலாம்?
- வெவ்வேறு காலகட்டங்களில் கிடைக்கப்பெற்ற ஊடகங்கள் ஊடகங்களின் மாற்றங்கள் காலகட்டத்தின் வளர்ச்சியைக் குறிப்பிடுகிறது. காலகட்டத்தின் வளர்ச்சி தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை குறிப்பிடுகிறது.
- கருத்து வெளியீட்டிற்கும் ஊடகத்திற்கேற்ற வளர்ச்சி உருவாகியுள்ளது. குகை ஓவியங்களில் உண்மையான ஓவியங்கள் வழியாக குறியீடுகளுக்கும் முத்திரை களுக்கும் நேராக பயனளிக்கிறது. இது கருத்து வெளியீட்டு நடையிலும், இரசிப்பு நிலையில் உருவான மாற்றங்களாகும்.

- இணைக்கக் கூடிய கருத்துகளிலும் மாற்றம் உருவானது. குகை ஓவியங்களில் அன்றைய வாழ்க்கை முறைக்குத் தேவையான வடிவங்கள் காட்சிப்படுத்தப்பட் டிருந்தன. ஆனால் நவீனகாலத்தில் சமூக நிகழ்ச்சிகளோடுள்ள எதிர்வினையாற் றல்களே தேவைகளாக வளர்ந்து வருகின்றன.
- தனியாக இரசிப்பதற்கும் சமூக மாற்றங்களுக்குமான ஓவியங்களே இப்போது அதிகமும்.

## மதிப்பீடு

- விமர்சனத்துடன் கூடிய ஈடுபாடு
- படத்தொகுப்பின் முழுமை.
- கருத்தரங்கின் கருத்துச் செறிவு

## அலகு – 3 : சுதந்திர வரைதல்

கலைச்செயல்பாடு என்பது சமூகமாற்றத்திற்கான ஒரு பண்பாட்டுச் செயலாகும். கலைஞரின் மனநிறைவை விட சமூகத்தின் மனநிறைவுதான் கலைஞர்களின் இலக் காக உள்ளது. அந்தந்த சமூகம் ஒரு கலைப்படைப்பின் மேன்மையை மதிப்பீடு செய் கிறது சமூகத்தில் அநேக சக்திகள் உண்டு. அவற்றின் செயல்பாட்டின் விளைவாக சமூகத்தில் சில சமநிலையற்ற அமைப்புகள் உயர்ந்து வருகிறது. அவை எவ்வகை யாக இருந்தாலும், அதற்கு எதிராகச் சமநிலைக்காக செயல்படுவதென்பது கலைக் கல்வியின் இலக்காகும். சுருக்கமாகக் கூறினால் சமூகத்தின் நன்மை தீமைகளைப் பிரித்தறிந்து தீமைக்கு எதிராக நன்மைக்காகச் செயல்படுவது அல்லது அதற்கான கருத்தை விளம்பரம் செய்வது என்பதே கலை செய்யும் பண்பாட்டுச் செயல். ஓவிய-சிற்பக் கலைகளுக்கும் இந்தத் துறையில் அதிகமாக செய்யவேண்டியுள்ளது. கலைஞரின் சமூகம் சார்ந்த கடமையுணர்வாகும் இது. சமூகத்திலுள்ள நன்மைதீமை களோடு சொந்த துறையிலுள்ள பாதை வழியாக முறைகள் வழியாக எதிர்ச் செய லாற்றும் திறன் அனைவரிடமும் உருவாக வேண்டும்.

## கற்றல் அடைவு

- சுதந்திரமான வரைதல் படைப்பாற்றல் திறனும் மனநிறைவும் அடையச் செய்கிறது.

## கருத்து,அறிவு

- சிற்ப ஓவிய வரைவுகள் சமூக நன்மைக்காகப் பயன்படுத்துவது நாகரிகமான மக்களின் பண்பாட்டின் அடையாளமாகும்.
- சமூகத்திலுள்ள அநீதிகளுக்கு எதிராக எதிர்வினையாற்ற சிற்ப ஓவிய வரைவுகளால் இயலும்.
- சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகச் சமூக கவனத்தை ஈர்ப்பதே சிற்ப- ஓவிய வரைதல் செய்வது.
- ஓவியக் கலைக்கும், கலைக்கும் சமூக பொறுப்பு உள்ளது. அதை நிறைவேற்றும் போது ஓவியரும் ஒரு சமூக உயிரியாகிறான்.

## திறன்

- சமூகப் பிரச்சினைகளை உட்கொண்டு நன்மை தீமைகளைப் பிரித்தறியும் திறன்.
- சமூகப் பிரச்சினைகளைத் தன்னுடைய ஊடகத்தின் வழியாக எதிர்வினையாற்றும் திறன்.
- தேவைக்கேற்ப ஊடகங்களைக் கையாளும் திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

*படிநிலை-1 : படவாசிப்பு*

- சமூகப் பிரச்சினைகளை முன்வைத்து வரையப்பட்டுள்ள சில ஓவியங்களின் மாதிரியைக் காணுதல்.
- இந்த ஓவியங்களில் நாம் எவற்றைப் பார்க்கலாம்?விவாதம்
- இந்த ஓவியத்தை வரைவதற்காக ஓவியரைத் தூண்டிய நிகழ்ச்சி எது?
- சமூகப் பிரச்சினைகளைக் குறிக்க விவாவதம் வளருகிறது.
- சமூகத்தின் தீங்குகளுக்கு எதிராக/ சமத்துவமின்மைக்கு எதிராகப் பிற மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும் அவர்களில் அப்படியொரு மனப்பான்மையை வளரச் செய்வதற்கும் ஓவியரால் இயலுகிறது. அதற்காக ஓவியர் அவருடைய ஊடகத்தைப் பயன்படுத்துகிறார்.
- சமூகப் பிரச்சினைகளுடன், சமூகநன்மையை இலக்காகக் கொண்ட சமூகச் செயல்பாடுகள் செய்வதற்குப் பயன்படுத்திய ஊடகம், நடை வடிவங்கள் அவற்றின் பயன்பாடு ஒழுங்குமுறை, நிறங்கள் ஆகியவற்றை விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும்.

*படிநிலை-2: **சுதந்திர ஓவியம் வரைதல்***

- சமூகப் பிரச்சினைகளோடு எதிர்வினையாற்றுதல் என்பது கலைச்செயல்பாட்டின் சமூகம் சார்ந்த பொறுப்பாகும்.
- வகுப்பில் ஒரு பெஞ்சிற்கு ஒரு செய்தித்தாள் என்ற நிலையில் இன்றைய செய்தித்தாள் விநியோகம் செய்தல்.
- இதில் கூறப்பட்டுள்ள மிக கௌரவமான சமூகப் பிரச்சினை என்ன?
- குழந்தைகள் அட்டவணைப்படுத்துதல், வெளியிடுதல்.
- அனைவரும் ஒன்றுபோல் தேர்வு செய்தசமூகப் பிரச்சினையைக் கரும்பலகையில் குறிப்பிடுதல்.
- இந்த ஒரு நிகழ்ச்சியைக் குறித்த உங்கள் கருத்து என்ன?
- இந்த சமூகப் பிரச்சினையுடன் எதிர்வினையாற்றும் ஓர் ஓவியம் வரைவோமா?
- எனில் அதில் உட்பட வேண்டிய வடிவங்களும், குறியீடுகளும் எவை?
- அவற்றைப் பார்க்கும் போது நேயர்களில் எந்தக் கருத்து உருவாகிறது?

- எனில் அவற்றைப் படத்தில் எவ்வாறு ஒழுங்கு செய்ய வேண்டும்?
- குழந்தைகள் திட்ட வரைவு தயாரித்தல்.
- உருவாக்கிய திட்ட வரைவிற்கேற்ப ஓவியத்தை முழுமையாக வரைவோமா?
- குழந்தைகள் வரைதல், வகுப்பறையில் காட்சிக்கு வைத்தல்.

### மதிப்பீடு

- கருத்து வெளியீட்டுத் திறன்
- முழுமை
- கவர்ச்சித் தன்மை
- படைப்பாற்றல்.

## அலகு – 4 : ஓவியம் வரைதல் (Illustration)

ஓவியம் வரையும் துறையில் தற்கால முக்கியத்துவம் வாய்ந்த தொழில் நுட்பமே கதைகளுக்கும், கவிதைகளுக்கும் தேவையான காட்சிப்படுத்துதல். அவற்றின் கருத்துகளுக்கேற்ப உற்றுநோக்கல் வாய்ப்பிற்காக இவை கதைகளில் சேர்க்கப்படுகின்றன. ஒரு காட்சியில்/ ( சூழலில்) கதையில் அல்லது கவிதையில் உள்ள கருத்தை காட்சிப்படுத்தும் முறையே இது. அந்தக் காட்சிப்படுத்தலைப் பார்க்கும் போது பார்வையாளருக்குக் கதையின் கருத்து ஏறக்குறைய புரிகிறது. கற்பனையும், படைப்பாற்றலும் அதிகமாக இந்த துறையில் தேவைப்படுகிறது. காட்சிப்படுத்தலின் பல வேறு நிலைகளில் கருத்துடன் ஒத்துப் பார்க்க வேண்டும். கதைப் பாத்திரம், பாவம், வேஷம், பின்னணி, அசைவு போன்ற எல்லாக் கூறுகளும் கதைக்கருத்துடன் ஒத்துப் பார்க்க வேண்டும். தற்காலப் பிரசுரிப்புகளின் இத்தகைய வரைதலுக்கான பங்கு மிக அதிகமாகும். சிலவேளைகளில் காட்சிப்படுத்தலின் பெயரில் மட்டும் புகழ் பெற்ற பிரசுரிப்புகள் தமிழ்மொழியில் உருவாகியுள்ளன. நடையும், கற்பனையும் அதிகமாகக் கவரக்கூடியக் காரணிகளாகும்.

### கற்றல் அடைவுகள்

- கருத்துகள் உட்கொண்டும் சிற்பங்களும், ஓவியங்களும் உருவாக்கல்.

### உள்ளடக்கம்

- கதை, கவிதை, நாடகம் ஆகிய இலக்கியப் படைப்புகளுக்குப் பொருத்தமான கற்பனைக் காட்சிப்படுத்தல் செய்யலாம்.
- கற்பனைக் காட்சிப்படுத்தலுக்கு பாவம், வேடம், பின்னணி ஆகியவை கதைக் கருத்துடன் ஒத்துப்போக வேண்டும்.
- கற்பனையும், படைப்பாற்றலும் மிக அதிகமாக இந்தத் துறைக்குத் தேவைப் படுகின்றன.

## திறன்

- கருத்திற்கேற்ற மனப்படத்தை உருவாக்கும் திறன்.
- பாவ- வேட தனித்தன்மைகளுடன் மனித உருவங்களை காட்சிப்படுத்தக்கூடிய திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்முறை -1*

- தற்கால பிரசுரிப்புகளில் ஏதேனும் கருத்துகளுக்கேற்ப வரைந்த ஓவியங்களை அறிமுகம் செய்தல்.



- தற்காலப் பிரசுரிப்புகளைக் கிடைக்கச் செய்தல்
- அவற்றில் ஏதேனும் கதை அல்லது கவிதை வாசித்தல்
- கருத்து உருவாக்கம் செய்தல்.
- முக்கிய முகூர்த்தம்/ கருத்து கண்டுபிடித்து வரைந்த ஓவியங்களை உற்று நோக்கல்.
- இந்த ஓவியம் வரைவதற்கு ஓவியருக்குத் தேவைப்படுபவை எவை?
  - ♦ கதைக் கருத்தின் பின்னணி
  - ♦ கதையின் முக்கிய கருத்து.
  - ♦ கதைக்கரு, கதாபாத்திரம், உணர்வு, அசைவு, வயது
- மேற்குறிப்பிட்டவற்றில் கவனம் செலுத்தி விவாதத்தை முடித்தல்.

*செயல்முறை -2*

- கதை/ கவிதையின் கருத்துகளுக்கு மனப்படம் உருவாக்கல்.

- படங்கள் இல்லாத சிறு கதை/கவிதை ஆகியவை குழுவில் அளித்தல்
- இந்தக் கதை/ கவிதையின் முக்கிய கருத்து என்ன? விவாதம்
- இந்தக் கதை/ கவிதையின் முக்கிய கருத்தைக் காட்சிப்படுத்தும் போது பின்னணி எவையாக இருக்கும்?
- கதைப்பாத்திரம், வேடம், உணர்வு அசைவு, வயது விவாதம்
- உங்களுடைய மனதில் ஒரு அசைவற்ற படம் தோன்றியது அல்லவா? உள்ளடக்கக் கருத்துகளின் அடிப்படையில் விவாதத்தை முடித்தல்.

*செயல்முறை -3*

- கருத்திற்கேற்ப ஓவியம் வரைதல்
- உங்கள் மனதில் உருவான ஓவியம் வரைந்து பார்த்தால்?
- ஓவியம் வரைவதற்கான நேரத்தை அளித்தல்.
- ஓவியம் வரைதலுக்குப் பின் காட்சி, மதிப்பீடு

## மதிப்பீடு

- கற்பனைத் திறனுடையது.
- கருத்துகளுக்கேற்றது.
- முழுமை
- வேடம், பாவம், அசைவு, வயது இவை தெளிவாக உள்ளது
- ஒருங்கிணைப்பு

# அலகு – 5 : நிலைகள் தெளிவாகும்போது

ஓவியம் என்பது காலகட்டத்தின் கண்ணாடியாகும், ஓர் ஓவியம் வெளியிடும் சில குறியீடுகள், அது வரையப்பட்ட காலகட்டத்தின் பண்பாடு, சமுதாய பொருளாதார துறையின் மாற்றங்களுக்கு உட்பட்ட கருத்து வெளியீட்டின் பாகமாகும், எனவே ஓவியங்கள் வரையப்பட்ட காலகட்டத்தின் சிறப்பகளைப் புரிந்து கொண்டு கற்கவும் வாசிக்கவும் சாதகமான அல்லது எதிரான கருத்துகளும் நிலைகளும் சரி, தவறுகளும் நாம் வெளிப்படுத்த வேண்டும். அந்த ஓவியத்தின் நிலை வழியாக அந்த காலகட்டத்தின் நிலைகளுடன் உள்ள சாதகமானதும் எதிரானதுமான கருத்துகள் வெளிப்படுகின்றன.

## கற்றல் அடைவு

- ஓவியத்தை உற்றுநோக்கிக் கருத்துகளும் நிலைகளும் தெளிவுபடுத்துதல்.

## கருத்து அறிவு

- ஓவியம் காலகட்டத்தின் பிரதிநிதியாகும்.
- காலகட்டத்துடன் நீதிகாட்டாதவை நிலைநிற்பதில்லை
- ஓவியம் முன்வைக்கும் கருத்தை உற்றுநோக்கவும், சரி. தவறுகளை விவாதிக்கவும் வேண்டும்.

- ஓவியம் வழியாக அந்த காலகட்டத்தின் இழப்புகளைப் புரிந்து கொள்ளவும் கற்கவும் செய்யலாம்.

## கற்றல் செயல்பாடுகள்

*படிநிலை-1*

- புகழ்பெற்ற ஓவியங்களைக் காட்சிப்படுத்துதல். (L. C. D./ Print ஆகிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தலாம்.)

எ. கா–

| | |
|---|---|
| Here papa comes | : Ravivarma |
| The Screws | : Edward munch |
| Still life with Pepsi | : Bhagyanath |
| A train from the past | : Sudheer |

- இந்த ஓவியங்கள் உங்களுக்குத் தரக்கூடிய கருத்து என்ன?
- இவை வரைந்த காலகட்டம்/ அதன் சிறப்புகள் என்ன?
- விவாதம் குறிப்பு தயாரித்தல்
- மேன்மையடையச் செய்வதற்கு நூலகம், இணையதளம் அமைப்புகளும் ஓவிய வரலாற்று வல்லுநர்களின் சேவைகளும் பயன்படுத்தலாம்.
- மேம்படுத்திய குறிப்பை வெளியிடுதல்
- விவாதித்தல், ஒருங்கிணைத்தல்.

  எகா–

  Here papa comes : Ravivarma

  - தாய் குழந்தையை கையிலேந்தி அப்பாவை எதிர்பார்த்து நிற்பது மருமக்கள் காலகட்டம். அப்பாவின் சொத்து வசதிகளிள் மருமக்களுக்கு மட்டும் உரி மையானது. ஆகவே தாய் மகனை எடுத்து அப்பாவை அல்ல மாமாவை எதிர்பார்த்து நிற்கிறார்.
  - இரவிவர்மா மருமக்கள் முறைக்கு எதிரானவர். அப்போது இரவிவர்மா ஓவியருக்கு மேலாக சமூகசேவையாளராக இருந்தார்.
- நீங்கள் எந்த நிலையைக் கையாளுகிறீர்கள்? மருமக்கள் முறை, மக்கள் முறை- விவாதம்
- நிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குதல்

*படிநிலை-2*

- முதலில் காட்டப்பட்ட ஓவியங்கள் கருத்து சார்ந்த ஒப்புமையை உருவாக்கு கிறதா?
- இவற்றின் கருத்துகளை மையப்படுத்தி ஒரு கருத்தரங்கு ஒழுங்குசெய்யவும்.
- ஓவியம்- ஓவியர்- ஊடகம்
- காலகட்டம், பண்பாட்டுத் துறை, இழப்புகள் எதிர்வினையாற்றுதல், தனது நிலை

- குழுவாகக் கருத்தரங்க அறிக்கை தயாரித்தல்.

### மதிப்பீடு

- ஓவியம் வாயிலான வரலாற்றுக் கல்வி
- வரலாற்றின் நன்மை தீமைகளை வேறுபடுத்துதல்.
- தன்னுடைய நிலவரங்களை வெளிப்படுத்தவும், நிலைத்து நிற்கவும். சான்றுகளின் வழியாகச் சரி என்பதை நிறுவுவதற்கும் உள்ள திறன்.
- சமூக எதிர்வினையாற்றும் திறன்.

## அலகு – 6 : ஓவியம் வரைதல் கணினி வழியாக

கணினி உபயோகித்துள்ள படம் வரையும் முறை இன்று எங்கும் நிறைந்துள்ளது. வேளாண் ஓவியக் கலையின் முக்கிய ஊடகம் கணினியும் அவை சார்ந்த கருவிகளுமாகும். கணினியில் வரையக்கூடிய ஓவியங்கள் காகிதம், கான்வாஸ், பிளக்ஸ் ஆகிய எந்த மேற்தளத்திலும் அச்சு எடுப்பதற்கான வசதிகளும் இன்று நிலவிலுள்ளன.

புதிய தலைமுறைக்கு உட்பட்ட ஒரு தொழில் துறையாகும். தகவல் தொழில்நுட்பம் அடிப்படையிலான கலை. எனவே மாணவர்கள் தங்கள் கருத்துகளை ஓவிய வடிவில் வெளியிடும்போது நவீன தொழில்நுட்பங்களின் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

### கற்றல் அசைவு

- ஓவியக் கலையுடன் தொடர்புடைய மென்தளம் பயன்படுத்தி ஓவியம் வரைதல்.

### கருத்து, அறிவு

- ஓவியம் வரைதலுக்குக் கணினியில் மென்தளங்கள் உள்ளன.
- கணினியில் வரைந்த ஓவியங்களை காகிதம், கான்வாஸ், பிளக்ஸ், துணி ஆகிய மேல்தளத்திலும் அச்சு எடுப்பதற்கான தொழில்நுட்பம் இன்று நடைமுறையில் உள்ளது.
- ஓவியங்கள் மட்டுமல்ல விளம்பரப் பலகை, பிளக்ஸ். பானர் போன்ற எல்லா Applied Art Form- ம் கணினியில் செய்ய இயலும்.

### கற்றல் செயல்பாடுகள்

*படிநிலை-1*

- கணினியில் மென்தளங்களைப் பயன்படுத்தி வரைந்த ஓவியங்களைக் காட்சிக்கு வைத்தல்
- இந்த ஓவியங்கள் வரைந்த கணினியின் மென்தளங்களைப் பிரித்தறிய முடியுமா? விவாதம்

- கணினி, ஜிம்ப் மென்தளம்
- ஜிம்ப் மென்தளத்தில் ஓவியங்கள் வரையலாமா?
- காகிதத்தில் வரைவதற்கான வரைபடம் தயாரித்தல்.

*படிநிலை-2*

- ஜிம்ப் மென்தளத்தைத் திறப்பது.
- வரைவதற்கான கேன்வாஸ் தயாரித்தல்
- (Mode, size, resolution ஆகியவை தயாரித்தல்.
- தூரிகைக் கருவி பயன்படுத்தி ஓவியம் வரைதல்
- Texture, special effect Render ஆகியவை பயன்படுத்தலாம்.
- நிறங்கள் கொடுத்து export செய்தல்
- folder- ல் file பெயரை கொடுத்து save செய்தல்.
- காட்சிப்படுத்துதல், சுய, ஒன்றுக்கொன்று மதிப்பீடு செய்தல்.
- மதிப்பீட்டிற்குப் பின் குறைகளை நிவர்த்தி செய்து புதிய ஓவியம் வரைதல். இரு ஓவியங்களையும் ஒப்பீடு செய்து வளர்ச்சியைக் குறித்த உணர்வடைதல்.

## மதிப்பீடு

- வரைபடத்தின் தரம்
- கணினியை உபயோகிக்கும் திறன்.
- மென்தளத்தில் கருவியைப் பயன்படுத்தும் திறன்.
- நிற இணைப்பு, இணைப்பு
- மென்தள உத்திகளைப் பயன்படுத்தும் திறன்

இவை அடிப்படையிலான தர மதிப்பீடு

## அடையவேண்டிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவில் அடைந்தனர்?*

- கணினியைப் பயன்படுத்தும் திறன்
- மென்தளம் பயன்படுத்தி ஓவியம் வரையும் திறன்.
- Applied Art ன் வாய்ப்புகளைப் பிரித்தறிதல்.

# அலகு – 7 : சிற்ப உருவாக்கம்

நவீன சிற்பக்கலை என்பது சமகால மாற்றங்களை உட்கொண்டு உருவான ஊடக நடையாகும். தொடர்ந்து நிகழக்கூடிய நடைமாற்றங்களைச் சிற்பம் உருவாக்குபவர் புரிந்து கொள்ள வேண்டும். எனவே சிற்பக்கலையில் பழையதும் புதியதுமான நடை உத்திகளை புரிந்து கொள்வது புதுமையான சிற்பங்கள் உருவாக்குவதில் கற்பவருக்கு உதவுகிறது. அதோடு கருத்து இல்லாத சிற்பம் என்பது உயிர் இல்லாத உடல் போன்றது என்ற கோட்பாட்டை விவாதிக்க வேண்டும். கருத்து அடிப்படையிலான சிற்ப உருவாக்க வேளையில் நவீன இன்ஸ்டலேஷன் போன்ற புதிய அமைப்பு களைக் கற்பவர் புரிந்து கொள்ள வேண்டும். பார்த்துச் செய்வது அவல்ல கலை எனவும் அது சிற்பம் உருவாக்குபவரின் படைப்பாற்றலைச் சார்ந்த படைப்பாக மாறும் போது காலத்திற்கேற்ப அது நிலைநிற்கிறது எனவும் புரிந்து கொள்ள வேண்டும்.

## கற்றல் அடைவு

- கருத்துகளை உட்கொண்டு சிற்பங்கள் உருவாக்கல்.

## கருத்து அறிவு

- சிற்பம் என்பது கருத்து வெளியீட்டிற்கான ஊடகங்களில் ஒன்றாகும்.
- சிற்பம் முப்பரிமாணத் தன்மை உடையது.
- முப்பரிமாண தன்மை தோன்றக்கூடிய நிலையில் அல்லது முப்பரிமாணத்தில் உருவாக்கலாம்.
- சிற்ப உருவாக்கத்திற்கு களிமண், தடி உலோகம், சிமெண்ட் போன்ற பாரம்பரிய ஊடகங்களுடன் போப், பைபரி, வேக்ஸ் ஆகிய நவீன ஊடகங்களும் பயன் படுத்தலாம்.
- நவீன சிற்பங்களில் இன்ஸ்ட்லேஷன்களில் இத்தகைய பாரம்பரிய முறைகள் உருவாக்கப் பொருட்கள் ஆகியவை வேண்டியதில்லை. கருத்தை வெளியிடுவ தற்கு எந்த ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
- சிற்பம் உயர்ந்து நிற்பதற்கான பெடல்ஸ், ஆர்மேச்சர் அமைப்புகளை உருவாக் குவது சிற்பங்களின் நிலை நிற்பதற்குத் தேவையாகும்.
- கருத்தின் தன்மைக் கேற்ப ஊடகங்கள் பொருட்கள் பயன்டுத்த வேண்டும்.

## கற்றல் செயல்பாடுகள்

*கற்றல் செயல்பாடு-1*

*ஓவியம் (ராய் சௌதிரியின் ' அத்வானம்' என்ற சிற்பத்தின் ஓவியம்)*

**சிற்ப வாசிப்பு**

- வெவ்வேறு ஊடகங்களில் கருத்து அடிப்டையில் செய்த சிற்பங்களின் படம்/ மாதிரி LCD உதவியுடன் காட்டுதல்

- ஊடகம், சிற்பி, சிற்பம் ஆகியவற்றை ஆசிரியர் அறிமுகம் செய்தல்.
- இந்தச் சிற்பத்தை முன்பு பார்த்ததுண்டா?
- சிற்பம் கூறும் கருத்து என்ன?

  (பிரதிபலிப்பு ஒரு வார்த்தையில் சுருங்கி விடாமல் விளக்கத்திற்கு வாய்ப்பளிக்க வேண்டும்)
- குழந்தைகளுக்கு பிரதிபலிக்கும் வாய்ப்பை அளித்தல்.
- கருத்து இணைப்பிற்கு சிற்பி பயன்படுத்திய உருவங்கள் உருவங்களின் அமைப் பு, புதுமை நடை படைபாற்றல் தன்மை ஆகியவற்றை விவாதித்து ஆசிரியர் ஒருங்கிணைத்தல்.

***கற்றல் செயல்பாடு-2***

**சிற்ப உருவாக்கம்**

- சிற்ப உருவாத்திற்குத் தேவையான விவாதங்களுக்குப் பின் கருத்துகளை ஒன்றிணைப்பு செய்தல்.
- சிற்பத்தைக் குறித்த திட்ட வரைவை பென்சில் உபயோகித்து வரைதல் ( சிற்பத் தின் ஆறு காட்சிகளும் வரைய வேண்டும்)
- தொடர்ந்து ஊடகமும் தேவையான பெடஸ்டலும் தயாரித்தல்.
- சிற்ப உருவாக்கம் தொடங்குதல்.
- சிற்ப உருவாக்கத்திற்குத் தேவையான உதவிகளை ஆசிரியர் அளித்தல்.
- சிற்பங்களின் காட்சி

## மதிப்பீடு

- கருத்துத் தெளிவு
- கவர்ச்சித் தன்மை
- தொழில்நுட்ப மேன்மை
- படைப்பாற்றல், வடிவம்

## அலகு – 8 : கேலிச்சித்திரம்

இந்தியாவில் சராசரியாக கேலிச்சித்திரங்கள் வரைவது அதிகமாக உள்ள மாநிலம் கேரளமாகும். ஓவியக் கலையின் ஒரு பகுதியான கேலிச்சித்திரம் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் சமூகத் தீங்குகளை எதிர்க்கும் வகையில் வளர்ந்து வந்தது. இது கற்பனை வளமும் நகைச்சுவை முக்கியத்துவமும் வாய்ந்த கலைப் பிரிவாகும். அறிவுகள் வார்த்தைகளாகவும், கோடுகளாகவும் மாறும் போது கேலிச்சித்திரம் உருவாகிறது. அழகான மொழியும் எழுத்தும் இந்த நுட்பத்தை சிறப்படையச் செய்கிறது. இது தீமைகளுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய ஆயுதமாகும். உலக வரலாற்றில், சமூக மாற்றத்திற்காக உருவான படைப்புகள் ஏராளம். கூறவேண்டிய கருத்துகளை சுருக்கிக்கூறி சுருங்கிய கோட்டில் முழுமையடையச் செய்யும் போது படைப்புகள் மேன்மையடைகிறது.

## கற்றல் அடைவு

- கேலிச்சித்திரம் வரைவதும், கேலிச்சித்திர வரலாறும் கற்கின்றனர்

### உள்ளடக்கம்

- வாசிப்பதுடன் கருத்தைப் பாதுகாக்க வேண்டும்.
- கேலிச்சித்திரத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டும்.
- வரையும் முறையும் காலமும் அறிய வேண்டும்.
- என்ன நடை என்பதை அறிய வேண்டும்.
- வரையும் கால கட்டத்திலுள்ள சமூகப் பிரச்சினை என்ன என்பதை அறிய வேண்டும்.
- கேலிச்சித்திர ஓவியர்களை அறிந்து கொள்ளவேண்டும்.
- கேலிச்சித்திர வரலாற்றைப் புரிந்து கொள்ளவேண்டும்.
- கேலிச்சித்திரம் வழியாக சமூக மாற்றத்திற்கு இயலும் என்பதை அறிய வேண்டும்.
- கேலிச்சித்திர வரலாறு கற்றலின் போது இரசிப்புத் திறன் அதிகரிப்பதற்கு முன் கால அரசியல் சமூகப் பிரச்சினைகளும் இன்றைய சமூக அரசியல் பிரச்சினைகளும் குறித்து அறிந்துகொள்ளவேண்டும்.

## கற்றல் செயல்பாடுகள்

*படிநிலை-1*

- கேலிச்சித்திர கற்றல்சாலையும், கேலிச்சித்திரங்களின் காட்சியும்.
- இந்தியாவினுடையவும், பிற நாடுகளுடையவும் கேலிச்சித்திரங்களின் காட்சி அமைக்க வேண்டும்.
- காட்சி நடத்துவதற்குப் பரந்த இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.
- I T வாய்ப்புகளைப் பயன்படுத்தி உலகிலுள்ள கேலிச்சித்திரங்களின் அச்சுகள் சேகரிக்கும்படி கூறுதல்.

*படிநிலை-2*

- ஒரு காட்சிக் கூடத்தைப் போன்று அழகாகவும், ஒழுங்காகவும் வடிவமைத்தல்.
- கேலிச்சித்திரங்களைக் குறித்த சிறந்த வகுப்புகள் நடத்துவதற்குத் திறமையுள்ள ஓவியர்களைக் கண்டுபிடித்து தற்சமய கேலிசித்திர வரைதல் நடத்தி குழந்தைகளுக்குப் பார்ப்பதற்கான வாய்ப்பளிக்க வேண்டும்.
- கேலிச்சித்திரங்களைக் குறித்து ஆழமான விவாதமும் வரைதலும், ஓவியருடன் இணைந்து செய்வதற்கான வாய்ப்பளித்தல்.
- கேலிச்சித்திரமும் காரிக்கேச்சரும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை குழந்தைகளை உணரச் செய்தல்
- மிகப் புதிதான நிகழ்ச்சியின் அடிப்படையில் குழந்தைகள் கேலிச்சித்திரம் வரைந்து, மதிப்பிடுதல் , விவாதித்தல்.


- கற்றல்சாலையில் கிடைத்த குழந்தைகளின் படைப்புகளைக் காட்சிக்கு வைக்க வேண்டும்.
- கேரளத்தில் 225 க்கும் அதிகமான கேலிசித்திர ஓவியர்களும் குழு "கேரள கார்ட்டூன் அக்காடமி" நடைமுறையில் உள்ளது.

  (cartoonacademy.blogspot.in)

## 7.2



# இசை



# இசை

## முன்னுரை

அனைத்துக்கலைகளுமே மனதை இனிமைப்படுத்துவதாகும். அந்த மகிழ்ச்சி உலகத்திற்கே விருப்பமானதாக மாறுவதே கலாச்சாரம். இயற்கையையும், மனிதனையும் வேறுபடுத்தி பார்க்கா மல் நமக்கு காண்பிப்பது இவ்வாறாகும். அனைத்து உயிரினங்களும் ஒரே போன்று இரசிக்கலாம் என்பதால் இசை என்பது வேறு கலைகளிலிருந்து வேறுபட்டு நிற்கிறது, மனிதர்களின் மனதினை தூய்மையாக்குவதற்கும் மேன்மை நிலைக்குக் கொண்டு செல்வதற்கும் முடிகின்ற கலையே இசை. பொதுவான உலக வாழ்கையோடு மனிதனை ஒன்றாகக் காண்பதற்கான பரந்த கண்ணோட்டமும் இசை பராம்பரியத்தின் வழி உருவாகிறது, அதனால் தான் இசையை கற்றல் என்பது தனிநபர் மேன்மைக்கும் சமூக ஒற்றுமைக்கும் அடிப்படையானதாகும்.

சுற்றுப்புறத்தைக்குறித்து தெரிந்து கொள்வதற்கு முன்னரே இயற்கையின் இசை ஒரு குழந்தை யின் உடல்ரீதியிலும், மன ரீதியிலுமான வளர்ச்சிக்கு காரணமாகிறது என்று அறிவியல் பூர்வ மான கற்றல்கள் நிருபிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூட கல்வி காலகட்டத்தில் குழந்தைகளில் ஏற்ப டும் மன பிரச்சினைகளை இல்லாமலாக்கி மனதை தெளிவுடையதாகவும், அறிவு உடையதாகவும் மாற்றுவதற்கு இசைக்கல்வியால் முடியும் என்று ஆராய்ச்சிகள் முலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ள து. இசையை இரசிக்கும் குழந்தை தான் செய்யும் எந்த ஒரு செயலிலும் உட்கொண்டுள்ள தாளத்தை கண்டறிவதன் வழி வாழ்கையயின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடிகிறது, இந்த ரசிப்புத்தன்மையை மேம்படுத்த சரியான கற்றல் முறை தேவைப்படுகிறது. இது அவரவரில் ஒளிந் திருக்கும் திறமையை சுயமாக அறிந்துகொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவுகிறது, அது குழந்தைகளில் அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையை உருவாக்கவும் அனைத்து பாடங்க ளையும் ஆர்வத்தோடு விளக்கும் விதம் உற்சாகமுடையராகவும் செய்கிறது

மகத்தான இசைப் பாரம்பரியம் நமக்கிருந்தது, இசையை அதனுடைய மிக உன்னதமான இடத் திற்கு உயர்த்திக் காட்டிய பலநபர்கள் நமது நாட்டிலுண்டு, சாதாரண மனிதனின் மனதில் உயிர்தா ளமாக இசை இருந்திருந்த ஒரு பாரம்பரியம் நமக்குண்டு, இசையை வாழ்க்கையின் வழி பாட மாக மாற்றிய எத்தனையோ இசைஞானிகளை பெற்றெடுத்த நாடு நம்நாடு. இங்கு தொடர்ச்சியாக நிலை கொண்டிருந்த இசை பாரம்பரியம் நம்மை எப்போதும் ஊக்குவித்துக்கொண்டிருந்தது. உலக இசையின் அனைத்து நல்ல பகுதிகளையும் உட்கொண்டு மேம்பட்டதே நமது இசை என்பதால் அனைத்துலக வாழ்கையோடு கூடிய அழகுகளை ஏற்றுக்கொண்டதாகும்.

# கற்றல் அடைவுகள்

## எட்டாம் வகுப்பு

- நடிப்பு முக்கியத்துவம் வாய்ந்த பாடல்கள் பாடுதல்.
- வெவ்வேறு தாளங்களில் பாடல்கள் பாடுதல்.
- வட்டார இசைக்கருவிகளை அறிமுகம் செய்யவும் அவற்றைக் குறித்து பிரதிபலிக்கவும் செய்தல்
- இசைக் கச்சேரிகளில் பயன்படுத்தக்கூடிய பக்க வாத்தியம், துணைப் பக்க வாத்தியம் ஆகிய வற்றைக் குறித்து குறிப்புகள் தயாரித்து வெளியிடுதல்.
- எளிய கீர்த்தனைகள், பஜனைகள், அஷ்டபதி, வஞ்சிப் பாடல், கசல் ஆகியவற்றைத் தேர்வு செய்து பாடுதல்.
- வெவ்வேறு இசைப்பிரிவுகளில் உள்ள பல்வேறு தாளங்களில் உள்ள பாடல்களை இணைத்து வெளியிடுதல்.

## ஒன்பதாம் வகுப்பு

- நாட்டுப்புற இசை வடிவங்களைக் குழந்தைகள் பாடுதல்.
- கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகிய செவ்வியல் இசைத்தாரைகளிலுள்ள சில பாட ல்கள் பாடுதல்.
- சோபான இசை பிரிவிலுள்ள பாடல்கள் பாடுதல்.
- பழக்கமான திரைப்பட மெல்லிசைப் பாடல்களில் சிலவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள இராகங் களைப் பிரித்தறிதல்.
- ஸ்வரஜதி, வர்ணங்கள், கீர்த்தனைகள், பதங்கள் கசல், பஜனை ஆகியவற்றில் விருப்பமானவற் றைப் பாடுதல்.
- பல்வேறு தினவிழாக்களில் தேர்வு செய்யப்பட்ட பாடல்களுக்கு மெட்டமைத்துப் பாடுதல்.

## பத்தாம் வகுப்பு

- இந்துஸ்தானி இசைப் பிரிவில் பயன்டுத்தப்பட்டுள்ள இசைக்கருவிகளைக் குறித்த அறிவைப் பங்கிடுதல்.
- கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகியவற்றில் சிறந்த பாடகர்களைக் குறித்து குறிப்புகள் தயாரித்து வெளியிடுதல்.
- கர்நாடக இசையில் கிருதி, பதங்கள், கசலுகள் போன்றவற்றில் சிலவற்றை வெளியிடுதல்
- புகழ்பெற்ற இசைக்கருவி வல்லுநர்களைக் குறித்து அறிந்து கொள்ளவும், தகவல்கள் வெளியி டவும் செய்தல்.
- செவ்வியல் இசையின் அடிப்படையிலான தேசபக்திப் பாடல்களைப் பாடுதல்.
- பல்வேறு பிரிவைச் சார்ந்த பாடல்கள் மெட்டமைத்து ஒழுங்குசெய்து வெளியிடுதல் ( நாட்டுப் புற, மெல்லிசை, செவ்வியல் ஆகியவை)

# எட்டாம் வகுப்பு

## அலகு – 1 பாடுவோம்– நடிப்போம்

நம்முடைய இசையமைப்பில் நடன வடிவங்களுக்காக உருவாக்கப்பட்ட ஏராளமான பதங்களும் கிருதிகளும் கீர்தனைகளும் உள்ளன. ஒவ்வொரு சூழலுக்குமேற்ப வெவ் வேறு உணர்ச்சிகளைப் பாடல்களின் உதவியுடன் நடனச்சுவடு வழியாக வெளியிடு வதற்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட பாடல்கள் தனித்துவத்துடன் பாட வேண்டும். எல்லா நடனப் பிரிவுகளிலும் நடிப்பு முக்கியத்துவம் வாய்ந்த பாடல்கள் ஏராளம் உள்ளன. நடனங்கள் மட்டுமல்ல நாடகங்கள், கதாபிரசங்கம் ஆகிய கலைப்பிரிவுகளுக்கும் பாடல் வழியான பாவனை நடிப்பு மிக முக்கியம். பாடுவதற்கு சிறந்த பிரயோகங்கள் அளிப்பதன் வழியாக நடிப்பு முக்கியத்துவம் வாய்ந்த கலைப்பிரிவுகளுக்கு அதிகமாக முழுமை கிடைக்கிறது. நடிப்பும் இசையும் ஒன்று போல் இணையும் போது இரசிகருக்கு ஒவ்வொரு வெளியிடுதல்களும் சிறந்த அனுபவங்களாக மாறுகின்றன.

### உள்ளடக்கம்

வெவ்வேறு நடனப் பிரிவில் பயன்படுத்தக்கூடிய பாடல்கள், பதங்கள், வர்ணங்கள் ஆகியவை அறிமுகம் செய்தல், பயிற்சி, பாடுதல்.

கேரளக் கலை வடிவங்களிலுள்ள இசையைக் கூடுதலாக அறிந்து கொள்வதற்கு அவற்றின் இசை சார்ந்த சிறப்புகளைப் பிரித்தறிதல் ஆகியவை இதில் கூறப் பட்டுள்ளன.

### கற்றல் அடைவு

நடிப்பு முக்கியத்துவம் வாய்ந்த பாடல்களைப் பாடுதல்.

### கருத்து, அறிவு

- பல்வேறு நடனவடிவங்களில் பல்வேறு கலைவடிவங்களில் பயன்படுத்தக்கூ டிய பாடல்களுக்கு நடைமாற்றங்கள் உள்ளது. தனித்தன்மைகள் உள்ளது. இசை எல்லா கலை வடிவங்களிலும் பிரிக்க முடியாத ஒரு காரணியாகும்.
- பாடல் வடிவங்களில் நடிப்பு வாய்ப்பு
- பாடுவதன் தனித்தன்மைகள்

### செயல்முறை

- ஓட்டன்துள்ளல், யக்ஷகானம், கதா பிரசங்கம். கதகளி, மோகினியாட்டம் ஆகிய நடன வடிவங்களை உற்று நோக்கல் , ஒற்றுமை வேற்றுமைகள் – விவாதம், .

- வகைப்படுத்துதல், பாடுதல்

## மதிப்பீடு

- எளிய வினாக்களின் உதவியுடன் மதிப்பீடு செய்தல்.
  நடை வாயிலாகப் பாடுவதை மதிப்பீடு செய்தல்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு -1*

- கேரளக் கலை வடிவமான ஓட்டன்துள்ளலின் குறுந்தகடு காட்சி காட்டுதல். இரசிப் பதற்கு வாய்ப்பு அளித்து குறிப்பு தயாரிக்கும் படிக் கூறுதல்..

  *தர நிர்ணயக் குறிப்புகள்*

  - ❖ வெளியிடுவதன் கவர்ச்சித் தன்மை
  - ❖ இந்த நிகழ்த்துதலில் இசையின் முக்கியத்துவம்.
  - ❖ நிகழ்த்துதலில் பயன்படுத்தக்கூடிய இசையின் பாடல்நடை.
  - ❖ சிறப்புகள், மொழியின் சிறப்பு, நாட்டுப்புற மொழியின் பயன்பாடு

- தயாரித்த குறிப்புகளை வெளியிடுதல் ( தனிநபராக)
- வேடவிதானங்களாலும், நடனச்சுவடுகளாலும் அழகானது.
- பாட்டிற்கேற்ப நடனச்சுவடும், நடிப்பும் உள்ளது.
- அழகான தாளங்களில் எளிமையான மெட்டில் பாடுதல். கருத்தை கூடுதல் தெளிவுபடுத்துதல்.
- நாட்டுப்புறமொழி பயன்பாடுகள் ஏராளம் உள்ளன.
- குழந்தைகளின் குறிப்புகளின் அடிப்படையில் ஆசிரியரின் விளக்கம்.
  - கேரளத்தின் முக்கியமான மானுட கலை வடிவம்
  - நகைச்சுவை உட்பட்ட வெளியிடுதல்.
  - இன்றைய பல சமூகத்தீமைகளையும் இசையினுடையவும், நடனச்சுவடு களுடையவும், நகைச்சுவையுடனும் இணைந்து வினவுதல்.
  - கேரளத்தில் பண்டைக்காலம் நடைமுறையிலிருந்த பல் ராகங்களும் , தாளங் களும் இங்கே பாடுவதற்குப் பயன்படுத்துதல்.
  - சிக்கலற்ற, அனைவராலும் இரசிக்கக்கூடிய பின்பற்றக்கூடிய மெட்டுகள்.

*செயல்பாடு -2*

இசை முக்கியத்துவம் வாய்ந்த வெவ்வேறு, கலை வடிவங்களை அறிமுகம் செய்தல்.

*படிநிலை-1*

- பல்வேறு நடனவடிவங்களில் குறுந்தகடை காட்டுதல் ( அந்தந்த துறையில் புகழ் பெற்றவர்களின் நிகழ்த்துதல் சார்ந்த குறுந்தகடுளும் ஆகலாம். மோகனியாட்டம், பரதநாட்டியம், கதகளி)
- மோகினியாட்டம்- பதம் தேர்வு செய்யும் போது நன்கு பழக்கமானதை உட்படுத்தவும் எ.கா பனிமதி, சுமசாயக, ஓமனத் திங்கள்
- கருத்து பகுப்பாய்வு செய்ய வேண்டும்
- கதைகளி- பாடப்புத்தகத்தில் உட்படுத்தப்பட்ட பதங்களை அறிமுகம் செய்யலாம்.
- திரைப்படத்தில் வந்த இனங்களும் ஆகலாம் ( ஆனந்த பைரவி, வானபிரஸ்தம்)
- பரதநாட்டியம் குழந்தைகளுக்கு நன்கு பழக்கமானதை உட்படுத்துவதற்கு ( பள்ளி விழாக்களில் பார்த்து அறிமுகமானது) கவனிக்க வேண்டும்.
- குறுந்தகட்டில் பார்த்த பின் ஒவ்வொரு கலைவடிவத்தினுடையவும் சிறப்பும், இசைப்பயன்பாட்டு முறையும் எப்படி என்பதை ஆராய்தல்..
- குழந்தைகளின் பிரதிபலிப்பு
    - நடை
    - வரலாறு
    - இசை- வேட சிறப்புகள்
- பிரதிபலிப்பின் அடிப்படையில் சிறு விளக்கம்

*கதகளி* :

- மணிப்பிரவாள நடையிலுள்ள இலக்கியம். கேரள இசை நடையின் சுவடைப் பின்பற்றியுள்ள நடையிலான பாடல்
- புராதன காலத்தில் நிலவிலிருந்த பல இராகங்களும் பாடலில் வருகின்றன.
- கதகளிப்பாட்டை கதகளிப்பதம் எனச் சிறப்பிக்கலாம்.
- பின்னணியாக வரக்கூடிய இசைக்கருவிகள், சேங்கிலை, இலைத்தாளம், மத்தளம், செண்டை, சுருதிப்பெட்டி).
- பொன்னானி ( முன்னனிப் பாடகர்) பாடும் ஒருவர் சிங்கிடி ( பின்னனிப் பாடகர்) பாடும் ஒருவர்

*மோகினியாட்டம்:*

- கேரளத்திற்குச் சொந்தமான கலைவடிவம், செவ்வியல் தன்மை அதிகமாக உட்கொண்ட பாடல் வடிவம், நடிப்பு வாய்ப்பு அதிகமாக உள்ளது.
- சௌக்க காலத்திலுள்ள (Slow style) பாடல்.
- இராக பாவங்கள் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.

*பரதநாட்டியம்:*

- தமிழ்நாட்டின் கலை வடிவம்.
- மோகினியாட்டத்தைப் பொறுத்தவரையில் பாடலுக்கும் வெளியிட்டும் வேகம் கூடியது.
- வர்ணங்கள், பதங்கள், கிருதிகள், ஜதிலவரங்கள், தில்லைகள் இவற்றை பின் பாடலாகப் பாடுதல்.

- செவ்வியல் தன்மை அதிகம் உட்கொண்ட பாடல்.
- பாடங்களை ஆழ்ந்து அறியும் படியான பயிற்சி.
- மேற்கூறிய கலைவடிவங்களில் எளிமையான பாடல்கள் தேர்வு செய்தல்.
- ஒவ்வொரு அடியும் பாடிக் கேட்க வைத்தபின்பு குழுவாகப் பாடும்படிக் கூறுதல்.

  குழுவாகப் பாடிய பின் மார்கம்களி, ஒப்பனை, திருவாதிரை ஆகிய குழு வெளியீடுகளில் பாடல்களைக் கேட்கச் செய்து பயிற்சி அளித்தல்.

*உதவிநூல்கள்*

நூபுரபாதிக- பி.ஜெ. ஜனார்த்தனன்

கேரளீய கலாபடனம்- என். பி. விஜயகிருஷ்ணன்

அபிநய சங்கீதம் - முனைவர். லீலா

வம்சிய சங்கித - முனைவர் ஏ. கே. நம்பியார், ஓம்சேரி

*செயல்பாடு -3*

- கலைவடிவங்களின் பெயர்கள் கொடுத்துக் குழந்தைகளை நான்கு குழுக்களாக் குதல். கூடுதல் பயிற்சிக்காகக் குழுக்களுக்கு நேரம் வழங்குதல்.
- பயிற்சி செய்த பாடல்களை குழுவாகப் பாடுவதற்கான வாய்ப்பு
- மதிப்பீடு ஒன்றுக்கொன்று- ஆசிரியர்
- பாடியதன் குறைகளை மீண்டும் பாடி தெளிவுபடுத்தி வெளியிடுதல்.
- பாடலில் சிறப்பாகப் பாடிய குழந்தைக்குத் தனியாகப் பாடுவதற்கான வாய்ப்பு

## தொடர்ச் செயல்பாடு

- நடிப்பு முக்கியத்துவம் வாய்ந்த கதைப்பிரசங்கங்கள், நாடகம், சில திரைப்பாடல்கள் பாடுதல்.
- ஒரு கதாபிரசங்கத்தின் குறுந்தகடு வெளியிடுதல்.
- கதாபிரசங்கத்தின் முக்கியமான மூன்று பாடல்களை எடுத்து பாடவைத்தல்.
- சிறு விளக்கம் அளித்தல்.
- ஒரே நேரத்தில் கதையும், நடிப்பும் அழகான சிறிய அசைவுகளும், பாடல்களும் சேர்த்து வெளியிடும் கலைவடிவம். பின்னணியில் ஆர்மோனியம், தபலை, கிளாரினட், வயலின் சிம்பல் போன்றவை பயன்படுத்தலாம்.
- நாடகப் பாடல்களை கேட்க வைத்தல், எளிமையானவற்றில் பயிற்சி பெறுதல், வெளியிடுதல்.

## மதிப்பீடு

- பாடல் வடிவங்களைப் பிரித்தறிதல்.
- நடையை நிலைநிறுத்துவதற்கான பாடல்
- குழுப் பாடல்
- குறிப்புகளின் முழுமை

## ஒருங்கிணைப்பு

- நாம் பார்க்கக்கூடிய எல்லா கலைவடிவங்களும் பின்னணிப் பாடலின் உதவியோடு வரும்போது மட்டுமே முழுமை கிடைக்கிறது. நடிப்பிற்கும், நடன அசைவு களுக்கும் முழுமையாக இடம் கொடுக்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இத்தகைய பாடல்களின் நடையும், தனித்தன்மைகளும் பகுத்தறிந்து பாடவும் இரசிக்கவும் செய்யவேண்டும். கேரள இசை நடைகள் முழுமையாக உட் கொள்ளும் பாடல் வடிவங்களைக் குறித்த அதிகமான அறிவைப் பெறுவதற்குக் கற்றல்கள் உதவுகின்றன.

# அலகு - 2 தாள வேறுபாடு

புகழ்பெற்ற தாளப்பண்பாட்டின் உறைவிடமே இந்திய இசை. வேதங்களிலும் மிகப் பழமையான இசைமுறை எனச் சிறப்பிக்கும் தமிழ் இசையிலும் பல்வேறு இசைக் கருவிகளைக் குறித்தும் அவற்றின் பயன்பாடுகளைக் குறித்தும் விளக்கமாக கூறப் பட்டுள்ளது. ஒவ்வொரு பாடல் வடிவங்களுடையவும் தனித்தன்மைகளுக்கேற்ப அவற்றோடு இசையும் தாளங்களை ஒழுங்கு செய்து படைத்த ஏராளமான இசை வல்லுநர்கள் நமது இசை அமைப்பின் விலை மதிக்க முடியாத முத்துகளாகும். தாள வேறுபாடு பழக்கமான மெட்டுகள் வழியாகவும், இசையமைப்பு வழியாகவும் அறிமுகம் செய்யவும் அவற்றைக் குறித்து அதிகமாக தெரிந்து கொள்வதும் இந்த பாடப்பகுதியிலுள்ள செயல்பாடுகளின் இலக்காகும்.

## உள்ளடக்கம்

தாள வேறுபாடுகள், அவற்றின தனித்தன்மைகள், அவற்றிற்கு இசைகின்ற பாடல் வடிவங்கள், தாளமாற்றத்திலுள்ள வேறுபாடுகள். அவை அளிக்கின்ற இரசிப்புநிலை ஆகியவை அனைத்தும் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன. தாளச்சிறப்புகளும், வேற்றுமைகளும் உற்றுநோக்கி, கேட்டு கண்டுபிடிப்பதற்கான சில செயல்பாடுகள் இந்த அலகின் உள்ளடக்கத்தில் உள்ளன.

## கற்றல் அடைவு

வெவ்வேறு இசைப் பிரிவுகளில், வெவ்வேறு தாளங்கள் உள்ள பாடல்களை இணைத்து வெளியிடுதல்.

## கருத்து, அறிவு

- தாளங்கள் பல்வேறு வகைப்படும்.
- பாடல்கள் மெட்டிலும், தாளத்திலும் வேறுபாட்டை உட்கொள்கின்றன.
- தாள வேறுபாடு, மெட்டு வேறுபாடு சூழலை, கருத்தை அதிகத் தீவிரப்டுத்துகிறது.

- மெட்டுகளும், தாளங்களும் வேறுபட்டதாக இருந்தாலும் ஒன்றுக்கொன்று இணங்குகிறது.

## செயல்முறை

- வெவ்வேறு தாளங்களில் உள்ள பாடல்கள் கேட்டல்.
- பின்பற்றுதல்.
- ஒப்புமை செய்தல்.
- வெவ்வேறு தாளங்களுடைய பாடல்களைச் சேகரித்தல்.
- குழந்தைகளின் கற்பனைக்கேற்ப பாடல்களைத் தேர்வு செய்து வெளியிடுதல்.
- விவாதம்

## மதிப்பீடு

- குழந்தைகள் ஒன்றுக்கொன்று மதிப்பீடு செய்தல்.
- விவாதம் வழியாக வந்த மாற்றங்களை ஆசிரியர் மதிப்பிடுதல்.
- பல்வேறு பாடல் வடிவங்கள், பல்வேறு தாளங்கள் ஆகியவை உட்கொண்ட பாடல் தாளக்கூறுகளின் உருவாக்கம்

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு -1*

பல்வேறு பண்பாடுகளை/ பல்வேறு நடைகளை இணைத்து வெவ்வேறு தாள வரிசைகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு பாடலின் VCD/ CD கேட்க வைத்தல்/ கலை விழாக்களில் வெளியிடும் குழுநடனங்கள், ஓணப்பாடல்கள், பொதிகை, பிற சானல்கள் ஆகியவற்றில் ஒலிபரப்பு செய்கின்ற தேசிய மறுமலர்ச்சிப் பாடல்கள்........, சானல்களில் பாடல்கள்)

- கேட்ட பாடலின் வேறுபாட்டைப் பகுத்தறிந்து இரசித்தல்.
- தனிநபராக இரசனைக்குறிப்பு தயாரித்தல்
- இரசனைக்குறிப்பு வெளியிடுதல்- தனிநபர்

*குழந்தைகள் எழுதிய குறிப்புகளின் உள்ளடக்கம் இவையாக இருக்கலாம்.*

- ♦ பாடலில் அடிகள் மாறி வரும் போது ஏற்படும் மெட்டு வேறுபாடு, தாள வேறுபாடு.
- ♦ பல்வேறு மெட்டுகளும், தாளங்களும் இடையிலான இணைப்பு கேட்க இனிமையானது.
- ♦ ஓர் பாடல் நிகழ்த்துதலில் வேறுபாட்டை உட்கொண்ட பாடல் அழகானது.
- ♦ நன்றாக இரசிப்பதற்கு இயலும் வகையிலான இசை அமைப்பு.
- ♦ வேறுபாடான மெட்டுகளும், தாளங்களும் ஒரே பாடலில் உட்கொண்டு வரும் போது கேட்பதற்கு புதுமையுண்டாகிறது (ஆர்வமின்மையை அகற்றுகிறது)

## *செயல்பாடு -2*

- பல்வேறு தாளத்தில் உள்ள பல்வேறு பாடல்களைப் பாடுதல்.
- நாட்டுப்புற பாடல், பக்திப்பாடல், திருவிழாப் பாடல்கள், அரை செவ்வியல் பாடல்கள், செவ்வியல் பாடல்கள், தேசபக்திப் பாடல்கள் ஆகியவற்றை இணைத்த ஒரு பாடல் நிகழ்த்துதலை கேட்க வைத்தல். குழந்தைகளிடம் இரசனைக் குறிப்பு தயாரிக்கக் கூறுதல்.
- கேரளத் தாள வாத்தியங்களின் ஒரு செயல்முறையைத் தயாரிக்கும்படிக் கூறுதல்.
- குறிப்பு தயாரிக்க உதவக்கூடிய வினாக்கள்
    - இந்த வெளியீட்டில் உட்படுத்தப்பட்ட பாடல்கள் ஒரே பிரிவைச் சார்ந்ததா?
    - எந்தெந்த தரத்திலுள்ள பிரிவிலான பாடல்கள் இதில் உள்ளது?
    - கேட்ட பாடல் பிரிவுகள் ஒன்றோடொன்றுஇணைந்துள்ளதா?
    - தாளத்தில் மெட்டில் வேறுபாடு உட்கொண்டுள்ளதா?
    - தாள வேறுபாடு, மெட்டு வேறுபாடு இந்த நிகழ்த்துதலை அதிக கவர்ச்சி யுடையதாக மாற்றுகிறதா?
    - புதுமை படைக்கிறதா?
- குழந்தைகள் தயாரித்த குறிப்பை வெளியிடுதல் (தனிநபர்)
    - வேறுபட்ட பாடல்களாகும்
    - நாட்டுப்புற பாடல், செவ்வியல் பாடல், நடனப் பாடல் எனப் பல்வேறு வகை யுள்ளன.
    - பாடல்பிரிவுகள், அடிகள் ஒன்றுக்கொன்று இணக்கம் உள்ளது.
    - வேறுபட்ட மெட்டு, தாளம் ஆகியவை உள்ளன.
    - நிகழ்த்துதல் சிறப்பானது. இரசிக்கக் கூடியது.
- விளக்கம்

  *பாடல் பிரிவுகள் வெவ்வேறாக இருந்தாலும் மெட்டு , தாளம் ஆகியவை வேறு பட்டதாக இருந்தாலும் இவற்றை கூட்டி இணைத்து பாடும்போது இணைப்பும் மனநிறைவும் அனுபவப்படுகிறது. இசையின் ஒன்றிணைந்த உணர்ச்சி தான் இத்தகைய வேறுபாடுகளைக் கூட்டி இணைக்கும் போது வெளிப்படுவது.*

  *வேறுபட்ட இத்தகைய கூட்டி இணைப்புகள், வெவ்வேறான இரசிப்பு நிலையை உருவாக்குகிறது.*

## *செ.ல்பாடு -3*

- பல்வேறு பாடல்நடைகள், வெவ்வேறு தாளங்களில் கூட்டி இணைத்துப் பாடுவ தற்காக நான்கு குழுக்களாக குழந்தைகளைப் பிரித்தல்.
- அறிவுரை

  *பாடல்களை கூட்டி இணைக்கும் போது தாளவேறுபாடு இருக்க வேண்டும். இர சிப்புத் தன்மை உடையதாக இருக்க வேண்டும்*
- பயிற்சி செய்வதற்கு நேரம் அளித்தல்.
- வெளியிடுதல்( குழுக்கள்)

- ஆசிரியரும், பிறகுழுக்களும் மதிப்பீடு செய்யவேண்டும்.
- வெளியீட்டிற்குப் பின் இத்தகைய வெளியீடுகளை மேன்மையடையச் செய்வதற்கான விவாதங்கள் குழுவாரியாக நடைபெறுகிறது.
- ஒவ்வொரு குழுவும் அதிகமான தாள- பாடல் கூறுகளை கண்டுபிடித்தல். பயிற்சி பெறுதல். பொருத்தமான சூழலில் பாடுதல்.
- வேறுபாட்டை உட்கொண்ட இத்தகைய பாடல்நிகழ்த்துதல்கள் அதிகம் கேட்பதற்கான வாய்ப்பளித்தல்.

## மதிப்பீடு

- பல்வேறான பாடல் பிரிவுகளைத் தேர்வு செய்தல்.
- தாள வேறுபாட்டைப் பிரித்தறிதல்.
- பாடுதல்.
- கருத்துக் குறிப்புகள், இரசனைக் குறிப்புகள் ஆகியவற்றின் முழுமை.

## ஒருங்கமைப்பு

வெவ்வேறு நடைகளின் கூடுகையாகும் நமது இசை. ஒவ்வொரு பாடல் நடையும் வெவ்வேறான மெட்டும் தாளமும் உட்கொண்டதாக இருந்தாலும் அவை ஒன்றோடொன்று இணங்கிச் சேர்கிறது. வேறுபாடுகள் சேர்ந்து இணைந்து வரக்கூடிய நிகழ்த்துதல்கள் இரசிப்புத் தன்மையையும், புதுமையையும் நிலைநிறுத்துகிறது. பல்வேறு இசைப் பண்பாடுகளின் பொருத்தமான கூட்டி இணைப்புகள் அளிக்கக்கூடிய இன்பம் கவர்ச்சியானது. இரசிகருக்கும் அதிகமாக இசையின் லயனங்கள் பகர்ந்து அளிக்கிறது.

# அலகு – 3

ஒவ்வொரு நாட்டிற்கும் அந்த நாட்டின் கலைப்பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் கலைவடிவங்கள் உள்ளன. இத்தகைய கலை வடிவங்கள் அங்குள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டுள்ளன. பாடுவதற்கும், மீட்டுவதற்கும், நடனச்சுவடுகளிலும், வேடமுறைகளிலும் பிறநாடுகளின் கலைவடிவங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதான இந்தக் கலை வடிவங்களுக்கு அதனுடையதான சிறப்புகளும் வலாறுகளும் உண்டு. நாட்டுப்புறப்புற கலைவடிவங்களின் பரிவாரத்தை சேவிக்கும் பிற இடங்களில் நிலவில்லாத ஏராளமான இசைக்கருவிகள் ஒவ்வொரு நாட்டிற்கும் உள்ளது. இத்தகைய இசைக்கருவிகளையும், இசைக்கருவி மீட்பவர்களையும் பகுத்தறியவும் அவற்றின் சிறப்புகளை கலை சமூகத்திற்கு வெளிப்படுத்திக் கொடுப்பதும் முக்கிய கலைப்பண்பாட்டு பாதைக்கு இந்த இசைக்கருவி வாசிப்பவர்களையும, கலை வடிவத்தையும அடையச் செய்வது என்ற இலக்கு இந்தப் பாடப் பகுதிக்கு உள்ளது.

## உள்ளடக்கம்

நாட்டுப்புற கலைவடிவங்களில் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு இசைக்கருவிகள், அவற்றின் வகைப்படுத்தல்கள், மீட்டுவதன் அடிப்படைக் கோட்பாடுகள், அந்தந்த துறைகளில் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் ஆகியோரைக் குறித்து இந்த அலகில் கூறப்பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

வட்டார இசைக்கருவிகளை அறிமுகப்படுத்தவும் அவற்றைக்குறித்து பிரதிபலிக் கவும் செய்தல்.

## கருத்து, அறிவு

- வட்டாரத்தில் சில இசைக்கருவிகள் உண்டு.
- வட்டார இசைக்கருவிகளில் திறமையுள்ள வல்லுநர்களும் உண்டு.
- இவற்றைப் பயன்படுத்துவதற்கு பயிற்சி தேவை.

## செயல்முறை

- வட்டார இசைக்கருவிகளைக் குறித்து ஆராய்தல்.
- வட்டார இசைக்கருவிகளை வகைப்படுத்துதல்
- காட்சி
- வல்லுநர்களுடன் கருத்துப் பரிமாற்றம்

## மதிப்பீடு

- வினாக்கள் வழியான மதிப்பீடு.
- குறிப்புகளின் முழுமை.
- படசேகரிப்புகளின் சிறப்பு.
- வேறுபாட்டிற்கேற்ற பகுத்தறிவு

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு -1*

- வட்டாரத்திலுள்ள சில கலைவடிவங்களின் VCD காட்டுதல் ( அவரவருடைய வட்டாரங்களில் நடைமுறையிலுள்ள ஏதேனும் கலை வடிவங்களைத் தேர்வு செய்யவேண்டும்.
- பார்த்த கலைவடிவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இசைக்கருவிகளை அட்ட வணைப்படுத்தும்படிக் கூறுதல். தனிநபராக வெளியிடுதல்
- ஆசிரியர்/ கரும்பலகை/சார்ட்டில் குறிப்பிடுதல்
- தாளவாத்தியம்/ கம்பி வாத்தியம்/ துளை வாத்தியம் என்ற மூன்று கட்டங்களில் எழுதுதல். குறிப்பின் அடிப்படையில் ஆசிரியர் கரும்பலகையில் எழுதிய கட்டங் களில் பொருத்தமான வாத்தியங்களின் பெயரை எழுதுதல்.

  எ.கா–

  தாளவாத்தியம்– உடுக்கு, கம்பிவாத்தியம்– புள்ளுவ வீணை. துளை வாத்தியம்– சீனிக்குழல்.
- வாத்தியக் கருவிகளின் சிறப்புகளுக்கேற்ப வகைப்படுத்துதல் விளக்குதல்.

  *கம்பிவாத்தியம்*–தடியில் அல்லது உலோகத் தண்டில் இணைக்கப்பட்டுள்ள கம்பி களைத் தட்டி ஒலி எழுப்பும் கருவிகள். அதிர்வுச் செயல் வழியாக ஒலியை வெளிப்படுத்துகிறது.

*தாளவாத்தியம்*- உள்ளே வெற்றிடமான மரத்தடியில் அல்லது உலோகத்தில் அல்லது மிருகத்தோலில் அல்லது இணையான தகடுகளை இழுத்துக் கட்டி அவற்றில் கைகள் வைத்து தட்டி அல்லது கோல்கள் வைத்துத் தட்டி ஒலி எழுப் பக்கூடிய இசைக்கருவிகளை தாள வாத்தியங்களில் உட்படுத்தலாம்.

*துளை வாத்தியம்*- துளை வழியாகக் காற்றைக் கடத்திவிட்டு ஒலி எழுப்பும் கருவிகள்.

*செயல்பாடு -2*

- வட்டாரக் கருவிகளை கண்டறிதல், நாட்டின் இசைக்கருவி பண்பாட்டைப் பிரித்தறிதல்.
- குழந்தைகளை நான்கு குழுக்களாகப் பிரித்து ஆராய்தல்.
- கண்டுபிடித்த கலை வடிவங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள இசைக்கருவிகளை அட்டவணைப்படுத்துதல்.

  (வெளியே உள்ள குழுப்பயணம், கலை நிகழ்த்துதல்கள் உட்பட்ட சிறப்பு நிகழ்ச் சிகள் VCD பார்த்தல் ஆகிய தகவல் சேகரிப்பு உறைவிடங்கள் சேகரித்தல்)
- கண்டுபிடித்த வாத்தியக் கருவிகளின் வாசிப்புமுறை, தனித்தன்மை ஆகியவை பிரித்தறிதல்
- அந்தந்தத் துறையில் புகழ்பெற்ற வாத்தியக் கருவி வல்லுநர்களின் நிகழ்த்துதல் களைப் பார்த்தல்.
- வல்லுநர்களுடன் நேரடியான பேட்டி, உரையாடல்கள்.
- தேர்வு செய்யப்பட்ட சில நிகழ்த்துதல்களைப் பள்ளிக்கூடத்தில், வட்டார வல்லு நர்களின் உதவியுடன் வெளியிடுதல்

*செயல்பாடு -3*

- கேரளத்தின் உள்ளே பல்வேறு நாடுகளில் வட்டார அளவில் நடைமுறையிலுள்ள வாத்தியக்கருவிகளின் குறுந்தகடு காட்சி ( படையணி, தெய்யம், குத்தியோட்டம், வேல்களி, பூதனும் நிறையும்)
- இசைக்கருவிகளின் படங்கள் உட்படுத்திய படத்தொகுப்பு தயாரித்தல் ( குழுவாக)
- வட்டாரத்திலுள்ள வல்லுநர்களுடன் நடைபெற்ற பேட்டியைக் குறிப்பிட்டு சேகரிப்பு தயாரித்தல்.
- வெவ்வேறு குழுக்கள் உருவாக்கிய மலர், சார்ட் ஆகியவற்றின் காட்சியும் பொது வாசிப்பிற்கும் வாய்ப்பளித்தல்.

## மதிப்பீடு

- இசைக்கருவிகளைப் பிரித்தறிதல்.
- சேகரிப்பின் சிறப்பு.
- பிரதிபலிப்பின் சிறப்பு
- பேட்டிகளின் சிறப்பு.

### ஒருங்கிணைப்பு

பல்வேறு வட்டாரங்களில் நிலைநிற்கின்ற அனுசரித்து வருகின்ற வாத்தியப் பண்பாட்டைக் குறித்தும் வாசிப்பவர்களைக் குறித்தும் கலைவடிவங்களைக் குறித்தும். அவற்றின் சிறப்பு, பயன்பாட்டு முறை ஆகியவற்றைக் குறித்தும் கூடுதலான அறிவு பெறுவதற்கு இந்தச் செயல்பாடுகள் உதவுகின்றன.

## அலகு – 4 பக்கவாத்தியம்

இந்தியச் செவ்வியல் இசை அமைப்பிற்கு அதனுடையதான தனித்தன்மைகள் அதிகமுள்ளது. ஒழுங்கான கற்றலினாலும், தொடர் சாதனையாலும் அடையக்கூடிய பாடல் திறன் இதற்கு எடுத்துக்காட்டாகும். மனித நேய இசையின் அலங்காரிக அழகு அதிகமாக உட்கொள்ளும் வாத்தியங்களைக் குறித்த விரிவான கற்றலே இந்தப் பாடப்பகுதியிலுள்ள கற்றல் செயல்பாடுகளின் அடிப்படை.

கர்நாடக இசையைப் பிற இசை நடைகளுடன் ஒப்பீடு செய்யும் போது, அதிக சிறப்புகளைக் கண்டுபிடிக்க இயலும். இராக, தாள, பாவ, கமசு முக்கியத்துவம் உள்ள பாடல்களில் இவற்றைக் கூடுதல் சிறப்படையச் செய்வதற்காக பயன்படுத்தும் இசைக் கருவிகளும் அவற்றின் வாசிப்பு முறைகளும் சரியாகப் புரிந்து கொள்வதற்கு இந்த பாடப் பகுதி உதவுகிறது.

### உள்ளடக்கம்

பக்கவாத்தியம், அவற்றின் வாசிப்புச் சிறப்பு, துணைப் பக்கவாத்தியம், நிகழ்த்துதல் முறை, சூழல், வாத்தியங்களின் சிறப்பு, அவை உட்படும் வாத்தியப்பிரிவு ஆகியவற்றைக் குறித்து விளக்கமாக இந்த அலகில் கூறப்பட்டுள்ளது.

### கற்றல் அடைவு

இசைக்கச்சேரிகளில் ( நிகழ்த்துதல்களில்) பயன்படுத்தக்கூடிய பக்கவாத்தியம், துணைப் பக்கவாத்தியம் ஆகியன பற்றிய குறிப்புகள் தயாரித்து வெளியிடுதல்.

### கருத்து, அறிவு

- பக்க, துணைப் பக்க வாத்தியங்களைக் குறித்த அறிவு
- ஒவ்வொன்றினுடையவும் பொருத்தமான பயன்பாடு
- பக்க வாத்தியங்களையும், துணைப் பக்க வாத்தியங்களையும் பிரித்தறிதல்.

### செயல்முறை

- பக்க, துணைப் பக்க வாத்தியங்கள் பயன்படுத்தக் கூடிய இசைநிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் வாய்ப்பளித்தல், கேட்டல், உற்றுநோக்கல், விவாதம், குறிப்புகள்.

### மதிப்பீடு

- குறிப்புகளின் முழுமை – ஒன்றுக்கொன்று மதிப்பீடு, சுய மதிப்பீடு

## கற்றல் செயல்பாடுகள்

- கர்நாடக இசைக்கச்சேரியின் V.C.D வகுப்பில் காட்டுதல். இசைக் கச்சேரியில் பாடகர்களுடன் வாசிக்கப்படும் இசைக்கருவிகளைக் குறித்து ஆராய்தல்.

  *தரநிர்ணயக் குறிப்புகள்*
  - எத்தகைய இசைக் கருவிகளை நீங்கள் நேரடியாகப் பார்க்கிறீர்கள்?
  - எவையெல்லாம் என்பதை முன்னறிவின் அடிப்படையில் கூறமுடியுமா?
  - இசைக் கருவிகளை வாசிப்பவர்கள் பாடகர்களின் எந்தெந்தப் பக்கங்களில் அமர்ந்திருப்பர்?
- தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் குறிப்புகள் தயாரிப்பதற்கு கூறுதல்.
- தனிநபராக வெளியிடுவதற்கு வாய்ப்பளித்தல்.
  - பார்வையில் ஆறு கருவிகளைப் பார்க்க முடிகிறது.
  - தம்புரு, மிருதங்கம், வயலின், கடம், முகர்சங்கு, கஞ்சிற ஆகிய கருவிகள்
  - தம்புரு, மிருதங்கம் ஆகிய கருவிகள் பாடகரின் இரு பக்கங்களிலும் மீதியுள்ளவை பின்பக்கமும் உள்ளது
- குழந்தைகள் வெளியிட்ட குறிப்புகளின் பிற்சேர்கையாக அதிகமான விளக்கத்தை ஆசிரியர் அளித்தல்.
  - தம்புரு சுருதி கருவியாகும்.
  - கம்பி வாத்தியப் பிரிவில் உட்படுகிறது.
  - நான்கு கம்பிகள் உள்ளன.
  - மடியில் செங்குத்தாக வைத்து கம்பிகளில் விரல் பயன்படுத்தித் தட்டி ஒலியை எழுப்புவது.
  - முதல் கம்பியை நடுவிரலாலும் பிற முன்று கம்பிகளை ஆள்காட்டி விரலாலும் தட்டவேண்டும்.
  - வயலின் கம்பி வாத்தியமாகும். கம்பிகளில் வில் கொண்டு உரசி ஒலி எழுப்பப்படுகிறது. மிருதங்கம், கடம், முகர் சங்கு, கஞ்சிற ஆகியன தாள வாத்தியங்களாகும். மிருதங்கமும், கஞ்சிறயும் தோல் வாத்தியங்களாகும். முகர் சங்கு உலோக வாத்தியமாகும். கடம் மண்ணால் உருவாக்கியதாகும்.
- குறிப்புகளை வளப்படுத்தும்படி குழந்தைகளிடம் கூறுதல்.
- ஆசிரியர் சில வினாக்களை எழுப்புதல்.
  - எல்லா இசைக்கருவிகளும் தொடக்கம் முதல் முடிவு வரை பாடகருக்கு இணையாக வாசிக்கப்படுகிறதா?
  - எந்தெந்தக் கருவிகள் முழுநேரமும் வாசிக்கப்படுகின்றன?
  - எவை வாசிக்கப்படுவதில்லை?
- ஆசிரியர் இசைக் கச்சேரிகளின் காட்சிகளை மீண்டும் காட்டுதல்.
- குழந்தைகளிடம் இசைக் கருவிகளை வாசித்த முறையை கவனித்து குறிப்பேட்டில் எழுதுவதற்குக் கூறுதல்.
- குறிப்புகளைத் தனிநபராக வெளியிடுதல்.

- ♦ எல்லாக் கருவிகளும் முழு நேரமும் வாசிக்கப்படுவதில்லை, வயலின், மிருதங்கம் ஆகியவை பாடலின் முழுநேரமும் வாசிக்கப்படுகின்றன. மற்றவை சில நேரங்களில் வாசிக்கப்படுவதில்லை.
- ♦ பாடகர் பாடாத வேளையிலும் தம்புரு வாசிக்கப்படுகிறது.

- ஆசிரியர் கூடுதல் தெளிவு கிடைப்பதற்காகச் சில கருத்துக்களைச் சேர்த்தல்.
  - ♦ தம்புரு சுருதி கருவியானதால் தொடக்கம் முதல் இறுதி வரைப் பாடகர் பாடாத இடைவேளைகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கும்.
  - ♦ வயலினும், மிருதங்கமும் முழுநேரமும் பாடகருடன் இருக்கும்.
  - ♦ சுருதி கருவியும், மிருதங்கமும் இல்லாத ஒரு இசைக் கச்சேரி முழுமைய டைவதில்லை.
  - ♦ கஞ்சிறாவும், முகர்சங்கும், கடமும், கச்சேரிக்கு அதிக வளமளித்துக் கேள்வி இனிமையை ஏற்படுத்துகிறது.
  - ♦ மனிதநேய இசைப் பிரிவான இராகம் பாடும் வேளையில் வயலின் மட்டுமே பாடகருடன் இணைகிறது. மனிதநேயஸ்வரம் பாடும்போது மிருதங்கம் இசைக்கு இணையாக இருந்தால் மனிதநேயஸ்வரம் வயலின் வாசிக்கும் போது பிற முன்று தாள வாத்தியங்கள் வயலின் வாசிப்புடன் இணையாக இருக்கும்.
  - ♦ பாடகர்களுடன் கச்சேரிகளில் தொடக்கம் முதல் முடிவுவரை மீட்டக் கூடிய ( வயலின், மிருதங்கம்) வாத்தியங்களை பக்கவாத்தியங்கள் எனக்கூறலாம். பிற தாள வாத்தியங்கள் இசைக் கச்சேரியின் துணைப் பக்க வாத்தியங் களாகும். முக்கிய தாள வாத்தியங்களைப் பின் தொடரும் வாத்தியக் கருவிகளே துணைப் பக்க வாத்தியங்கள். தாள வாத்தியத்தில் மிருதங்கத் திற்கு அரச பதவி உண்டு எனக் கூறலாம். ஆசிரியர் அளித்த விவரங்களை இணைத்து குறிப்பைப் தெளிவுபடுத்துதல். கச்சேரியில் பக்க, துணை பக்க வாத்தியங்களைக் குழந்தைகள் பிரித்தறிதல்.

## தொடர் செயல்பாடு

- பக்கமேளம் வாசிப்பவர்கள், துணைப் பக்கமேளம் வாசிப்பவர்கள் இவற்றின் வரலாற்றுப் பின்னணியத்தைக் குறித்து அதிகமான தகவல்களைச் சேகரித்து வெளியிடலாம்.
- இவற்றின் படசேகரிப்புகள் தயாரிக்கலாம்.
- இந்த வாத்தியங்களில் வல்லுநர்களைக் குறித்த விவர சேகரிப்பு, படசேகரிப்பு ஆகியவை தயாரித்தல்.

## மதிப்பீடு

- கருவிகளைப் பிரித்தறிதல்.
- குறிப்புகளின் ஒழுங்கு, வளம்.
- பக்க, துணைப் பக்க வாத்தியங்களாகப் பிரித்தறிதல்.

### ஒருங்கிணைத்தல்

- செவ்வியல் இசைக் கச்சேரிகளில் வயலினும் மிருதங்கமும் தவிர்க்க முடியாத இரு கருவிகளாகும். இவை பக்க வாத்தியங்கள் எனவும், மற்றவை துணைப் பக்க வாத்தியங்கள் எனவும் அறியப்படுகின்றன.

## அலகு – 5 இசை வடிவங்கள்

வெவ்வேறு இசைவடிவங்களை உள்ளடக்கிய வளமானதாகும் கர்நாடக இசை. நீண்ட கால கற்றலாலும், சாதனையாலும் சொந்தமாக்க வேண்டிய பாடல் வடிவங்களும் குறுகிய காலத்து கற்றலால் பாடக்கூடிய தனிப்பாடல் வகைகளும் நம்முடைய இசை அமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ளன. இசைக்கற்றல் பாடமாக தேர்வு செய்யும் மாணவனுக்கு அதிக தன்னம்பிக்கையுடன் பாடுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள சில இசை வடிவங்கள் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன. இதன் வழியாகக் கர்நாடக இசை அமைப்பின் சில அழகான மெல்லிசைப் படைப்புகளும் செவ்வியல் பாடல் வடிவங்களும் அறிமுகம் செய்வதற்கு வாய்ப்பளித்தல்

### உள்ளடக்கம்

பாடல், எளிய கீர்த்தனைகள், பஜனைகள் பாடுவதற்கு இனிமையான கசல் ஆகிய வற்றில் பாடுதல் பயிற்சி ஆகியவற்றிற்கான செயல்பாடுகள் இந்த அலகில் சேர்க்கப் பட்டுள்ளன. கேரளத்திற்கு சொந்தமான பாடல் வடிவமான வஞ்சிப் பாடல் அவற்றின் மாறுபட்ட பாடும்நடை, சோபான நடையில் பாடிவரும் அஷ்டபதி பாடல்கள் ஆகியவற்றின் பாடல்முறையை பயிற்சியளிக்கும் செயல்பாடுகளும் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

### கற்றல் அடைவு

பாடல்கள், எளிய கீர்த்தனைகள், பஜனை, அஷ்டமி, வஞ்சிப் பாடல் கசல் ஆகியவை தேர்வு செய்து பாடுதல்.

### கருத்து, அறிவு

- இந்திய இசைக்குப் பல்வேறு பாடல் பிரிவுகள் உண்டு.
- வேறுபாடான பாடல் வடிவங்கள்.
- பாடல் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் அதனுடையதான நடை உண்டு.
- வேற்றுமையும் . தனிமையும் உட்கொண்டு பாடுதல்.

### செயல்முறை

- கேட்டல், பாடுதல்
- இரசித்தல்

### மதிப்பீடு

- பாடுவதை மதிப்பீடு செய்தல்.
- பாடல் வடிவ வேறுபாடு பிரித்தறிவதை மதிப்பீடு செய்தல்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு-1*

- மத்யஸ்தாயி வரிசைகளும், தாரஸ்தாயி வரிசைகளும்
- பாடும் போது இணைந்து வரக்கூடிய ஒரு பாடலைப் பாடி கேட்க வைத்தல்/குறுந் தகடு கேட்க வைத்தல்

*பல்லவி*

*சரிகமபா கமபா பா*

*பவனரச்செழுதுந்து கோலங்ஙளெந்தும்*

*கிழக்கினி கோலாயிலருணோதயம்*

*அனுபல்லவி*

*சரிகமபனிச சா சா*

*புழயொரு பூணூலாய்*

- ♦ பாடலின் அடிப்படையிலான வினாக்கள் இந்தப் பாடலில் தொடக்கத்திலும் அனுபல்லவியின் முள்ளாகவும் பாடிய ஸ்வராவலிகள் எந்த பிரிவில் உட்படு கின்றன?
- ♦ வரிசைகளின் மெட்டும், ஸ்வராவலிகள் எந்த பிரிவில் உட்படுகின்றன?
- ♦ இதற்கு முன் கேட்ட ஸ்வராவலிகளுடன் படித்த பிற ஸ்வராவலிகள் நினை விருக்கிறதா?

- விடை வாய்மொழியாக.
- முன்பு படித்த வரிசைகளில் சிலவற்றையும் அலங்காரங்களில் சிலவற்றையும் பாடுதல்.
- பாடிக்கொடுத்தல், ஏற்றுபாடுதல், இணைந்து பாடுதல்
- பாடிய பின்பு மெட்டின் ஒப்புமையைக் குறித்த எளிய விவாதங்கள்.

*தரநிர்ணயக் குறிப்பேடு*

- ♦ வரிசைகள் பலதாக இருந்தாலும் மெட்டுகள் ஒன்றோடொன்று ஒப்புமை உள்ளது.
- ♦ ஸ்வர இடங்கள் ஒன்று போல் உள்ளது.

### *செயல்பாடு-2*

கர்நாடக இசைப்பிரிவின் சில மெட்டுகளில் உள்ள இசை வடிவங்களை அறிமுகம் செய்யலாம். ( இராக வேறுபாடு)

- கர்நாடக இசைக் கற்றலில் பல்வேறு கட்டங்களை காட்டும் எளிய காட்சி.

*சப்தஸ்வரங்கள்*

சரளீவரிசைகள் ஜண்டவரிசைகள் தாட்டு வரிசைகள் மத்யஸ்தாயி வரிசைகள் மந்திரஸ்தாயி வரிசைகள் தாரஸ்தாயி வரிசைகள் அலங்காரங்கள் கீதங்கள்

*கீதங்கள் என்றால் என்ன?*

இராகத்தினுடையவும் தாளத்தினுடையவும் எளிமையும் ஆனால் பொதுவான வடிவம் உட்கொள்வதுமான இலக்கியத்துடன் கூடிய பாடல் வடிவம்.

*சிறப்புகள்*

குறிப்பிட்ட தாளத்திற்கேற்ப ஸ்வரங்கள் பாடிய பின்பு அத்துடன் இணைத்து இலக்கியம் பாடுதல். கீதங்களில் எளிமையான இலக்கியம் உள்ளது ( இலக்கியம் என்பது தேவிதேவதுதிகள் ஆகும்) அலங்காரம் உட்பட்ட படிப்பதற்கு அடிப் படையாக மாயாமாளவ கௌள இராகம் பயன்படுத்துவதாக இருந்தால் கீதம் முதல் வெவ்வேறு இராகங்களும், தாளங்களும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது இராக அறிமுகத்திற்கும், தாள அறிமுகத்திற்கும் அதிக வாய்ப்பளிக்கிறது. ( கீர்த்தனை களின் ஆரம்ப வடிவமாகும் கீதங்கள்)

- தேர்வு செய்யப்பட்ட இரு கீதங்கள் அறிமுகம் செய்தல்.

  1. இராகம்- மலகரி 15 ல் ஜன்யம்
     தாளம்-ரூபகம்- ஸ்ரீகணநாத
  2. இராகம்-சாவேரி 15 ஜன்யம்
     தாளம் -ரூபகம்-ஜனகசுத
  3. ராகம்- சுத்ததன்யாசி 8-22 ல் ஜன்யம் (8- ஜனக இராகமான கனுமதோடி)
     தாளம்- ஆதி அதுலித வைபவ.

  (பாடல்கள் தென்னிந்திய இசையிலிருந்து சேகரிக்க வேண்டும்)

- பாடுதல்
- இராகத்தின் ஆரோகண- அவரோகன சுவரஸ்கள் பாடி உறுதி செய்தல்- கீத ஸ்வ ரங்கள் மெதுவாக சவுக்க காலத்தில் (Slow tempo) பாடுதல்.
- ஏற்று பாட வைத்தல்.
- ஒவ்வொரு அடிகளோடும் இலக்கியம் சேர்ந்து பாடும் பயிற்சி.
- குழுவான பிரிந்து/ தனியாக/ வகுப்பறை முழுவதுமாக சேர்ந்து பாடுதல்.
- கர்நாடக இசையின் பிற எளிய பாடல் வடிவங்கள்

  *1 கீர்த்தனை*- (கீர்த்தனையின் வரையறை கீழ் வகுப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது.)

  பக்திரச முக்கியத்துவம் கொண்ட இலக்கியம் உட்கொண்ட இராக, தாள, பாவம் நிறைந்த பாடல் வடிவம் எளிய கீர்த்தனைகளைத் தேர்வு செய்தல்.

  - *காலகரமேளராகரே - சுத்தசாவேரி*
  - *கஜனனயுதம் - சக்கிரவாகம்*
  - *பஜனம் செய்வின் - பாகேத்ரி*

- அவற்றைப் பாடுவது
- பாடிக் கொடுப்பது
- ஏற்று பாட வைத்தல்
- இலக்கியத்தின் கருத்து, பாவம் ஆகியன விளக்க வேண்டும்.
- இராகத்தின் பாவச்சிறப்பை விளக்க வேண்டும்.

  அர்த்த செவ்வியல் பாடல்கள், ராக பாவங்களை அதிகமாக உட்கொள்ளும் பாடல் வடிவங்கள்.

*மாதவலோக*

*பாரதசாம்ராஜ்ய*

*வந்தேமாதரம் சுபமாய*

*சங்கடமே ஜகம்*

*ஜயஜனனீ பகவதி சுரபாரதி தவ சரணம்*

- இவற்றில் தேசபக்திப் பாடல்கள், எளிய பஜனைப் பாடல்கள்/ பக்திப் பாடல்கள், தாளக்கூற்றுகள் உட்கொள்ளும் பாடல்கள் ஆகியவை உட்படுகிறது.
- இவற்றின் அடிகளை அறிமுகம் செய்தல்.
- இராக, தாள, பாடலாசிரியர் ஆகியவற்றைக் குறித்த சிறு விளக்கம் அளித்தல்.
- பாடுதல்
- மெட்டின் ( இராகத்தின்) சிறப்பை புரிந்துகொள்வதற்காக இராகத்தில் எளிய பாடல்.
- அடிகளை ஒவ்வொன்றாகப் பாடுதல் ஏற்றுபாட வைத்தல்.
- பாடிப் பயிற்சி பெற்ற பின்பு எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து பாடுவதற்கு வாய்ப் பளித்தல்.

*அஷ்டபதி பயிற்சி*

- அஷ்டபதி கச்சேரியின் குறுந்தகடு ( ஆசிரியரின் அஷ்டபதி பாடல் ) கேட்க வைத்து பாடல்நடையை அறிமுகம் செய்தல்.
- அஷ்டபதியின் வரலாறு, எழுதிய பின்னணி ஆகியவை விளக்குதல்.

  பனிரெண்டாம் நூற்றாண்டில் ஒரிசாவில் கிந்து பில்வம் என்ற இடத்தில் வாழ்ந் திருந்த கிருஷ்ண பக்தரான ஜயதேவர் என்பவர் அஷ்டபதியை எழுதினார். பிற் காலத்தில் கேரளத்தில் சோபான இசைக்கு இடைக்க வாசிப்பதுடன் பாடத் தொடங்கினார்.

  *பஷ்யதி திசி திசி ரகசிபவந்தம்*

  *துவத தரமத மதுரனி பிம்பந்தம்*

- போன்ற பழக்கமான அடிகள் பாடிப் பழகுதல்.

  *வந்தே முகுந்த ஹரே*

  (தேவாஸ்வரம் என்ற திரைப்படத்தில் உள்ளது)

*வஞ்சிப்பாட்டு பயிற்சி*

- வஞ்சிப் பாட்டின் குறுந்தகடைக் கேட்க வைத்தல் (VCD)
- வஞ்சிப் பாட்டின் வாய்த்தாரைகளைப் பாடுதல்.
- ஆசிரியர் வாய்த்தாரையை வேகம் குறைவாகவும், கூட்டியும் பாடி பலமுறை மீண்டும் செய்தல்.
- பாடிய வாய்த் தாரையின் வேகத்திற்கேற்ப அடிகளைச் சேர்த்து பாடுதல்.
- குழந்தைகளை இரு பிரிவாகப் பிரித்தல்.
- ஒரு பிரிவினர் வாய்த்தாரை பாடும் போது அடுத்த பிரிவினர் அடிகளைப் பாடுதல்.
- வகுப்பில் சிறந்த பாடகரை முக்கிய பாடகராக தேர்வு செய்து முதல் பகுதிகளைப் பாடும்படிக் கூறுதல்.

- பிற குழந்தைகள் ஏற்றுப் பாடுதல்.
- வஞ்சிப் பாட்டின் இரு முக்கிய நடைகளை அறிமுகம் செய்தல்.
- ஆறன்முள நடை, குட்டநாடன் நடை.
- குறுந்தகடு கேட்க வைத்தல்

*கசல்*

- இந்துஸ்தானி இசையின் செல்வாக்கை உட்கொண்ட எளிய பாடல் வடிவம்

  *சிறப்புகள்*

  எளிமையும், பாடுவதற்கு இனிமையும் அதிகமுள்ளதுமான மக்களின் பாடல் வடிவம்.

  மக்களின் பாடல் வடிவம்

  இலக்கிய அழகு நிறைந்த இசைப் படைப்பு இந்தி, உருது, இந்தி கலந்து உருது, மலையாளம் ஆகிய மொழிகளில் கசல் உள்ளது. ஈரடிகளின் இணைப்பாகும் கசல்.
- புகழ்பெற்ற கசல் பாடகர்களை அறிமுகம் செய்தல்

  குலாம் அலி, மெகதிகசன், பீகம், அக்தர், தலத் முகமது ஆசிஸ்,

  ஹரிகரன்,சித்திராசிங், பங்கஜ்உதாஸ், ஜக்ஜித் சிங்

- தேர்வு செய்யப்பட்ட கசல்களைப் பாடுதல்.
- அடிகளை அறிமுகம் செய்தல்
- பாடிக்கேட்க வைத்தல், குறுந்தகடு கேட்க வைத்தல், பயிற்சி கொடுத்தல்

## மதிப்பீடு

- பாடுதல்
- வேறுபாட்டைப் பிரித்தறிதல்.

## ஒருங்கிணைப்பு

- கர்நாடக இசைப் பிரிவிற்கும், இந்துஸ்தானி இசைக்கும் வெவ்வேறான பாடல் வடிவங்கள் உள்ளன.
- இராகத்தினுடையவும், தாளத்தினுடையவும் முழுமையை உட்கொள்ளும் இத்த கைய பாடல் வடிவங்களை பயிற்சி பெறவும் பாடவும் செய்வதன் வழியாக இவ்வேறுபாட்டை பிரித்தறியவும் நமது இசைப் பண்பாடுகளும் அதின் மதிப்புகளும் உட்கொள்ளவும் இயலுகிறது.

# ஒன்பதாம் வகுப்பு

## அலகு – 1 பாரதியஇசை ( இந்திய இசை)

### முன்னுரை

உலக இசை வரலாற்றில் பாடல் நடையினாலும், கவர்ச்சியான வேறுபாடுகளினாலும் ஒளி வீசுகின்ற இசைப்பராம்பரியம் இந்திய இசைக்கு உள்ளது. இந்திய இசையின் சுருதி வேறுபாடுகளும், தாள வேறுபாடுகளும் சிறந்த இசைக்கருவிகளும் மிக மதிப்புள்ள ஒளியூட்டுகின்ற ஒரு இசைப் பண்பாட்டின் தெளிவுகளாகும் என்ற மேற்கத்திய இசை இரசிகர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். நமது இசையின் முக்கியப் பிரிவுகளாக இந்துஸ்தானி இசையைக் குறித்தும் கர்நாடக இசையைக் குறித்தும் அறிந்து கொள்வதற்கான ஒரு அலகாகும்.

### உள்ளடக்கம்

இந்திய இசை வரலாறு, நடைவேறுபாடு ஒப்புமைகள், அந்தந்த துறையிலுள்ள வல்லுநர்கள், எளிய பாடல் வடிவங்கள் ஆகியவை இந்தப் பாடப் பகுதியில் உட்படுத்தப்பட்டுள்ளன.

### கற்றல் அடைவு

- கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகிய இந்திய இசைப்பிரிவுகளைக் குறித்து அறிந்து கொள்ளுதல், சில இசை வடிவங்களைப் பாடுதல்.

### கருத்து, அறிவு

- இந்தியாவின் செவ்வியல் பாடப்பிரிவுகளாகும் கர்நாடக இசையும், இந்துஸ்தானி இசையும்.
- கர்நாடக இசையில் ஏராளம் இராகங்களும், தாளங்களும் உண்டு.
- சமூக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் கர்நாடக இசை.
- இரு இசைப் பிரிவிற்கும் வெவ்வேறான பாடல்நடை உள்ளது.
- இரண்டு நடைகளுக்கிடையே ஒப்புமை உள்ளது. வேற்றுமைகளும் உள்ளன.

### செயல்முறை

- இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை கேட்க வைத்தல்.
- குவுவாகவும் தனியாகவும் பாடுதல்.

## மதிப்பீடு

- எளிய வினாக்கள் வழியாக மதிப்பீடு செய்தல்.
- இசை நடையைக் குறித்த பிரித்தறிவு
- பாடுவதை மதிப்பீடு செய்தல்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு-1*

- இந்துஸ்தானி இசை கச்சேரியுடையவும், கர்நாடக இசைக் கச்சேரியுடையவும் சில முக்கிய பகுதிகளைக் கேட்க வைத்தல் ( குறுந்தகடு/ பாடிக்கேட்க வைத்தல்)
- இரு நடைகளும் மதிப்பீடு செய்து பிரதிபலிக்கும்படிக் கூறுதல்.
- மதிப்பீட்டுக் குறிப்புகள்
    - இந்த பாடல் நடையிலுள்ள இசை நிகழ்த்துதல்கள் உங்களுக்கு பழக்கம் உண்டா?
    - இந்த இசைகள் எந்த இசை அமைப்பைக் குறிப்பிடுகின்றன?
    - நமக்குப் பழக்கமான மக்கள் சார்ந்த பாடல்கள் அறிமுகம் எந்த நடையில் பாடக் கேட்கிறோம்?
    - இரு நடைகளுக்கும் இடையிலான வேற்றுமை என்ன?

*விடைகள்*

- சானல்களில் ,குறுந்தகடுகளில், பொது அரங்குகளில் இந்த இரு நடையிலான இசை நிகழ்த்துதல்களைக் கேட்டுள்ளோம்.
- கர்நாடக இசைநடை, இந்துஸ்தானி இசைநடை
- கர்நாடக இசைநடை
- பாடும் முறையிலும், வேகத்திலும்.

*விளக்கம்*

(இரு முக்கிய நடைகளைக் குறித்தும்)

இந்தியாவிற்கு முக்கியமான இரு இசைப்பிரிவுகள் உள்ளன.

- *இந்துஸ்தானி இசை*

  வெளிநாட்டு இசையுடன் இணைந்து உருவான ஒரு இசைப் பிரிவாகும். இந்தியாவின் வடமாநிலங்களில் நடைமுறையில் உள்ளது.

  பதிமூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் இந்த புதிய இசைப்பிரிவுகள் உருவம் கொண்டது. சௌக்க காலத்தில் தொடங்கும் பாடல் முறையாக இடை காலத்தைக் கடந்து துருத காலத்தை அடைகிறது. பதிநான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஹரிபாலனின் சங்கீத சதாகரத்தில் இந்துஸ்தானி இசை சரியாக வரையறுக்கப்பட்டுள்ளது.

  இந்துஸ்தானி இசையின் இராக அமைப்பின் முக்கியமான பத்து தாட்டுகள் (இராகங்கள் ) உள்ளன.

- *கர்நாடக இசை*

  இந்திய இசைப் பாரம்பரியத்தை அதிகமாக உட்கொண்ட இசைநடை.

  இந்துஸ்தானி இசையின் உற்பத்திக்குப் பின்பும் தென்னிந்தியாவில் பழைய நடையை பின்பற்றி வந்த இந்த இசை நடை பிற்காலத்தில் புரந்தரதாசர் சீர மைத்து மும்மூர்த்திகளாகிய தியாகராஜ சுவாமிகள், முத்துச்சுவாமி தீக்ஷிதர், ஷியாம சாஸ்திரிகள் ஆகியோரின் இசை நன்கொடைகளால் வளப்படுத்த வும் செய்தது. கமக முக்கியத்துவம் அதிகமுள்ள இசையாகும்.

  இடைக்காலத்தில் (Medium tempo) இசை எழுத்துகளை சாதாரணமாகப் பாடி வருகின்றனர். கிருதிகளும், கீர்த்தனைகளும் பக்திரசத்திற்கு கூடுதல் முக்கி யத்துவம் அளிக்கின்றன. இராக அமைப்பு முறையும், வேறுபாடான தாளங் களும் ஏராளம் உண்டு.

- அதிகமான தகவல்களைச் சேகரிப்பதற்காக உதவி நூற்களை அளிக்கலாம்

  *சங்கீதசாஸ்தாமிர்தம் - ஏ. டி. மாதவன்*

  *இந்துஸ்தானி சங்கீதம்- ஏ. டி. மாதவன்*

  *கர்நாடக சங்கீத சரித்திரம்- கெ. டி. இரவீந்திரநாத்*

  *சங்கீத சாஸ்திர நவசுத- ஜி. தேவராஜ்*

  *தக்ஷிண இந்தியன் சங்கீதம்- ஏ. கே. இரவீந்திரநாத்*

- தகவல் சேகரிப்பு, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

  உற்பத்தி, வரலாறு

  நடைவேறுபாடு

  சிறப்பு

  வல்லுநர்கள்

- இந்தத் துறையில் புகழ்பெற்ற பாடர்களின் படசேகரிப்பு.
- சேகரித்த தகவல்களைத் தனிநபராக வெளியிடுதல்.
- ஒவ்வொருவரும் கண்டுபிடித்த தகவல்களை ஒருங்கிணைத்து தொகுப்பாக மாற்றுவதற்கு வகுப்பின் கலைத் தலைவருக்கு பொறுப்பளித்தல். இந்தத் தொகுப்பை வகுப்பறை நூலகத்தில் கூடுதல் வாசிப்பிற்காக ஒப்படைத்தல்.

*செயல்பாடு-2*

- இந்துஸ்தானி இசையினுடையவும், கர்நாடக இசையினுடையவும் ஒற்றுமை வேற்றுமைகளைப் பிரித்தறிதல்.
- சப்தஸ்வரங்களை இரு நடையிலும் பாடிக் கேட்க வைத்தல் குழந்தைகளைப் பாடவைத்தல்.
- எளிய இசை வடிவங்கள் ( இரு நடையில் உள்ளவை) கேட்க வைத்தல் ( பஜனை, கசல், தில்லான, சொற்கள் எளிய கீர்த்தனைகள்.....) ஆகியவற்றை உட்படுத்தவும்.

- ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டுபிடிப்பதற்கான விவாதம்.

- நான்கு குழுக்களாப் பிரித்து நடத்தலாம்.
- குழுத் தலைவர் விவாதத்தின் முக்கியமான கருத்துகளை ஒருங்கிணைத்து எழுதி வாசித்தல்
- ஆசிரியரின் கூடுதலான விளக்கம்.

*ஒற்றுமை*

- ♦ அடிப்படை ஸ்வரங்கள் ஒன்றாகும்.
- ♦ ஒப்புமை உள்ள இராகங்களும் தாளங்களும் உண்டு.
- ♦ இசை வடிவங்களின் பெயர்களில் மாற்றம் இருந்தாலும் ஒரே தன்மையுடையவையும் உள்ளன.
- ♦ தாளங்களும் ஒப்புமைகளும் பார்க்கலாம்.
- ♦ இசை நிகழ்த்துதல்களில் சில கருவிகள் இருநடையிலும் பொதுவாகப் பயன் படுத்தப்படுகின்றன.

*வேறுபாடு*

ஸ்வர இடங்கள் ஒன்றாக இருந்தாலும் பாடும்முறை வேறுபட்டது.

- ♦ இந்துஸ்தானியில் சவுக்க காலத்தில் பாடும்போது கர்நாடக இசையில் இடைக் காலத்தில் பாடல் தொடங்கப்படுகிறது.
- ♦ கர்நாடக இசையின் வேறுபட்ட பாடல் வடிவங்களுக்கு ஒரே தாளங்கள் பயன் படுத்தப்படுகின்றன. எ.கா:- ரூபகதாளம் (கீதம் -ஸ்ரீகனராத மலகளிராகம் (ரூபக தாளம்- கிருதி- தேவ தேவ) ரூபகதாளம் (ஜாவளி சாரமைனா பிகாங்)
- ♦ இந்துஸ்தானி இசையில் ஒவ்வொரு இசை வடிவத்திற்கும் ( பாடல் வடிவத் திற்கும்) தனிப்பட்ட தாளங்கள் பயன்படுத்தப்படுகிறது. எகா- துருபத் பாடும் போது, சவுதாள், தீவிரதாள் ஆகியவையும் கயால் பாடும்போது தீன்தாள், ஏகதாள், ஜம்பதாள் ஆகியவையும் பயன்படுத்தப்படுகிறது
- ♦ இராக பாவங்களிலும், இராக காலங்களிலும் வேறுபாட்டைப் பார்க்க முடியும்.

- அதிகமான தகவல்களை முன்பு குறிப்பிடப்பட்டுள்ள உதவிநூற்களிலிருந்து சேகரிக்கவும்.

***செயல்பாடு-3***

- இரு நடையிலும் உள்ள எளிய பாடல் வடிவங்கள் பயிற்சிகள் வெளியீடு.

  *இந்துஸ்தானி- சலியே குஞ்சனுமே...*

  *கர்நாடக- அலை பாயுதே...*

- அடிகளைச் சொல்லிக் கொடுத்தல்.
- பாடல் வடிவங்கள் ஒழுங்கான இராக, தாளம் ஆகியவற்றைக் குறித்த சேகரிப்பு.
- இராகபாவம் புரிந்து கொள்வதற்கு இராகத்தில் எளிய பாடுதல்.
- இதே ராகத்தில் வரக்கூடிய சில திரைப்படப் பாடல்களைக் குறித்த விமர்சனம். ஒவ்வொரு அடியும் தாளம் போடாமல் பாடுதல்.
- ஏற்று பாடவைத்தல்.
- மெட்டு மனதில் புரிந்தபின்பு தாளத்தில் பாடிப் பழகுதல்.

- குழுக்களாகப் பாடுதல்.
- தனிநபராகப் பாடுதல்.
  (இரு பாடல்களும் இத்தகைய செயல்பாடு வழியாக பாடிப் பழகுதல்.)

## மதிப்பீடு

- இசை நடையைப் பிரித்தறிதல்.
- தகவல் சேகரிப்பு.
- வெளியிடுதல்
- பாடுதல்

## தொடர்ச் செயல்பாடு

- இரு நடையிலுமுள்ள பாடல்களைக் கேட்டல்.
- படித்த இரு பாட்டோடு ஒப்புமை உள்ள பிற பாடல்களைக் கண்டுபிடித்தல்

## ஒருங்கிணைத்தல்

இந்திய இசையில் முக்கியமானதும் , சிறப்பானதுமான இரு பிரிவுகளே இந்துஸ்தானி இசையும், கர்நாடக இசையும். இந்த இருநடைகளுக்கும் அதனுடையதான வேறுபாடுகள் இருந்தாலும் சில ஒற்றுமைகளையும் நம்மால் பார்க்க இயலும். இனிமையான இந்த இரு நடைகளைக் குறித்தும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டியது வரும் தலைமுறையின் தேவையாக உள்ளது. நமது இந்தியாவின் விலை மதிக்க முடியாத இந்த இரு நடைகளும் உலக இசை வரலாற்றில் நிர்ணாயகப் பங்கை வகிக்கின்றன.

# அலகு – 2 இராகங்கள்

காதுகளுக்கு இனிமை அளித்து மனித இதயங்களை பல்வேறு பாவநிலைகளுக்கு கொண்டு செல்வதற்கு இராகத்தைப் போன்று வாயப்புள்ள இசை காரணிகள் வேறொன்றுமில்லை. இராகம் என்பது இசை உலகிற்கு இந்தியாவின் சிறந்த நன் கொடையாகும். மேகம் வானத்திற்கு அழகூட்டுவதைப் போன்று இராகத்திற்கு உயிரூட்டுவது ஸ்வர சமூகங்களாகும். பொருத்தமான ஸ்வரங்களின் இணையும் பாதை வழியாக ஒரு இராகம் பிறக்கிறது. ஒரு பாடலைப் பிற பாடலிலிருந்து வேறுபடுத் துவது அதன் வேறுபட்ட மெட்டாகும். மெட்டுகள் இராகத்திலிலிருந்து உருவாகின்றன. நம்முடைய இசைக்கு இராக வேறுபாடு அதிகமுள்ளதினால் இத்தகைய மெட்டு வேறு பாடுகள் நமக்கு கிடைத்தது. ஒவ்வொரு மெட்டுகளும் மொழியின் உதவியில்லா விடிலும் மனதில் ஒழுங்கான பாவத்தைப் பகிர்ந்து அளிக்கிறது. அன்றாட வாழ்க் கையில் மறக்க முடியாத அனுபவங்களுடன் இணைந்த ஒரு மெட்டு ஒவ்வொருவர் மனதிலும் மறைந்து இருக்கிறது.

## உள்ளடக்கம்

நம்முடைய இசை அமைப்பில் கூடுதலாக அறிமுகமானதும், இனிமையானதுமான இராகங்களைக் குறிப்பிட்ட பாடங்கள் வழியாகவும் அறிந்து கொள்வதற்கும் பாடுவ தற்குமான செயல்பாடுகள் இந்த அலகில் உள்ளன.

## கற்றல் அடைவு

அறிமுகமான பாடல்கள் வழியாக இராகங்களைப் பிரித்தறிதல் ( திரைப்பட, நாடக, தனிப்பாடல்கள்)

## கருத்து, அறிவு

- பாடல்கள் இராகத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- மெட்டுகள் இராகங்களிலிருந்து உருவாகின்றன.
- ஒரே இராகத்திலிருந்து வெவ்வேறு பாவத்திலுள்ள மெட்டுகளைப் படைக்க இயலும்.
- இராக அறிமுகம்- பாடல்களில் இராகம் பிரித்தறிதல்.

## செயல்முறை

- பழக்கமான திரைப்படத் தனிப்பாடல்களைக் கேட்க வைத்தல்.
- ஒரே ராகத்தில் மெட்டுவேறுபாடு, பாவ வேறுபாடு ஆகியவற்றைப் பிரித்தறிதல்.
- ஒற்றுமையுள்ள மெட்டுகளைப் பிரித்தறிதல்.
- எந்த இராகம் என்பதை நிற்ணயித்தல்.

## மதிப்பீடு

- வேறுபாட்டைப் பிரித்தறிதல்.
- ஒற்றுமை, இரசிப்பு
- பாடுதல்

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு -1*

- குழந்தைகள் கேட்டு அறிமுகமான திரைப்படப் பாடல்கள் ( பழையதும், புதியதும் கேட்க வைத்தல்)
  1. கருமிழிக் குருவியே...
  2. நீலகிரியுடே...
  3. மௌன சரோவர...
  4. சுமங்கலி நீ...
  5. அம்ம மழக்காறினு..
  6. அனுராகிணீ...
  7. சந்தன மணிவாதில்...
  8. மாரிவில்லின்...
  9. சொர்ணச்சாமரம்..
  10. காணும் போள் பறயாமோ..
  11. களிவீடுறங்ஙியல்லோ...
  12. எனிக்கொரு பெண்ணு...
- பாடல்களின் பல்லவியும் அனுபல்லவியும் கேட்க வைத்தால் போதும்
- பாடல்களைக் கேட்ட பின் ஆசிரியரின் அறிவுரைகளுக்கேற்ப குறிப்புகளுக்குக் குழந்தைகள் பிரதிபலித்தல். .

- நீங்கள் கேட்ட பாடல்களில் ஒத்த மெட்டு உள்ளவைகளைக் குறித்து வைத்தல்?
- தனிநபராக வெளியிடும் வாய்ப்பு
- குழந்தைகளின் விடைகளைக் கரும்பலகையில் ஆசிரியர் எழுதுதல்.
- பிற குழந்தைகளின் கருத்துகள் ஆசிரியரின் உதவி ஆகியவற்றின் அடிப்படையில் ஒழுங்குப்படுத்துதல்
    1. கரிமிழிக் குருவியே...
       மௌனசரோவர...
       சுமங்கலி...
    2. நீலகிரியுடெ...
       களிவீடுறங்ஙியல்லோ...
       மாரிவில்லின்...
    3. அம்ம மழக்காநினு..
       சந்தன மணிவாதில்...
    4. அனுராகிணி...
       சொர்ணச்சாமரம்..
       காணும்போள் பறயாமோ..
- ஆசிரியரின் கேள்வி
    - நீங்கள் அட்டவணைப்படுத்திய பாடல்களுக்குப் பாடல்களின் மெட்டு களுக்கு ஒற்றுமை உள்ளது எதனால்?
    - நமது வகுப்பில் சகோதரர்களாகிய நீரஜிற்கும் நிவேதிற்கும் ஒற்றுமை உள்ளது எப்படி?
- குழந்தைகள் வாய்மொழியில் பிரதிபலிப்பதற்கான வாய்ப்பு
- <u>ஆசிரியரின் விளக்கம்.</u>

  *உலக இசைப் பண்பாட்டிற்கு இந்திய இசையின் விலைமதிக்க முடியாத நன் கொடையாகும் இராகம். ஒவ்வொரு மெட்டுகளும் இராகங்களிலிருந்து தோன்று கிறது. ஸ்வரங்களின் இணைப்பிலிருந்து இராகங்கள் தோன்றுகிறது. பாடல்களின் மெட்டுகளுக்கு ஒற்றுமை இருந்தால் அந்த மெட்டுகள் தோன்றியிருப்பதது ஒரே இராகங்களிலிருந்தாகும். ஒரே இராகத்தில் தோன்றும் மெட்டுகளுக்கு ஒற்றுமை இருக்கும். நிவேதிற்கும், நீரஜிற்கும் ஒற்றுமை உருவாக இது தான் காரணம் இவர்கள் இருவரும் ஒரே பெற்றோர்களின் குழந்தைகள் ஆவர்.*

## *செயல்பாடு -2*

- எனில் இதே ராகங்களிலிருந்து ஒழுங்குபடுத்தப்பட்ட அதிகமான பாடல்களை நமக்குக் கவனிக்கலாம்.
- முன்பு தயாரித்த அட்டவணையில் இனி கேட்பவற்றையும் உட்படுத்த வேண்டுமா?
- பாடல்களைக் கேட்க வைத்தல்.
    1. ஓர்மகளே...
    2. துவதசியில்...
    3. இந்நலெ மயங்ஙும்போல்..
    4. தேவாங்கனங்களே..
    5. ஒருமயில்பீலியாய் நான்...

6. மௌலியில் மயில்பீலி...
7. கணிகாந்நேரம்...
8. மஞ்சள் பிரசாதமும்..
9. கனகச் சிலங்க கிலுங்கி கிலுங்கி...
10. வித்தியஸ்தாளமொரு...
11. சத்ய சிவ சௌந்தரிய...
12. சொர்கநந்தின்...
13. ஓம் நமச்சிவாயா...
15. துவாரகே...
16. கரிமுகில் காட்டிலே...
17. சன்யாசினி...
18. சொர்ணமுகிலே....

| | |
|---|---|
| 1.<br>*சொர்ணமுகிலே..*<br>*கரிமுழிக் குருவியே...*<br>*மௌன சரோவரம்...*<br>*சுமங்கலி நீ..*<br>*ஓர் மகளே...*<br>*துவாரகே...*<br>*சன்யாசினி...* | 3.<br>*அம்மமழக் காறினு...*<br>*சந்தன மணிவாதில்...*<br>*ஓம் நமச்சிவாய...*<br>*துவதசியில்..* |
| 2.<br>*நீலகிரியுடெ...*<br>*களிவீடுறங்கியில்லே..*<br>*மாரிவில்லின்...*<br>*எனிக்கொரு பெண்ணுண்டு...*<br>*மவுலியில் மயில்பீலி...*<br>*கணிகாணுந் நேரம்...*<br>*மஞ்சள் பிரசாதமும்...*<br>*கனக சிலங்க..*<br>*வித்தியஸ்தனாமொரு...*<br>*கரிநிழல்..* | 4.<br>*அனுராகினி..*<br>*சொர்ணச்சாமரம்...*<br>*கணும்போல் பறயாமோ...*<br>*இந்நலெ மயங்னும் போள்...*<br>*தேவாங்கணங்ஙள்...*<br>*ஒரு மயில் பீலியாய் ஞான்...*<br>*சத்யசிவ சவுந்தர்ய...*<br>*சொர்கநந்தினி...* |

- குழந்தைகள் அட்டவணைப்படுத்துதல்.
- நான்கு இராகங்களில் வடிவமைக்கப்பட்ட பாடல்களை நீங்கள் இப்போது அட்டவணைப்படுத்தினீர்கள் இந்த இராகங்கள் எவையெனக் கூறமுடியுமா?
- ஆசிரியர் இராகங்களைக் குறித்து சிறுவிளக்கம் அளித்தல்.

நான்காவது குழுவில் நீங்கள் உட்படுத்திய பாடல்கள் கல்யாணி இராகத்தில்

வடிவமைக்கப்பட்டுள்ளது. எழுபத்தி இரண்டு மேளகர்த்தா (ஜனக இராகங்கள் சம்பூர்ண இராகங்களாகும் உள்ளதென நாம் முன்பு புரிந்துகொண்டோம். இதில் 65- வது இராகம் மேச கல்யாணி என்றழைக்கப்படும் கல்யாண இராகம் ஆகும். ஆரோகண, அவரோகன ஸ்வர இடங்கள் இவையாகும். ஷட்ஜம், சதுர்சுருதி, ரிஷபம், அந்தர காந்தாரம், பிரதிமத்யமம், பஞ்சமம், சதுர்சுருதி தைவதம், காகளி நிஷாதம்

எல்லா ஸ்வரங்களும் தீவிரமான ஒரு இராகம் கல்யாணி. 122 வகையிலான ஜனராகங்கள் கல்யாணி இராகத்திற்கு உண்டு எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது செவ்வியல் இசை பயிலும் மாணவிகள் இந்த இராகத்தில் கீதங்களும், ஜதிஸ் வரங்களும், வர்ணங்களும், கிருத்களும், கீர்த்தனைகளும் ஏராளம் கற்கிறார்கள்

*கீதம்.*

கமல ஜாதஇ விமல சுனயன....

(திஷ்றஜாதி திரிபுடதாளம்)

ஜதிஸ்வரம்- சா,,, னி,,காரி, நி, ரி

ரூபகதாளம்.

வர்ணம்- வனஜாக்ஷி.

கீர்த்தனைகள்- 1. உன்னையல்லால் - ஆதிதாளம்

2.ஹிமாத்திரிசுதே... - ரூபகதாளம்

3.நிதித்லாசுகமா- மிஸ்றசாப்பு.

---

மூன்றாவது குழுவிலுள்ள பாடல்கள் ஹிந்தோள இராகத்தில் அறியப்படுகிறது. ஹிந்தோளம் என்பது ஒரு ஜனிய இராகமாகும். பஞ்சமஸ்வரம் இல்லாத இராகம்- பஞ்சமவர்ஜிய இராகம்

ஆ:சகமசநிசா அ: சனிதமகஸ

ஷட்ஜம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம். சுத்த தைவதம், கைஷிநிஷாதம் ஆகியவை ஸ்வர இடங்கள்

மேளகர்த்தா இராகமான ஹனுமத்தோடியின் ஜன்யமாகும்.

மாமவதுஸ்ரீ சரஸ்வதி (ஆதிதாளம்)

பத்மநாப பாஹி (ஆதிதாளம்)

சாமஜவரகமன... (ஆதிதாளம்)

இதனை சாதாரணமாக கச்சேரிகளில் பாடக் கேட்கிறோம்.

ஆதிகால இசைநூற்களில் 'மாளவகொசிகம்' என்ற பெயரில் இந்த இராகம் அறியப்படுகிறது.

மிகப் பழமையான இராகங்களில் ஒன்று ( இந்திய இசையில்)

---

இரண்டாவது குழுவில் உட்படுத்திய பாடல்கள் மோகனம் ராகத்தில் வடிவமைக் கப்பட்டதாகும்.

மோகனம் என்பது ஒரு ஜனகீய இராகமாகும்.

ஆதிகாலங்களில் நாடகப் பாடல்கள் ஜனகீயமாக்குவதில் இந்த இராகத்திற்கு பெரும்பங்கு உள்ளது.

புதியகால மக்கள் ஏற்றுபாடிய ஏராளமான திரைப்படப் பாடல்கள் இந்த இராகத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆரோகணத்தில் ச ரி க ப த ஸ
அவரோகணத்தில் ச த ப க ரி ஸ

ஷட்ஜம், சதுர்சுருதி, ரிஷபம், அந்தர காந்தாரம், சதுர்சுருதி, தைவதம், ஆகிய வையே ஸ்வர இடங்கள் கரிகாம்போஜி என்ற மேளகர்த்தா இராகத்தின் ஜன்ய இராகமே இந்த இராகம் எனக் கூறப்படுகிறது.

வரவீணா முத்ரபாணி.. என்ற கீதம் (ரூபகதாளம்), நிந்து கோரி ... எனத் தொடங்கும் ஆதி தாள வர்ணம், சதாபாலய என்ற ஆதிதாள கீர்த்தனை, பரிபாஹிமாம் நிறு கரே முராசே...என்ற கிருதி இராமநிந்நுனம்பினா... என்ற இராகபாவம் இராகத் தின் பெயரைப் போன்று இனிமையானது.

.

---

முதல் குழுவில் உட்பட்ட பாடல்கள் ( காப்பி) இராகத்தில் தோன்றியவையாகும் இருபத்தி இரண்டாவது மேளகர்த்தா இராகத்தில் ஜன்யம்

ஆரோகணம்- சரிகமபதனிச
அனரோகணம்- சனிதனி பகாரிச

அன்யஸ்வரங்கள் மூன்று- அந்த காந்தாரம், சதுர் சுருதி தைவதம், காகளி நிவாதம் ஸ்வர இடங்கள்- ஷட்ஜம், சதுர்சுருதி, ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்ய மம், பஞ்சமம், சுத்த தைவதம், கைஷிசி நிசாதம்.

இந்த ராகத்தை மிஸ்றகாப்பி எனவும் அழைப்பர்.

பக்தி, கருணம், சோகம் ஆகிய பாவங்கள் இராகத்திற்கு உண்டு.

கிருதிகள்- மாயா கோப மால...
விகரமான சராம,...
என்ன தவம் செய்தனே...
சுமசாயக...

திரைப்பட பாடல்களும், தனிப்பாடல்களும் இசை அமைப்பாளர் இந்த இராகத்தில் உருவாக்கக் கூடாத ஸ்வரங்களை இணைத்துப் பயன்படுத்துவதுண்டு.

***செயல்பாடு -3***

- நான்கு இராகங்களிலாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பாடல்களை மீண்டும் இராகங்களின் வரிசையில் குழந்தைகளைக் கேட்க வைத்தல்.
    - ஒரே இராகத்தில் வடிவமைக்கப்பட்ட பாடல்களுக்கு ஒரே பாவம் உள்ளதா? (எ.கா- மோகன இராகத்தில் எனிக்கொரு பெண்ணுண்டு, களிவீடுறங்ஙி யல்லோ...)
    - இணையான பாவங்கள் உட்கொண்ட பாடல்கள் நீங்கள் கண்டுபிடித்த நான்கு பிரிவுகளிலும் வருவதில்லையா?
    - ஒவ்வொரு பாடலினுடைய கருத்திற்கேற்ற மெட்டு தானா?
    - நீங்கள் கேட்ட பாடல்களில் என்னென்ன பாவங்கள் உள்ளன?
    - இந்த வகைகளில் பாடல்களை அட்டவணைப்படுத்துங்கள்?
- குழந்தைகளின் பிரதிபலிப்பை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்..

- *ஒரே இராகத்தில் மெட்டமைத்த வெவ்வேறு பாடல்களுக்கு வெவ்வேறு மெட்டுகள் உள்ளன.*
- *இணையான பாவங்கள் உள்ள பாடல்கள் கேட்ட நான்கு இராகங்களிலும் வருகிறது.*
- *எல்லா பாடல்களுக்கும் கருத்திற்கேற்ற மெட்டு உள்ளது.*
- *மகிழ்ச்சியும், கவலையும், அன்பும், பக்தியும் நாங்கள் கேட்ட பாடல்களில் உள்ளன.*

- ஒரே பாவங்கள் உட்கொண்ட பாடல்களை அட்டவணைப்படுத்துதல்.
  மகிழ்ச்சி :- நீலகிரியுடெ... எனிக்கொரு பொண்ணுண்டு...மஞ்சள் பிரசாதம்...வெத்யஸ்தானாமொரு...துவதசியில்....
  கவலை :- சுமங்கலி...., களிவீடுறங்கியல்லோ...., அம்மமழக்காநினு...., கரிமுகில் காட்டிலே,,,
  பக்தி :- மவுலியில் மயில்பீலி... கணிகாணும் நேரம்... ஓம்நமச்சிவாயா...ஒருமயில் பீலி...சத்ய சிவ....சொர்க்கநந்தினி...
  விரகம் :- ஓர்மகளே...மாரிவில்லின் தேன்மலரே...
  காதல், அன்பு :- சந்தன மணிவாதில்...அனுராகினி...சொற்ணசாமரம்...காணும் போல் பறயாமோ...

## ஒருங்கிணைப்பு

எந்த பாவத்தையும் உருவாக்க உதவும் ஏராளம் இராகங்கள் இந்திய இசையில் உள்ளன. இன்று எல்லா துறையிலும் ஆராய்ச்சிகள் நடைபெறுவதைப் போன்று இசையின் இராகப் பயன்பாடுகளிலும் அநேக ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒரே இராகத்திற்கு பல்வேறு பாவங்கள் வெளியிடும் வகையில் வடிவமைக்க இயலக்கூடிய அநேக இசை வல்லுநர்கள் நமக்கு உள்ளனர்.

## மதிப்பீடு

- பாடல்களின் ஒற்றுமை.
- இரசிப்பு
- வேற்றுமைகளைப் பிரித்தறிதல்
- பாவதளம்
- பாடுதல்

## தொடர்ச் செயல்பாடு

- இன்னும் கேட்டுக்கொண்டேயிருக்கின்ற பாடல்களின் மெட்டு ஒற்றுமையை கண்டுபிடித்து எந்த இராகங்களில் இருந்து தோன்றியது என்பதை ஆசிரியரின் உதவியுடன் கண்டுபிடிக்க வேண்டும்.
- ஒரே இராகத்தில் வரக்கூடிய பல்வேறு பாவங்களில் உள்ள பாடல்களைக் கண்டுபிடித்தல்.

## குறிப்புத் தேட்டம்

- இராகலக்ஷணதீபிக- டாக். எஸ். பாக்கியலட்சுமி.
- இராகசுதார்ணவம்- கெ. டி. இரவீந்திரநாத்.

# அலகு - 3 தென்னிந்திய இசை

புராதன இந்திய இசை வகைளில் சுவடுவைத்து முன்னேறிய இசைப்பிரிவு தென்னிந்திய இசை அல்லது கர்நாடக இசையாகும். கர்நாடக இசைப்பயிற்சிக்கு மிக ஒழுங்கானதும் ,தெளிவானதும், வசதியானதுமான கற்றல் ஒழுங்கை உருவாக்கி புரந் தரதாசர் கர்நாடக இசை பிதா மகன் என சிறப்பிக்கப்படுகிறார். கர்நாடக இசை உலகில் விலை மதிக்க முடியாத நன்கொடைகள் வழங்கிய மும்மூர்த்திகளும் பின் தொடர்ந்து வந்த இசைப் பண்டிதர்களும் அடிப்படையாக பின்பற்றிய இசை ஒழுங்கு புரந்தர தாசருடையது ஆகும். வேறுபாடுகள் நிறைந்ததும் இராகபாவமும் பிற இசைக் கூறுகளும் முழுமையாக உட்கொள்ளும் ஏராளமான இசை வடிவங்கள் கர்நாடக இசைப்பிரிவில் உள்ளன. தொடக்கத்தில் படிக்க வேண்டிய பயிற்சிக்கான வழிகளின் பின்தொடர்ச்சியான ஜதிசுரம், சுவரஜதி, கீர்த்தனா இவற்றை உட்படுத்தி தயாரித்த இந்தப் பாடப்பகுதி இசைக்கல்வி மாணவர்களுக்கு முறையான இசைப்பாடங்கள் படிப்பதற்கான வசதியை உருவாக்குகிறது.

## உள்ளடக்கம்

ஸ்வரஜதி, ஜதிஸ்வரம், வர்ணங்கள், கீர்த்தனைகள் ஆகியவை பாடுவதற்கு தேவையான செயல்பாடுகள் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு இசை வடிவத்தினுடையவும் சிறப்புகளும் பாடும்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளைக் குறித்தும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவு

சுவரஜதிஸ வர்ணங்களி கீர்தனைகள் சொற்கள் பஜனை ஆகியவை பாடுதல்.

## கருத்து, அறிவு

- சுவரஜதி, வர்ணங்களி, கீர்த்தனைகள், சொற்கள், கசல் பஜனை ஆகியவை கர்நா டக இசை வடிவங்களாகும்.
- கசல் என்பது இந்துஸ்தானி இசைப்பிரிவில் எளிய இசை வடிவமாகும். தென்னிந்திய இசை உலகில் எளிய இசை வடிவமாகும் நடைமுறையில் உள்ளது.
- ஸ்வரஜதி வர்ணம் ஆகியவை நடனநிகழ்த்துதல்களுக்கு உதவும் பயிற்சிப் பாடல் களாகும்.
- வெவ்வேறு இராகங்களிலும் தாளங்களிலும் இவை பாடப்படுகின்றன.

## செயல்முறை

- ஸ்வரஜதி, வர்ணங்கள் ஆகியவை கேட்டல்
- சிறப்புகளைக் கண்டுபிடித்தல்.
- பின்பற்றியுள்ள பாடல்.
- ஸ்வரஜதி, ஜதிசுவரம் ஆகியவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பிரித்தறிதல்.
- பதவர்ணம், தருவர்ணம், தாளவர்ணம் ஆகியவை பிரித்தறிய முயற்சி செய்தல்.

## மதிப்பீடு

- பாடுவதன் மேன்மை
- எளிய வினாக்கள்
- ஒன்றுக்கொன்று மதிப்பீடு

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு -1*

- கீதம், சுவரஜதி, ஜதிசுவரம் ஆகியவற்றின் குறுந்தகடுகளைக் கேட்க வைத்தல். (முன் வகுப்பில் அறிமுகமான படித்த கீதத்தை உட்படுத்தலாம்)
- அறிமுகமான இசை வடிவம் தேர்வு செய்வதற்கு கூறுதல். பிற இசை வடிவங்க ளுடையவும் சிறப்புகளைக் குறித்து வைக்கவும் கூறுதல். அறிமுகமான இசை வடிவத்திலிருந்து பிற இரு பாடங்களுக்குள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறித்து வைக்கும்படி கூறுதல். குறிப்பு தனி நபர் சார்ந்தது.
- குழந்தைகளின் குறிப்பு விளக்கம்.
- குறிப்பு விளக்கத்தின் பாகமாக இரு இசைவடிவத்தையும் அறிமுகம் செய்தல்.

  *ஜதிசுவரம் என்றால் என்ன ?*

  ஜதிசுவரம் என்பது இலக்கிம் இல்லாத சுவரம் மட்டும் பயன்படுத்தியுள்ள ஒரு வகைப் பாடல் வடிவமாகும். ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒரே முறையில் அல்லாமல் பல ஜதிகளாக வரக்கூடிய பாடல் வடிவமாகும். ஒரு பாடலின் இரா கம் முழுமையாக உட்கொள்ளும் வகையில் பாடுவதற்கு வடிவமைக்கப்பட்டுள் ளதால் நடனத்திற்கான இசை என்ற நிலையில் அறியப்படுகிறது. சில ஜதிசுவரங் கள் பின்பு இலக்கியம் சேர்ந்து சுவரஜதிகளாக மாறியுள்ளன.
- கல்யாணி சங்கராபரணம், தோடி போன்ற ஜசுசுவரங்களைக் கேட்க வைத்தல்.
- ஒவ்வொரு ஜதிசுவரங்களும் பாடும் போது அவற்றில் இராகத்தைக் குறித்தும் விளக்கம் அளிக்க வேண்டும்.

  *ஜதிசுவரம் எழுதியவர்கள்- சியாமசாஸ்திரிகள், சின்ன கிருஷ்ணய்யர். ஆதியப் பையா.*
- பாட வேண்டிய முறை- சௌக்க காலத்தில் பல்லவி அனுபல்லவி, சரணம் ஆகியவற்றின் சுவரசஞ்சாரம் ஒழுங்காக தாளம் போட்டு பாடி உறுதி செய்தல்
- இடைக் காலத்தில் பாடுதல்.
- ஒலி இனிமைக்கான ஜதிசுவரங்களை அகாராதிஸ்வரங்களில் சௌக்க காலத்திலும்/ வேகக்குறைவு) இடைக்காலத்திலும் பாடிப்பழக வேண்டும்.
- இசைக் கருவிகளுடனும், நடனத்தின் பின்னணியாகவும் ஜதிசுவரங்கள் பாடுவதன் விசிடி கேட்க / பார்க்க வைத்தல்
- பயிற்சி பெற்ற ஜதுசுவரங்கள் குழுவாகவும் தனியாகவும் பாடுதல்.
- கூடுதல் ஜதிசுவரங்களைக் கேட்டல்/ (பல்வேறு இசை வல்லுநர்களின்) பாடல்நடை இராகசஞ்சாரம் ஆகியவை புரிந்து கொள்ளுதல்.

### *செயல்பாடு -2 : சுவரஜதி*

- கேட்டு படித்த இராகத்தில் ராரவேணு என்ற சுவரஜதி கேட்க வைத்தல் கேட்ட இசை வடிவத்தின் சிறப்புகள்- சிறு விவாதம்.

*விவாதக் குறிப்பு-*

இலக்கியம், சுவரம், ஜதி ஆகியன குறித்த அமைப்புச் சிறப்பு உட்படுத்திய விவாதம்.

- விவாதம் வழியாகச் சென்றடைந்த முடிவுகளுக்கு ஒளியூட்டுவதற்கு ஸ்வரஜதியைக் குறித்த வாய்மொழியிலான விவரிப்பு.

*சுவரஜதி எழுதியவர்கள்:-* சியாம சால்திரிகள் வாலாஜாபேட்டை கிருஷ்ணசாமி பாகவதர், சுவாதி திருநாள், சின்ன கிருஷ்ணதாசர், பொன்னையா பிள்ளை, சிவரஜ திகள் கீதங்களை விட அதிகமாக இரசிக்கலாம். இசைவடிவத்தையும் பாடுவதன் கதியையும் பொறுத்த வரையில் இவற்றிற்கு வர்ணங்களுடன் அதிக ஒற்றுமை உள்ளது.

சில சுவரஜதிகளில் சொல்கெட்டு ஸ்வரங்களும் கலந்து வருகின்றன.

பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகள் உள்ளது சிலவற்றில் பல்லவிக்கு பின்பு சரணங்கள் மட்டுமே இருக்கும்.

சுவரசஞ்சாரத்திற்கேற்ப இலக்கியம் பாடும் முறை இலக்கியங்கள் தேவ துதிகளாக வோ, வீரஆராதனையோ, சிறுங்காரமோ ஆக இருக்கும். நடனத்திற்கான ஒரு வகை இசை என்ற நிலையில் ஸ்வரஜதி தோன்றுகிறது.

- *ஸ்வரஜதி- பாடும் பயிற்சி*
- சுவரஜதியை சுவரப்படுத்தி எழுதுதல்.
- ஒவ்வொரு அடிகளும் சுவரங்களாகப் பாடுதல்.
- ஏற்று பாட வைத்தல்.
- பல்லவி/ அனுபல்லவி/ சரணங்கள்/ என்ற வரிசையில் பாட வைத்தல்.(சரியான தாளம் போட்டு)
- ஸ்வரங்கள் பாடி உறுதி செய்த பின் பொருத்தமான அடிகளைச் சேர்த்துப் பாடுதல், நன்றாகப் பாடி உறுதி செய்த பின் சௌக்க காலம், இடைக்காலம், துருத காலம் ஆகிய வேகநிலைகளில் பாடுதல்.
- வெவ்வேறு சுவரஜதிகள் பாடுதல்
  - இராகம்- பைரவி
  - இராகம்- கமாஸ்
  - இராகம்- தோடி
  - இராகம்- யதுகுலகாம்போஜி
  - இராகம்- ஆனந்தபைரவி
- பல்வேறு இசைவல்லுநர்களின் சுவரஜதி பாடலைக் கேட்க வைத்தல்.
- நடனத்திற்காக பாடப்பட்டுள்ள சுவரஜதி கேட்க வைத்தல்.
- சுவரஜதி, ஜதிசுவரம் வேறுபாடு?
- இலக்கியம் உள்ளது, இலக்கியமற்றது. சற்று பெரிய இசை எழுத்து.

## *செயல்பாடு -3 : வர்ணம் பாடுதல்/ அறிமுகம் செய்தல்.*

- சுவரஜதி/ வர்ணம் கேட்க வைத்தல்.
- ஆசிரியர் பாடுதல். குறுந்தகடு கேட்க வைத்தல்
- இரு இசைவடிவங்களுடையவும் தனித்தன்மைகளைப் பிரித்தறிதல்( கேட்டல் அடிப் படையிலான சிறு வினாக்கள் வழியாக)
- இதில் கூடுதல் சுவரங்களும், இலக்கியங்களும் உட்கொள்வது எந்தப் பாடல் வடிவத்தில்?

- பாடும்போது அதிக நேரம் எடுத்துக் கொள்வது எது?
- மிக வேகமாக எளிமையாகப் பாடிப் பழகுவதற்குக் கேட்ட இசைவடிவத்தில் அதிகம் உதவுவது எது?
- முதலாவது சுவரஜதி. இரண்டாவது வர்ணம் என்ற வரிசையில் கேட்கச் செய்தல்.
- வெளியிடுதல், தனிநபர்.

  *விடைகள்*

  கீதம்

  வர்ணம் (இரண்டாவது கேட்டது)

  இரண்டாவதில்- (சுவரஜதி)
- வெளியீட்டின் அடிப்படையில் ஆசிரியரின் விளக்கம்.
- இரண்டாவது பாடல் வடிவமும் வர்ணமுமாகும். பயிற்சிப் பாடல் பகுதிகள் உட்பட்டது.

*செயல்பாடு -4 :*

- இரண்டாவது கேட்ட இசை வடிவத்தைப் பாடுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- தனித்தன்மைகளைப் புரிந்து கொள்ளுதல்.
- *வர்ணத்தின் சிறப்புகள் (கரும்பலகையில் எழுதுதல்)*

  பயிற்சிப் பாடல்களில் வர்ணங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவை இராக பாவத்தை வளப்படுத்துகின்றன. இது அபூர்வ பயன்பாடுகள். சிறப்பு பயன்பாடுகள், ஜண்ட், தாட்டு, வரிசை பயன்பாடுகள் போன்றவை உட்பட்ட இசை வடிவமாகும். வர்ணங்கள் அறிவியல் சார்ந்த இசைப்படைப்புகளாகும். எனவே கவனமாக வர்ணங்களைப் பாடுவதற்கும், இசைக் கருவிகளை வாசிப்பதற்கும் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பின்பு உள்ள இசைப் பயிற்சியில் அதிகமாகக் கலை சார்ந்த கடினமின்றி தொடர இயலும்.
- வர்ணங்கள்- பத வர்ணம், தாள வர்ணம், தரு வர்ணம் ( விளக்கம்)

  *பதவர்ணம்*

  பதவர்ணங்கள் நடனத்திற்காக எழுதப்பட்டவையாகும். இவை பாவத்திற்கும், நடனத்திற்கும் உதவும் வகையில் விளம்ப லயத்தில் பாடி வருவதால் சௌக்க வர்ணங்கள் னவும் அழைக்கப்படுகின்றன. இவற்றில் முழுவதும் இலக்கியம் இருக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பாவங்கள் உண்டு. வல்லவீ சேஷையர், ராமசுவாமி தீக்ஷிதர், இரயிம்மன் தம்பி, வடிவேலு ஆகிடோர் இனிமையான பத வர்ணங்களை எழுதியுள்ளனர்.

  *தானவர்ணம்*

  தானவர்ணத்தில் பல்லவி, அனு பல்லவி, சரணம் ஆகிய பகுதிகளுக்கு மட்டும் இலக்கியத் தன்மை இருக்கும். மீதியுள்ளவற்றை சுவரங்கள் மட்டுமே பாடுவோம். தான வர்ணங்களில் சாதாரணமாக ஒன்றும், இரண்டும் காலங்களை மட்டுமே பாடுவர். வர்ணத்தில் நடை தான வடிவத்தில் இருக்கும் என்பது இதன் சிறப்பாகும். சதுரஸ்றஜாதி திரிபுட ( ஆதி ) மிஸ்ற ஜாதி டம்ப. கண்டஜாதி அட போன்ற தாளங்கள் உள்ளன. பக்திரசம், பிரபுக்களைக் குறித்த துதி, சிறுங்கார பாவமாக வரணம், தினராகமாலிக வர்ணம், கானராகமாலிக வர்ணம் ஆகியவை புகழ் பெற்றதாகும்.

பச்சிமறியம், ஆதியப்பா, வீணா குப்பையர், பல்லவி கோபால அய்யர், திருவற்றியூர் தியாகையர், பட்டணம் சுப்பிரமணியன், கொத்தவாதல் வெங்கிட ராமய்யர். சுவாதி திருநாள், வடிவேலு, பரமேஸ்வர பாகவதர், முத்தையா பாகவதர் ஆகியோர் தாளவர்ணங்கள் எழுதியுள்ளனர்.

*தருவர்ணம்*

தருவர்ணம் என்பது பத வர்ணமும், தானவர்ணமும் இணைந்த இசை எனக் கூறலாம். இதில் சுவரம், இலக்கியம் ஆகியவற்றுடன் ஜதிகளும் அடங்கியுள்ளன. இதற்குப் பல்லவி, அனு பல்லவி, ஒழுங்கு சுவரம், சரணம், சரணஸ்வரங்கள் ஆகிய பிரிவுகள் உள்ளன. சிலவற்றில் முக்தமான ஸ்வரங்களும், ஜதிகளும் , இலக்கியங் களும் கலந்து வருகிறது. ( எ.கா. மாதே மலயதுவஜ என்ற கமாசிலுள்ள வர்ணம்) முத்தையா பாகவதரின் தரு வர்ணம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

- பத வர்ணம், தான வர்ணம், தருவர்ணம் ஒவ்வொன்றும் பயன்படுத்தும் தளத்தை விளக்குதல்..

  கச்சேரிகளில் தொடக்கத்தில் பாடக்கூடியது தருவர்ணமாகும்.
- பயிற்சி அளித்தல்

  மோகனம்  
  அபோகி  
  ஹம்சதொனி  
  கல்யாணி  
  பந்துவராளி
- தேர்வு செய்யப்பட்ட ஒரி வர்ணம் பாடிக் கேடக் வைத்தல்( ஆசிரியர்)
- பாடும் முறையை விளக்குதல்.

  *பல்லவி, அனுபல்லவி, ஒழுங்கு சுவரம், முக்தாயி ஸ்வரங்ரகள், சரணம், சரணஸ் வரங்கள் ஆகியவை ஸ்வர இடங்களை உறுதி செய்து பாடிப்பழகிய பின்பு அதனுடைய இலக்கியத்தைச் சேர்த்து பாடுதல். வர்ணங்கள் சாதகம் செய்வதற்காக அராதிகளைச் சேர்த்து வேகமாகவும், வேகம் குறைத்தும் பாடி பயிற்சி பெறுதல்*
- வர்ண வகை வேற்றுமைகளைப் பிரித்தறிதல்.
- நடன வடிவத்தில் பயன்படுத்தும் சில பத வர்ணங்களைக் கேட்க வைத்தல்.

  *வர்ணங்கள் கச்சேரிகளில் தொடக்கத்தில் பாடி பாடகரின் அறிவை வெளிப்படுத்து வதற்கான இசைப் படைப்பு.*
- சில கச்சேரிகளின் முதல் பகுதியான வர்ணங்களின் பாடலைக் கேட்க வைத்தல்
- வர்ணங்களைக் குறித்த கூடுதல் தகவல்கள்.

  வர்ணங்கள் அறிவுபூர்வமான இசைப் படைப்புகளாகும். முழுமையான அறிவுடன் ஒழுங்காக வர்ணங்களைப் பாடுவதற்கோ, இசைக் கருவிகளை வாசிப்பதற்கோ, பயிற்சி பெறும் ஒரு மாணவரின் பின்பு உள்ள இசைப்பயிற்சியை எளிமையாகத் தொடர இயலும்.

  *வர்ணம் எழுதியவர்கள்*

  பட்டணம் சுப்ரமணியர், மானம் பூச்சாவடி. வெங்கிட சுப்பையர். திருவற்றியூர் தியாகையர், வீண குப்பையர், பச்சிமீறியம் ஆதியப்பையா

  கர்நாடக இசைப்பிரிவில் வர்ணங்களுக்கான முக்கியத்துவம் பயிற்சிப் பாடல்களில் மிக முக்கிய பங்கை வகிக்கும் இனம். இராக பாவத்தை வெளிப்படுத்தும் இசை வடிவம்.

சிறப்பு சஞ்சாரங்கள், சிறப்பு கதிகள், ஜண்ட, தாட்டு ஆகியவை உட்பட்ட இசை வடிவம்

## *செயல்பாடு 5- : கிருதிகள் அறிமுகம் செய்தல்.*

- ஒரு இசைக்கச்சேரியின் குறுந்தகடு கேட்கவைத்தல்
- கேட்ட குறுந்தகட்டிலுள்ள பாடல்களை வகைப்படுத்துதல்.( தனிநபர்) வர்ணம் கிருதிகள் கீர்த்தனைகள், பஜனை, தில்லான, பதம் ஆகிய ஒழுங்கில்.
- இசைக்கச்சேரிகளில் கீர்த்தனைகள்/கிருதிகள் அதிகமாக உட்படுத்தப்படுகின்றன என்ற உண்மையைக் கண்டுபிடித்தல்.
- கீர்த்தனைகளை அறிமுகம் செய்தல்.
- முன்வகுப்புகளில் அறிமுகமானவற்றிலிருந்து அதிகமான தெளிவுடன் விளக்குதல்.

  பக்திரச முக்கியத்துவம் வாய்ந்த இசைப்பகுதி இராகபாவம் நிறைந்ததும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான இசைவடிவம்.

  பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பாவங்கள் இதில் உள்ளன.

  *கீர்த்தனை*

  பக்திரசமுக்கியத்துவம் வாய்ந்த இசைப்படைப்புகள் அனைத்தும் கீர்த்தனைகளாகும். தீவிரபக்கதர்களாகிய இசைவல்லுநர்களின் விருப்பமான தேவதைகளைக் குறித்த பக்தியையும், மதம் சார்ந்த உணர்ச்சிகளையும் இசை வடிவில் வெளிப்படுத்துவதே கீர்த்தனைகள். இவற்றிற்கு இசை சார்ந்த வடிவத்தை விட இலக்கியம் சார்ந்த உள்ளடக்கத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

  கீர்த்தனைகளுக்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகள் உள்ளன. சிலவற்றில் அனுபல்லவி இருப்பதில்லை. ஒன்றிற்கு அதிகமான சரணங்கள் இருக்கும்.

  *கிருதிகள்*

  இது கீர்த்தனைகளிலிருந்து வேறுபட்டு இலக்கியம் சார்ந்த உள்ளடக்கத்தைவிட இசை சார்ந்த வடிவத்திற்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இசைப் பாடைப் பாகும். பொதுவாக குறைந்த இலக்கிய சொற்களில் இராக பாவத்தை அதன் முழுமையான அழகுடன் வெளியிடுகின்ற இசைப் படைப்புகளில் ஒன்றாகும். கீர்த்தனைகளைப் பொறுத்த வரையில் கிருதிகளுக்கு சங்கதிகள், ஒழுங்கு சுவரங்கள், இடைக்கால இலக்கியம் போன்ற பகுதிகளும் சில தனித்தன்மைகளும் உண்டு.

  *பதம், பஜனை, கஜல்*

  இசைமுறையில் எல்லா இரசிகர்களுக்கும் இரசிக்கக் கூடிய எளிய இசை வடிவங்கள்.

  *பதம் ( சொல்)*

  நடிகர் நடிகை பாவ முக்கியத்துவம் வாய்ந்த இசை எழுத்து. நடனத்தில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இசைக்கச்சேரிகளில் ஒரு பதம் தவிர்க்க முடியாதது. பதம் எழுதியவர்கள்- ஷேத்ரக்ஞர், சுவாதி திருநாள், இரையுமன் தம்பி, குட்டிக் குஞ்ஞிதங்கச்சி

- அறிமுகமான பதங்களைக் கேட்க வைத்தல்

அளிவேணி

பூந்தேன் நீர்மொழி

- தேர்வுசெய்யப்பட்ட பதங்களுக்குப் பயிற்சி அளித்தல் ஒழுங்குடன் பாடிப் பழகுதல்

பஜன்

முழுமையாக பக்திரச முக்கியத்துவம் வாய்ந்த அர்த்த செவ்வியல் இசை வடிவங்கள் இராக பாவமும், பக்தியும் நிறைந்து நிற்கும் எளிய பாடல் வடிவங்கள்.

எ.கா–

- ✳ வெங்கிடாசல நிலையம்.
- ✳ பஜனம் செய்வின்.
- ✳ சலியெ குஞ்சனுமு
- ✳ ஆஜ் ஆயே
- ✳ ஸ்ரீராம சந்திரகிலாலு
- ✳ கருணசெய்வானெந்து
- ✳ கருணை தெய்வமே
- ✳ அடி மலரிண தன்னே
- ✳ கிருஷ்ணா நீ பேகனே

- அறிமுகமான சிலதை தேர்வு செய்து பயிற்சி அளித்தல். பாடுதல் முறையைக் கூடுதல் தெளிவாக்குவதற்கு அடிகளை ஸ்வரப்படுத்தி எழுதிக் கொடுக்கலாம். கற்றலுக்குப் பின் குழுவாக/ தனியாகப் பாடுதல்

கசல்

இஸ்துஸ்தானி இசையிலுள்ள ஒரு ஜனகீய பாடல் பிரிவு. காதல், விரகம், பாசம் போன்றவற்றில் ஊன்றிய அடிகளுக்கு கவர்ச்சியான மெட்டுகள் அளிப்பதன் வழியாக கசல் உருவாக்கப்படுகிறது. அரபி, உருது, இந்தி ஆகிய மொழிகளிலும், வட்டார மொழிகளிலும் கசல் வடிவமைக்கப்படுகிறது. கசல் என்பது ஷேபருகளின் தொகுப்பாகும்

ஈரடிகளின் தொகுப்பு

- தேர்வு செய்யப்பட்ட கசல்களின் பயிற்சி

இந்தியாவில் கசலுக்கு துவக்கமிட்டது அமீர் குஸ்ருவாகும்(1253– 1395). குலாம் அலி, மெகதி ஹஸன், சித்ரா சிங், ஜகஜித் சிங், பீகம் அக்தர். புகழ் பெற்ற கசல் பாடல்களை அறிமுகம் செய்தல். பாடல்களை கேட்க வைத்தல்.

- தேர்வு செய்யப்பட்டவற்றை வகுப்பறையில் பாடுவதற்கான பயிற்சி.
- குறுந்தகடு பயன்படுத்தலாம்.
- பாடுதல் தனிநபராக
- இந்தப் பாடல் வடிவம் பாவத்துடன் பாட வேண்டியுள்ளதால் அடிகளின் கருத்தை விளக்க வேண்டும்.

## மதிப்பீடு

- இசை வடிவங்களைப் பிரித்தறிதல்
- இசை வடிவங்களின் தனிமையை நிலை நிறுத்திப் பாடுதல்
- இரசித்தல்

### ஒருங்கிணைப்பு

கர்நாடக இசை முற்றிலும் வேறுபாடுள்ள இசை வடிவங்களால் வளமானதாகும். பல்வேறு இராகபாவங்களும், தாள வேறுபாடும் உள்ள இத்தகைய படைப்புகளுக்கு அறிவியல் முறையில் பயிற்சியளிக்க வேண்டும்.

நம்முடைய இசைவரலாறும், இசை எழுத்தின் சிறப்பும் உட்கொண்டு பாடுவதற்கு தொடர்ச்சியான சாதனையும் தேவையாகும். ஒவ்வொரு பாடல் வடிவத்திற்கும் அதனுடைய சிறப்பும், தனிமையும் நிலைநிறுத்திப் பாடும் போது மட்டுமே இரசிகர் களுக்கு முழு திருப்தியை அளிப்பதற்கு பாடகரால் இயலும்.

## அலகு- 4 மெட்டு அளிப்போம்

இசை என்பது வாழ்க்கைச் சூழல்களுடன் மிக நெருங்கி நிற்கும் ஒரு கலையாகும். கொண்டாட்டங்களிலும், திருவிழாக்களிலும் இசைக்கு பெரும் பங்கு உள்ளது. சில நேரங்களில் உற்சாகப்படுத்துவதற்கும் சில உணர்வுச் சூழல்களுக்கு அதிக பாவமும், மெருகும் அளிப்பதற்கும், உணர்வடையச் செய்வதற்கும் இசையால் இயலும். பள்ளிக் கூடங்களில் தினவிழா ஆசரிப்புகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் உள்ள பங்கு முக்கியமானது. இத்தகைய வேளைகளை அதிகமாக சிறப்புறச் செய்வதற்கும், சூழ்நிலைகேற்ற பாவதாளத்தை உருவாக்குவதற்கும் அந்தந்த நேரங்களுக்கேற்ப பாடல்கள் உதவுகின்றன. இசை என்பது ஒரே நேரத்தில் மகிழ்ச்சியும், கருத்தும் , செய்தியும் அளிப்பதாக மாறுகிறது.

### உள்ளடக்கம்

தின விழா கொண்டாட்டங்களின் சூழலுக்கேற்ப பாடல்களைத் தேர்வு செய்து பாடுதல் சூழ்நிலைக்குப் பொருத்தமான பாடல்களை எழுதுதல், மெட்டமைத்துப் பாடுதல். தினவிழா கொண்டாட்டங்களின் முக்கியத்துவத்தை உட்கொண்டு பாடுதல், ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்துள்ள செயல்பாடுகள் இந்த அலகில் உள்ளன.

### கற்றல் அடைவு

பல்வேறு தினவிழாக்களில் தேர்வு செய்யப்பட்ட பாடல்களுக்கு மெட்டமைத்துப் பாடுதல்,

### கருத்து/திறன்

- ஒவ்வொரு சூழலுக்கும் இணைந்த பாடல்கள் உள்ளன.
- பாவத்திற்கேற்ற மெட்டை கண்டுபிடிக்கும் திறன்.
- சூழ்நிலைக்கேற்ற பாடல்கள், கருத்து அடிப்படையிலான மெட்டுகள்.

### செயல்முறை

- தினவிழாக் கொண்டாட்ட விவாதங்கள்.
- தினவிழாக் கொண்டாட்ட கருத்துகளுக்கேற்ற அடிகளுக்கு மெட்டமைத்தல்
- பாடுதல்

- ஒன்றுக்கொன்று மதிப்பீடு செய்தல்
- மேம்படுத்துதல்.

## கற்றல் செயல்பாடுகள்

- பள்ளி நுழைவு விழா தினம், சுற்றுச்சூழல் தினம், வாசிப்பு தினம், உலக இசை தினம் ஆகிய தினவிழா கொண்டாட்ட நாட்களில் பாட வேண்டிய பாடல்களைக் கேட்கச் செய்தல். ( குறுந்தகடு) வினாக்களின் அடிப்படையிலான விவாதம்.
- வினாக்கள்–
    - ♦கேட்ட பாடல்கள் எந்தெந்த தினவிழாக்களுடன் தொடர்புடையவை?
    - ♦ இத்தகைய பாடல்கள் சூழல்களுடன் இணங்குகிறதா? இரசிப்புத் தன்மை உள்ளதா?
    - ♦ தினவிழா கொண்டாட்ட வேளைகளில் பொருத்தமான பாடல் பாடுவதன் சிறப்பு என்ன?
- குழந்தைகளை நான்கு குழுக்களாக மாற்றுதல். இராகங்களின் பெயர் அடிப் படையில் அல்லது பல்வேறு தினவிழாக்களின் பெயர்களை அளிக்கலாம்.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் விடைகளை எழுதுதல். குழுவாக விவாதித்தல். குழுவாரியான வெளியீடு.
- ஒவ்வொரு குழுவின் வெளியீட்டையும் சார்ட்டில் குறிப்பிட வேண்டும்.
- குழுவில் உருவான கருத்துகளின் அடிப்படையில் ஆசிரியரின் விளக்கம்.

  *விளக்கக் குறிப்புகள்*
    - ♦ தினவிழாக் கொண்டாட்டங்களில் பள்ளி அளவிலான முக்கியத்துவம்.
    - ♦ தினவிழாக் கொண்டாட்டங்களில் பாடல்களின் சிறப்பு.
    - ♦ இசை என்பது சூழ்நிலைக்குப் பொருத்தமானதும், கருத்துகளும், செய்திகளும் அளிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய ஒரு சிறந்த கலை ஊடகமாகும். தினவிழாக் கொண்டாட்டங்களின் முக்கியத்துவத்திற்கேற்ப மெட்டு அளிப்பதன் சிறப்பு.
- குழு விவாதம், கருத்து
- நுழைவு விழா, வாசிப்பு தினம், உலக இசை தினம் ஆகிய தினங்களில் பாட வேண்டிய பாடல்கள்

  சூழ்நிலைக்கு பொருத்தமானது.
  இரசிப்பதற்கு இயலுகிறது.
  பாடல்கள், கொண்டாட்டங்கள்/தினவிழா கொண்டாட்டங்கள்
- பல்வேறு தின விழாக்களை கண்டுபிடித்தல் ( குழு)
- கண்டுபிடித்த தினவிழாக்களை அட்டவணைப்படுத்துதல் ( வகுப்பு வாரியாக, ஆசிரியரின் மேற்பார்வையில்)
- வகுப்பறையில் தயாரித்த தினவிழா கொண்டாட்ட வருட நாட்காட்டியை தயாரித்தல். (எல்லா வகுப்புகளில் தயாரித்த தினவிழா கொண்டாட்டங்களின் அட்டவணையை ஒருங்கிணைத்து நாட்காட்டி தயாரிக்க வேண்டும்)

  மெட்டு அளிக்கக் கூடிய செயல்பாடுகள் எழுதி தயாரித்ததை உட்படுத்த வேண்டும்.

# பத்தாம் நிலை

## அலகு– 1 தேசபக்திப் பாடல்கள்

தேச பக்திப்பாடல்கள் என்பது ஒவ்வொரு நாட்டினுடையவும் தேசிய இயக்கங்களுக்கு என்றும் தீவிரமாக செயல்படுவதற்கான சக்தியைப் பகிர்ந்தளிக்கும் பாடல்களாகும். சமூகத்தில் சுதந்திர உணர்வுடையவர்களும் நாட்டுப்பற்று உடையவர்களுமாகிய கவிஞர்கள் தங்கள் கருத்திற்கேற்ப விரல்களை அசைத்து அடிகளுக்கு மெட்டும் பாவமும் இணைத்து மக்கள் இதயங்களை அடையச்செய்தது நம்முடைய இசை அமைப்பாளர்களும் பாடகர்களும் ஆவர். அவ்வாறு இசைப் படைப்பாற்றலின் அலங்கார அழகுடன் மக்கள் மனதில் இடம் பிடித்த இந்தப் பாடல்கள் அவற்றின் இசைச் சிறப்புகளோடும் கருத்து முழுமையோடு எக்காலமும் உயர்ந்து நிற்கிறது. இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களிடமும், பொதுமக்களிடமும் தன்னம்பிக்கையும், சுதந்திர உணர்வும் பகிர்ந்தளிப்பதில் இத்தகைய பாடல்கள் உதவியுள்ளது. நமது தேசிய உணர்வு ஊன்றிநிலை பெறுவதற்கான சக்தியை பகிர்ந்து அளித்த அர்த்த செவ்வியல் நடையிலூன்றிய பாடல் பிரிவுகள் என இந்த அலகில் கூறப்பட்டுள்ளன.

### உள்ளடக்கம்

வெவ்வேறு மொழியிலுள்ள தேசபக்திப் பாடல்களின் வேறுபட்ட மெட்டுகளின் சிறப்புகளைப் பிரித்தறிவதற்கும் சூழ்நிலைக்கேற்ப பாடுவதற்கும் உதவும் வகையிலான செயல்பாடுகள் இந்த அலகில் உள்ளன. வகுப்பறையில் எல்லா மாணவர்களையும் உட்படுத்தி உருவாக் கப்பட்டுள்ள இந்தச் செயல்பாடு அர்த்த செவ்வியல் பாடல் நடைக்கு முக்கியத்துவம் வாய்ந்த பாடல்களை திட்டமிட்டுள்ளது.

### கற்றல் அடைவு

செவ்வியல் இசையின் அடிப்படையில் தேசபக்திப் பாடல்கள் பாடப்படுகின்றன.

### கருத்து, அறிவு

- நாட்டுப்பற்று உருவாக்குவதும், பல்வேறு மொழியில் உள்ளதும், இராகத்திலும், பாவத்திலும் உள்ள தேசபக்திப் பாடல்கள் உள்ளன.
- சுருதியின் அடிப்படையில் அரை செவ்வியல் பாடல்களைப் பாடவேண்டும்.
- பாடுதல்.

## செயல்முறை

- பாடுவது, ஏற்றுப் பாடுவது, ஒன்றுக்கொன்று மதிப்பீடு.
- இராக அறிமுகம், பாடுவதற்கான வாய்ப்புகள், விவாதம்
- மதிப்பீடு
- பாடுவதை மதிப்பீடு செய்தல்

## கற்றல் செயல்பாடுகள்

- தனிப்பாடல் நடையின் அழகும், செவ்வியல் பாடல் நடையின் இசைக்கூறுகளும் முழுமையும் ஒன்று சேர்ந்து பாடல் நடையில் உட்கொள்ளும்

  1.மிலே சூறு மேரா துமாரா... (ஏ ஆர். இரகுமான்)

  2.வந்தேமாதரம்– தனது நடையில் உள்ளது.

  ஆசிரியர் குறுந்தகடு/ விசிடி பயன்படுத்தி கேட்கச் செய்தல்.
- கேட்ட பாடல்களின் இரசனைக் குறிப்பு– தனிநபராக குறிப்பேட்டில் எழுதுதல்
- ஆசிரியர் குழந்தைகள் விவாதம் குறிப்புகள் அடிப்படையில்
- கேட்ட பாடல் நம்மில் உருவாக்கிய பாவம் என்ன?
- எந்த பிரிவில் உட்பட்டது?
- தேசிய உணர்வை உருவாக்கக்கூடிய அறிமுகமான வேறு சில பாடல்களைக் கேட்டல்.
- இந்தப் பாடல்கள் வடிவமைக்கப்பட்டுள்ள மெட்டு இதன் கருத்து, முக்கிய பகுதி
- எந்த நடை– எளிமை/ அரைச் செவ்வியல்/ செவ்வியல்
- குழு விவாதம்– விவாதம் வழி உருவான கருத்து/ ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல். குழந்தைகளின் சந்தேகங்களுக்கு தீர்வு கிடைப்பதற்கு, ஆசிரியரின் ஈடுபாடு வழியாக பாடல்கள் இராகங்களைக் குழந்தைகள் அறிந்து கொள்ளுதல்.

  தேஷ்

  சிந்து பைரவி

  விறுந்தாவன சாரங்க
- குழந்தைகளின் கருத்துகளுக்குக் கூடுதல் விளக்கம்
- இசையின் எளிய கருத்து செவ்வியல் தன்மைகளும் உட்கொண்ட பாடல்கள் எல்லா வகையிலும் இரசிகர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய இசைப் படைப்பு
- சுதந்திரப் போராட்ட காலத்தில் பாடல் எழுத்தாளர்களும் பாடுவதற்காக முழுமையான இராக உணர்வுடனும் தேசிய உணர்வுடனும் எழுதப்பட்ட பாடல்களில் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் பாடல்கள் எடுத்துக் கூற வேண்டியவையாகும்.
- இந்தியப் பாடல்கள் என்ற பெயரில் அறியப்படுகிறது.

- அறிமுகமான சில பாடல்கள்
    - ஓடி விளையாடு பாப்பா
    - பாரத சமுதாயம்
    - பாருக்குள்ளே நல்லநாடு
    - ஜய்ஜனபாரத் ஜனமன அபிமத்
    - ஜயஜயதே பகவதி சுபாபாரதி
    - ஜனகணதந்திரிவிதாதா
    - பாரத சாம்ராஜ்யம்
    - வந்தேமாதரம் சுபமய( கெ. சி, கேசவபிள்ளை)
    - வந்திப்பின் மாதாவினே
    - ஜயதி ஜயதி பாரதமாதாவினெ
    - சமரிப்பின் பாரதியரே... (வித்வான் கே. கேளுநாயர்)
- இசை சார்ந்த கருத்துகள் குழந்தைகளுக்கு கிடைக்கும் வகையில் வகுப்பறைச் செயல்பாடுளை ஒழுங்கு செய்தல். தேசபக்திப் பாடல்கள் பல்வேறு எழுத்தாளர்கள் எழுதும் போதும் மிக அதிகமாக இரசிக்கும் வகையில் உருவாக்குவர்.

**செயல்பாடு 2**

- பல்வேறு மெட்டுகளில் உள்ள பாடல்களைக் கேட்கச் செய்தல்.
- அவற்றில் சிலவற்றை தேர்வு செய்து பயிற்சியளித்தல்.
- வட்டாரப் பாடல்.
- வட்டாரப் பாடல்கள் எழுதியவர்கள்- இவர்களின் பாடல்களை பாடுதல். கெ. சி. கேசவபிள்ளை, டி. லக்ஷமணன் பிள்ளை, சேர்த்தலை கோபாலன் நாயர், வள்ளத்தோள், போதேஸ்வரர். ஆகியோரது அடிகள் பழகுதல்,
- கருத்துப் பகுப்பாய்வு செய்தல், மெட்டு அறிமுகம்.
- இராகங்களின் சிறு விளக்கம்.
- இராகத்தின் சிறப்புப் பயன்பாடுகள்.
- அடிகளை ஒழுங்காகவும், தாளத்துடனும் பாடிக் கேட்கச் செய்தல்.
- பல்லவி முழுவதும் ஏற்றுப்பாடுதல்.
- அனுபல்லவி, சரணம், பாடுவதற்கு பயிற்சி அளித்தல்.
- பின்பு பாடல் முழுவதும் சேர்ந்து பாடுதல்.
- முழுமையாக படித்து பாடிய பின்பு வகுப்பறையில் அனைத்தும் உட்படும் வகையில் மதிப்பீடு செய்தல்.
- பாடுதல் இரசனைக் குறிப்பு, இசைக்கருவிகள், பயன்பாட்டுக் குழு
- பல்வேறு வேளைகளில் பாடிப் பழகிய பாடல்களை இசைக் கருவியின் உதவியுடன் வகுப்பில் வெளியிடுதல்.
- சிறப்பு தினவிழா கொண்டாட்டங்களில் பள்ளிக்கூட பொதுஅரங்குகளில் வெளியிடுதல்
- பாடல் தொகுப்புகளில் வெவ்வேறு மொழி, வெவ்வேறு இராகம், வெவ்வேறு தாளம் ஆகியவை உட்படுத்துதல்.
- நடனச்சிற்பம், நாடகம்

## ஒருங்கிணைப்பு

தேசபக்திப் பாடல் என்பது எந்த ஒரு நாட்டினுடையவும் பாடல்பிரிவின் பிரிக்க முடியாத ஒரு காரணியாகும். தேசபக்திப் பாடலின் இசை வேறுபாட்டை அறிந்து கொள்வதற்காக அவற்றை பாடுவதற்கு இத்தகையச் செயல்பாடுகள் உதவுகின்றன. தேசிய உணர்வை உருவாக்குதல். எந்த பிரிவிலுள்ள இரசிகர்களுக்கும் விரும்பக்கூடிய ( எளிமை, கர்நாடக இசை) சிறந்த இசைக் கருத்துகளை பாடலில் இணைத்து உணரச் செய்தல் ஆகியவை இந்தக் கற்றல் செயல்முறை வழியாக நடைபெறுகின்றன.

# அலகு- 2 பாடல் வெளியிடுதல்

## முன்னுரை

எந்த ஒரு கருத்தினுடையவும் முழுமையை அனுபவிப்பதற்கும், பகிர்வதற்கும் இசை ஒரு சிறந்த ஊடகமாகும். அடிகளிலுள்ள கருத்துகள் பலவேளைகளில் இரசிகரை அடையச் செய்வது இத்தகைய மெட்டுகள் கவிதைக்கு/ பாடலிற்கு அளிக்கக்கூடிய சிறந்த அனுபவம் சிறியதல்ல. மெட்டளித்தல் செயல்முறையில் கவனிக்க வேண்டிய உண்மைகளை இந்தப் பாடப்பகுதி குறிப்பிடுகிறது.

## உள்ளடக்கம்

அடிகளுக்கேற்ப மெட்டமைத்தல், வெவ்வேறு பாடல் வடிவங்களில் நடைக்கேற்ப மெட்டமைத்தல். கடைபிடிக்க வேண்டிய உண்மைகள் ஆகியவை குறித்த விவரங்கள் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவு

- பாடல்களுக்கு மெட்டமைத்து ஒழுங்கு செய்து வெளியிடுதல்.

## கருத்து/ அறிவு

- கருத்திற்கு இணையும் மெட்டு அளிக்க வேண்டும். ஒலிக்கட்டுப்பாட்டின் வழியாக பாவமும் அழகும் பெருக்கலாம்.
- பொருத்தமான தாளத்தில் ஒழுங்கு செய்யவேண்டும்.
- மெட்டமைத்து வெளியிட வேண்டும்.

## செயல்முறை

- பாடலை ஒழுங்குபடுத்தும் போது கவனிக்க வேண்டியவை, விவாதம்
- முன்பு இசையமைக்கப்பட்ட பாடல்களைக் கேட்டல்.
- மெட்டமைத்து வெளியிடுதல்.

## மதிப்பீடு

- மெட்டை மதிப்பீடு செய்தல்.
- வெளியீட்டை மதிப்பீடு செய்தல்

## கற்றல் செயல்பாடுகள்

**செயல்பாடு *1***

- குழந்தைகளை இரு குழுக்களாகப் பிரித்தல். திரைப்படப் பாடலாக மாற்றப்பட்ட ஓ. என். வி கவிதையில் சில அடிகளைச் சார்ட்டில் எழுதிக் காட்டுதல்.

  ஒரு வட்டம் கூடியென் ஓர்மகள் மேயுந்த
  திருமுற்றத்தெத்துவான் மோகம்...
  திருமுற்றத்தொரு கோணில் நில்குந்நொரா நெல்லி-
  மரமொந்நுலகத்துவாள் மோகம்.

- இந்த அடிகளைக் குழுவாக உரக்க வாசிக்கும் படி முதல் குழுவிடம் கூறுதல்.
- இதே அடிகளைத் திரைப்படத்தில் உள்ள மெட்டில் ஆசிரியருடன் இணைந்து பாடுவதற்கு மற்ற குழுவுடன் கூறுதல்.
- இதே அடிகளை வேறொரு மெட்டில் ஆசிரியர் மட்டும் பாடுதல்.
- மூன்று செயல்பாடுகளும் மதிப்பீடு செய்யப்படுகின்றன. குழந்தைகள் வினாக்களின் அடிப்படையில் முன்பு நடைபெற்ற மூன்று செயல்பாடுகளையும் மதிப்பீடு செய்தல்.

  வினாக்கள்

  - முதல் வெளியீட்டிற்கு மெட்டு இருந்ததா?
  - இரண்டாவது குழு வெளியிட்டதன் சிறப்பு என்ன?
  - ஆசிரியர் பாடியதற்கும் இரண்டாவது குழு பாடியதற்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை?
  - அதிகமாக இருக்கக் கூடிய மெட்டு எது?

  *விடைகள்*

  - முதல் குழு அடிகளைக் கூறினர்
  - இரண்டாவது குழு அடிகளைத் திரைப்படத்தில் கேட்டதைப் போன்று பாடுதல்.
  - ஆசிரியர் பாடியது வேறொரு மெட்டிலாகும்.
  - திரைப்படத்தில் கேட்ட மெட்டு அதிகமாக விரும்பக் கூடியது.

  விளக்கம்

  - அடிகளுக்கு மெட்டு அளிக்கும் போது அவை பாடல்களாக மாறுகிறது. அடிகளின் கருத்தை உட்கொண்டு பொருத்தமான மெட்டு அளிக்கும போது அவை கூடுதல் கவர்ச்சியுடையதாகிறது.
  - இரசிகர்களை அதிகமாகக் கவரக்கூடிய பாடலின் இசை இயன்ற அளவில் அழகான முறையில் இராகத்தை குறித்து அதிகமாக தெரிந்து கொண்டு கருத்து அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மெட்டு அளிப்பதில் அதிக கவனம் தேவை.

*செயல்பாடு-2*

- குழந்தைகளை நான்கு குழுக்களாக்குதல் இசையமைப்பளார்களின் பெயர் களைக் கொடுத்தல் ( எம். ஜி. இராதாகிருஷ்ணன், தேவராஜன், பாபுராஜன், பாபுராஜ், ஆர். இராகவன் ஆகிய பெயர்கள்)
- வெவ்வேறான நான்கு கவிதைகளை அளித்தல் மெட்டமைப்பதற்கான சில வரையறைகளைக் கொடுத்தல்.
- தனிப்பாடலின் நடையில் மெட்டு அமைக்க வேண்டும்.
- அடிகளும், மெட்டும் ஒன்றோடொன்று ஒற்றுமை உடையதாக இருக்க வேண்டும்.
- தாளத்துடன் ஒழுங்குபடுத்த வேண்டும்.
- மெட்டமைப்பதற்குக் குழந்தைகளுக்கு நேரம் வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் அவர்கள் வடிவமைத்த மெட்டை வெளியிடுதல் (வெளியிடும் குழுக்களில் பாடுவதற்கு திறமையுடையவர்கள் மட்டும் போதும்
- வெளியீடுகளை பிற குழுக்களும் ஆசிரியரும் மதிப்பீடு செய்தல், தரநிர்ணயக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- ♦ அடிகளுக்கும் மெட்டுகளுக்கும் இடையிலான ஒற்றுமை
- ♦ கண்டுபிடித்த மெட்டின் இனிமை.
- ♦ எழுத்துத் தெளிவுடன் கவர்ச்சியாகப் பாடுதல்,

*ஒருங்கிணைப்பு*

ஒவ்வொரு பாடல் வடிவத்திற்கும் அதனுடையதான நடை உள்ளது. பாடல் வடிவங்களின் சிறப்புகளுக்கேற்ப மெட்டளிக்கும் போது அதிக இரசிகர்கள் இருப்பர். மெட்டுகளும் அடிகளும், தாளங்களும் ஒன்றோடொன்று இணைந்து வரும் போது பாடல் பாவம் நிறைந்ததாக மாறுகிறது.

*செயல்பாடு-3*

- பல்வேறு பாடல் வடிவங்களுக்கு மெட்டமைத்தல் ( கருத்திற்கேற்ப)
- நான்கு குழுக்களுக்கும் பல்வேறு பாடல் வடிவங்கள் உருவாக்குவதற்கான அடிகளைக் கொடுத்தல்

  குழு 1- குழுப்பாடல்<br>
  குழு 2- தேசபக்திப்பாடல்<br>
  குழு 3- சுற்றுச் சூழல் பாடல்கள்<br>
  குழு 4- ஜெப பாடல்கள்
- அடிகளுக்கு மெட்டளிப்பதற்கு நேரம் வழங்கவேண்டும். ஒழுங்குபடுத்தும் முன் ஆசிரியர் தேவையான அறிவுரைகளை அளித்தல். ஒவ்வொரு இசை வடிவத்திற்குமுள்ள தன்னுடைய நடை உட்கொண்டு இசை அமைக்க வேண்டும்.
- பாவ நிலைக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- அடிகளும், மெட்டும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை
- வெளியிடுதல் குழுவாக, தனியாக

## மதிப்பீடு

தரநிர்ணயக் குறிப்புகள்

- மெட்டின் இனிமை
- அடிகள், மெட்டு இடையிலான ஒற்றுமை
- பாடும் சிறப்பு

## ஒருங்கிணைப்பு

அடிகளில் பொருளை உட்கொண்டு பாவத்தை வெளிப்படுத்தும் வகையில் மெட்டு அளிக்கும் போது எந்தப் பாடலும் இனிமையானதும் காலத்திற்கேற்ற படைப்புகளும் ஆகிறது. மெட்டுகள் தேர்வு செய்யும் போது அவற்றின் சிறப்புகளும், அவை பகிர்ந்தளிக்கும் பாவங்களும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டும். மெட்டளித்தல் என்பது படைப்பாற்றலின் மிக உயர்ந்த நிகழ்த்துதல் செயல்முறையாகும்.

# அலகு- 3

## முன்னுரை

உலக இசைப்பண்பாட்டில் எடுத்துக்கூற வேண்டிய சிறப்புமிக்க இசைமுறை இந்திய இசையாகும். இந்திய இசையின் முக்கியமான இரு பிரிவிலும் ஏராளமான இசை வடிவங்களும் மாறுபட்ட இசைக் கருவிகளும் உள்ளன. புராதன காலம் முதல் இந்திய இசை, இசைக்கருவிகளின் நிகழ்த்துதலால் கவனத்தை ஈர்த்ததும், கவர்ச்சியானதுமாகும். உலகப் புகழ் பெற்ற ஏராளமான வாத்தியக் கலைஞர்களையும் அவர்களுடைய துறையையும் பிரித்தறிய வேண்டிய ஒவ்வொரு இரசிகருடையவும் கடமையாகும். இந்திய இசையை உன்னத நிலையை அடையச் செய்ய விலமதிக்க முடியாத நன்கொடைகள் வழங்கிய கலைஞர்களைக் குறித்துத் தெரிந்து கொள்வதற்காக இந்தப் பாடப்பகுதி கொடுக்கப்பட்டுள்ளது.

## உள்ளடக்கம்

இந்திய இசைப்பண்பாட்டின் உட்கருத்தாக மாறிய இசைக்கருவிகளும் அவற்றின் வாசிப்பு முறை அமைப்புமுறை ஆகியவற்றைக் குறித்து இந்த அலகில் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாத்தியக் கருவிகளிலும் புகழ் பெற்ற வல்லுநர்களைக் குறித்த சிறு குறிப்புகள் இந்த அலகில் உள்ளன.

## கற்றல் அடைவு

- இந்திய இசையின் வாத்தியக் கருவிகளைக் குறித்தும் புகழ்பெற்ற வாத்தியக் கருவி வல்லுநர்களைக் குறித்தும் அறிந்து கொள்ளுதல் ( இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை)

## கருத்து அறிவு

- ஏராளமான வாத்தியக் கருவி வல்லுநர்கள் உள்ளனர்.
- வாத்தியக் கருவிகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டுமெனில் அநேக காலப் பயிற்சியும் சாதனையும் தேவை
- வல்லுநர்களைக் குறித்து அதிக அறிவு உருவாகிறது.
- ஏராளமான வாத்தியக் கருவிகளும் உள்ளன.

## செயல்முறை

- சேகரித்த தகவல்களைக் குறிப்புகளாக வெளியிட்டு மதிப்பீடு செய்தல்.
- விவாதங்கள்

## மதிப்பீடு

- தேடுவதன் நாட்டம்
- குறிப்புகள்

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு 1*

- ஏதேனும் சில வாத்தியக்கருவிகள் வாசிப்பதைக் கேட்கச் செய்தல். காட்டுதல் (இந்துஸ்தானி, கர்நாடக இசைப்பிரிவுகளில் நடைமுறையில் உள்ளவற்றை உட்படுத்த வேண்டும்)
- சித்தார், வீணை, தபலை, மிருதங்கம், ஆர்மோணியம், வயலின் ஆகியவை கேட்கச் செய்து/ காட்டி வாத்தியக் கருவிகளின் சிறப்புகளைக் குறிப்பிட வேண்டும். (தனிநபர்)
- குறிப்புகளின் அடிப்படையில் பகுப்பாய்வு

  (குறிப்புகளில் வர வேண்டியது)

  *விடைக்குறிப்பு*

  - துளை வாத்தியங்கள்
  - தாள வாத்தியங்கள்
  - கர்நாடக இசையில் பயன்படுத்துவது/ இந்துஸ்தானி இசையில் பயன்படுத்துவது
  - இரண்டிலும் ஒன்றுபோல் பயன்படுத்தப்படுகிறது.
- சிறப்புகளைக் குறிப்பிடுதல். சில வினாக்களின் அடிப்படையில்.
- எந்தப் பிரிவில் உட்பட்ட கருவிகள், எந்த இசை நடைக்கு இவை பயன்படுத்தப்படுகின்றன.
- வாசித்துக் கேட்கும்போது உள்ள சிறப்புகள், ஒற்றுமைகள், வேற்றுமைகள் எவை?
- குறிப்புகளை வாசித்தல் ( தனிநபர்)

- ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல். பின் இணைப்பு ( கருத்து)
- விளக்கம் அளித்தல்.
- இந்திய இசைக் கருவிகளின் வேறுபாடு.
- காட்டிய/ கேட்கச் செய்த இசைக்கருவியின் சிறப்பு.
    - சித்தார், வீணை- கம்பி வாத்தியங்கள்( சித்தார், இந்துஸ்தானி இசை, வீணை- கர்நாடக இசை)
    - வயலின்- இரு இசைப்பிரிவுகளிலும் ஒன்றுபோல பயன்படுத்தப்படுகிறது.
    - தபலை- இந்துஸ்தானி இசைப் பயன்பாடுகளில் தவிர்க்க முடியாதது. கர்நாடக தனிப்பாடல் பிரிவில் முக்கிய வாத்தியம்.
    - மிருதங்கம்- கர்நாடக செவ்வியல் இசையின் பிரிக்கமுடியாத தாளவாத்தியம்
    - பக்காவாஜ், இந்துஸ்தானி செவ்வியல் பாடல் வடிவங்களில் ( நூபத், தமார்) மிருதங்கத்திற்கும், பக்காவாஜிற்கும் வடிவ ஒற்றுமை உள்ளது

***செயல்பாடு 2***

- பல்வேறு வாத்தியக் கருவிகளின் படங்கள், குறுந்தகடுகள் காட்டுதல்.
- காட்டிய கருவிகளைப் பிரித்தறிதல் ( வாய்மொழியாக)
- ஆசிரியரின் உதவியுடன் விளக்கங்கள் அடங்கிய உதவி நூற்களின் உதவியால்
- முக்கியமானதும் அதிகமாக பயன்படுத்தக் கூடியதுமான சில இசைக்கருவிகளைக் கண்டுபிடித்து அவற்றின் இசை வாசிப்புமுறை, இந்த கருவி வாசிப்பதில் புகழ் பெற்றவர்கள் ஆகியவற்றைக் குறித்து விளக்கம், கற்றல்.
- வாத்தியக் கருவிகள் கர்நாடக இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் , கச்சேரிகள் மற்றும் இசை நிகழ்த்துதல் வழியாக குழந்தைகள் பார்த்தும் கேட்டும் அறிமுக மாக கருவிகளை உட்படுத்த வேண்டும். கருவிகளின் அமைப்பு, சிறப்பு ஆகிய வற்றின் சிறு விளக்கம்.

*வாத்தியக் கருவிகள்*

| கர்நாடக இசை | இந்துஸ்தானி இசை |
|---|---|
| வயலின் | சித்தார் |
| மிருதங்கம் | பக்காவாஜ் |
| வீணை | தபல |
| கஞ்சிறா | சந்தூர் |
| கடம் | ஷெகனாய் |
| புல்லாங்குழல் | சரோத் |
| மாண்டோலின் | பான்சூரி |
| முகர்சங்கு | சாரங்கி |

*வயலின்*

வயலின் என்பது தோற்றத்தினால் மேற்கத்தியதாக இருந்தாலும் இசைக் கச்சேரிகளில் பிரிக்கமுடியாத ஒரு காரணியாகும். சுவாதி திருநாள் மகாராஜாவின் ஆட்சிக் காலத்தில் தான் கேரளத்தில் வயலின் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது. வயலினுக்கு நான்கு கம்பிகள் உள்ளன. மனித உடலுக்கு வெளிப்படுத்த இயலும் எல்லா கமகமங்களும் துரிதகால பயன்பாடுகளும் மிகச் சிறப்பாகவும் அழகாககவும் வயலின் வாசிப்பதன் வாயிலாக வெளிப்படுத்துவதற்கு இயலும். பிற இசைக் கருவிகளுக்கு இயலாத வகையில் ஸ்வரத்தின் கனமும், வேகமும் எந்த நிலையிலும் வெளிப்படுத்த இயலுமென்பது இந்த இசைக்கருவியின் சிறப்பாகும். வயலின் வாய்ப்பாட்டு பாடுபவர்களிள் முக்கிய பக்கவாத்தியமாகவும், முக்கிய கச்சேரி வாசிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

*வயலின் வாசிப்பில் புகழ்பெற்றவர்கள்*

பாலசாமி தீக்ஷிதர்
மைசூர் மஞ்சுநாத்
மைசூர் சௌக்யூ
எல். வைத்தியநாதன்
எல். சுப்பிபமணியம்
வடிவேலு
டாக்டர். எல். சங்கர்.
சுந்தரம் ஐயர்
சாலக்குடி நாராயண சுவாமி
கரூர் சின்னசாமி ஐயர்
வி. சசிகுமார்
டி. என். கிருஷ்ணன்
டி. பி. மணி
லால்குடி ஜெயராமன்
வி. வி. ரவி
எம். எஸ். கோபாலகிருஷ்ணன்
கணேஷ் & குமரேஷ்
குன்னக்குடி வைத்தியநாதன்
வெங்கடசாமி நாயுடு
அண்ணா சாஸ்திரி
நாகை முரளிதரன்
டில்லி சுந்தரராஜ்
திருவிழா சிவானந்தன்
பாலக்காடு ஆர். ரகு
உமையாள்புரம் சிவராமன்
டி. வி. கோபாலகிருஷ்ணன்
காரைக்குடி மணி
திருச்சி சங்கரன்
திருவனந்தபுரம் சுரேந்திரன்
பி. ஹரிகுமார்
மாவேலிக்கரை கிருஷ்ணன் நாயர்

மாவேலிக்கரை வேலுக்குட்டி நாயர்

செல்ல வெங்கடராவு

பாலக்காடு இராஜாமணி

கெ. வி. பிரசாத்

பாறசாலை ரவி

***வீணை***

இந்திய இசை உலகின் புகழ்பெற்ற செல்வமாகும் இந்தக் கருவி. புராதன இசைக் கருவிகளில் வீணை என்பது முக்கியமான கம்பி வாத்தியமாகும். இந்திய இசையின் அழகை அதன் உயர்நிலையில் முழுமையாக வெளிப்படுத்த இயலும். ஒரேயொரு கம்பிவாத்தியமாகும். ‘கம்பிவாத்தியங்களின் தாய்’ என்ற சிறப்பும் இதற்கு உண்டு. ஒர் தடியில் செய்த உள்ளே காலியான குடம், நீண்ட தண்டு. அதில் பித்தளையால் உருவாக்கிய 24 மூட்டுகள், சுருதியை இறுக்குவதற்காக ஏழு பெரடுகள், ஏழு கம்பிகள் ஆகியவை வீணையின் சிறப்பாகும். 4 கம்பிகளை வாசிப்பதற்கும், மூன்று கம்பிகள் தாளத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. விசித்திர வீணை, காயத்திரி வீணை, ருத்ரவீணை ஆகிய வடிவ வேற்றுமைகளும் வீணைக்கு உள்ளது.

*வீணை வாசிப்பதில் புகழ் பெற்ற வல்லுநர்கள்*

வீணை சேஷண்ணா

வீணை தனம்மாள்

எஸ். பாலச்சந்திரர்

கெ. எஸ். நாராயணசாமி

சிட்டி பாபு

எமனி சங்கர சாஸ்திரி

எம். கே. கல்யாண கிருஷ்ண பாகவதர்

ஆர். வெங்கிடராமன்

எஸ். ருக்மிணி

எ. அனந்தபத்மநாபான்

கோமதி சிதம்பரம்

ஜெயந்தி குமரேஷ்

***மாண்டலின்***

மேற்கத்திய கம்பி வாத்தியமான மாண்டலினுக்கு இரண்டு அடிநீளம் உள்ளது. நான்கு ஜோடி உலோகக் கம்பிகள் இதில் உள்ளன. சிறிய பிளக்டிரம் உபயோகித்து இதை வாசிக்க வேண்டும். அக்கோஸ்டிக் மாண்டலின், எலக்ட்ரிக் மாண்டலின் என இருவகை இருந்தாலும் கர்நாடக இசையில் பொருத்தமானது எலக்ட்ரிக் மாண்டலின் ஆகும். யு. ஸ்ரீனிவாஸ் என்பவர் சிறு வயதிலேயே மாண்டலின் வாசிப்பதில் புகழ் பெற்ற கர்நாடக இசைவல்லுநர் ஆவர்.

***கஞ்சிற***

இது கர்நாடக இசைக் கச்சேரிகளில்பயன்படுத்தி வரக்கூடிய துணைப்பக்க வாத்தியமாகும். சுமார் எட்டு இஞ்ச் விட்டமும் நான்கு இஞ்ச் அகமும் கொண்ட கனம் குறைந்த மரத்தினால் வட்டவடிவில் ஒரு சட்டத்தின் மேல் ஒரு பக்கத்தில்

உடும்பினுடையவோ ஆட்டினுடையவோ தோலை இழுத்துக் கட்டி கஞ்சிற உருவாக்கலாம். இடது கையில் கஞ்சிறையை பிடித்து, வலது கையினால் தோலின் மீது தட்டி வாசிக்க வேண்டும்.

*கஞ்சிறா வாசிப்பதில் புகழ் பெற்றவர்கள்*

புதுக்கோட்டை தக்ஷிணா மூர்த்தி பிள்ளை
நாகராஜன்
சிற்றூர் இராதாகிருஷ்ணன்
வைக்கம் கிருஷ்ணய்யர்
ஹரிசங்கர்
ஹச். பி. ராமாச்சர்
ஒய். என் சாந்தாராம்
சேஷ கிரிதாஸ்
பி. செல்வகணேஷ்

### கடம்

களிமண்ணில், பித்தளை, செம்புத்துகள், இரும்புத்துகள் இவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சேர்த்து மண்குடத்தின் வடிவத்தில் உருவாக்கக்கூடிய துணைப் பக்க வாத்தியம். மிருதங்கத்துடன் இணை தாள வாத்தியமாக கச்சேரிகளில் இது இடம் பெறுகிறது. கைப்பத்தி, விரல்கள், மணிக்கட்டு, நகங்கள் ஆகியவற்றைப் பயன் படுத்தி இதை வாசிக்க வேண்டும். மிருதங்க பாடங்களே கடம் வாசிப்பதினுடைய அடிப்படை.

கடத்தின் சுருதியை அதிகமாக காட்டுவதற்கோ, குறைப்பதற்கோ இயலாவிட்டாலும் உள்ளே சிறிது மெழுகை ஒட்டி சிறிய அளவில் சுருதியை ஒழுங்குப்படுத்த இயலும். கடம் வாசிப்பவர்கள் அந்ததந்த சுருதியில் உள்ள கடத்தைப் பயன்படுத்து வார்கள்.

*கடம் வாசிப்பதில் புகழ்பெற்றவர்கள்*

உமையாள்புரம் கோதாண்டராமையர்
டி. எச். வினாயகராம்
புதுக்கோட்டை இராமசந்திரன்
வி. சுரேஷ்
கார்த்திகேயன்
கார்த்திக்
வைக்கம் கோபால கிருஷ்ணன்
திருப்பணித்துறை இராதாகிருஷ்ணன்

### முகர்சங்கு

இது ஏழு அல்லது எட்டு செ. மீ. நீளமுள்ள இசைக் கருவியாகும். இராஜஸ்தானி லும், உத்திரப்பிரப்பிரதேசத்திலுள்ள சில இடங்களிலும் நாடோடிப் பாடல்களுக்கு தாளவாத்தியத்திற்காக பயன்படுத்தக்கூடிய முகர்சங்கிற்கு கர்நாடக இசைக்கச்சேரி களில் முக்கியமல்லாத இடம் உண்டு. மூங்கில் பயன்படுத்தியும் இரும்பினாலும் இதை உருவாக்கலாம்.

**இந்துஸ்தானி வாத்தியக் கருவிகள்**

***சித்தார்***

சித்தார் இந்துஸ்தானி இசையின் பிரிக்கமுடியாத காரணியாக மாற்றியவர் அமிர்குஸ்ரு என இசைப் பண்டிதர்கள் நிறுவுகின்றனர். இந்துஸ்தானி இசையில் பின் என்றழைக்கப்படும் வீணையை மாற்றியமைத்து அவர் சித்தார் உருவாக்கினார். குடம் வடிவிலான தும்பக் குடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள வட்ட வடிவிலான தவடி என்ற பலகை, கோடி என்ற பாலம், கம்பிகளை இணைத்துக் கட்டும் கில், டாம்ஸ் என்ற நீளமான தண்டு, தண்டின் நுனியில் இரு வெட்டுகள், சூடிய என்ற பரடுகள், சுருதியை ஒழுங்கு செய்யும் மன்காகள், பர்த என்ற, மெட்டுகளின் கீழே செல்லும் தர்பை என்ற கம்பிகள், கம்பிகளை மீட்டுவதற்கான மிஜ்ராய் என்ற கருவி ஆகியவை சித்தாரின் முக்கிய பகுதிகள்.

சித்தார் வாசிப்பவர் தனது வலதுகை விரல்களில் அணிந்துள்ள மிஜ்ராப் பயன்படுத்திக் கம்பிகள் மீட்டவும், இராகசுவரம் வெளிப்படவும் செய்யும் போது உருவாகும் தொனி இரசிகர்களை மகிழ்ச்சியில் மூழ்கச் செய்கிறது.

புகழ்பெற்றவர்கள்:

நிகில் பானர்ஜி
விலயத்கான்
பண்டிட் ரவிசங்கர்

***பக்காவஜ்***

கர்நாடக இசையில் மிருதங்கத்தைப் போன்று அமைப்பிலும் வடிவத்திலும் ஒற்றுமை உள்ள இது, இந்துஸ்தானி இசையில் துருபத், தமார். ஆகிய இசை வடிவங்களுக்கு வழிவகுக்கிறது. ஆனால் இரண்டிடைய நாதங்களுக்கு வேற்றுமை உள்ளது. மிருதங்கத்திற்கு தக், கெச் என ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறான சுருதிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பக்காவாஜின் வலதுகை பயன்படுத்தி வாசிக்கும் பகுதியை தாய் எனவும், இடது கையினால் வாசிக்கும் பகுதியை பாய எனவும் கூறுவர். தோலினால் மூடிய இரு பகுதிகளும் வாரினால் இழுத்து கட்டடப்பட்டிருக்கும்.

வாசிப்பதில் வல்லுஞர்கள்

கன்சியாம்
புருஷோத்தம் தாஸ்
கணேஷ் சதுர்வேதி
இமாம் பக்ஸ் சுடியா
காதிர்பஷ்

***சந்தூர்***

நூறு கம்பிகள் உள்ள வாத்தியக் கருவி என அழைக்கப்பட்ட சந்தூர் காஷ்மீர் நாட்டுப்புற இசையில் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதை புதுமைப்படுத்தி இன்று நாம் பார்க்கக்கூடிய வடிவத்திற்குக் கொண்டு வந்தது பண்டிட் சிவகுமார் தர்மா ஆவார்.

கோபுர வடிவிலான இந்தக் கருவிக்கு சுருதி சேர்க்க அதிகநேரம் தேவைப்படுகிறது. தபலை முக்கியமாக வழிகாட்டுகிறது.

பெட்டியில் இணைக்கப்பட்டுள்ள 25 பாலங்களிலாக 100 –க்கு மேற்பட்ட கம்பிகளில் இடைக்காவின் கோல் போன்ற கம்பினால் தட்டி சிறந்த நாதத்தை உருவாக்குவர்.

சந்தூர் வாசிப்பில் புகழ் பெற்றவர்
சிவகுமார் சர்மா.

***சாரங்கி***

மிகப்பழமையான இந்த இசைக் கருவியின் பயன்பாடு இன்றும் அதிக முக்கியத்து வத்துடன் இசை உலகில் நிலைத்து நிற்கிறது. மனித ஒலியில் உருவாக்கப்படும் எல்லா இசைச் சிறப்பு பயன்பாடுகளும் இந்தக் கருவி வழியாக வெளிப்படுத்த முடியும். அமைப்பிலும், வடிவிலும் இதோடு ஒற்றுமையுள்ள தில்ரூபா, ஈஸ்ராஜ் தாவூஸ் ஆகிய கருவிகள் வில்லினால் செயல்படுவதாக இருந்தாலும் சாரங்கியிலி ருந்து வேறுபட்டு சித்தாரைப் போன்று இவையில் அதிகமான மெட்டுகள் உள்ளது. சாரங்கியில் மெட்டுகளுக்கு பதிலாக கட்டுகள் பொருத்தப்பட்டுள்ளன.

கட்டுகளில் வில்லுகளால் உரசும் போது அதன் மேலும் கீழும் வைக்கப்பட்டுள்ள கம்பிகளிலிருந்து நாதத்தை வெளிப்படுத்துகின்றன.

சாரங்கி வாசிப்பதில் புகழ் பெற்றவர்.:
சுல்தான்கான்

***புல்லாங்குழல்/ பான்சூரி***

புல்லாங்குழல் என்பது இந்திய இசையில் தவிர்க்க முடியாத ஒரு இசைக் கருவியாகும். இது தான் பான்சூரி.

சுமார் மூன்று அடி நீளம் உடையதும் உள்ளே வெறுமையானதும் ஊதுவதற்கான துளை மட்டுமின்றி ஸ்வரக் கட்டுப்பாட்டிற்காக ஏழு துளைகளும் உள்ளன. ஸ்ருதி வேறுபாட்டிற்கான புல்லாங்குழல் அல்லது பான்சூரி பருமனிலும், நீளத்திலும் மாறு படுகிறது. தாழ்ந்த சுருதி பருமனும், நீளமும் கூடியதும், உயர்ந்த சுருதிக்கு பருமனும் நீளமும் குறைவாக இருக்கும். சோலோ கச்சேரிகளுக்கும் வழிகாட்டுவதற்கும் பான்சூரி பொருத்தமான வாத்தியம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

புல்லாங்குழல் வாசிப்பில் புகழ் பெற்றவர்கள்:
பன்னாலால் கோஷ்
ஹரிபிரசாத் சௌரசியூ

***ஷெகனாய்***

வடஇந்தியாவில் திருமணச் சடங்குளுக்கும் , கோயில்களில் பாடல் சடங்குகளுக்கும் ஷெகனாய் வாசிக்கப்படுகிறது. ஒரு முனையில் நலி என்றழைக்கப்படும் கூர்மையான பகுதியும், மறுமுனையில் ஒரு குழாயும் உடையதே ஷெகனாய். கூர்மையான பகுதியில் பத்தூர் என்றழைக்கப்படும் இரு புல்தண்டுகள் இறங்கியிருக்கும். இதன் வழியாக ஊதும்போது வெளிப்படும் நாதத்தைக் குழாயின் ஏழு துளைகள் வழி யாக விரல் அசைத்து திறந்தும் மூடியும் சுவரங்கள் உருவாக்கப்படுகின்றன.

சோலோ வாத்தியமாக வாசிக்கப்படும் ஷெகனாய்க்கு தபலை, கர்தக் ஆகிய வாத்தி யங்கள் வழித்துணையாக உள்ளன. கர்நாடக இசையில் நாதசுவரத்துடன் வடிவ ஒற் றுமை இருந்தாலும் நாசசுவரத்தைப் பொறுத்த வரையில் நேர்த்தியானதும் இனிமையா னதுமான நாதம் இதிலிருந்து புறப்படுகிறது. பாரதரத்னா விருது பெற்ற உஸ்தாத் பிஸ் மில்லாக் கான் என்பவர் ஷெகானாய் வாசிப்பதில் வல்லுநராக இருந்தார்.

நந்தலால், கண்பதி ராவு, வசீகர், பாபுராவ் தேவாலங்கார், அகமது குசைன் அலி ஆகி யோர் இந்தத் துறையில் புகழ் பெற்றவர்கள்.

இந்திய இசை புராதனகாலம் முதல் வாத்தியக் கருவி, நிகழ்த்துதல்களால் தனிக்கவனம் பெற்றிருந்தது.

**உலகப் புகழ்பெற்ற சில வாத்தியக் கலைஞர்களைக் குறித்து அறிந்து கொள்ளுதல்.**

*பண்டிட் ரவிசங்கர்*

உலகப் புகழ்பெற்ற சித்தார் வாசிப்பவரும், தொகுப்பாளருமான இவர் ஹைர்ஹரானா வின் படைப்பாளரான பாபா அலாவுதீன் கானின் சீடன் ஆவார். வங்காள தேசத்தைச் சார்ந்த பண்டிட் ரவிசங்கர் 1920– ம் வருடம் ஏப்ரல் 7– ஆம் நாள் பனாரசில் பிறந்தார். 1944– ல் குருகலக் கல்வியை முடித்தார். அதற்குப் பின் மும்பையில் சென்ற இவர் எச் எம்வி– ன் இந்திய உறுப்பினர்களுடன் இணைந்து ஒரு சங்கத்தை நிறுவினார். 1946– ல் ஆகாசவாணியின் இசை இயக்குநர் ஆனார். 1956– க்கு பின் அவர் மேற்கத்திய நாடுக ளில் நிகழ்த்துதல் செய்வதற்குத் தொடங்கினார். அவற்றில் மிகப் புகழ் பெற்றது மோண் டேரிலோவ் திருவிழா அரங்கில் நடைபெற்ற நிகழ்த்துதல் ஆகியவையாகும். 1967– ல் இந்த அரங்கில் நடைபெற்ற போப் திருவிழாவில் உஸ்தாத் அல்லாரகயுடன் இணைந்து தன்னுடைய சித்தார் நிகழ்த்துதலை நடத்தினார். உலகப் புகழ் பெற்ற வயலின் வாசிப்ப வர்களாகிய யகூதி மெனுகின், புல்லாங்குழல் வாசிப்பவர்களான பெரே ரம்பால் ஷருகாசி, கடோ வல்லுநரான முசு முமியாக்ஷி ஆகியோருடன் இசையெழுத்துகளை நடததினார். இவ்வாறு உலகப்புகழ் பெற்ற இவர் குருவான அலாவுதீன் காதின் மகளை திருமணம் செய்தார். இவர்களுக்கு சுபேந்திர சங்கர் என்ற மகன் பிறந்தான். உலகிலேயே புகழ் பெற்ற சித்தார் கலைஞர் ரவிசங்கர்தான்.

அதிகமான விபரங்களுக்கு

எ. டி. மாதவனின் இந்துஸ்தானி சங்கீதம் என்ற புத்தகம் டி. சி. புக்ஸ்

*ஹரிபிரசாத் சௌரஸ்யா*

பண்டிட் ஹரிபிரசாத் என்ற உலகப் புகழ்பெற்ற பான்சூரி வல்லுநர். இசைப் பராம்பரியம் இல்லாத அலகாபாத்திலுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தார். நான்காம் வயதில் தாயை இழந் தார். தந்தை மல்லன் ஆக இருந்தார். சிறிது காலம் தந்தையுடன் களரிக்குச் சென்றார். அங்கிருந்து கிடைத்த உடல்நலம் தனது இசைவாழ்க்கையை தொடர்ந்து கொண்டு செல் வதற்கு உதவியுள்ளது என அவர் நினைவுகூறுகிறார். பான்சூரியின் பாரம்பரிய நடையை பின்தொடர்ந்த இவர் அதில் புதுமையான கருத்துகள் உட்படுத்தி பல மாற்றங்களும் செய்தார். இவர் இந்தியா மட்டுமின்றி 2001 ல் உலக நாடுகள் பலவற்றிலும் பயணம்

செய்து தன்னுடைய பான்சூரி கச்சேரிகளை நடத்தினார். சிவ்கரி என்ற பெயரில் பண்டிட் சிவகுமார் சர்மாவுடன் இணைந்து ஒரு சங்கத்தை உருவாக்கினார். ஏரா மான இந்தித் திரைப்படங்களுக்கு இசை இயக்கம் செய்தார். ப்யூஷன் இசையின் ஆசிரியர்களான சக்தியு போன்றோருடன் இணைந்து செயல்படுகிறார். மேலும் நெதர்லாந்தில் ' றோடோர்டாம் மியூசிக் கண்சர்வேட்டரியில் உலக இசைப் பிரி வில் கலை இயக்குநராக செயல்படுகிறார். முதல் குரு அயல்வாசியான பண்டிட் ராஜாராம். பின்பு வாரணாசியிலுள்ள பண்டிட் போலாநாதின் கீழே பயிற்சி பெற் றார்.

கிடைத்த விருதுகள்: அக்காதமி அவார்டு, பத்மபூஷன், யாஷ் பாரதீய சம்மான், பத்மவிபூஷன்.

*சக்கீர் குசைன்*

உலகப் புகழ்பெற்ற தபலை வாசிப்பாளரும் தாளமேள வல்லுநராகிய உஸ்தாத் அல் லாரகாவின் மகனான இவர் இந்தத் திறமைகளை உட்கொள்ளும் திறனை சிறுவய திலேயோ பெற்றிருந்தார். இவர் மும்பையில் பிறந்தார். மும்பை புனித சேவியர்ஸ் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்த இவர் தந்தையிடமிருந்து தபலை வாசிப் பதில் பயிற்சி பெற்றார். 1970- ல் அமெரிக்கா சென்று அங்கு இசைக்கல்வியை தொடர்ந்தார். 1971- ல் சாந்தி என்ற இசைக்குழுவில் சேர்ந்தார். 1975- ல் ஜாண் மெக் ளோகிளினுடன் இணைந்து சக்தியிலும் செயல்பட்டார். அக்காலத்தில் தந்தையு டன் இணைந்து றோளிங் மியூசிங் என்ற ஆல்பத்தை வெளியிட்டார். பத்மஸ்ரீ விருதைப் பெறுகின்ற இளைஞரான கலைஞர் என்ற புகழைப் பெற்றார்(1988) 1991 இசை அக்காதெமி விருதைப் பெற்றார்.

1992 -ல் சக்கீர் இசை அமைப்பபளருடன் சேர்ந்து மிக்கி ஹார்ட்டும், சக்கீர் குசைனுடன் இணைந்து பிளானெட்டிரம் என்ற ஆல்பத்திற்கு கிராமி விருதும் பெற்றார். இசைக்கல்லூரியில் முனைவர் பட்டம் பெற்ற இவர் பிறின்செஸ்டர், ஸ்டான் போர்டு பல்கலைக்கழங்களில் விசிட்டிங் பேராசிரியராகச் செயல்படுகிறார்.

*பாலக்காடு மணிஐயர்*

மிருதங்கம் வாசிப்பதில் மிகப்புகழ் பெற்ற இவர் பாலக்காட்டின் அருகிலுள்ள பழை யன்னூர் கிராமத்தில் 1942-ம் ஆண்டு ஜூன் 9 -ம் தேதியன்று பிறந்தார். அவரு டைய சரியான பெயர் இராமசாமி என்பதாகும். வீட்டிலும், அருகிலும் மணி என்ற செல்லப் பெயரில் அறியப்பட்டார். சிறு வயதிலேயோ மிருதங்கம் வாசிப்பதில் ஆர்வம் காட்டிய இவரை தந்தை பாகவதர் சாத்துப்புரையிலுள்ள மிருதங்க வாசிப் பில் வல்லுநரான சுப்பையாவின் கீழ் மிருதங்கப் பயிற்சிக்கு சேர்த்தார். ஆரம்பக் கல்விக்குப் பின் அன்றைய சிறந்த மிருதங்க வல்லுநரான விஸ்வநாத ஐயரின் கீழ் பயிற்சி பெற்றார். அதற்கிடையே சிவராமகிருஷ்ண பாகவதரின் ஹரிகதா பிரசங் கத்தின் மிருதங்க வாசிப்பிற்கு சிறுவனாகிய மணிக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்த அரங்கிற்கு பின்பு எண்ணெய்ப் பாடம் இராமையாவுடையவும், முண்டாய இராம பாகவதருகடையவும் கச்சேரிகளில் மிருதங்கம் வாசித்து இசை இரசிகர்களின்

கருவியானார். மணியின் வாசிப்பில் கவரப்பட்ட செம்பைத் தியாகராச பாகவதர் 1924- ல் சென்னையில் எக்மோரிலுள்ள ஜகநாத கோயில் சபையில் தனது ஒரு கச்சேரிக்கு வழித்துணையாக மணிக்கு வாயப்பளித்தார். மணியின் வாசிப்பை செம்பை வானளவும் புகழ்த்தவும், பாராட்டவும் செய்தார்.

மணிஐயர் தனது 15- ம் வயதில் தஞ்சாவூரில் ஒரு கச்சேரிக்கு சென்றபோது மிருதங்க வல்லுநரான மைசூர் வைத்தியநாதரை பார்த்து அவருடைய சீடனாக மாறினார். இவ்வாறு மிருதங்க வாசிப்பில் அதிகமான பயிற்சி கிடைத்தது. மிருதங்க வாசிப்பில் அபூர்வநடையை உருவாக்கிய பாலக்காடு மணிநடை என்ற சிறப்பும் கிடைத்தது. இந்த நடையில் கவரப்பட்டு ஏராளமான இளம் கலைஞர்கள் மணிஐயரின் கீழ் மிருதங்கம் பயின்றனர்.

உலகமெங்கும் உள்ள கச்சேரிகளில் வழிகாட்டும் இவர் பிற கலைஞர்களை பக்தியாதரவுடன் மட்டுமே பார்த்திருந்தார்.

*டின். என். கிருஷ்ணன்*

வயலின் வாசிப்பதன் தத்துவத்தை சரியாகப் புரிந்து கொண்டு அதை கர்நாடக இசைக்கு பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் பாலுசாமி தீக்ஷிதர் ஆவார். ஒரு வழிகாட்டி வாத்தியம் என்ற நிலையில் வயலினுக்கு மதிப்பு கிடைத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பாதியிலாகும். இந்தக் காலகட்டத்தில் வயலின் வாசிப்பதில் புகழ் பெற்றவர்களில் திருக்கொடிக்காவல் கிருஷ்ணய்யர் முக்கியமானவர். அவர் வயலின் உபயோகித்து சுருதி சேர்க்கும் முறைக்கு முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தார். அவரைப் போன்று வயலின் வாசிப்பிவ் தொழில்நுட்ப அறிவும், முறையாகப் பயிற்சி பெற்ற பலரும் அந்தக் காலத்தில் இருந்தனர். அவர்களில் வடிவேலு, தேவுடு சகோதரர்கள் ஆகியோர் முக்கியமானவர்கள். பின்பு வயலின் வாசிப்பில் உண்டான விளம்பரம் வியப்பூட்டுவதாக இருந்தது. இந்தக் காலத்தில் வயலின் வாசிப்பில் உயர்ந்த நிலைக்கு சென்றவர்களில் துரைவெங்கிடசாமி நாயுடு, மைசூர் சௌடையா, கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை ஆகியோர் புகழ்பெற்றவர்கள். இன்றும் வாழ்ந்திருக்கும் டி. என். கிருஷ்ணன், லால்குடி ஜெயராமன். எம். எஸ். கோபாலகிருஷ்ணன், எம். சந்திரேகரன். வி. வி. சுப்ரமணியன் ஆகியோரில் மிகச் சிறந்தவர் டி. என். கிருஷ்ணன் ஆவர். பறவூர் அம்மிணி அம்மாளுடையவும், நாராயண ஐயருடையவும் மகனாக 1928 அக்டோபர் 6- ம் தேதி பிறந்தார். தந்தையிடமிருந்து வயலின் வாசிப்புப் பயிற்சியைத் தொடங்கினார். சிறுவயதிலேயே அசாதரணமான இசைத் திறனை வெளிப்படுத்தினார். நாராயணஐயர் பொறுமையுடன் ஒரு போதும் பொறுக்காத நபராக இருந்தார். தன்மூலமாக சிறுவயதான கிருஷ்ணன் இணையான கல்வியுடன் மணிநேரமாக வயலின் பயிற்சி பெற கட்டாயமாக்கப்பட்டார், எட்டாம் வயதில் முதல் கச்சேரி திருப்பணித்துறையில் நடைபெற்றது. ஒன்பதாம் வயதில் செம்பை வைத்தியநாத ஐயரின் கச்சேரியில் வயலின் வழிகாட்டியாகவும் அத்துடன் மாஸ்டர் கிருஷ்ணன் என்ற பெயரில் புகழடையவும் செய்தார்.

**கூடுதல் அறிவிற்கு-**

சௌத் இந்தியன் மியூசிக் **1- 6**

சங்கீத சாஸ்திர பிரவேசிக-ஸ்ரீவெங்கிடசுப்ரமணிஐயர்
தக்ஷிணேந்தியன் இசை - கெ.டி இரவீந்திரநாத்
கர்னாடக சங்கீத சரித்திரம்- ஏ. கே. இரவீந்திரநாத்

## மதிப்பீடு

- வாத்திய வாசிப்புகளைப் பிரித்தறிதல்
- தகவல் சேகரிப்பு
- பிரதிபலிப்பு
- இரசிப்பு

## கூடுதல் செயல்பாடுகள்

- இந்திய இசை வாத்திய வாசிப்பு வல்லுநர்களைக் குறித்த தகவல் சேகரிப்பு

## தொடர்ச் செயல்பாடு

- பல்வேறு வாத்தியக் கருவிகளின் படசேகரிப்பு
- வகைப்படுத்தல்
- தொடர்ச் செயல்பாடு

## ஒருங்கிணைத்தல்

- இந்திய இசை முறைகள் ஏராளமாக இசைவல்லுநர்களின் நன்கொடையால் நிறைந்துள்ளது. இந்திய இசைக் கருவிகளின் வேறுபாடும் அவர்களின் சிறப்பும் உலக இசை வரலாற்றில் எக்காலத்திலும் உன்னத நிலையை அடையச் செய்தது. ஏராளமான வாத்தியக் கலைஞர்களை உலகிற்கு நன்கொடை அளித்த நமது இந்தியாவின் வாத்திய முறைகளையும் அவற்றில் வல்லுநர்களையும் பிரித்தறிவதற்காக தயாரிக்கப்பட்ட பாடப்பகுதிகள் எந்த ஒரு இசை இரசிகருக்கும் விலைமதிக்க முடியாதது ஆகும்.

# அலகு- 4

பாடுவதன் சிறப்பினாலும் இசைக்கருவிகளின் வேறுபாட்டினாலும் ஏராளமான வேற்றுமைகளை உட்கொண்ட இசைவடிவங்களால் நிறைந்ததே இந்திய இசை. இந்திய இசையின் மிக முக்கிய பிரிவான இந்துஸ்தானி இசையும் கர்நாடக இசையும் அநேக கலைஞர்களின் படைப்பாற்றல் சார்ந்த படைப்புகளாலும், நிகழ்த்துதல்களினாலும் நிரம்பிள்ளது. இரு இசைப்பிரிவுகளையும் மக்கள் மனதை அடையச் செய்வதற்கு முயன்ற ஏராளமான இசைக்கலைஞர்களின் முயற்சியும் நன்கொடைகளும் பின் தலைமுறை வரலாற்று உணர்வுடன் நினைவுகூர வேண்டும்.

## உள்ளடக்கம்

கர்நாடக- இந்துஸ்தானி இசை வல்லுநர்களுடைய வாழ்க்கையும் இசை நன்கொடைகளும் குறித்து இந்த அலகில் கூறப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவுகள்

- இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை ஆகியவற்றில் புகழ்பெற்ற இசை வல்லுநர்களைக் குறித்து இந்த அலகில் கூறப்பட்டுள்ளன.

## கருத்து அறிவு

- இந்தியாவில் முக்கியமான இரு இசைப்பிரிவுகள் உள்ளன.
- இந்த இரு பிரிவிலும் ஏராளமான இசை வல்லுநர்கள் பல காலங்களிலாக வாழ்ந்து வந்தனர்.
- இவர்களுடைய நன்கொடைகள் இந்தப் பிரிவுகளை வளப்படுத்தியுள்ளது.
- இசை வல்லுநர்களைக் குறித்து அறிவு பெறுதல்.

## செயல்முறை

- நம்பகத்தன்மை வாய்ந்த நூற்கள் வழியாகவும், ஐசிடி வாய்ப்புகள் வவியாகவும் அறிவு பெறுதல்.
- குறிப்புகள் தயாரித்து வெளியிடுதல்

## மதிப்பீடு

- தேடுதலை மதிப்பீடு செய்தல்
- குறிப்புகள்

## கற்றல் செயல்பாடுகள்

***செயல்பாடு 1***

- இந்துஸ்தானி- கர்நாடக இசையின் கிருதிகள் கேட்கச் செய்தல்.

  இந்துஸ்தானி- கலால், பஜனை, பந்திஷ், கசல், தரான டியூமி, டப்பா, பத்ரா

  கர்நாடக- கிறுதி, கீர்த்தனை, பதம், ஜாவளி

- கேட்ட இசைவடிவத்தின் சிறப்புகளை மதிப்பிடுதல்- விவாதம்

  *தரநிர்ணயக் குறிப்புகள்*

  - நடை
  - வேற்றுமைகள்
  - ஒற்றுமைகள்

***செயல்பாடு 2***

- இசை வல்லுநர்கள், துறை, நன்கொடைகள் ஆகியவற்றை அட்டவணைப்படுத்தி எழுதுதல்.

- இந்துஸ்தானி இசை, இசை வல்லுநர்கள், இசை வரலாறு

*அமிர் குஸ்ரு(1253- 1326)*

புகழ்பெற்ற வெளிநாட்டு கவிஞர், இசை வல்லுநர் தத்துவஞானி, மொழிப்பண்டிதர் ஆகிய நிலைகளில் புகழ் பெற்றவர். துருபத் என்ற பழங்கால இசை வடிவத்திற்கு

வெளிநாட்டு மெட்டும் தாளமும் இணைத்து கவ்வாலி என்ற பாடல் வடிவத்தை உருவாக்கினார். பேர்ஷியன், போஜ்பூரி ஆகிய மொழிகளை இணைத்து ஹிந்வி என்ற மொழியைப் படைத்தார். இசைக்கருவிகளான சித்தார், தபலை ஆகியவை இந்துஸ்தானி இசைக்கு பொருத்தமானவை என்று விளம்பரப்படுத்தினார். ஏராளமான இராகங்கள், தாளங்கள் பந்திஷ், கசல்கள் ஆகியவற்றைக் கண்டு பிடித்தவர். இந்துஸ்தானி இசையின் தந்தை என்ற பெயரிற்கு உரிமையாளர்.

*சுவாமி ஹரிதாஸ் (1480– 1575)*

இசை வல்லுநராக இருந்த இவர் துருபத் என்ற இசை வடிவத்தை தோற்றுவித்த வர் என அறியப்படுகிறார். அக்பரின் அவையில் இசைப் பண்டிதரான தான்ச னின் குருவே சுவாமி ஹரிதாஸ்.

*தான்சன் (1535– 1592)*

துருபத் என்ற இசை நடையின் சிறந்த பாடகர். அக்பரின் பண்டித அவையின் தலைமைப் பாடகர். சுபி இசையில் அசாமான்ய பாடவம், புகழ்பெற்ற தர்வாரி, கன்னடி, மியான் கீ மல்கால், மியான் கீ தோடி ஆகியவற்றின் படைப்பாளர். தீபக் இராகம் பாடி தீபங்கள் ஏற்றிய சிறந்த பாடகர் தான்சென் என இசை வர லாற்று வல்லுநர்கள் மதிப்பிடுகின்றனர்.

*விஷ்ணு திகம்பர் புலஸ்கர் (1872–1931)*

1872 – ல் குறுந்துவாதியில் பிறந்தார். தந்தை ஹரி கதாகாலட்சேப கலைஞர். சிறு வயதில் நிகழ்ந்த ஒரு விபத்தில் இரு கண்களுடையவும் பார்வையை இழந்த இவர் முழுமையான இசை இரசிகரானார். திகம்பரரின் பக்திப் பாடல்களைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற மீரஜ் அரண்மனையின் மருத்துவரான பட்பெட திகம்பரில் புகழ் பெற்ற ஒரு இசை வல்லுநர் உண்டு என பிரித்தறியவும் அதை மன்னருக்கு தெரியப்படுத்தவும் செய்தார். திகம்பரின் பாடல் திறமையை அறிந்து கொண்ட மன்னர் மகாராஷ்டாவில் அக்காலத்தில் புகழ்பெற்ற பாலகிருஷ்ண புவ இசல்க ரன்ஞிகரிஞ் கீழே இசைப் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தார். இசைப் பயிற்சிக்குப் பின் தன்னுடைய நீண்ட கால கனவாகிய கந்தர்வ சங்கீத இசை மகாவித்யாலயத்தை 1901 ல் லாகூரில் நிறுவினார். முற்றிலும் ஜனகிய முறையில் அமைத்த இந்த இசைப் பள்ளிக்கூடம் பிற்காலத்தில் மிகப் புகழ்பெற்றது. 1908 –ல் இதன் ஒரு கிளை மும்பையில் நிறுவப்பட்டது. ஏராள மான சீடர்களை கொண்ட இவர் அநேகமான கச்சேரிகளை நாடெங்கும் நடத்தி வந்தார். நாட்டிற்காக தன்னுடைய வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றி வைத்த மிகப்பெரிய வல்லுநர் புலஸ்கர் ஆவார். இவருடைய மகன் தத்தாத்ரேய முழுமையான ஒரு இசை வல்லுநராக திகழ வேண்டியவர். ஆனால் எதிர்பாரத வகையில் மரணத்திற்கு கீழடங்கினார். இவர் இசையுடன் காட்டிய கடமையுணர்வு எந்த அளவு என்பதை நீருபிக்க இந்தியர்கள் மிக அதிகமாக கேட்கின்ற ரகுபதி ராகவ ராஜாராம் என்ற பஜனை மட்டுமே போதும். இந்தியாவின் தேசிய கீதமான

வந்தேமாதரம் வடிவமைத்ததும் இவரே. இரசிகர்களின் மனதில் மிக வேகமாக இடம் பெறக்கூடிய இசை எழுத்துகளை நன்கொடையாக வழங்கிய இந்த பெரிய இசை வல்லுநரின் இசைப்படைப்பு விலைமதிக்க முடியாதது. 1931– ல் இவர் இயற்கை எய்தினார்.

*விஷ்ணுநாராயணன் பட்கண்டெ (1860– 1936)*

இந்துஸ்தானி இசையின் மறுமலர்ச்சி நாயகர்களில் முக்கியமானவர். மும்பை பாலகேசரில் மராட்டிய குடும்பத்திவ் இவர் பிறந்தார். சட்டத்தில் இளங்கலைப் பட்டம் முடித்த இவர் சில நாட்கள் நீதிபதியாக சேவை செய்துள்ளார். சித்தாரில் இசைப்பயிற்சியை பெற்றுக் கொண்ட இவர். பிற்காலத்தில் துருபத் இசை பயிற்சி பெற்று இசைக்காக வாழ்க்கையை மாற்றி வைக்கவும் செய்தார். இசையில் கூடு தல் அறிவு பெறுவதற்கும் ஆராய்ச்சி செய்வதற்கும் நாடெங்கும் பயணம் செய்து ஏராளமான இசைப் பண்டிதர்களுடன் தொடர்ச்சியான விவாதங்களில் ஈடுபட் டிருந்த இவர், இந்துஸ்தானி இசையில் முன்பு நிலைநின்ற ராகராகினி முறைக்கு மாற்றம் கொடுத்து இன்று நடைமுறையிலுள்ள ஒழுங்கு சுவரமுழுமைக்கு உள்ள பத்து தாட்டுகளிலான நிலவிலிருந்த ஜன்யராகங்களை ஒழுங்கமைத்தார்.

1910– ற்கும் 1920 ற்கும் இடையில் இசை இரசிகர்களுக்கும் மாணவர்களுக்கும் மிக அதிகம் பயன்படக்கூடிய பதினெட்டு இசை நூற்களை எழுதியுள்ளார். இசையில் முறையாகப் பயிற்சி பெறுவதற்கு வசதி ஏற்படுத்துதல் என்ற நோக்கத் துடன் இவர் 1916– ல் பரோடா ஸகூல் ஆப் மியூசிக் கல்லூரியை துவங்கி செயல் படுத்தினார். 1926– ல் லக்னோவில் ராய் உமாநாத் பாலி என்பவர் தொடங்கிய மாரிஸ் காலேஜ் ஆப் மியூசிக் என்ற இசைக் கல்லூரிக்கான கோழ்ஸ் மெட்டீரி யல்ஸ் உருவாக்கியவர் இவரே. இன்றைக்கு இந்த இசைப்பள்ளி டாக்டர் பாட்கண்டேய கோளேஜ் ஆப் இந்துஸ்தானி மியூசிக் என்ற பெயரில் அறியப் படுகிறது.

- கர்நாடக இசை , இசை வல்லுநர்கள், இசை வரலாறு

*புரந்தர தாசர்*

கர்நாடக இசை பிதாமகன், பயிற்சிப் பாட வரிசைகளை ஒழுங்கமைத்தவர், ஏரா ளமான இசை எழுத்துகள்

*தியாகராஜ சுவாமி (1767–1847)*

தஞ்சாவூரில் உள்ள திருவாவூரில் பிறந்தார். இசை மும்மூர்த்திகளில் ஒருவர். ஏராளமான இசை நூற்களை எழுதினார். கிருதிகளின் பாடல் இனிமைக்கு சங்கதி களை அளித்து அழகுபடுத்தியவர் இவருடைய இசைக் காவியங்களுக்கு பக்தி அதிகமாகும். சூரியகாந்தி, லதாங்கி, ராமபிரியா போன்ற பாடல்களை ஜனகிய மாக்கினார். சுத்தபங்கள, ருந்தரவாளி, ஜயநாராயணி, காப்பிநாராயணி, சிந்தரஞ்சினி, பலகம்ச ஆகிய அபூர்வ இராகங்களை அறிமுகம் செய்தது இவராகும்.

*முத்துசாமி தீக்ஷிதர்*

மும்மூர்த்திகளில் ஒருவர். ஏராளமான கர்த இகள் எழுதவும் கர்நாடக இசையை ஜனகியமாக்கவும் செய்தார். புகழ்பெற்ற இந்துஸ்தானி இசையில் புகழ்பெற்ற அமீர்கலயாணி, விருந்தாவனசாரங்க. காப்பி, யமன் கல்யாணி, மியான்கிதோடி போன்ற இராகங்களை கர்நாடக இசை உலகிற்கு அறிமுகம் செய்தார்.

*சியாம சாஸ்திரிகள் (1762–1827)*

மும்மூர்த்திகளில் ஒருவர். விலோமசாப்ப தாளத்தின் தாள சமத்காரத்தின் ஸ்தா பகன் சிக்கலான சில தாளத்திலும் இலக்கிய காவியங்களை எழுதியுள்ளார். ஏரா ளமான சீடர்களைக் கொண்டவர்.

*சுவாதி திருநாள்(1813–1847)*

சரியான பெயர் இராமவர்மா. திருவிதாங்கூர் அரச குடும்பத்தைச் சார்ந்தவர். ஏராளமான இசை வல்லுநர்களை கேரள சமூகத்திற்கு அறிமுகம் செய்துள்ளார். கர்நாடக இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் அநேக இசை காவியங்களை எழுதியுள்ளார்.

- கர்நாடக இசையிலும், இஸ்துஸ்தானி இசையிலும் புகழ் பெற்ற பிற இசை வல்லு நர்களின் அட்டவணை தயாரித்தல்.


***கர்நாடக இசை***

பாபநாசம் சிவன் (1650–1688)
கோபாலகிருஷ்ண பாரதி (1811–1896)
நீலகண்ட சிவன்(1839–1900)
மகா வைத்திய நாத ஐயர்(1844–1905)
பத்ராசலம் ராமதாஸ் (1620–1688)
அருணாச்சலம் கவிராயர் (1711–1788)
இரயிம்மன் தம்பி (1782–1856)
ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் (1877–1945)
மைசூர்வாசுதேவாசாரி (1863–1961)
தஞ்சாவூர் சங்கர ஐயர்
டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா
லால்குடி ஜெயராமன்
செம்மங்குடி ஸ்ரீனிவாச ஐயர்
தஞ்சாவூர் எஸ் கல்யாண இராமன்
எம். எஸ். சுப்புலட்சுமி
செம்பை வைத்தியநாத பாகவதர்
ஜி. என். பாலசுப்பிரமணியன்
மதுரை மணி ஐயர்
மகாராஜபுரம் சந்தானம்
பிருந்தா- முக்தா சகோதரிகள்
எம். எல். வசந்தகுமாரி
டி. கே. பட்டம்மாள்

## இந்துஸ்தானி இசை

பைஜூ பாவ்ரா (1542-1613)
பகதூர்ஷா சபர் (1775-1862)
வஜித் அடியா (1790-1859)
பாலகிருஷ்ண புவ இசல் கரன்ஞிகள் (1849- 1927)
பாஸ்கர் புவா பாவ்லே (1869-1922)
பாலகரந்தர்வ (1888-1967)
கேசர்பாய் கேர்கர் (1892- 1977)
ஓம்கார்நாத் டாக்கூர் (1897-1967)
ஹீராபாய் பத்ராதேக்கர் (1905-1989)
சரஸ்வதி ராணெ (1916-2006)
அமீர்கான் (1912-1974)
சங்கபாய் கன்கல்(1913-2009)
பீகம் அக்தர் (1914-1974)

## 7.3



# நடனக்கலை



# நடனக்கலை

## முன்னுரை

இவ்வுலகம் அசைந்து கொண்டே இருக்கிறது. உடல் அசைவுகளில் ஒளிந்திருக்கும் தாளத்தை அழகுபடுத்தி வெளிப்படுத்துவதே நடனம். உடலின் சக்தியை கட்டுப்பாடுடன், முறைப்படுத்தி வெளியிட நடனம் உதவுகிறது. சமூக ரீதியிலான ஒருங்கிணைப்பு உடலின் திறன், அழகைக்குறித்துள்ள அறிவு என்பவையை மேம்படுத்த நடனம் மிகப்பெரிய பங்களிக்கிறது.

எல்லாக் கலைகளுக்கும் இருப்பது போன்று நடனத்திற்கும் முக்கியமான இரண்டு பகுதிகளுண்டு. வடிவம், பாவனை என்பவையாகும் அது. இதில் சாதாரண மக்கள் பாவனை என்பதையே விரும்புகின்றனர். ஒரு நடனத்தோடு கூடிய கதையே, சூழலே, கருத்தோ என் ஏதெனினும் அது பாவனை எனப்படும். பாவனையை வெளியிடும் உடலே அதன் வடிவும்.

எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் கலை எனில் அவனுடைய மனது பாவனையையும், உடல் வடிவமும் என்று பொருள். சாதாரண இரசிகர்கள் வடிவத்துடன் வெளிவரும் பாவனையை இரசிக்கின்றனர். பண்டிதர்கள் பாவனை வெளிவரும் முறையை வடிவத்தின் வழி இரசிக்கின்றனர். பாவனையின் வடிவ வேறுபாடுகளே பல நடன வடிவங்கள்.

நமது மாணவர்களும் முதலில் பாவனையை இரசிக்கின்றனர். அதனால் தான் அவர்கள் முதலில் பாவனையை தெரிந்துகொள்ளட்டும் கதை வடிவத்தில் ஒரு நடனம் ( ஒரு தனிப்பட்ட கலை வடிவம் என்ற முறையில் அல்லாமல் சாதாரண வேடத்தில் செய்வது நன்று) வெளியிட வாய்ப்பு அளிக்கவும்.

இவ்வாறு கண்டறிந்த, இரசித்த, பாவனையை சுயமாக செய்து அனுபவிப்பதாக வேண்டும். அடுத்த நிலை அதன் வழி உருவாகும் அசைவு முறைகளே 'நடனம்' என்ற பெரிய பின்னணியிலுள்ளது என்று மாணவர்கள் அறிய வேண்டும். திறனோடு கூடி, தாளத்தோடு 'உடல்' என்ற உடகத்தின் வழி இசையோடு கூடி அசைவது எவ்வாறு என்று மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் பயிற்சி அமையவேண்டும். பூ மூக்கின் அருகில் வருகின்ற உத்தி. நுகர்வதற்கு அவனுக்கு தெரியும். தெரிந்து கொள்ளும்வரை இதைத் தேர்ந்தெடுக்கலாம். உடலின் வாய்ப்புகளைப் பாடப்புத்தகத்தின் வழி அல்லது சிக்கலான கோட்பாடுகளின் வழி அவர்கள் அறிய வேண்டும். முழு சுதந்திரத்துடன் ஆடுவதற்கான சூழல் ஏற்படுவதே இங்கு தேவை. முழு சுதந்திரமாக என்றாலும் சூரியனும், சந்திரனும், காற்றும் அசைவதில் உள்ள உள்ளார்ந்த கட்டுப்பாடு போன்று. பின்னணி இசையும், தாளமும் அவர்களைக் கட்டுப்படுத்துகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

# கற்றல் அடைவுகள்

## எட்டாம் வகுப்பு

- கேரளத்தின் பாரம்பரிய நடனவடிவங்களைப் பிரித்தறிதல்.
- துள்ளல்கலை- பல்வேறு பிரிவுகள், ஒற்றுமை வேற்றுமைகளைப் பிரித்தறிய. இயலுகிறது.
- முகநடிப்பு வழியாக வெவ்வேறு உணர்வுகளை வெளியிடுதல்.
- வெவ்வேறு உறுப்புகள் வழியாகக் கருத்துப் பரிமாற்றம் செய்தல்
- அடவுகள், முத்திரைகள், நடிப்புமுறைகள் இவை சேர்ந்து ஒழுங்காகப் பாடல்கள், கவிதைகள் ஆகியவற்றில் காட்சி உருவாக்கம் செய்தல்.

## ஒன்பதாம் வகுப்பு

- உலக வழக்கு, நாட்டிய வழக்கு போன்ற நடிப்பு பிரிவுகளைக் குறித்து தகவல்கள் சேகரித்து வெளியிடுதல்.
- நடனத்தின் ஒரு பதம் வெளியிடுதல்.
- அறிமுகமான பாடல்களுக்குப் பொருத்தமான நடன உருவாக்கம் செய்தல்.
- சுத்தநடன வடிவங்களான புஷ்பாஞ்சலி, ஜசிசுவரம் போன்று ஏதேனும் ஒன்றை நிகழ்த்துதல்.
- அரை செவ்வியல் முறையிலுள்ள அறிமுகமான பாடல்களுக்கு ( பஜனை, பக்திப்பாடல்கள் போன்ற) முறையாக பொருளுணர்வுடன் நடன அமைப்பு செய்து நிகழ்துதல்.

## பத்தாம் வகுப்பு

- கேரளத்தின் நாட்டுப்புறக் கலை வடிவங்களை( ஒப்பனை, திருவாதிரை, மார்க்கம் களி) பிரித்தறிதல்.
- செவ்வியல் நடனத்தில் ஐந்து ஜாதியிலுள்ள சொற்களுக்கேற்ப ஜதிகள் உண்டு என்பதைப் பிரித்தறிதல்.
- செவ்வியல் நடனத்தில் நவரசங்களின் முக்கியத்துவத்தைப் பிரித்தறிதல்.
- தேசபக்திப் பாடல்கள், கவிதை ஆகியவற்றின் காட்சி உருவாக்கம் செய்தல்.

# எட்டாம் வகுப்பு

## அலகு 1 பாரம்பரிய நடன வடிவங்கள்

கேரளம் என்ற சிறிய மாநிலத்திற்கு ஏராளமான இசைவடிவங்கள் உள்ளன. வேறுபட்ட சுவடுகளும் . பாடல்களும் இதன் சிறப்பாகும். வட்டார அடிப்படையிலான ஆடைமுறைகளும், பாடலும் சுவடுகளும் அவற்றை ஒன்றோடொன்று வேறுபடுத்துகிறது. நமது திருவாதிரைக்களி, ஒப்பனை, கும்மி, கோலாட்டம், ஐவர்களி, பரிசமுட்டு, தப்முட்டு, பூரக்களி, கணியார்கலி, மலமக்களி, படையணி, தேவிகானம் களி ஆகியன மட்டுமன்றி ஆதிவாசிகளுக்கிடையே வேறு பாரம்பரிய நடனங்களும் உள்ளது. இவைகளின் பாடல்களில் ஏதேனும் ஒரு நோக்கம் இருக்கும். சொற்கட்டுகள் சேர்ந்த இலக்கியமும் இருக்கும். இவை அனைத்தும் பாரம்பரியமாக பயிற்சி பெற்று வரும் கலைகளாகும். இவற்றில் சீரமைப்பு உருவாக்க யாரும் முயற்சி செய்வதில்லை. ஏனெனில் அதன் தனிமையை நிலைநிறுத்துவதற்காகும். இத்தகைய நடனங்களில் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் அழகான நாட்டுப்புற சுவடுகளை நம்மால் பார்க்க இயலும். இதன் பின்னனியில் நாட்டுப்புற பாடல் பகுதிகளுடன் செண்டை, துடி, பறை, மரம், கொம்பு, குறுங்குழல் போன்ற வாத்தியங்களையும் பார்க்கலாம். இத்தகைய பாரம்பரிய நடனங்களின் நிகழ்த்துதல்கள் இந்த அலகு வாயிலாக அறிமுகம் செய்யப்படுகிறது.

### கற்றல் அடைவுகள்

- கேரளத்தின் பாரம்பரிய நடனவடிவங்களைப் பிரித்தறிதல்.

### கருத்து, அறிவு

- கேரளத்தில் ஏராளமான பாரம்பரிய நடன வடிவங்கள் உள்ளன.
- கேரளத்தின் பாரம்பரிய நடன வடிவங்களைப் பிரித்தறியும் திறன்.
- பாரம்பரிய நடனங்களின் தனிப்பட்ட ஆடைமுறை, சுவடுகள் ஆகியவை பிரித்தறியும் திறன்.

### கற்றல் செயல்பாடுகள்

- பாரம்பரிய நடன வடிவங்களை அட்டவணைப்படுத்துதல்.
- திருவாதிரை, ஒப்பனை, மார்க்கம் களி, கும்மி, பரிசமுட்டு, கோல்களி, கோலாட்டம், பின்னல் கோலாட்டம் ஆதிவாசிகளின் கோல்களி ( குறுமர், பளியர், மலைப் புலையர், ஆகியோரின்)
- அட்டவணைப்படுத்தியவற்றில் சிலவற்றைக் குறித்து குழந்தைகளுக்குத் தெரியும்.


திருவாதிரைக் களி


பரிசமுட்டுக் களி


ஒப்பனை


பூரக்களி

குழந்தைகளுக்கு அறிமுகமில்லாத நிகழ்த்துதல்களைக் குறுந்தகடு உபயோகித்துக் காட்டுதல்

- ஏதேனும் பாரம்பரியக் கலைஞர்களுடனான பேட்டி
- பாரம்பரிய நடனவடிவங்களைக் குறித்த தகவல் சேகரிப்பு, படசேகரிப்பு
- இந்தத் துறையில் புகழ்பெற்றவர்களைக் குறித்த கற்றல் குறிப்புகள்.
- பாரம்பரிய நடனம் நிகழ்த்தும் குழந்தைகளைத் தனியாகக் கணக்கிட வேண்டும். பிற குழந்தைகளின் சேகரிப்புப் புத்தகங்கள் மதிப்பீடு செய்யலாம்.

## மதிப்பீடு

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- மொழி
- முழுமை
- தேடுதலின் நகல்
- நம்பகத் தன்மை

## அலகு-2-துள்ளல்

ஒவ்வொரு காலகட்டத்திலும் கலைஞர்கள் சமூக அநீதிகளுக்கு எதிராகத் தங்கள் கலையைப் பயன்படுத்தியிருந்தனர். அதற்கு குஞ்சன் நம்பியாரின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் நிலைநின்ற ஜாதிப்பிரிவினையும் சமூகத்தில் நிலைநின்ற வேறுபல அநீதிகளுக்கு எதிராகவும் தனது படைப்பாற்றலை போர்வாளாக மாற்றி வாழ்க்கையையே கலைக்கும் அதன் வழியாக சமூகத்திற்கும்

மாற்றிவைத்த ஒரு மிகப்பெரிய கலைஞரே குஞ்சன் நம்பியார். சாக்கியாரின் புரட்டாட்டங்களைப் பொறுக்கமுடியாமல் ஒரு நாள் கோயிலின் வெளியே தனக்குள் மறைந்திருந்த கலையை கொண்டுவந்து ஆடியபோது கேரளக் கலைக்கு விலைமதிக்க முடியாத ஒரு புதிய நடன வடிவம் உருவாகியது. அந்த துள்ளல் என்ற கலையில் புரட்டு நகைச்சுவை வழியாக தீமைகளுக்கு எதிராகவும் ( பிற கலைகளிலிருந்து எழுச்சியை உட் கொண்டுதான் நம்பியார் துள்ளல் கலையை வளரச் செய்தார் எனக் கூறலாம்.( படையணி ) அநீதிகளுக்கு எதிராகவும் ஒரு மின்னல் பிழம்பாக சீறிப் பாய்ந்தார். செம்பகசேரி மன்னரின் கீழுள்ள அம்பலப்புழை ஸ்ரீகிருஷ்ணன் கோயிலில் நம்பியார் முதலாவது ஸ்ரீதங்கன் துள்ளலின் கல்யாண சௌகந்திகம் என்ற கதையை ஆடினார். துள்ளலின் மிக எளிமையான வேடமும் இதனுடையது தான். பின்புதான் ஒட்டன், பறயன் என்ற பிற வகைகள் உருவானது. ஓட்டன் துள்ளல் பிரிவில்தான் அதிகமான இசைக் காவியங்கள் எழுதப்பட்டுள்ளன. கிராதம், ருக்மணி சுயவரம், சந்தான கோபாலம், நளசரிதம் ஆகியவை அவற்றுள் சிலதாகும். ஆத்மீக நிகழ்ச்சிகளைக் கையாளும் பறயன் துள்ளலில் புளிந்தீமோட்சம் போன்ற சில கதைகளே உள்ளன. இந்த மூன்று வகையிலான துள்ளல்களைக் குறித்தும் இந்த அலகில் கூறப்பட்டுள்ளது.


### கற்றல் அடைவுகள்

- துள்ளல் கலை பல்வேறு பிரிவுகள். ஒற்றுமை, வேற்றுமைகளைப் பிரித்தறிதல்.


### கருத்து, அறிவு

- துள்ளல் மூன்று வகைப்படும். ஒட்டன், சீதங்கன், பறயன்
- வேடம், நிகழ்த்துதல் ஆகியவற்றின் வேறுபாடு
- வேகத்தின் வேறுபாடு

### கற்றல் செயல்பாடுகள்


*ஓட்டன்துள்ளல்*


*சீதங்கன்துள்ளல்*


*பறயன்துள்ளல்*

*நடனத் திருவிழா*

- பள்ளிக் கலைவிழாவில் துள்ளல் போட்டியை எல்லாக் குழந்தைகளும் உற்று நோக்குதல். ஆசிரியர் துள்ளலின் குறுந்தகடை காட்டுதல். துள்ளலின் சில சுவடுகளில் பயிற்சி கொடுத்தல். செவ்வியல் நடனத்தில் அடவுகள் பயின்ற குழந்தைகளுக்கு மிக எளிதாகச் செய்ய இயலும். குழந்தைகள் குழுக்களாக நிகழ்த்தும் முறையைக் குறித்து கலந்துரையாடுதல். ஆசிரியரின் ஈடுபாடு இருக்க வேண்டும். சீதங்கன், பறயன் ஆகிய துள்ளல்களின் குறுந்தகடுகளை காட்டலாம். குழந்தைகளுக்கு மூன்று வகையிலான துள்ளல் கதைகளும் இடையே உள்ள வேற்றுமைகள் புரிந்து கொள்வது வரை குறுந்தகடுகளை மாற்றி மாற்றிக் காட்டலாம்.
- அருகாமையிலுள்ள துள்ளல் நடைபெறும் கோயில்களை பார்க்கும்படி கூறுதல்.
- வட்டாரத்தில் உள்ள ஒரு துள்ளல் கலைஞருடன் பேட்டி காணுதல் நிகழ்த்துதல் ஆகியவை செய்யலாம்.
- மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளிலிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் நிகழ்த்துதல் முறையைக் குறித்து சிறு குறிப்புகள் தயாரித்தல். ஒவ்வொன்றினுடையவும் சிறப்புகளைப் பார்த்தல். குறிப்பு எழுதுதல். மூன்று துள்ளல்களுடையவும் ஆகாரியமுறைகளைக் குறித்தும் எழுதுதல். படங்கள் சேகரித்தல்.

## மதிப்பீடு

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- உற்றுநோக்கும் தன்மை
- முழுமை
- மொழி

## அலகு- 3 முகநடிப்பு

அபி, நயம் ஆகிய இரு சொற்களின் இணைப்பே அபினயம் ( நடிப்பு) அதாவது முன்னோக்கிச் செல்வது எனப் பொருள். இதன் முக்கிய வேலையைச் செய்யும் காரணி முகம் ஆகும். வார்த்தைகளுக்கும், அசைவுகளுக்கும் மேலாக நம்மிடம் பலவற்றையும் கூறுவதற்கு முகத்தால் இயலும். மனதிலுள்ள உணர்வுகளை மிகத் தெளிவாக முகத்தில் பார்க்க முடியும். இந்த பாவங்கள் நவரசங்களாக மாறுகிறது. முகநடிப்பில் பல்வேறு பயன்பாடுகளைக் குறித்த கற்றல் செயல்பாடுகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. முகநடிப்பு வழியாக பல்வேறு உணர்வுகளை வெளியிடலாம்.

## கற்றல் அடைவு


- முகநடிப்பு வழியாக வெவ்வேறு உணர்வுகளை வெளியிடுதல்.

## கருத்து, அறிவு


- அன்றாட வாழ்க்கையில் முகநடிப்பிற்கு வெவ்வேறு பாவங்கள் வெளிப்படுத் தப்படுகின்றன.
- இந்த பாவங்கள் நவரசங்களாக மாறுகின்றன.
- கருத்து வெளியீட்டிற்கு பாவங்களைப் பயன்படுத்தலாம்.
- நவரசங்கள்




*சிறுங்காரம்*




*வீரம்*




*கருணம்*




*ரௌத்ரம்*



*பீபல்சம்*



*பயானகம்*



*ஹாசியம்*



*அல்புதம்*



*சாந்தம்*

**கற்றல் செயல்பாடுகள்**

- வகுப்பிலுள் குழந்தைகளை இரண்டு அல்லது மூன்று குழுக்களாகப் பிரிக்கவும்.

- ஆசிரியர் முன்கூட்டியே சில வாக்கியங்களை எழுதிய அட்டைகளைத் தயாரித்தல். முதல் குழுவிலுள்ள ஒரு குழந்தையை அழைத்து ஒரு அட்டையைக் கொடுத்தல். அட்டையில் 'முகம் மட்டும் உபயோகித்து நடித்தல்' என எழுதப் பட்டிருந்தது. அதே குழுவிலுள்ள குழந்தைகளுக்கு நடிப்பு வழியாக அட்டையில் எழுதப்பட்டிருந்த வாக்கியம் புரிந்தால் 5 மதிப்பெண் வழங்கலாம். அல்லாவிட்டால் பாஸ் செய்து அடுத்த குழுவுக்கு கூறலாம். அவர்கள் கூறினால் அவர்களுக்கு மூன்று மதிப்பெண் வழங்கினால் போதும். இந்த விளையாட்டைத் தொடரவும். இறுதியில் அதிக மதிப்பெண் பெற்ற குழுவை வெற்றி பெற்றதாக அறிவிக்கலாம். அட்டையில் இதைப் போன்ற எளிய வாக்கியங்களை எழுதலாம்.

    - நீ இங்கே வா..
    - கொஞ்சம் உதவுவாயா
    - நல்ல மணம்
    - எனக்கு பயமாக இருக்கிறது
    - இறங்கிப்போடா

- தமிழ் பாடநூலிலுள்ள ஏதேனும் ஒரு கலைச்சூழல்( பாவ முக்கியத்துவம் வாய்ந்ததை) நிகழ்த்திக் காட்டும்படி கூறுதல். குழந்தைகள் குழுவாகக் கலந்துரையாடிய பின் நடித்துக் காட்டும்படி கூறுதல். குழந்தைகள் குழுவாக கலந்துரையாடிய பின் நடித்துக் காட்டுதல்.

- புகழ்பெற்ற நடனக் கலைஞர்களின் பாவமுக்கியத்துவம் வாய்ந்த நடன வகைகளின் வீடியோ காட்டுதல்.

- நடனமாடுபவர்களின் முகத்தில் மின்னிமறைகின்ற இந்த பாவங்களும் குழந்தைகள் நிகழ்த்திய பாவங்களும் ஒப்புமை செய்தல்

- ஆசிரியர் நவரசங்களின் சார்ட்டைக் காட்டுதல் ஒவ்வொன்றினுடையவும் பெயர்களைக் கூறுதல்.

- இங்கே நவரசங்கள் அறிமுகம் செய்தால் மட்டும் போதும். கூடுதலான கருத்துகள் உயர்ந்த வகுப்புகளில் உள்ளன.

## அலகு- 4 உடல்- கருத்துப் பரிமாற்ற ஊடகம்

மனித உடலின் ஒவ்வொரு உறுப்புகளும் கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுகிறது. எனவேதான் நால்வகை நடிப்பின் ஆங்கிக நடிப்பிற்குமிக முக்கியத்துவம் கிடைக்கக் காரணம். கைமுத்திரைகள் மட்டுமின்றி உடலின் பிற பகுதிகளிலும்

கருத்துப் பரிமாற்றம் நடைபெறுகிறது. உடலை நடிப்பு வசதிக்காக 6 பிரிவுக ளாக பிரிக்கப்பட்டுள்ளது.

தலை, கைகள், இடுப்பு மார்பு, பக்கப் பகுதிகள், பாதங்கள் ஆகியவை ஆறு உறுப்புகள். இவை தவிர தோள், கண், புருவம், கருவிழி, கன்னப் பகுதி, மூக்கு, தாடி. உதடு, முகம் கன்னம் என பனிரெண்டு துணை உறுப்புகளும் உள்ளன. உடல் உறுப்புகளால் பயன்படுத்திதான் ஒரு நடனக் கலைஞர் கருத்துப் பரி மாற்றம் செய்வது. உடல் கருத்துப் பரிமாற்ற ஊடகம் என்ற நிலையிலான சில கற்றல் செயல்பாடுகள் இங்கே உட்படுத்தப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவு

- வெவ்வேறு உறுப்புகள் வழியாகக் கருத்துப் பரிமாற்றம் செய்தல்.

## கருத்து அறிவு

- உடல் மொழியினாலும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு இயலுகிறது. நடனத் தில் முக பாவத்தைப் போன்று உடல்மொழியும் முக்கிய பங்கு வகிக்கிறது.

## கற்றல் செயல்பாடுகள்

- ஆசிரியர் குழந்தைகளை மைதானத்தின் ஒரு மூலையில் நிழலான இடத்தில் வட்டமாக நிற்கச் செய்தல். ஒவ்வொருவரும் ஒரு உயிரினத்தின் பெயரைக் கூறுதல். அனைவரும் கூறியபின் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளை அழைத்து ஒவ்வொருவரும் கூறிய உயிரினங்களின் பெயரைக் கூறும்படி செய்தல். குழந்தைகளால் ஒரு சில பெயர்களை மட்டுமே நினைவு கூற முடிந் தது. ஒவ்வொரு குழந்தையும் அவரவர் கூறிய உயிரினத்தின் அசைவுகளைப் போன்று செய்யக் கூறுதல். குறிப்பிட்ட நேரத்திற்குள் எல்லா குழந்தைகளும் செய்து முடித்தனர். ஆசிரியர் முன்பு அழைத்த குழந்தைகளிடம் மீண்டும் உயி ரினங்களின் பெயர்களை ஒவ்வொன்றாகக் கூறும்படி செய்தல். ஒவ்வொருவ ருடையவும் நடிப்பு மனதில் உள்ளதால் ஏறக்குறைய எல்லா உயிரினங்களு டையவும் பெயரைக் கூறமுடிகிறது. அலைகள், காற்று, நதி, புகைவண்டி, குதிரை சவாரி, பாம்பின் சஞ்சாரம் ஆகியவற்றை நடித்துக் காட்டும்படிக் கூறுதல். குழந் தைகள் நிகழ்த்திக் காட்டுதல். ஒன்றுக்கொன்று மதிப்பீடு செய்தல். மேன்மையடை யச் செய்தல்.

## மதிப்பீடு

*<u>தரநிர்ணயக் குறிப்புகள்</u>*

- உற்றுநோக்கும் தன்மை
- நுட்பம்
- உடல்கட்டுப்பாடு

# அலகு- 5 செவ்வியல் நடன உருவாக்கம்

## முன்னுரை

பாடல்களுக்கேற்ப நடனத்தை அமைக்கும் போது அதன் பாவத்தை உட்கொண்டு அமைக்க வேண்டும். தாளவாத்தியங்களின் பயன்பாடு அதிகமாக உள்ள பாடல்களைக் கேட்கும் போது நடனம் பயிற்சி பெறாத சிறுகுழந்தைகள் கூட உடல் அசைத்து சுவடுகள் வைத்து நடனமாடுவதைப் பார்க்க இயலும் தாளத்தில் மனது இணையும்போது தற்காலிகமான ஒரு பாவம் மட்டுமே அந்த நடனத்திற்கு காரணம் இலக்கியத்திலுள்ள பாவம் இசையிலும் இசையிலிருந்து அந்த பாவம் நடனத்திற்கும் பகிர்ந்தளித்து முழுமையான ஒரு நடனஉருவம் உருவாகிறது. பாவம் உட்கொள்ளாமல் செய்யக்கூடிய நடனம் இரசிக்க இயலாது. எனவே உயர்ந்த தரம் வாய்ந்த நடன உருவாக்கத்திற்கு அறிவியல் சார்ந்த அறிவு இன்றியமையாதது. செவ்வியல் சார்ந்த அடவுகள், முத்திரைகள், நடிப்பு முறைகள் ஆகியவை சேர்ந்து காட்சி உருவாக்கம் செய்யும் வகையிலான செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவு

- அடவுகள், முத்திரைகள், நடிப்புமுறை ஆகியவை சேர்ந்து ஒழுங்காகப் பாடல்கள் கவிதைகள் ஆகியவற்றின் காட்சி உருவாக்கம் செய்தல்.

## கருத்து, அறிவு

- பாடல்களின் காட்சி உருவாக்கம் இரசிப்புத் தன்மை வாய்ந்த ஓர் அனுபவமாகும்.
- அடவுகள் , முத்திரைகள், நடிப்பு முறைகள் இவற்றைச் சேர்த்துக் காட்சி உருவாக்கம் செய்யக் கூடிய திறன்

## கற்றல் செயல்பாடுகள்

- பாடல்களும் கவிதைகளும் செவ்வியல் முறையில் காட்சி உருவாக்கம் செய்யப்பட்டுள்ள காட்சிகளைப் பார்த்தல். நுட்பமாக உற்றுநோக்கும்படிக் கூறுதல்.
- பகுப்பாய்வு செய்தல்.
- இசை இணைப்பு செய்த ஒரு கவிதையின் ஆடியோ குழந்தைகளை கேட்கச் செய்தல். இதன் இலக்கியப் பகுதியைக் கரும்பலகையில் எழுதுதல். ஒவ்வொரு அடிகளுடையவும் பொருளைக் குழுக்களில் கலந்துரையாடுதல். தெரியாதவற்றை ஆசிரியர் சொல்லிக் கொடுத்தல். ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் சமமான முத்திரை நடிப்பை கண்டுபிடித்தல். முன்வகுப்புகளில் பயின்ற நடனச்சுவடுகளைப் பயன்படுத்தி தாளத்தையும் அதன் பயன்பாடுகளையும் புரிந்து கொள்ளுதல். தேவையான சூழலில் ஆசிரியரின் ஈடுபாடு அமையலாம். வார்த்தைகளுக்கும் அடிகளுக்கும் இடையில் அதிக நடிப்புவாய்ப்புள்ள இடங்களில் அடிகளை மீண்டும் மீண்டும் பாடி அல்லது இசைக்கருவியின் உதவியுடன் நடனம் செய்யலாம்.
- குழுக்களில் உருவான இந்த காட்சி உருவாக்கம் வகுப்பில் நிகழ்த்துதல்
- விவாதம் செய்தல்.

## மதிப்பீடு செய்தல்

*<u>தரநிர்ணயக் குறிப்புகள்</u>*

முத்திரைகளின் ஒழுங்கு

தாள உணர்வு

நடிப்புச் சிறப்பு

நிகழ்த்து முறை

# ஒன்பதாம் நிலை

## உலக வழக்கு, நாட்டிய வழக்கு

ஒவ்வொரு கலைக்கும் இயல்பிற்கு மேலான ஒரு தளம் உண்டு. அந்தப் பலன் வாய்ந்த நிலையில் குழந்தையை அடையச் செய்தல் என்பது கலைக்கல்வியின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். இதற்காக இயல்பானதும், அல்லாததுமான சில சூழல்களை உருவாக்கி குழந்தையின் படைப்பாற்றலைத் தூண்ட வேண்டும். இந்தச் செயல்பாட்டை நாம் வகுப்பறைகளில் செய்ய வேண்டும். நடனம் என்ற கலையைப் பொறுத்த வரையில் மேற்கூறிய சூழல்களை நம்மால் எளிதாக உரு வாக்க இயலும். இயல்பான நடனத்திலிருந்து செவ்வியல் நடனத்திற்கான ஒரு வடிவமான இங்கே தனியாக எடுத்துரைக்கப்படுகிறது. சுத்த நடன வடிவங்க ளின் நிகழ்த்துதலிலும், காட்சி உருவாக்கத்திலும் குழந்தை புரிந்து கொண்ட கருத் துகளின் சக்தியான ஒழுக்கு இங்கே வெளிப்படுகிறது. படைப்பாற்றலின் மிகப் பலனுடைய வெளியீடுகள் கற்றல் அடைவுகள் இவற்றால் இந்த அலகு மிகவும் கவனத்தை ஈர்க்கிறது.

### கற்றல் அடைவு

- உலகவழக்கு நாட்டிய வழக்கு போன்ற நடிப்புப் பிரிவுகளைக் குறித்த தகவல்கள் திரட்டி வெளியிடுதல்.

### கருத்து, அறிவு

- சாதாரணமாக மனிதருக்கு ஏற்படும் கவலைகளும், மகிழ்ச்சிகளும் அதாவது உணர்வுநிலைகளை அவற்றில் செயல்கள் ஆகியவை குறிப்பிட்ட நிபந்தனை களின்றி( தொழில்நுட்பமல்லாத) பின்பற்றி சரியாக நடிப்பதே உலக வழக்கு

### உள்ளடக்கம்

வரையறைகளுக்கு உட்பட்டு அதாவது சட்டபூர்வமான நிலைகள், கஸ்தங்கள், பாவங் கள், நடன அசைவுகள் ஆகியவை வழியாக நடைசார்ந்த நடிப்பை நிகழ்த்துவதே நாட்டிய வழக்கு. உலக சக்திகளையும், உயிரினங்களையும் பின்பற்றக் கூடிய ஒரு பழக்கம் மனிதனுக்கு சாதாரணமானது. இந்தப் பின்பற்றுதல்கள் பின்பு நடை ஒழுங் காகவும் சில வரையறைகளுக்கு உட்படவும் செய்கிறது. இதற்காகப் பயன்படுத்திய

கஸ்தங்கள் எல்லாம் தொழுகைக்காகவும் சில கருத்துப் பரிமாற்றத்திற்காகவும் பயன் படுத்தப்பட்டன. இவ்வாறு வரையறகளுக்கு உட்பட்டு உருவாக்கப்பட்ட சில கஸ் தங்களும், நடிப்புமுறைகளும் நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லாதவற்றையும் வெளிகாட்டும் முறை உருவானது. எ. கா. திரிபதாக கஸ்தம்- வலது கை தலையின் மேல் பிடித்தார் மன்னர் என்பது வரையறை. ஆனால் இதற்கு மன்னருடன் நேரடி யாக எந்த தொடர்பும் இல்லை. அதாவது கருத்துகளைப் பரிமாற்றம் செய்வதற்கு மிக இயல்பான நேரடியான ஒரு முறையும் ஆனால் நடைசார்ந்த இலக்கணம் உட் பட்ட ஒரு தெளிவான முறையும் நடைமுறையில் உள்ளது. இந்த வேறுபாட்டை அறிவியல் பூர்வமாக பகுப்பாய்வு செய்யும் போது ஒன்று உலக வழக்கினுடைய வும், மற்றொன்று நாட்டிய வழக்கினுடையவும் பயன்பாடுகள் என நம்மால் புரிந்து கொள்ள இயலும். இந்த இரு முறைகளும் நடனத்தைப் பொறுத்த வரையில் முக்கி யமானவை. எனவே நால்வகை நடிப்புகளில் ஒவ்வொன்றிலும் இதன் வாய்ப்புகளை தனியாக கணக்கிட வேண்டும். அதைக் குறித்து குழந்தையை உணர்வடையச் செய்ய வேண்டும். இந்த அலகின் வழியாக உலக வழக்கு, நாட்டிய வழக்கு பயன்பாடுகளின் வாய்ப்புகளை அறிந்துகொள்ள முயற்சி செய்வோம்.

## கற்றல் செயல்பாடுகள்

- மோகினியாட்டம், துள்ளல் போன்ற நடனவடிவங்களின் நிகழ்த்துதலை குறுந்தகடு வழியாகச் செய்தல். நடனத் திருவிழா, பள்ளிக் கலைவிழா இவையும் ஆகலாம். வகுப்பை நான்கு குழுக்களாகப் பிரித்து இதில் உள்ள இரு நடன வடிவங்க ளுடையவும் நடிப்பு முறைகளை விவாதித்தல். குறிப்பு தயாரித்தல், வெளியிடுதல்
- நடிப்பை நாம் சாதாரணமான செயல்கள் செய்யக்கூடிய அதேமுறையில் செய்கிறோம்
- சற்று அழகுடன் செய்கிறோம்.
- சாதாரணமாக நாம் செய்வதைப் போலல்ல
- கடைசியில் ஆசிரியர் ஈடுபடுகிறார்.
- இரு நடனத்திலும் நடிப்புமுறையிலுள்ள வேறுபாடு அதில் பயன்படுத்தப்பட் டுள்ள நடிப்பு நுட்பங்களின் வேறுபாட்டினால் எனக் கூறுதல். துள்ளலிற்கு அதி கமாகவும் உலகவழக்கு நடிப்பு முறையைப் பயன்படுத்தும் போது மோகினியாட் டத்தில் அதிகமாக நாட்டிய வழக்கு நடிப்பு முறையே பயன்படுத்தப்படுகிறது. இங்கே குறிப்பீட்டின் நுட்பத்திற்கு முன்னுரிமை வழங்கி மதிப்பீடு செய்ய வேண்டும்.
- பள்ளிக்கூட கலைவிழாவில் ராதிகா நிகழ்த்திய நாட்டுப்புற நடனத்தில் இராமய ணத்திலுள்ள சூர்ப்பணகையின் கதை கூறப்பட்டிருந்தது. தொடர்ந்து நடைபெற்ற கேரள நடனத்தில் ஜகன் நிகழ்த்தியதும் இதே கதைதான். இரண்டு பேரும் ஒரே வகுப்புதான். நண்பர்களும் குழுக்களாக நினைவுகூறத் தொடங்கினர். சிலவற்றை ராதிகாவுடன், ஜகனுடனும் கேட்டு தெரிந்துகொண்டனர். கொஞ்சம் எழுதியபோது இரு இனங்களுடையவும் வீடியோ பதிவு காட்டப்பட்டது. இரு குழுக்களும் ஏறக் குறைய சரியாகக் குறிப்புகளை எழுதினர். ஆசிரியர் ஒருங்கிணைத்தல்.

- இங்கே கருத்தைச் சென்றடைந்த முறையில் பகுப்பாய்வு செய்த குறிப்புகளை நாம் கூடுதல் கவனிக்க வேண்டும்.
- முன்பு செய்த செயல்பாட்டைப் போன்று கதைகளி, நாடகம் ஆகியவற்றைக் காட்டிக் கொடுத்துச் செயல்பாட்டைத் தொடரலாம்.

### மதிப்பீடு

- மதிப்பீட்டைக் குழந்தைகள் சுயமாகச் செய்யவேண்டும். கருத்தின் முழுமை, நுட்பம் ஆகியவற்றை ஊடகங்களாகக் கொண்ட மதிப்பீட்டை ஆசிரியர் செய்தல்.

## அலகு-2 சுத்தநடனம்

நமது நடன வகைகளின் பார்க்கக் கூடிய முக்கியமான மூன்று காரணிகளே நடனம், நாட்டியம் இவற்றுள் மிகச் சிறப்பானதும், அசைவுத் தன்மை உடையதும் நடன மாகும். இந்தக் காரணத்தால் ஒவ்வொரு நடனத்தினுடையவும் ஆளுமை நிலைநி றுத்துகிறது. நடிப்பும் ஆகாரியவும் இதற்கு இணையாக பெருகுகிறது. கருத்துப் பரிமாற்றத்திற்காக இந்த நுட்பத்தை சரியாகப் பயன்படுத்துவதில்லை. எனவே இதை புரிந்து கொள்வதற்கு பிற இரு காரணிகளைப் போன்ற கடினம் ஏற்படுவ தில்லை. அதாவது இது பல வேளைகளிலும் ஒரு பௌதீகச் செயலாக மாறுகிறது என்பதே பொருள். ஆனால் சில குறிப்பிட்டச் சூழல்களில் கருத்துப் பரிமாற்றத் திற்காக சுத்த நடனம் பயன்படுத்தப்படுகிறது. ( கதகளி)

நடனக் கச்சேரிகள் பெரும்பாலும் தொடங்குவது சுத்தநடனத்துடன் தான் இருக்கும். நடனக் கச்சேரியில் சாதாரணமாகப் பார்க்கக்கூடிய சுத்த நடன வடிவங்கள், புஷ் பாஞ்சலி, கௌதுவம், அலாரிப்பு, மாலாரி, சொற்கட்டு, ஜதிசுவரம், சுவரஜதி, தில்லான, புறப்பாடு ஆகியவையாகும். சுத்த நடனவடிவங்கள் பெரும்பான்மையும் சொல்கட் டுகளுக்கு அடிப்படையிலான அடவுகள் ஒழுங்குபடுத்தியவையாகும். சொல்கட்டு களை சுவரப்படுத்தியும் அல்லாமலும் இது அரங்குகளில் நிகழ்த்தப்படுகிறது.இந்த அலகின் வழியாக நாம் சில சுத்த நடனவடிவங்களை அறிமுகம் செய்யலாம்.

### கற்றல் அடைவு

- சுத்த நடனவடிவங்களாகிய புஷ்பாஞ்சலி,ஜதிசுவரம் போன்ற நடனவடிவங்களை நிகழ்த்துதல்.

### கருத்து அறிவு

- நடன நிகழ்த்துதல் ஒழுங்கில் முதலாவது வருவது புஷ்பாஞ்சலி ஆகும். எந்த செவ்வியல் நடன வடிவமானாலும் நிகழ்த்துதலின் தொடக்கத்தில் இதுபோன்ற ஒன்றை நிகழ்த்துவது தேவபீரீதிக்காகும். ஜதிசுவரங்களும், சுவரங்களும் இணைந்ததே ஜதிசுவரம். நடனக் கலைஞர்களின் அடவு சுத்தத்தை அளப்ப தற்கு உதவக்கூடிய வகையே ஜதிசுவரம்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு-1*

- லட்சுமியின் நடன அரங்கேற்றம் முடிந்த நாளாகும். இன்று லட்சுமி வகுப்பில் வந்த போது அதன் விசிடி கூடக் கொண்டு வந்தாள். லட்சுமியின் தோழிகள் சிலர் அதைப் பார்க்கச் சென்றிருந்தனர். நடனத்தின் இந்த விசிடி-ஐ வகுப்பில் காட்டிக் கொடுத்தார்.( இத்தகைய ஒரு வகுப்பறைச் சூழலை உருவாக்குவது நல்லது) அல்லது ஆசிரியர் ஒரு நடனக் கச்சேரியின் விசிடி காட்டுதல். முதல் இரண்டு மூன்று இனங்களுடைய மட்டும் முடியும் போது விசிடி ஐ அகற்றி பார்த்தவற்றைக் குறித்து விவாதித்தல். இதைப்போன்று புகழ்பெற்ற வேறு நடனக் கலைஞர்கள் நிகழ்த்திய நடனக் கச்சேரியின் விசிடி- ஐக் காட்டுதல். ( முதல் பகுதி மட்டும்) எல்லாவற்றிலும் முதலில் பார்க்கக் கூடிய நடனங்களுக்கு இடையிலான ஒற்றுமைகளை குழந்தைகள் எழுதுதல்.
- முத்திரைகளுக்கும், நடிப்பிற்கும் அதிக முக்கியத்துவம் இல்லை.
- எல்லாவற்றிலும் அடவுகள் நிறைந்து நிற்கிறது.
- இந்த இனங்கள் முதலில் செய்யப்படுவது எதனால்?
- ஆசிரியரின் கேள்விக்கு பல்வேறு விடைகள்...
- காட்சித் தூய்மை, தேவபீரிதி, அதிகமாக நடனம் செய்வதற்கு உடலைப் பக்குவப்படுத்துதல் போன்ற குழந்தைகள் கூறிய விடைகளை ஆசிரியர் ஒருங்கிணைத்தல். விடையின் வாய்ப்புகளை ஆசிரியர் மதிப்பீடு செய்தல். இதைப் போன்று அரங்கில் முதலில் நிகழ்தக்கூடிய பிற இனங்களை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்தல்.
- இரசிப்பதற்கான நுட்பம் முழுமை

*செயல்பாடு 2*

- ஒரு புஷ்பாஞ்சலியின் காட்சி அவதரணத்தை ஆசிரியர் நிகழ்த்திக் காட்டுதல். வேண்டுமெனில் விசிடி யை பயன்படுத்தலாம். ஒரு வகையை அறிமுகம் செய்யும் போது ராகம், தாளம் கம்போசரின் பெயர், கோரியோகிராபரின் பெயர் ஆகியவற்றையும் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.
- விசிடி பயன்படுத்தி வேறு பல சுத்தநடன வடிவங்களையும் அறிமுகம் செய்தல் *எ.கா சொல்கட்டு, அலாரிப்பு, ஜதிசுவரம், புறப்பாடு ஆகியன*

## மதிப்பீடு

- குழந்தைகள் பயிற்சிபெற்ற பின்பு ஒவ்வொருவருக்கும் அல்லது குழுவாக நிகழ்த்துவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். இதை ஆசிரியர் மதிப்பீடு செய்யலாம்.

தரநிர்ணயக் குறிப்புகள்

- அடவு தூய்மை
- தாளம்
- நிகழ்த்துதல் அழுகு

# அலகு- 3 நடனம் நிகழ்த்துதல்

தென்னிந்தியச் செவ்வியல் நடனக் கச்சேரிகளில் உளபூர்வமான இனங்களாகும் பதங்கள், பரதநாட்டியம், குச்சிப்புடி, மோகினியாட்டம், கேரள நடனம் போன்ற எந்த நடனமாக இருந்தாலும் பத நிகழ்த்துதல் இரசிகர்களை அதிகமாகக் கவரும். பல வேளைகளிலும் செவ்வியல் தன்மைக்கு மேலாக இந்த வகை இரசிப்புத் தன்மை வாய்ந்தது என்பது இதன் நிகழ்த்துதல் முறையின் சிறப்பாகும். இதனாலேயே இவை இரசிகர்களை அதிகமாகக் கவருகின்றன. இந்த அலகிலுள்ள செயல்பாடுகளின் வழியாக பதநடிப்பு முறையைக் குறித்த தெளிவான அறிவு குழந்தைகளுக்குக் கிடைக்க வேண்டும்.

## கற்றல் அடைவு

- நடனத்தின் ஒரு பதம் நிகழ்த்துதல்.

## கருத்து, அறிவு

- பதம் என்பது நடிப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இனமாகும்.
- இயன்ற அளவு பதிந்த காலத்தில் இது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
- இதில் பயன்படுத்தப்பட்டுள்ள இசை பாவனை நிறைந்ததாகும்.
- பதங்களைத் தேர்வுசெய்யக் கூடிய திறமை.

## கற்றல் செயல்பாடுகள்

- மிகப் புகழ்பெற்ற நடனக்கலைஞர்களின் பதங்கள் கவனமாக உற்றுநோக்குதல்.
- இரண்டு அல்லது மூன்று தடவை ஒரு பதத்தை உற்றுநோக்க வேண்டும். நுட்பமான நடிப்புமுறைகளைப் புரிந்து கொள்வதற்கு இது உதவுகிறது. அதற்குப் பிறகு தனிநபராக நிகழ்த்துதலைக் குறித்து குறிப்புகளை எழுதுகின்றனர். குழுக்களாக ஒருங்கிணைத்தல். பொதுவாக ஒரு பதம் நிகழ்த்துவதன் தத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- ஆசிரியர் அளிக்கக்கூடிய ஒரு எளிய பதத்தைக் குறித்துக் குழுவாக விவாதித்தல். பதத்தின் பொருளைக் குறித்து தேவையான வரையறைகளை ஆசிரியர் அளித்தல். குழந்தைகள் கைமுத்திரை, முகநடிப்பு, நடனம் ஆகியவற்றின் நுட்பங்களை இணைத்துப் பதங்களுக்கு நடனமொழி அளித்தல். பதத்தின் பொருளுக்கு இணையயான முத்திரைகளை பயன்படுத்துவதற்கு ஆசிரியரின் உதவியும் அறிவும் பயன்படுத்த வேண்டும். இங்கே குழந்தைகளின் நிகழ்த்துதலுக்கு பின் இதே பதத்தின் ஒரு வீடியோ காட்சியைக் காட்டி தேவையானவற்றைக் கூட்டிச் சேர்க்கலாம். ஆசிரியருக்கு நேரடியாக செய்துகாட்ட முடிந்தால் குறுந்தகட்டின் பயன்பாட்டைத் தவிர்க்கலாம்.
- பதங்களுக்குப் பதிலாகத் தேசபக்தி பாடல்கள் அல்லது எளிய கீர்த்தனைகளைப் பயன்படுத்தி இந்தச் செயல்பாட்டைத் தொடரலாம்.

எ.கா:

1. ஜன்மகாரிணி பாரதம்
   கர்மமேதினி பாரதம்
2. வந்தேமாதரம் சுஜலாம், சுபலாம்
   மலயஜ சீதளாம் சஸ்ய சாமளாம் மாதாரம்
3. பாரத சமுதாயம், பாரதசமுதாயம்
4. நமிப்பின் பாரதாம்பயே

## அலகு- 4 நடன உருவாக்கம்

இது இரண்டாவது கற்றல் அடைவின் தொடர்ச்சியாகும். நடிப்பைப் போன்று நடனத்திற்கும் முன்னுரிமை அளித்துக் கொண்டு இங்கே செயல்பாடுகளை ஒழுங்கு செய்ய வேண்டும். நடனத்திலுள்ள எல்லா உறுப்புகளுக்கும் ( நடனம் .நாட்டியம் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நிகழ்த்துதல் அமைய வேண்டும். இதற்கு தேவையான முன்னேற்பாடுகளை முன்கூட்டியே செய்ய வேண்டும். இதற்குப் பொருத்தமானப் பாடல்களைக் கண்டுபிடிக்க வேண்டும். பாடலின் அடிகளின் பொருள் நிலைகள், பொருத்தமான சுவடுகள், முத்திரைகள் போன்றவற்றை தீர்மானித்தல் ஆகியன இங்கே முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே தான் ஆசிரியரின் ஈடுபாடு சரியான நேரங்களில் இருக்க வேண்டும். இத்தகைய செயல்பாடுகள் குழந்தைகளை நடனக் கல்வியோடு ஆர்வமுடையவர்களாக மாற்றுகிறது.

### கற்றல் அடைவு

- பொருத்தமான பாடல்களுக்கு நடன உருவாக்கம் செய்தல்.

### கருத்து, அறிவு

- நடன உருவாக்கத்திற்கு ஒழுங்கான தாள உணர்வு தேவையாகும்.
- முத்திரைகளைக் குறித்த அறிவு முக்கியப் பங்கு வகிக்கிறது.
- உலக வழக்கு ஆகியவற்றில் பிரித்தறிவு உருவாக்கத்திற்கு உதவுகிறது.

### கற்றல் செயல்பாடுகள்

- ஆசிரியர் ஒரு பாடலைக் கேட்கச் செய்தல்.

  *(நடனம், நாட்டியம் இவை மூன்றிற்கும் வாய்ப்பு அளிக்கும் பாடல்களைத் தேர்வு செய்யவும்).*
- அசைவுத் தன்மை அதிகமான பருவமானதால் அழகான பாடல்களைத் தேர்வு செய்தால் குழந்தைகளுக்கு ஆர்வம் உருவாகும்.
- இந்தப் பாடலைக் கவனமாகக் கேட்கும்படிக் கூறுதல்.
- இரண்டு அல்லது மூன்று முறை பாடிக் கேட்கச் செய்யலாம். இதன் பொருளைக் குறித்தும் நடிப்பு வாய்ப்புகளைக் குறித்தும் குழுவாக விவாதங்களில் ஈடுபடுதல்

ஒரே பாடலுக்கு வெவ்வேறு குழுக்களில் காட்சி மொழி உருவாக்கல். ஆசிரியர் ஒவ்வொரு குழுவுக்கும் தேவையான அறிவுரைகளை வழங்குதல்.

- நிகழ்த்துகின்றனர்.
- குழந்தைகள் ஒன்றுக்கொன்று மதிப்பீடு செய்தல்.
- எவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு கருத்துகளைக் கூறினர்?
- குழந்தைகளே தரநிர்ணயக் குறிப்புகளைக் குறித்துக் கூறுதல்.

### மதிப்பிடுதல்

- ஆசிரியரின் மதிப்பீடு

தரநிர்ணயக் குறிப்புகள்

- தாள உணர்வு
- முத்திரைகளின் ஒழுங்கு
- குழு உறுப்பினர்களின் ஒற்றுமை

## அலகு- 5 அரை செவ்வியல் நடனம்

நடனப் பயிற்சி பெறக்கூடிய எந்த ஒரு குழந்தையும் காட்சிப்படுத்துவதற்கான உயர்ந்த திறனை அடைய வேண்டும். இது பிறவியிலேயே உள்ள திறனாக இருந் தாலும் செவ்வியல் சார்ந்த அறிவு இதைச் சிறப்படையச் செய்கிறது. சிறுவயதில் எந்த ஒரு பாட்டிற்கும் அல்லது மெட்டிற்குப் பொருத்தமாகச் சுவடுவைக்கும் குழந்தை அதனுடைய உடல்சார்ந்த வளர்ச்சிக்கேற்ப இந்த மெட்டுகளையும் பாடல் களையும் பிரித்தறியவும், அசைவுகளையும் நடிப்புகளையும் பொருளுடையதாக் கவும் முயற்சி செய்கின்றனர். இந்த முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையிலான காட்சி உருவாக்கம் இந்த அலகின் வாயிலாக நடைபெறுகிறது.

இது குழந்தைகளைப் பொறுத்த வரையில் மிக ஆர்வமான ஒரு செயல்பாடாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. வகுப்பறையிலுள்ள எல்லாக் குழந்தைகளுடை யவும் பங்களிப்பை ஒரு வகையில் அல்லது வேறொரு வகையில் பயன்படுத்த வேண்டும். இந்தச் செயல்பாடு ஒரு உயர்ந்த திறன் என முன்னரே குறிப்பிட்டோம் அல்லவா? எனவே இதன் மதிப்பீடும் அவர்களுடைய தரத்திற்கேற்ப அமைய வேண்டும்.

### கற்றல் அடைவு

- அரை செவ்வியல் முறையிலான பாடல்களுக்கு ( பஜனை, பக்திப் பாடல் ஆகியவை ஒழுங்காகப் பொருள் உணரும் வகையில் நடன அமைப்பு செய்து நிகழ்த்துதல்.

### கருத்து, அறிவு

- அரை செவ்வியல் முறையிலான நடனத்திற்குச் செவ்வியல் சுவடுகளுடன் எளிய சுவடுகளையும் பயன்படுத்தலாம். இதில் செவ்வியல் முத்திரைகள் தேவைக்கு மட்டு

பயன்படுத்தலாம். ஒவ்வொரு பாடலுக்கும் பொருத்தமான வேடங்களைக் கண்டு பிடிக்கின்றனர்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு-1*

- ஆசிரியர் ஒரு பாடலை ( மெட்டுடன் உருவாக்கியது) கேட்கச் செய்தல். இதை இரண்டு அல்லது அதற்கதிகமான முறை கேட்கச் செய்வது சிறந்தது. பாடலின் அடிகளின் கருத்தைக் குறித்து விவாதிக்கவும். . பாடலின் தாளம் அடிகளுக்கிடையே கேட்கின்ற இசைக்கருவிகளின் இசையின் அளவு( தாளவட்டம்) தாளத்திலுள்ள மாற் றங்கள், வேகமாற்றங்கள் போன்றவற்றைக் குறித்தும் விவாதித்தல். குழுவாகச் செய்த இந்த செயல்பாட்டிற்குப் பின் குழந்தைகள் இந்த பாடலுக்கான காட்சி மொழியை உருவாக்கல். இங்கு தேவையான இடங்களில் ஆசிரியரின் ஈடுபாடு அமையலாம். நிகழ்த்துதலின் சில பகுதிகளில் நாடகிய முகூர்த்தங்கள் உருவானால் அது நடவ டிக்கைகளின் காரணிப்பகுதியான நாட்டியத்தின் பயன்பாடு என்பதைப் புரிந்து கொள்ள வைக்கவும் செய்தல்.

*செயல்பாடு-2*

- பஜனை, பக்திப் பாடல்கள் அரைச் செவ்வியல் பாடல்கள் என்ற பாடல்பிரிவுக ளுள்ள ஒவ்வொரு குழுவும் ஏதேனும் ஒன்று வீதம் பாடல்களைக் குழந்தைகள் ஒழுங்கு செய்து குழு விவாதம் வழியாக அவர்களாகவே காட்சி உருவாக்கம் செய் தல். பள்யியின் சிறப்பு நிகழ்ச்சிகளுக்குப் பொருத்தமான பாடல்களாகலாம். இதை முன்செயல்பாட்டின் குறிப்பைப் பயன்படுத்திச் செய்யலாம்.

## மதிப்பீடு செய்தல்

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- நிகழ்த்தும் அழகு
- தொழில்நுட்பத் திறன்
- தனித்துவம்

# பத்தாம் வகுப்பு

## அலகு 1 நாட்டுப்புறக் கலைவடிவங்கள்

நம்முடைய நாட்டுப்புற நடனவடிவங்கள் ஒரு வட்டாரத்திலுள்ள மக்களின் வாழ்க்கை முறையின் மொழியின் ஆசாரங்களை அறிவது ஒரு நடனத்தை அறிந்து கொள்வது, நிகழ்த்துவது என்பதற்கு மேலாக ஒரு பண்பாட்டை நாம் அறிகிறோம். குழந்தைகளுக்கு இத்தகைய அறிவை புகட்ட வேண்டியது இன்றியமையாதது.

வேடம், மொழி உணவு போன்ற அனைத்தும் மாறிக் கொண்டேயிருக்கின்ற நவீன யுகத்தில் நமது நாட்டின் பராம்பரியத்தைக் குறித்து அறிந்து கொள்வதற்கு, நினைவு கூர்வதற்கு இத்தகைய கற்றல் அனுபவங்களை விடச் சிறப்பான எதை நம்மால் அளிக்க இயலும்? அவர்களுக்குத் தெரிந்த நடனவடிவங்களிலிருந்து தொடங்க வேண்டும்.

ஒப்பனையும், திருவாதிரைக் களியும், மார்கம் களியும், பூரக்களியும் பள்ளிக் கலை விழாக்களில் அவர்கள் பார்த்திருப்பார்கள். கூடுதலாக நமக்கு நினைவூட்டலாம்.

### கற்றல் அடைவு

- கேரளத்தின் நாட்டுப்புற கலைவடிவங்களான ஒப்பனை. திருவாதிரை, மார்க்கம்களி, கோல்களி, பூரக்களி. பரிச்சம்மூட்டுக்களி ஆகியவற்றைப் பிரித்தறிதல். இவை நடனங்களாகும். திறை– தெய்யம், படையணி, முடியேற்று, மலவாயியாதம், கண்ணியார் களி போன்ற நிகழ்த்துதல் கலைகளையும் அறிமுகம் செய்ய வேண்டும். ஏ. கே. நம்பியார்

### கருத்து, அறிவு

- ஒவ்வொரு நடனக்கலை வடிவங்களுக்கும் தனிப்பட்ட வேஷங்கள் உண்டு. ஒவ் வொரு நடனவடிவங்களுடையவும் இலக்கியம் கூறப்பட்டதாகும். ஒவ்வொன்றிற்கும் அதனுடையதான நிகழ்த்துதல் ஒழுங்கு உண்டு.

### கற்றல் செயல்பாடுகள்

- பள்ளிக் கலைவிழாவின் தொடர்பாக வகுப்புகளில் ஜூன் மாதம் முதல் நான்கு குழுக்கள் செயல்படுகிறது. இந்தச் செயல்பாட்டை குழுக்களை மையமாகக்

கொண்டு செய்யலாம். நான்கு குழுவிலும் நான்கு வெவ்வேறு நாட்டுப்புற நடன வடிவங்களைப் பயிற்றுவிக்கலாம். ஒரு குழுவில் திருவாதிரை, மற்றொரு குழுவில் ஒப்பனை, மூன்றாவது குழுவில் மார்கம் களி, நான்காவது குழுவில் கோல் களி எனப் பயிற்சி அளிக்க வேண்டும். ஆண்குழந்தைகள் விளையாடக்கூடிய பூரக்களி, பரிச்சமுட்டு ஆகியவையும் ஆகலாம். ஒவ்வொரு குழுவும் நிகழ்த்துதலுக்குப் பின் அந்தந்தக் குழுவாக நிகழ்த்துதல் முறையை எழுதித் தயாரித்தல். இதை பிற குழுக்கள் விவாதித்து அவர்கள் சேகரிப்பு புத்தகத்தில் மாற்றி எழுதுதல். தேவையான படங்களையும் சேர்த்து சேகரிப்புப் புத்தகத்தை அழகூட்டலாம். இந்தச் செயல்பாடு முடியும்போது ஒவ்வொரு குழந்தையும் ஒரு நாட்டுப்புற நடனத்தின் நிகழ்த்துதல் முறையைக் குறித்து அறிவு பெறுகிறது.

## மதிப்பீடு

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- சிறுவினாக்கள்
- நிகழ்த்துதல் அழகு
- குழு நடனம் செய்வதன் ஒற்றுமை
- சேகரிப்பின் முழுமை

# அலகு 2 செவ்வியல் நடனம்

சுருதி மாதா, லயபிதா என்பதாகும் செவ்வியல் மதம். தாளத்திற்கு பிதாவின் இடத்தை அளித்ததிலிருந்தே நமது நடனத்திலும் இசையிலும் தாளத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம். தாளத்தின் வேறுபாட்டிற்கேற்ப சொற்களுடையவும், சுவரங்களுடையவும், இலக்கியத்தினுடையவும் வடிவமும், பாவமும் மாறுகிறது. ஒரு குழந்தையின் நடன அறிவையும், இசை அறிவையும் அளக்கும் போது முக்கிய தரநிர்ணயக் குறிப்புகளாக தாள அறிவு வருவதற்கான காரணம் வேறொன்றுமல்ல. நாட்டிய செவ்வியல் விதியின்படி 7 அடிப்படை தாளங்கள் உள்ளது.

## கற்றல் அடைவு

- செவ்வியல் நடனத்தில் ஐந்து ஜாதியிலுள்ள சொற்களுக்கேற்ப ஜதிகள் உண்டு என்பதைப் பிரித்தறிதல்.

## கருத்து அறிவு

- நடனவகைகளில் சொற்கள் தாளத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தப்படுகின்றன. திர்சம், சதுரஸ்றம், மிஸ்றம், கண்டம். சங்கீர்ணம் என ஐந்து ஜாதிகளும் சரியான ஒழுங்கில் இணைத்து ஜதிகள் உருவாக்கலாம்.

## கற்றல் செயல்பாடுகள்

- அறிமுகமல்லாத ஒரு அடவை ஐந்து ஜாதிகளிலும் பயிற்சியளித்தல். இதைச் சரியாக பயிற்சி பெற்ற பின் பிற அடவுகளை சுயமாகப் பரிசோதித்தல். ஆசிரியரும் உதவலாம். இதைப் போன்று எல்லா அடவுகளும் ஐந்து முறைகளிலும் செய்வதற்குப் பயிற்சியளித்தல்.
- ஒவ்வொரு ஜாதிகளிலும் ஒழுங்கு செய்யப்பட்ட ஜதிகளைப் பயிற்சியளித்தல். இதையும் குழுவாகச் செய்வது நல்லது. ஒவ்வொரு குழுவும் ஒரே ஜாதியில் வெவ்வேறான ஜதிகளில் செய்வர். பிற குழுக்கள் வாய்தாரைக்கு இமையாக தாளம் போடுதல். ஆதிதாளத்தில் வெவ்வேறான நடைகளைச் சேர்த்து குறிப்பிட்ட தாள வட்ட ஒழுங்கில் ஜதிகள் உருவாக்குதல். அடவுகளை சேர்த்து பயிற்சியளித்தல். இந்தச் செயல்பாடுகளில் ஆசிரியரின் ஈடுபாடு வேண்டும். தாளத்தின் ஜாதிகளைப் பிரித்தறிவதற்கும் ஒவ்வொரு ஜாதியிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பழக்கமான பாடல்களைப் பயன்படுத்த வேண்டும். மேலும் மொழியின் தரங்கிணி, வட்டத்தை சதுரஸ்றமாகவும், காகளி, கண்டன நடைக்கும், மஞ்சரி திஸ்ற நடைக்கும், கேக மிஸ்ற நடைக்கும் உதாரணப்படுத்தலாம். இந்தச் செயல்பாட்டிற்குப் பின் மதிப்பீடு செய்யலாம்.

## மதிப்பீடு

*<u>தரநிர்ணயக் குறிப்புகள்</u>*

- வெவ்வேறான அடவுகள்
- சொற்கட்டுகளின் வேறுபாடு
- தாளம்
- கால பிரமாணம்

# அலகு- 3 நவரசங்கள்

வாழ்க்கையின் பல்வேறு சூழல்களில் நமது முகத்தில் மலரும் பாவங்களைத் தெளிவாக்கி அவற்றை ஒன்பது வகையில் நமது நடனக் கலைஞர்கள் மாற்றியுள்ளனர். ஏராளமான பாவங்கள் பல்வேறு சூழல்களில் நம்மில் தெளிவுபடுகின்றன. ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட காரணமும் விஷயமும் இருக்கும். அழுகின்ற குழந்தையின் முக பாவமும் அதற்கு பாலூட்டும் தாயின் பாசமும் செவ்வியல் திருஷ்டா கருணை ரசத்தின் பயன்பாடுகளாகும். அதாவது ஒரு பாவம் தோன்றும் போது அதற்கு ஒரு விபாவமும் இருக்கும். பார்வை, அசைவு, ஒலி, செயல் ஆகியன அனைத்தும் விபாவங்களின் காலத்தில் உட்படுகிறது. இவ்வாறு விபாவ கேதுவாக உருவாகும் பாவங்கள் 9 வகைப்படும்

“சிறுங்கார ஹாஸ்ய கருணா
ரௌத்ர விரபயானகா
பிபல்சால்புத சாந்தசியு
நவ நாட்யேரசா ஸ்மிருதா..”

இவற்றை சரியான விதம் பயன்படுத்த வேண்டியது அதற்காக அவற்றின் பயன் பாடுகளைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. இந்த அலகின் வழியாக நமக்கு நவரசங்களைக் குறித்துக் கூடுதலாக அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்வோம்.

## கற்றல் அடைவு

- செவ்வியல் நடனங்களில் நவரசங்களின் முக்கித்துவம் பிரித்தறிதல்.

## கருத்து, அறிவு

- சிறுங்காரம், ஹாசியம், கருணம், ரௌத்ரம், விரம், பயானகம், பீபல்சம், அல்புதம், சாந்தம் என ஒன்பது ரசங்கள் உள்ளன. அன்றாட வாழ்க்கையில் நமது முகத்தில் வெளிப்படும் பாவங்களின் தெளிவான வடிவங்களாகும் நவரசங்கள்
- நவரசங்களைப் பிரித்தறிவதற்கும் நிகழ்த்துவதற்கும் உள்ள திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- ஆசிரியர் வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் குறிப்புகள் எழுதிய ஒவ்வொரு காகித அட்டைகளைக் கொடுத்தல். கீழே கூறப்பட்டுள்ளவற்றைக் குறிப்புகளாக எழுதலாம்.
- கொடிய ஒருவன் வகுப்பில் பலவீனமுள்ள ஒரு குழந்தையை அடிக்கிறார்.
- ஓர் உயிரினத்தின் அழுகிய உடல் சாலையில் கிடக்கிறது. நீங்கள் அது வழியாப் போகிறீர்கள்.
- தவம் செய்கின்ற, தியானம் செய்கின்ற –ஜெபத்தில் முழ்கிய ஒருவரின் முகம்
- காதலனின் அருகே நிற்கின்ற காதலியின் முகபாவம்
- கிரிக்கெட் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற குழுத் தலைவரின் பாவம்.
- எதிர்பாராத விதமாக அநேக வருடங்களுக்குப் பின்பு வீட்டிற்கு வந்த உற்ற நண் பனைப் பார்த்த போதுள்ள பாவம்.
- உங்களிடம் கோபப்பட்டு ஓடிச்சென்ற உங்கள் நண்பர் சென்ற காரியம் நடக்கா மல் திரும்பி வரும்போது உங்கள் பாவம்.
- சொன்ன காரியங்களுக்கு கீழ்படியாமலிருந்தபோது கோபப்பட்டு கம்புடன் வந்த அப்பாவின் முகபாவம்.
- நண்பனைத் தேடி வீட்டிற்குச் சென்ற போது எதிர்பாராமல் நாய் சாடி விழுந்த போதுள்ள பாவம்

  நம்முடைய அட்டையில் எழுதப்பட்டுள்ள குறிப்பை வாசித்தபோது நம்முடைய முகத்தில் ஏற்பட்ட பாவம் குழந்தைகள் செய்து காட்டுதல்.
- இதே பாவம் உருவாவதற்கு உதவும் இணையான நிகழ்ச்சிகளை ஒவ்வொரு குழு வும் குறித்து வைத்தல் வாசித்தல்.
- மீண்டும் இதே ரசத்தை நடித்துக் காட்டுதல் ஆசிரியர் புகழ்பெற்ற ஏதேனும் கத களி வல்லுநரின் நவரசங்களின் படத்தை தொங்கவிடுதல் ஒவ்வொரு ரசத்தினு டையவும் படத்தின் கீழே பெயர் எழுதப்பட்டிருக்கும் குழந்தைகள் தாங்கள்

எழுதிய குறிப்புகளுடன் தொடர்புடைய ரசங்களைக் கண்டுபிடித்தல். ஒவ்வொரு ரசத்திலும் உட்பட்டவர்கள் 9 குழுக்களாகப் பிரிதல். பின்பு குழுவில் உள்ளவர்கள் தங்கள் ரசத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான குழுச் செயல்பாடுகளைச் செய்தல். சுற்றிலும் உள்ள அசைவு, செயல், சொல், தொடுதல், மணம் ஆகியவை தம்மில் பாவமாற்றங்களை உருவாக்குகிறது என் கண்டுபிடித்தல். நவரசங்கள் ஒவ்வொன் றினுடையவும் படத்தைப் பார்த்து ( ஆசிரியர் நடித்தும் காட்டலாம்) குழந்தைகள் சரியான பயிற்சி பெறுதல். குழந்தைகளின் பாவதீவிரத்திற்கேற்ப ஒன்றுக் கொன்று மதிப்பீடு செய்தல். ஆசிரியர் தரநிர்ணயக் குறிப்புகள் பயன்படுத்தி மதிப்பிடுதல்

### மதிப்பிடுதல்

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- பாவதீவிரம்
- நுட்பம்
- சூழலோடுள்ள பொருத்தம்

## அலகு 4 காட்சி உருவாக்கம்

ஒரு பாடல் அல்லது கவிதை நடனமாக உருவாகும் போது கவனிக்க வேண்டிய விஷயங்களைக் குறித்து இந்த அலகில் கூறப்பட்டுள்ளன. ஒரு கவிதையைத் தேர்வு செய்யும் போது அதன் காட்சி வாய்ப்புகளைக் குறித்து இயன்ற அளவு தெரிந்தி ருக்க வேண்டும். கவிதை ஒரு உன்னத நிலையை உணர்த்துவதாக அமையவேண் டும். ஆனால் அதிலுள்ள பிம்பங்களின் காட்சிக்கான வாய்ப்புகள் குறைவாக இருந் தால் அந்த காட்சிப்படுத்தல் தோல்வியாக அமையும். அதிக பழக்கமான சில கவி தைகள் வாசிப்பு வழியாக மக்கள் மனதில் இடம் பெற்றவையாக இருக்கும். அத்த கைய கவிதைகளைக் காட்சிப்படுத்தும் போது குறைந்த அளவிலாவது வாசிப்பு வழி யாகக் கிடைத்த மகிழ்ச்சியையாவது நடிகரால் அளிக்க இயல வேண்டும்.

கவிதைகள் காட்சிப்படுத்தும் போது அடிகளுக்கிடையிலான வாசிப்பு நடைபெற்றி ருக்க வேண்டும். அல்லாவிட்டால் காட்சிகள் வெறும் குழந்தைத்தனமாக மாறிவி டும். இசைக்கருவிகளின் பொருத்தமான பயன்பாடுகளும், பாடல் சுத்தியும் காட்சியை அழகூட்டச் செய்கிறது. கவிதையின் அல்லது மையக் கருத்தை உயர்த்திக் காட்டும் வகையில் காட்சிகள் அமையவேண்டும்.

### கற்றல் அடைவு

- தேசபக்திப் பாடல்கள், கவிதை ஆகியவற்றின் காட்சி உருவாக்கம் செய்தல்.

### கருத்து, அறிவு

- பாவத்தைப் புரிந்து கொண்டு தேசபக்திப் பாடல் கவிதை ஆகியவற்றிற்குக் காட்சி உருவாக்கம் செய்யும் திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் உட்படுத்திய ஒரு செயல்பாடு.
- குழந்தைகளை நான்கு குழுக்களாகப் பிரித்தல். ஆசிரியர் பாடத்தோடு தொடர்புள்ள கவிதைகளும் தேசபக்திப் பாடல்களும் ஒவ்வொன்று வீதம் ஒவ்வொரு குழுவுக்கும் அளித்தல். முதல் கட்டமாக ஒவ்வொரு குழுவிலும் இலக்கியத்தின் பொருளைக் குறித்த விவாதங்கள் நடைபெறுதல். சந்தேகங்களை ஆசிரியர் உடனடியாகத் தீர்க்க வேண்டும். கருத்துத் தெளிவு கிடைத்த பின்பு அந்தப் பாடல் அல்லது கவிதைக்குத் தேவையான காட்சி மொழியை உருவாக்குதல். முத்திரைகள் மட்டுமின்றி உலக வழக்கு பயன்பாடுகளும் ஆகலாம். செவ்வியல் சார்ந்து பயின்ற சுவடுகள் மட்டுமின்றி இயல்பான அசைவுகளையும் உட்படுத்த வேண்டும். பாடல்களை ஆசிரியர் முதலிலேயே கொடுக்க வேண்டும். குழந்தைகளின் நிகழ்த்துதல், சுயமதிப்பீடு, விவாதம், ஆசிரியரின் ஒருங்கிணைப்பு, எல்லா நிகழ்த்துதலினுடையவும் சிறந்த பகுதிகளைத் தனியாக எடுத்துரைக்கவும், மற்றுள்ளவற்றை ஒரு அறிவுரை வடிவில் கூறவும் செய்யலாம்.

## மதிப்பீடு

*தரநிர்ணயக் குறிப்புகள்*

- நடனத்திலுள்ள அசைவின் வேறுபாடு
- கருத்து முழுமை

# அலகு- 5 செவ்வியல் நடனங்கள்

பாரதம் என்பது பரதனின் நாடாகும். பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரத்தை இயற்றிய நாடு பாரதமாகும். எல்லாக் கலைகளுடையவும் உறைவிடமான நாட்டிய சாஸ்திரத்தின் நாடானதால் எல்லாக் கலைகளுக்கும் அதனுடையதான ஒரு செவ்வியல் தன்மை இருந்தது. நம்முடைய நாட்டின் வேற்றுமைகள் மிகப் புகழ் பெற்றவை. மொழியிலும், வேஷத்திலும், பண்பாட்டிலும் வேறுபட்ட முரையிலான சில மனிதர்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்ற நாடாகும். ஒரே தானியத்தை பல்வேறு உணவுவகைகளாகச் சாப்பிடுவதைப் போன்று ஒரு நாட்டிய சாஸ்திரத்தை வேறுபட்ட பண்பாடு உடையவர்கள் . அவர்கள் நாட்டிற்குப் பொருத்தமான முறையில் வளரச் செய்தல். அவ்வாறு நம்முடைய பாரதத்தில் உலகெங்கும் பார்க்க இயலாத எட்டு வகையிலான செவ்வியல் நடன வடிவங்கள் உருவானது. இவைத் தவிர பிற நடன வடிவங்களும் உள்ளன. அவ்வாறு பரதனின் நடனம் வழியாக வளர்ந்த பண்பாடு என்ற முறையிலும் நமது பாரதப் பண்பாட்டைச் சிறப்பிக்கலாம்.

இந்த அலகு இந்தியாவின் செவ்வியல் நடன வடிவங்களான கதகளி, மோகினியாட்டம், பரதநாட்டியம், குச்சிப்புடி, மணிப்புரி, கதக், ஒடிசி கடைசியாக தோன்றிய ‘சாத்ரியா’ என்ற நடன வடிவங்களைக் குறித்த தேடுதல்களாகும்.

## கற்றல் அடைவு


- இந்தியாவிலுள்ள செவ்வியல் நடனங்களைக் குறித்து அறிந்து கொள்ளுதல்.



குச்சிப்புடி



மணிப்பூரி



ஒடிசி



பரதநாட்டியம்



மோகினியாட்டம்



கதக்

## கருத்து, அறிவு

- ஒவ்வொரு செவ்வியல் நடன வடிவங்களுக்கும் தனிப்பட்ட வேடங்கள் உள்ளன. ஒவ்வொன்றினுடையவும் நிகழ்த்துதல் ஒழுங்கு, நிகழ்த்துதல் முறை ஆகியவை வேறுபட்டதாக இருக்கும்.

## கற்றல் செயல்பாடுகள்

- வகுப்பில் எல்லா நடன வடிவங்களுடையவும் நிகழ்த்துதலுக்கான விசிடி காட்டுதல். பள்ளி கலைவிழாக்களில் பார்க்க இயலாத வகைகளாகிய கதக், ஒடிசி, மணிப்பூரி, சாத்திரியா ஆகிய இனங்களின சி.டி யை முக்கியமாக காட்ட வேண்டும். மற்றுள்ளவற்றைப் பள்ளி கலைவிழாக்களிலும் பார்ப்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் வாயப்பு கிடைக்கிறது.
- ஒவ்வொன்றைக் குறித்தும் மிகநுட்பமான விவரங்கள் சேகரித்தல்.
- புகைப்படத்துடன் கூடிய சேகரிப்பு புத்தகம் தயாரித்தல். இந்தச் செயல்பாடு ஒவ்வொரு குழந்தையும் தனிநபராகச் செய்ய வேண்டிய ஒரு முழு ஆண்டு செயல்திட்டமாகும்.

## மதிப்பீடு


*தரநிர்ணயக் குறிப்புகள்*

- கருத்துத் திறன்
- முழுமை
- உள்ளடக்கம்

7.4



# நாடகம்



# நாடகம்

## முன்னுரை

இசை நடனம், நடிப்பு, ஓவியம். சிற்பம், இலக்கியம் போன்ற எல்லா கலைவடிவங்களும் நாடகக்கலையில் இணைந்துள்ளன. எனவே கல்விச் செயல்முறையில் நாடகக் கலையை பயன்படுத்துவது இன்றியமையாத ஒன்றாகும். அழகை அனுபவிப்பதற்கானச் சூழல்கள் நாடக இரசிப்புத்திறனை பெற்றுக் கொள்ளும் பயிற்சியும் உட்பட்ட நாடக பாடத்திட்டம் தேவையாகும்..

நாடகநுட்பம் முக்கியமாக மூன்று வகையில் வகுப்பறைச் செயல்பாடுகளில் பயன்படுகிறது. ஆசிரியர் வகுப்பறையில் ஒரு நடிகராகவும், வகுப்பறை ஒரு காட்சி அரங்காகவும் இயல்புத்தன்மையுடன் மாற வேண்டியுள்ளதென்பதே முதல் நிலை. நாடக நுட்பத்தின் சில கூறுகள் கற்றல் செயல்பாடுகளின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவைக்கேற்ப பயன்படுத்தலாம் என்பதே இரண்டாவது நிலை. நாடக வடிவிலான பாடப்பகுதிகளுக்கு கற்றல்செயல்முறை உருவாக்கும் போது நிகழ்த்துதலினுடையவும், காட்சி மொழியினுடையவும் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்பதாகும் மூன்றாவது நிலை.

வாசித்தல் வழியாக காட்சிகள் உருவாகிறது. இந்தக் காட்சியின் உருவாக்கமே நாடகமும் பிற காட்சிக் கலைகளும் எழுத்தைக் காட்சியாக மாற்றும் போது ஆழ்ந்த பகுப்பாய்வும் பாடஉருவாக்கமும் இயலுகிறது. மொழியின் வேறுபாடும் வளமானதுமான மாற்றங்களைப் புரிந்து கொண்டு தன்னுடைய பண்பாட்டைக் குறித்த பகுத்தறிவு உருவாக உதவுகிறது. நாடக உருவாக்கத்திலும் தொடர்பான கலைவடிவங்களோடுள்ள ஈடுபாட்டிலும் பின்தங்கிய மானவர்களுக்கும் சமமான பங்களிப்பு கிடைப்பதால் அவர்களிடம் அதிக அளவிலான தன்னம்பிக்கையை வளரச் செய்கிறது.

குழந்தைகளின் நாடகங்கள் முதியவர்களின் நாடகங்களை விடச் சற்று மாறுபட்டவை. உடல்- மன அளவில் குழந்தைகளுக்கு ஏராளமான தனித்தன்மைகள் உள்ளன. அவர்களின் உணர்வின் அமைப்பிலும் நினைவுச் செயல்முறையிலும் வேற்றுமைகள் உள்ளன. எனவே குழந்தைகளின் நாடகங்களிலும் அந்தச் சிறப்பைப் பார்க்க இயலும். திறமை வாய்ந்த மனதில் கவர்ச்சித் தன்மை. அமைப்பில் குழந்தைகளின் நிலையில் இணங்கும் திறன். சிறப்புகளை விட செயல்களுக்கு முன்னுரிமை வாசிகத்தை விட ஆங்கியத்திற்கு முக்கியத்துவம். நாடகீய சூழல்களுடையவும் உரையாடல்களுடையவும் நேர்மை ஆகியவையே அவை. இதைப் புரிந்து கொண்டு குழந்தைகளுக்கு நாடக கற்றலுக்கான வாய்ப்பை அளிக்க வேண்டும்.

பாடப்பகுதியை இரசிப்புத் தன்மையுடையதாக்குவதற்கு படைப்பாற்றல் நாடக அரங்கை வகுப்பறைகளில் பயன்படுத்த வேண்டும். எ. கே. நம்பியார்.

# கற்றல் அடைவுகள்

## எட்டாம் நிலை

- கதாபாத்திரங்களின் சிறப்புகளைப் பிரித்தறிந்து நடிப்பு அமைப்பை உருவாக்குதல்.
- உரையாடல், முகநடிப்பு, உறுப்பு அசைவுகள், வேஷவிதானங்கள் போன்றவை வழியாக கதா பாத்திரத்தின் சிறந்த ஆளுமையை வெளிப்படுத்துதல்
- அரங்க காட்சி, எழுத்து, விழிப்புணர்வு
- ஒரு கருத்தை கதைக்கருவாக மாற்றுவதற்கான திறன் வளருகிறது.
- இடம் காலம் நிகழ்ச்சி கதாபாத்திரங்களை இணைத்து நாடக அமைப்பை விரிவாக்குதல்.
- கதாபாத்திரங்களுக்குக் காட்சிசெயல், உரையாடல் ஆகியன தயாரித்து வெளியிடுதல்.
- திரைப்பட உருவாக்கத்தின் அடிப்படை அறிவுகளைப் பெற்றுக்கொள்ளுதல்.
- இடம்- காலங்களுக்கேற்ப கருத்தை பார்வை உணர்வுடன் நிகழ்த்துதல்.
- அடிப்படை அறிவுகளை உட்கொண்டு, நாடக எழுத்து, திரைக்கதை ஆகியவை தயாரித்தல்.
- அடிப்படை அறிவுகளை உட்கொண்டு, நாடக எழுத்து திரைக்கதை ஆகியவற்றிற்கு காட்சி மொழி தயாரித்து நிகழ்த்துதல்.
- வகுப்பறையில் நிகழ்த்தக்கூடிய நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றைப் பார்த்து இரசனைக் குறிப்பு தயாரித்தல்.

## ஒன்பதாம் நிலை

- கதாபாத்திரங்களின் இயல்பான சிறப்புகளுக்கு பொருத்தமான நடிப்புமுறையை வளரச்செய்வதில் அறிவுபெறுதல்.
- தனியாகவும், குழுவாகவும், நால்வகை நடிப்புகளைப் பயன்படுத்தி உருவாக்கங்கள் செய்தல்.
- கதாபாத்திரங்களை நிகழ்த்தும் போது இடகாலங்களோடு இணையும் முறையை வளரச் செய்து பயன்படுத்துதல்.
- நாடகம்( எழுத்து) திரைக்கதை ஆகியவை தயாரித்தல்.
- அரங்கு நிகழ்த்துதல்களுக்குத் தேவையான சமையம், இசை, கோரியோகிராபி ஆகியவை பயன் படுத்துவதில் பொதுவான அறிவைப் பெறுதல்
- எளிய திரைப்படம் உருவாக்குவதற்கானச் செயல்பாடுகளை தலைமையேற்று திரைப்படம் தயாரித்தல்
- எழுத்து, திரைக்கதை ஆகியவை எழுதும் போது நிகழ்ச்சிகள் செயல்கள் ஆகியவற்றை யுக்தி பூர்வமாகவும், படைப்பாற்றல்பரமாகவும் பயன்படுத்தக்கூடிய அறிவைப் பெறுதல்.
- திரைப்படம், நாடகம் ஆகியவற்றில் நிகழ்த்துதல்களைக் கண்டு இரசித்தல்.

## பத்தாம் நிலை

- மேற்கத்திய, கிழக்கத்திய நடிப்பு முறைகளைப் பயன்படுத்தி கதாபாத்திரங்களின் ரங்கசரிய ஒழுங்குபடுத்துவதில் அறிவு பெறுதல்.
- அரங்கிலும், புகைப்படக் கருவியின் முன்னிலும் நடிப்பதற்கான அறிவுகளைப் பெறுதல்.
- திரையரங்குகளின் சிறப்புகளைக் கருத்திற்கொண்டு பாடப்பகுதி/ பொதுக் கருத்து ஆகியவற்றை நாடகங்களாக மாற்றி நிகழ்த்துதல்.
- பிற கலை வடிவங்களின் வாய்ப்புகளை நாடகம். திரைப்படம் உருவாக்குவதற்குப் பயன்படுத்துதல்
- நாடகம், திரைப்படம் ஆகியவற்றைப் பார்த்து இரசித்து விமர்சனத்துடன் கூடிய விவாதத்தில் ஈடுபடுதல்.

# எட்டாம் வகுப்பு

## முன்னுரை

நாடக இரசிப்பு, காட்சி நிகழ்த்துதல் ஆகியவை முறையாக வளர்ந்துவர வேண்டும். ஆரம்ப நிலையில் இரசிப்பினுடையவும், நிகழ்த்துதலினுடையவும் பல்வேறு துறைகள் கற்றல் செயல்பாடுகளின் பாகமாக உள்ளன. பாவஉருவாக்கத்தின் நுட்பம் உறுதி செய் கின்ற செயல்பாடுகள் ஏழாம் நிலையில் உள்ளன. நாடக எழுத்திற்கும் கவுரவம் வாய்ந்த நாடக இரசிப்பிற்கும் முக்கியத்துவம் அளிக்கின்ற செயல்பாடுகள் எட்டாம் வகுப்பில் உட்படுத்தப்பட்டுள்ளன. திரைப்படக் காட்சிப்படுத்தலுக்கான ஆரம்பப் பாடங்களும் செயல்பாடுகளில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## அலகு –1 கைக்கண்ணாடி

அரங்கு நடிப்பு பயிற்சிக்கான முக்கிய நாடகச்சிறப்புகளில் ஒன்றே கண்ணாடி. கைக் கண்ணாடி, நிலைக்கண்ணாடி என வேறுபட்ட கண்ணாடிகள் நடைமுறையில் உள்ளன. வேறொருவரின் அசைவு வரையறைகளுக்கேற்ப அவரவர் உடலைப் பல்வேறு திசைகளில் அசைக்க இயலும் கைகண்ணாடி உடல்வழக்கப் பயிற்சியாகும். வேறொரு வரின் பாவ அசைவுகளை உற்றுநோக்கி உடனடியாக நிகழ்த்தக்கூடிய இரசிப்புத் தன்மை நிறைந்த நாடகச் சிறப்பாகும் நிலைக் கண்ணாடி

### கற்றல் அடைவு

கதாபாத்திரங்களின் சிறப்புகளைப் பிரித்தறிந்து நடிக்கும் அமைப்பு உருவாக்குதல்.

### கருத்து, அறிவு

ஒவ்வொரு கதாபாத்திரமும் வேறுபட்ட சிறப்புத்தன்மைகள் உடையவர்கள்.

### கற்றல் செயல்பாடு

- எல்லாக் குழந்தைகளையும் இரண்டு பேர் அடங்கிய குழுக்களாக்குதல். இரண்டு பேர் கொண்ட குழுவில் இரண்டு பேருடையவும் வலது கைப்பத்திகள் வேறொ ருவரின் கண்ணாடியாக மாறுகிறது. வகுப்பறையிலுள்ள எல்லா குழுக்களும்

வலது கைகளை வேறொருவின் கண்ணாடியாக வைத்து மெதுவாக கண்ணாடியை அமைத்தல். வேறொருவரின் தலைக்கு மேல் உயராமல், வேகத்தில் அசைக்காமல், கண்ணாடிக் கைகள் செயல்படுகின்றன. ஏறக்குறைய நிறுத்தலாம் எனத் தோன்றும் போது ( 5நிமிடம்) செயல்பாட்டை நிறுத்தலாம்.

## அலகு- 2 நிலைக்கண்ணாடி

கைக்கண்ணாடியின் தொடர்ச்சியாகச் செல்ல வேண்டிய செயல்பாடாகும் நிலைக் கண்ணாடி

### கற்றல் அடைவு

கதாபாத்திரங்களின் சிறப்புகளைப் பிரித்தறிந்து நடிப்பு அமைப்பை உருவாக்குதல்

### கருத்து, அறிவு

ஒவ்வொரு கதாபாத்திரங்களும் வேறுபட்ட சிறப்புத் தன்மை உடையவர்கள்

### கற்றல் செயல்பாடு

- குழந்தைகள் இரு குழுக்களாக முகத்தோடு முகம் பார்த்து நிற்க வைத்தல். ஒரு வருக்கு எதிர்பக்கத்தில் வேறொருவர் நிற்பர். நடுவே பெரிய ஒரு கண்ணாடி. தொடக்க விசில் ஊதும் போது பிம்ப பிரதிபிம்பங்கள் ஒரேபோன்று அசைவர். கண்ணாடியின் இரு பக்கமும் ஒருவரைப் போல் வேறொருவர் மட்டும். எந்தச் செயலையும் செய்யலாம். அது பிரதிபலிப்பை போன்று கண்ணாடியின் எதிர்புறமும் இருக்கும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்பு பிரதிபிம்பமும், கண்ணாடியும் மாறுகிறது. விளையாட்டு குறிப்பிட்ட நேரம் வரை.

## அலகு- 3 ஓமஞ்சி

அறிமுகமான பாடப்பகுதிகளிலிருந்து கதாபாத்திரங்களை கண்டுபிடிக்கவும் அவர்களின் வேறுபட்ட குறைகளைப் பிரித்தறிந்து தணித்தன்மையுடன் நிகழ்த்தக் கூடிய ஒரு செயல்பாடாகும் இது.

### கற்றல் அடைவு

- அரங்கு, காட்சி, எழுத்து, விழிப்புணர்வு
- ஒரு கருத்தைக் கதைக்கருவாக மாற்றுவதற்கான திறன் வளருகிறது.
- இட கால- நிகழ்ச்சி கதாபாத்திரங்களை இணைத்து நாடக அமைப்பை வளரச் செய்தல்.
- கதாபாத்திரங்களின் அரங்குசெயல், உரையாடல் ஆகியவை தயாரித்து வெளியிடுதல்

- இட– காலங்களுக்கேற்ப கருத்தைப் பார்வையுணர்வுடன் நிகழ்த்துதல்.
- அடிப்படை அறிவுகளை உட்கொண்டு நாடக எழுத்து திரைக்கதை ஆகியவை தயாரித்தல்

### கருத்து, அறிவு

- கருத்துகளைக் கதைக்கருவாக மாற்றலாம்.
- ஒரு கருத்தை உருவாக்குவதற்குக் கதைக்கருவை உருவாக்க வேண்டும்.
- வாழ்க்கை அனுபவங்களை இணைத்துக் கருத்தை கதைக்கருவாக மாற்றும் திறன்
- கருத்து, கதைக்கரு ஆகியவற்றின் இடகால நிர்ணயம் வழியாக காட்சிகள் உருவாகின்றன.
- நாடக அமைப்பு விரிவுபடுத்தும் திறன்

### கற்றல் செயல்பாடு

- ஒரு பெட்டியில் தேவையான விவரங்கள் அடங்கிய பல்வேறு கதாபாத்திரங்களின் பெயர்களை எழுதிப்போடுதல். குழந்தைகள் ஒவ்வொருவராக வந்து ஒரு குறிப்பை எடுத்து வாசித்து அதன் கருத்தை நடிப்பு வழியாக வகுப்பிற்கு காட்டுதல். சிறந்த நூற்களின் கதாபாத்திரங்கள் ஆகலாம்.( எ.கா கண்ணில் மூக்கில்லாத வசூரி நம்பூதிரிப்பாடு, ஒந்து மந்துகால் ஜி....)

## அலகு 4 கவிதைத் துணுக்கு, பழமொழி காட்சிப் படுத்துதல்

கருத்துகளிலிருந்தும், சூழ்நிலைகளிலிருந்தும் நாடக அமைப்பை வளரச் செய்து நிகழ்த்தக்கூடிய ஒரு செயல்பாடாகும்.

### கற்றல் அடைவு

- அரங்கு, காட்சி எழுத்து விழிப்புணர்வு. ஒரு கருத்தை கதைக்கருவாக மாற்றும் திறன் வளருகிறது.
- இட– கால– நிகழ்ச்சி– கதாபாத்திரங்களை இணைத்து நாடக அமைப்பு வளரச் செய்கிறது.
- கதாபாத்திரங்களின் அரங்குச் செயல், உரையாடல் ஆகியன தயாரித்து நிகழ்த்துதல்.
- இடகாலங்களுக்கேற்ப கருத்தை காட்சியுணர்வுடன் வெளியிடுதல்.

### கருத்து, அறிவு

- கருத்துகளைக் கதைக்கருவாக மாற்றலாம்

- ஒரு கருத்தை உருவாக்குவதற்கு கதைக்கரு உருவாக்க வேண்டும்.
- வாழ்க்கை அனுபவங்களை இணைத்து கருத்தை கதைக்கருவாக மாற்றும் திறன்
- கருத்து கதைக்கரு ஆகியவற்றின் இடகால நிர்ணயம் வழியாகக் காட்சிகள் உருவாகின்றன.
- நாடக அமைப்பை வளரச்செய்யும் திறன்
- கதாபாத்திரங்களுக்கு குறிப்பிட்ட வழக்கும், பேச்சும் உண்டு.
- அரங்குச் செயலும், உரையாடலும் தயாரிக்கும் திறன்
- கருத்துகளுக்கு இடகால தொடர்பு உண்டு
- இட கால தொடர்புள்ள எதற்கும் காட்சி வடிவம் அளிக்கலாம்
- கருத்தை காட்சி வடிவமாக மாற்றும் திறன்.

## கற்றல் செயல்பாடு

குழந்தைகளின் குழுக்களுக்கு கவிதைத்துணுக்கு/ பழமொழி அளித்தல். குழந்தைகள் கிடைத்த குறிப்பை வாசித்து கருத்தை உட்கொள்ளுதல். வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி கதைக்கரு உருவாக்கல். நிகழ்ச்சிகளும் கதாபாத்திரங்களும், செயல்களும் உரையாடல்களும் உருவாக்கி பயிற்சி பெற்று வகுப்பில் நிகழ்த்துதல். ஒரு குழுவின் நிகழ்த்துதலைப் பிற குழுக்கள் தரநிர்ணயக் குறிப்புகள் பயன்படுத்தி மதிப்பீடு செய்தல். நாடக வடிவங்கள் எழுதித் தயாரித்து வாசித்தல், விவாதம் வழியாக நாடக வடிவத்தை சீரமைக்கவும் மீண்டும் நிகழ்த்தவும் வேண்டும்.

*தரநிர்ணயக் குறிப்புகள்*

1. கருத்தை உட்கொள்வதன் தனித்துவம்
2. கதைக் கருவின் அமைப்பு
3. நாடக எழுத்து
4. கதாபாத்திர நிர்ணயம், கதாபாத்திர உருவாக்கம் ஆகியவற்றின் நுட்பம்
5. நடிப்பு, காட்சி செயல்கள் ஆகியவற்றின் படைப்பாற்றல்

- குறிப்புகளின் முக்கியத்துவத்தை முன்வைத்து ஆசிரியர் விவாதத்தை ஒருங்கிணைத்தல்

## அலகு 5 நாடக எழுத்து

கருத்துகளிலிருந்தும் சூழல்களிலிருந்தும் உருவாக்கிய நிகழத்தக்கூடிய நாடகங்கள் தொடர் விவாதங்கள் வழியாக மேன்மையுறச் செய்யும்போதுதான் சரியான நிகழ்த்துதலுக்குத் தயாராவது. மேன்மைடுத்தி நிகழ்த்துதல் என்ற அறிவை உறுதிசெய்வதற்கான செயல்பாடாகும் இது.

### கற்றல் அடைவு

●அடிப்படை அறிவகளை உட்கொண்டு நாடக எழுத்து திரைக்கதை ஆகியவற் றிற்கான அரங்குப் பாடல்களைத் தயாரித்து நிகழ்த்துதல்.

### கருத்து, அறிவு

♦ எழுத்து, திரைக்கதை ஆகியன காட்சிகளின் எழுத்துப் பாடங்களாகும்.
♦ எழுத்து, திரைக்கதை ஆகியவற்றிற்குப் பொருளுடைய காட்சிப் பாடங்களை உருவாக்கலாம்
♦ காட்சிப்பாடம் உருவாக்கும் திறன்

### கற்றல் செயல்பாடு

- குழுக்கள் தயாரித்து நிகழ்த்திய விளக்கமான விவாதத்திற்குப் பின்பு தேவையான மாற்றங்களும், தனிப்பட்ட கண்ணோட்டங்களும் உட்படுத்தி நாடகத்தின் எழுத்து பாடம் தயாரித்தல். குழுசெயல்பாட்டின் வேறுபட்ட எழுத்தும் ஆகும்.

## அலகு 6 நாடக இரசிப்பு

சிறந்த நாடக நூற்களைப் பார்ப்பதும் சுயமாக ஒழுங்குபடுத்தி நிகழ்த்துதல், நாடகத்தின் திரைக்கதை, நிகழ்த்துதல் ஆகிய துறைகளில் நுட்பமான காரணிகளைப் புரிந்துகொள்ள குழந்தைக்கு உதவுகிறது. நாடக நிகழ்த்துதலுக்கு தேவையான திட்டமிடலும் ஆயத்தங்களும் அறிமுகம் செய்ய இந்தச் செயல்பாடு உதவுகிறது.

### கற்றல் அடைவு

●அடிப்படை அறிவுகளை உட்கொண்டு நாடக எழுத்து திரைக்கதை ஆகியவற் றிற்கு அரங்குபாடம் தயாரித்து நிகழ்த்துதல்.

●வகுப்பறையில் நிகழ்த்துகின்ற நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியன பார்த்து இரசனைக் குறிப்பு தயாரித்தல்.

### கருத்து அறிவு

♦ எழுத்து, திரைக்கதை ஆகியன காட்சிகளின் எழுத்துப் பாடங்களாகும்.
♦ எழுத்து, திரைக்கதை ஆகியவற்றிற்கு பொருளுடைய காட்சிப் பாடல்கள் உருவாக்கலாம்
♦ காட்சிப்பாடம் உருவாக்கும் திறன்
♦ திரைப்படம், நாடகம் ஆகியவை இரசிக்கக்கூடிய படைப்புகளாகும்.
♦ இரசிப்பதன் வழியாகத் திரைப்படம்,நாடகம் ஆகியவற்றின் அழகுக்கூறுகளை உட்கொள்ளலாம்

♦ இரசிக்கும் திறன்

## கற்றல் செயல்பாடு

- ஏதேனும் நாடகநூல் அல்லது நாடகநூலின் ஒரு பகுதியைக் குழந்தைகளுக்கு நிகழ்த்துவதற்காக அளித்தல். நாடகவாசிப்பு, நாடகத்தின் தொனிப்பாட விவாதம், அரங்குமொழி தயாரித்தல் பயிற்சி, அரங்கப் பொருட்களைத் தீர்மானித்தல், ஒழுங்கு செய்தல் நாடகம் நிகழ்த்துதல், விவாதம், இரசனைக் குறிப்பு தயாரித்தல்.

# அலகு - 7:

திரைப்பட உருவாக்கத்தின் ஆரம்பப் பாடங்களை அறிமுகம் செய்யக்கூடிய செயல்பாடாகும். உருவமுள்ளதோ, உருவமற்றதோ ஆன கருத்தை சில காட்சிகளாக மாற்றவும் அதை காட்சிப்படுத்தவும் கிடைத்த வாய்ப்புகளைக் கொண்டு படஇணைப்பு நடத்தி காட்சிப்படுத்தவும் வேண்டும். முழுமையான ஒரு கதையினுடையவோ, நிகழ்ச்சியினுடையவோ உருவாக்கம் அல்ல, மாறாக ஏதேனும் காட்சிகளை மட்டும் எடுத்து நிகழ்ச்சித் திரைப்பட உருவாக்கம் என்ற கருத்தை உறுதிசெய்வதே இந்தச் செயல்பாடு. மழை என்ற கருத்தை கார்மேகங்கள் நிறைந்த வானம், இலைகளில் வீழும் மழைத்துளி, கலங்கிய தண்ணீர் வழியாக கடந்து செல்லும் கால்பாதங்கள், குடைகளின் காட்சி போன்ற எளிய காட்சிகள் வழியாக உருவாக்கலாம்.

## கற்றல் அடைவு

- திரைப்பட உருவாக்கத்தின் அடிப்படை அறிவுகளைப் பெற்றுக்கொள்ளுதல்
- அடிப்படை அறிவுகளை உட்கொண்டு நாடக எழுத்து, திரைக்கதை ஆகியவற்றின் அரங்குப் பாடம் தயாரித்து நிகழ்த்துதல்.

## கருத்து, அறிவு

♦ திரைப்பட உருவாக்கத்திற்கு ஒரு திரைக்கதை தேவையாகும்.

♦ ஒவ்வொரு காட்சியிலும் காட்சிகளின் விளக்கங்களைப் ஒழுங்குபடுத்த வேண்டும்

♦ படங்களை புகைப்படக் கருவியில் எடுத்து எடிட் செய்ய வேண்டும்.

♦ எடிட் செய்யும் போதுதான் திரைப்படமாக மாறுகிறது.

♦ திரைப்பட உருவாக்கத்தின் அடிப்படைத் திறன்.

♦ திரைக்கதை எழுத்து ஆகியவை காட்சிகளின் எழுத்துப் பாடங்களாகும்.

♦ எழுத்து, திரைக்கதை ஆகியவற்றிற்கு பொருளுடைய காட்சிப்படங்கள் தயாரிக்கலாம்

♦ காட்சிப்பாடம் உருவாக்கும் திறன்

## கற்றல் செயல்பாடுகள்

- உருவமுள்ள சில நிகழ்ச்சிகள், அனுபவங்கள், விஷயங்கள் ஆகியவை காட்சி வழியாக நிகழ்த்துவதற்கான திட்டவரைவு உருவாக்கக் கூறுதல்( எ.கா. மழை, வேனல் போன்ற காலங்கள், பல்வேறு தொழில்கள், இயற்கைக் காட்சிகள்.)
- காட்சிகளின் தொடக்கம் முதலுள்ள ஒழுங்கின் வரிசை அவை இணையும்போது வரும் பொருள் போன்றவை குழு வாசிப்பில் விவாதிக்கப்படுகிறது. மேன்மையானதும். மேன் மையற்றதுமான சில திட்ட வரைவுகள் விளக்கங்கள் எழுதுவதற்காக குழுக்களிடம் கொடுத்தல். ஒவ்வொரு காட்சியும் யார்? எங்கே நின்று பார்க்கிறார்? போன்ற கருத்து தெளிவிற்கும், கருத்து உறுதிக்கும் தேவையான விமர்சனத்துடன் கூடிய வினாக்கள் கேட் டல். குழுக்களாக தயாரித்த திரைக்கதைகளைப் பொதுவாக நிகழ்த்துதல். குழந்தைகள் அதிலிருந்து சிறந்த ஒன்றைத் தேர்வு செய்தல்.
- திரைக்கதையை மீண்டும் விவாதித்து மேன்மைப்படுத்துதல். தொடர்ந்து திரைப்பட உரு வாக்கத்தின் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல் ( கேமரா, செட், நடிப்பு....) பொறுப்புகள் கிடைத்தவர்கள் தங்கள் துறையில் ஆழமாகக் கற்றல். உருவாக்க நாளை தீர்மானித்தல்.
- டிஜிட்டல் கேமரா, மொபைல் கேமரா போன்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தி காட்சிப்ப டுத்துதல் படஇணைப்பு, செய்தித் திரைப்படம் வெளியிடுதல்.

# படிநிலை– 2 திரைப்படத் திருவிழா

## கற்றல் செயல்பாடு

- தொழில்நுட்ப விளக்கத்திற்கும், கதைக்கரு உதவுகின்ற செவ்வியல் திரைப்படங்களின் காட்சிகளைப் பார்த்த திரைப்படங்களின் அடிப்படையில் விரிவான விவாதம், கதைக் கரு, தொழில்நுட்பம், பார்வை என விவாதம் நடைபெறுகிறது. ஒரு திரைப்படத்திற்கு இரசனைக் குறிப்பு தயாரித்தல்.

# ஒன்பதாம் நிலை

## முன்னுரை

இட காலங்களைத் தொடர்புபடுத்திக் கதைக்கருவை வளரச் செய்வதற்கும் அரங் குநிகழ்த்துதல் நடத்துவதற்குமான பொதுவான அறிவை பெற்றுக்கொள்ளும் வகை யிலான செயல்பாடுகளில் முன்வகுப்புகளில் பங்கேற்றுள்ளனர். கருத்து, சூழல் ஆகி யவற்றை வளரச் செய்து கதைக்கரு உருவாக்கவும், கதாபாத்திரத்தை இணைக்க வும் அறிமுகம் உள்ளனர். நால்வகை நடிப்புகளைக் குறித்தும் பொதுவான அறிவு உண்டு.

## அலகு- 1 பாவயானம்

பாவநடிப்பின் நுட்பத்தை உறுதி செய்யக்கூடிய ஒரு செயல்பாடாகும்.

## கற்றல் அடைவு

ஒவ்வொரு கதாபாத்திரமும் வெவ்வேறு சிறப்புகளை உடையவர்கள். கதாபாத்திரங்களின் இயல்பான சிறப்புகளுக்குப் பொருத்தமான நடிப்புமுறையை வளரச் செய்வதால் அறிவு உருவாகிறது.

## கருத்து/ அறிவு

- ♦ ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் தெளிவான தனிப்பட்ட சிறப்புத் தன்மைகள் உள்ளன.
- ♦ சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதற்கு வெவ்வேறு நடிப்பு உத்திகள் உண்டு
- ♦ நடிப்புமுறையை நிர்ணயிக்கும் திறன்.

## கற்றல் செயல்பாடு

- குழந்தைகளை மௌனமாக இருக்கச் செய்தல், வெவ்வேறு பாவங்கள் வழி யாகக் கடந்துசெல்லும் ஒரு குறிப்பை ஆசிரியர் வெளியிடுதல். அதில் ஒரு நபர் நேரிடுகின்ற பல்வேறு அனுபவங்களாகலாம். ஒவ்வொரு குழந்தையும்

அதிலுள்ள பிரதிபலிப்புகளைப் பாவங்களாக வெளியிடுதல்.

- கீழே கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தை ஆசிரியர் பயன்படுத்தலாம்

*விளக்கம்*

கடந்த வாரத்தில் இராணுவ வீரரான மாமா வந்தார். எனது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் பொறுப்பை அவரே ஏற்றுக்கொண்டார். விடுமுறை நாளானதால் அவர் என்னையும் அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு கிளம்பினார். பதினான்காம் பிறந்தநாள் ஒரு முக்கிய நிகழ்ச்சி என்பது அவருடைய கருத்து. ஏதோ பரிசுப் பொருள் வாங்குவதற்கான முயற்சியில் உள்ளார்.

மாமா என்னையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்றார். மாமாவின் இருசக்கர வாகனத்தில் நாங்கள் சென்றோம். வழியில் மாமா இராணுவக் கதைகளைச் சொல்லிக் கொண்டு வந்தார். உடனே ஏதோ ஒரு வாகனம் தீடீரென்று பிரேக் பிடிக்கும் சத்தம் கேட்டோம். முன்னே சற்று தொலைவில் ஒரு காரும் ஒரு பைக்கும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. பைக்கில் பயணம் செய்தவர் சாலையில் தூக்கி வீசப்பட்டார். உடனே வாகனங்கள் அனைத்தும் நின்றன. ஒரே கூச்சல். நாங்களும் எங்கள் வண்டியை சற்று ஒதுக்கி விட்டு விபத்து நடந்த இடத்துக்குச் சென்றோம். அங்கே முழுவதும் இரத்த வெள்ளமாக காட்சியளித்தது. யார்யாரோ சேர்ந்து காயமடைந்த நபரை ஒரு காரில் ஏற்றிக் கொண்டு சென்றனர். அதற்கிடையே ஏதோ ஒன்றில் மிதித்து என் கால் தடுமாறியது நான் பார்க்கும் போது இரத்தம்...

அங்கிருந்து நாங்கள் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். ஒரு வளைவு தாண்டிய போது சில காவலர்கள் எங்கள் வாகனத்தைக் கை காட்டினர். மாமா தீடீரென வண்டியை பிரேக் போட்டு நிறுத்தினார். காவலர்களின் முக பாவத்தைப் பார்த்த நாங்கள் பயந்துவிட்டோம். வாகனத்தின் ஆவணங்களை எல்லாம் பரிசோதித்து எங்களை விட்டபின்பு தான் பயம் மாறி எங்கள் மனதில் மகிழ்ச்சி வந்தது.

ஒரு குளிர்பானக் கடையின் முன் மாமா வாகனத்தை நிறுத்தினார் . அந்தக் கடை பெரிய மாமரத்தின் கீழே இருந்தது. அங்கே நல்ல நிழல் இருந்தது. மண்பானையில் வைக்கப்பட்டிருந்த தண்ணீரில் கடைக்காரர் நன்னாரி சர்ப்பத்தை தயாரித்துத் தந்தார். வெளியில் வந்த எங்களுக்கு சர்பத் குடித்த போது சற்று உற்சாகம் ஏற்பட்டது. அப்போது எட்டாம் வகுப்பில் என்னுடன் படித்த வினோத் வந்தான். சற்று காலத்திற்குப் பின் அவனைப் பார்த்த போது மகிழ்ச்சியாக இருந்தது. அவனுடைய அப்பாவின் தோட்டத்தில் பெரிய ஒரு பூசணிக்காய் காய்த்திருப்பாதாகக் கூறினார். அவ்வளவு பெரிய பூசணிக் காயை அவர் இதுவரையலும் பார்த்ததில்லையாம்.

அவனையும் அழைத்துக் கொண்டு நாங்கள் அவன் தோட்டத்திற்கு சென்றோம். வழியில் நானும், வினோதும் பேசிக்கொண்டி சென்றோம். தோட்டத்தை அடைந்த போது இனிதாக இருந்தது. அங்கே பசுமையும் நிழலும் இருந்தது. பூசணிக்காய் பார்க்கச் சென்ற போது மழைபெய்வதைப் போன்று உடம்பில் நீர்த் துளிகள் விழுந்தன.

சற்றுநேரத்தில் நாங்கள் பெரிய பூசணிக்காயைப் பார்த்தோம். ஆஹா! எவ்வளவு பெரிய பூசணிக்காய் நான்கு பேர் சேர்ந்து பிடித்தாலும் தூக்க முடியாது. அதைக் கண்டபோது நாங்கள் ஆச்சரியப்பட்டோம். வினோத் அவனுடைய தோட்டத்திலிருந்து வெள்ளரிக்காய் பிஞ்சுகளை பறித்துத் தந்தான் நல்ல சுவை. அப்போது வினோதின் அம்மா மோர் கொண்டு வந்தாள். நல்ல புளிப்பாக இருந்தாலும் மோர்

குடித்த போது சற்று தெம்பு கிடைத்தது. இந்த முறையில் சூழ்நிலைக்கேற்ப விளக்கத்தை விரிவுபடுத்தலாம்.

## அலகு 2 கதையில் யார்

முன் வகுப்புகளில் நால்வகை நடிப்புகளின் வாய்ப்புகளைப் பயன்படுத்தியுள்ளோம். ஒரு கதாபாத்திரத்தின் சிறப்பியல்புகளை நுட்பமாக உருவாக்குவதற்கான பயிற்சியே இந்தச் செயல்பாடு. புகழ்பெற்ற எழுத்தாளர்களின் சிறந்த கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நிகழ்த்துவதற்கும் உள்ள வாய்ப்பு வாசிப்பின் பெரிய உலகைநோக்கியுள்ள நுழை வாயிலாக பார்க்க வேண்டும். கதாபாத்திரத்தை விளக்குவதற்கான வாய்ப்புகளும், சமையத்திற்குள்ள நடைமுறை அனுபவங்களும் இந்தச் செயல்பாடு வழியாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

### கற்றல் அடைவு

- தனியாகவும் குழுவாகவும் நால்வகை நடிப்பைப் பயன்படுத்தி உருவகங்கள் செய்தல்.
- கதாபத்திரங்களை நிகழ்த்தும்போது இட காலங்களோடு இணையும் முறையை வளரச்செய்து பயன்படுத்த வேண்டும்.
- அரங்கு நிகழ்த்துதலுக்குத் தேவையான சமையம், இசை ஆகியவற்றைப் பயன்படுத்துவதாலும் பொதுவான அறிவைப் பெற்றுக்கொள்ளுதல்.

### கருத்து அறிவு

- உருவாக்கங்கள் சிறப்படைவதற்கு உடல் அசைவுகள் ஒலி, வேஷம் ஆகியவை இன்றியமையாதது
- கருத்துகளை நடிப்பு வழியாக பரிமாற்றம் செய்வதற்கு ஒலி, வேஷம், பாவம், உடல் அசைவுகள் ஆகியன பயன்டுத்துவது நல்லது.
- நால்வகை நடிப்புத் திறன்
- காவியங்களின் கதாபாத்திரங்களுக்கு இட காலங்கள் உண்டு.
- நிகழ்த்தப்படும் கால இடங்களுக்குப் பொருத்தமானால் மட்டுமே நிகழ்த்துதலை இரசிகர்களால் ஏற்றுக்கொள்ள முடியும்.
- கதாபாத்திரங்களை இட– காலங்களோடு இணையும வகையில் விளக்கக்கூடிய திறன்
- அரங்கு நிகழ்த்துதல்கள் பொருளுடையதாக அமைவதற்கு அலங்காரம், ஒளியின் ஒழுங்கு இசை, கோரியோகிராபி ஆகியன இன்றியமையாதது.
- அலங்காரம், இசை கோரியோகிராபி ஆகியவற்றை அரங்க நிகழ்த்துதலில் பயன்படுத்தும் திறன்.

## கற்றல் செயல்பாடு

***படிநிலை -1***

- குழந்தைகளை 3 பேர் அடங்கிய குழுக்களாக்குதல். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு கதாபாத்திரத்தைக் குறித்த சிறு குறிப்பு அளித்தல். இதை ஒரு விளையாட்டு வழியாகக் கொடுத்தால் குழந்தைகள் ஆர்வமாகச் செயல்படுவர்.
- எத்தனை குழுக்கள் உள்ளதோ அத்தனை குடங்கள். ஆசிரியரின் கையில் வேறொரு குடம். கையிலுள்ள குடத்தில் பாடநூலில் வரக்கூடிய எழுத்தாளர்களின் சிறந்த கதாபாத்திரங்களின் பெயர்களை எழுதிப் போட வேண்டும். ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒருநபர் வீதம் வந்து ஆசிரியரின் கையிலுள்ள குடத்திலிருந்து ஒவ்வொரு குறிப்புகள் வீதம் எடுத்தல். கையிலுள்ள குடங்களிலிருந்து ஒன்றையும் எடுத்தல். குழுக்கள் பெயர்களைப் பார்த்தல். குடத்திலுள்ள குறிப்புகளை வாசித்தல். அந்த குறிப்புகளில் தங்களுடைய கதாபாத்திரத்தை நிகழ்த்துவதற்கான ஆயத்தங்களைச் செய்தல். அல்லது பிற குழுக்களுடன் செய்கை மொழியில் தங்களுக்கு கிடைத்த கதாபாத்திர விளக்கங்களை கலந்துரையாடுதல். பிரித்தறிந்த பின் குடங்களை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளுதல். கதாபாத்திரங்களை நிகழ்த்துவதற்கான விளக்கங்களை தயாரித்தல். சுருங்கிய நேரத்தில் குழந்தைகள் பயிற்சியை முடித்து நிகழ்த்துதல்.

<u>மதிப்பீடு</u>

- கதாபாத்திரங்களின் தனித்தன்மை, வேறுபாடு, இடக் காலங்களோடு தொடர்புபடுத்துதல் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும். ஒன்றுக்கொன்றுள்ள மதிப்பீடும், ஆசிரியரின் மதிப்பீடும் நடைபெற வேண்டும்.

***படிநிலை-2***

- குழந்தைகளைக் குழுக்களாகப் பிரித்து ( மேக்கப் செட்) பௌடர், கண் எழுதும் பென்சில், கண்மை, லிப்ஸ்டிக், ரோஸ் பௌடர் போன்ற மேக்கப் பொருட்களைக் கொண்டுவரும்படிக் கூறுதல். கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமான வேஷங்கள் கொண்டுவருவதற்கும் குழந்தைகளிடம் கூறவேண்டும். வகுப்பறையில் அலங்காரத்திற்கான நேரத்தை வழங்க வேண்டும். குழந்தைகள் ஒன்றுக்கொன்று மேக்கப் செய்யட்டும். குறிப்பிட்ட நேரத்திற்குப் பின்பு குழந்தைகள் கதாபாத்திரங்களாக அணிவகுத்தல்.
- ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அறிமுகம செய்வதற்கான அறிவிப்பு விடுதல். அத்துடன் கதாபாத்திரம் அரங்கில் வருதல். கதாபாத்திரத்தின் அசைவு, தேவையெனில் உரையாடல் ஆகியவற்றுடன் நிகழ்த்துதல்.

<u>மதிப்பீடு</u>

- தனித்துவம். அலங்காரம், வேஷம் இவற்றிற்கிடையிலான தொடர்பை ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

# அலகு- 3 பாடநூலிலிருந்து ஒரு நாடகம்

நாடகத்தன்மையுடையதும் அல்லாததுமான நிகழ்ச்சிகளிலிருந்து நாடகத்தை உரு வாக்கலாம். அமைப்பை வடிவமைக்கலாம். நாடகத்தன்மையுள்ள பாடப்பகுதிகளுக்கு தொடக்கம் வளர்ச்சி எதிர்ப்புத்தன்மை, பரிணாமம், முடிவு போன்ற தன்மைகள் காணப்ப டும். கருத்துகள், உண்மைகள், கூற்றுகள் ஆகியவற்றிற்கு நாடகத் தன்மை இருக்க வேண் டும் என்றில்லை. இவ்வாறு நாடகத்தை உருவாக்குவதற்காக அளிக்கப்பட்டுள்ள சூழல்/ கருத்தை நுட்பமாக பகுப்பாய்வு செய்து கொண்டு மட்டுமே நாடக அமைப்பை உருவாக்க வேண்டும். குழுக்களில் நடைபெறும் பகுப்பாய்வுகளும் விவாதங்களும் சிறந்த கற்றல் சூழல்களாகும். அவற்றிலிருந்து தொடக்கம் முதல் முடிவு வரை பொருத்தமான ஒரு நிகழ்த் துதல் வடிவம் வடிவமைக்கும் செயல்பாட்டைக் குழந்தைகள் எளிதில் பெறுவார்கள்..

## கற்றல் அடைவு

- தனியாகவும் குழுவாகவும் நால்வகை நடிப்புகளைப் பயன்படுத்தி உருவாக்கங்கள் செய்தல்.
- கதாபாத்திரங்களை நிகழ்த்தும் போது இடகாலங்களுடன் இணையும் முறையை வளரச் செய்து பயன்படுத்துதல்.
- நாடகம் எழுத்து திரைக்கதை ஆகியவை தயாரித்தல்.
- எழுத்து, திரைக்கதை ஆகியன எழுதும் போது நிகழ்ச்சிகள் செயல்கள் ஆகிய வற்றை யுக்திபூர்வமாகவும், படைபபாற்றலுடனும் பயன்படுத்தும் அறிவைப் பெறுதல்.
- நாட்டுப்புற நாடகங்களைப் பின்பற்றி( பொறாட்டு நாடகம், காக்காரிசி, கோதாமுரி) குழந்தைகள் நாடகம் நிகழ்த்துதல். ஏ. கே, நம்பியார்.
- காவியப் பகுதிகளின் நாடக உருவாக்கம், குழந்தைகள் தயாரித்தல் ( மாம்பழம், துரவஸ்த, பதப்பாட்டு முதலியன)

## கருத்து அறிவு

- உருவாக்கங்கள் சிறப்படைவதற்கு உடல் அசைவுகள் ஒலி, வேஷம் ஆகியன இன்றியமையாதது.
- கருத்துகளை நடிப்பு வழியாக பரிமாற்றம் செய்வதற்கு ஒலி, வேஷம், பாவம், உடல் அசைவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது சிறந்தது.
- நால்வகை நடிப்புத் திறன்
- காவியங்களிலுள்ள கதாபாத்திரங்களுக்கு இட காலங்கள் உள்ளன.
- நிகழ்த்தக்கூடிய இடகாலங்களுக்கு பொருத்தமானால் மட்டுமே நிகழ்த்துதலை இர சிகர்களால் இரசிக்க முடியும்.
- கதாபாத்திரங்களை இடகாலங்களோடு இணையும் வகையில் விளக்குவதற்கான திறன்
- உருவாக்கங்களுக்குப் பின்னால் எழுத்துப்பாடம் உள்ளது.
- காட்சிப்பாடம் தயாரிப்பதற்குத் தேவையான குறிப்புகள் எழுத்துபாடத்தில் இருக்க வேண்டும்.
- காட்சிப்பாடத்திற்குப் பொருத்தமான எழுத்துப்பாடம் உருவாக்கும் திறன்.

- ஒரு கருத்தை/ கதைக்கருவை வளரச்செய்வது இடம், காலம், காதாப்பாத்திரம், செயல்கள்,உரையாடல் ஆகியனவற்றின் வழியேயாகும்.
- திரைக்கதை எழுதுவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடு

*பாடநூலிலிருந்து ஒரு நாடகம்*

- பாடநூலிலுள்ள கருத்துகளும், சூழல்களும் இந்தச் செயல்பாட்டில் பயன்படுத்த வேண்டும். மாணவர்களை ஐந்து அல்லது ஆறு பேர் அடங்கிய குழுக்களாகப் பிரித்தல். ஒன்றுவிட்ட குழுக்களுக்கு நாடகத் தன்மையுடைய பாடப்பகுதிகளும், மற்ற குழுக்களுக்கு நாடகத்தன்மையற்றதுமான பாடப்பகுதியை அளித்தல்.

எ.கா:

நாடகத் தன்மையுள்ளவை- கதைப் பகுதிகள், கவிதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள், வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்.

நாடகத்தன்மையற்றவை- அறிவியல்,கணிதஅறிவியல், சமூக அறிவியல், கருத்துகள், உண்மைகள்( ஒளிச்சேர்க்கை, பிதாகோரஸ் கோட்பாடு, கோரியோலிஸ் மக்களாட்சி)

- குழுக்கள் தங்களுக்குக் கிடைத்த தலைப்பின் அடிப்படையில் விளக்கமாக விவாதம் செய்தல். கருத்துகளும் உண்மைகளும் எவையெனவும் அவற்றை வாழ்க்கையுடன் எவ்வாறு தொடர்புபடுத்தலாம் எனவும் கண்டுபிடித்தல். கருத்து, உண்மை ஆகியவற்றை நுட்பமாக பகுப்பாய்வு செய்து சிறந்த வாழ்க்கைச் சூழல்களைப் பயன்படுத்திக் கதைக்குகரு உருவாக்குதல். நாடகத் தன்மை வாய்ந்த சூழல்களை நிகழ்த்துதலுக்காக ஒழுங்குபடுத்துதல். குழுக்களுக்கு இடம் , காலம், நிகழ்ச்சி அவற்றிற்கான காரணங்கள் ,கதாபாத்திரங்கள் அவர்களின் செயல்கள் அவருடைய உரையாடல்கள் ஆகியவை தெளிவாகும் வகையில் குறிப்பு அளித்தல்.

*குறிப்பு*

*இடத்தையும், காலத்தையும் தொடர்புபடுத்தக்கூடிய இடகாலங்களின் கலையே நாடகம். கருத்துகள், சூழல்கள் ஆகியவற்றிலிருந்து உருவான கதைக்கரு எந்தெந்த சூழல்களில் நடைபெறுகிறது என்பதைக் கண்டடைய வேண்டும். ஒரு இடத்தில் ஓர் நேரத்தில் நடைபெறக்கூடிய ஒன்றே காட்சி ஆகும். ஒரு காட்சியில் எந்தெந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன எனத் திட்டமிடுவதே அடுத்த வேலை. சிலவேளை அவற்றிற்கான காரணங்களையும் கருத்திற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுபவரும் அந்த இடத்தில் இருக்கவேண்டியவர்களும் யார் யார் என்பதை திட்டமிடுவதே அதற்கடுத்த நிலை. ஒவ்வொரு நபரும் செய்யக்கூடிய செயல், அவர்களின் உரையாடல் அவர்களின் இயல்பு பிற சிறப்புகள் ஆகியவற்றையும் தீர்மானிக்க வேண்டும். இவ்வளவும் முடியும் போது நாடக எழுத்திற்கான அரங்கு தயாராகிவிடும். இங்கிருந்து எழுத்திற்கும் பயிற்சி வழியாக நிகழ்த்துதலுக்கும் செல்லலாம்.*

- குறிப்பை குழு உறுப்பினர்கள் விளக்கமாக பரிசோதித்தல் அதனடிப்படையில் கதைக்கருவிலிருந்து நாடகஅமைப்பு உருவாக்குதல். தேவையான மாற்றங்களுக்

குப் பின்பு அரங்கு நிகழ்த்துதல் செய்தல்.

### மதிப்பீடு

- மதிப்பீட்டில் நாடகஉருவாக்கச் செயல்முறை கருத்துகளின். நிகழ்ச்சிகளின் பரிமாற்றத் திறன், அரங்குநிகழ்த்துதலின் அழகு ஆகியவற்றைப் பரிசோதிக்க வேண்டும். குழுஉறுப்பினர்கள் ஒன்றுக்கொன்றும் ஆசிரியரும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

## அலகு- 4 திரைப்படப் பணிமனை

### முன்னுரை

திரைப்படம் என்பது புதிய காலத்தின் மக்கள் கலைவடிவமாகும். பிற கலை வடிவங்களை பொறுத்த வரையில் திரைப்படம் என்பது புதிய காலத்தின் ஊடகமாகும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள், குறும்படங்கள், செய்திப்படங்கள், நிகழ்வறிக்கைகள், கதைப்படங்கள் எனத் திரைப்படம் என்ற ஊடகம் வழியாக வெளிப்படுகின்ற ஏராளமான வடிவங்கள் உண்டு. கலைக்கல்வியின் பாகமாகத் திரைப்படம் என்ற ஊடகமும், கலைவடிவமும் பெரும் பங்கை வகிக்கிறது. பொதுவாகத் திரைப்படம் என்றழைக்கப்படும் கதைப்படங்கள் பல வகையுள்ளன. பொழுதுபோக்கிற்காக மட்டும் உருவாக்கும் திரைப்படங்களும் மனிதனையும் அவனுடைய வாழ்க்கையையும், அழகாகவும் விமர்சனத்துடனும் பகுப்பாய்வு செய்யும் திரைப்படங்களும் உள்ளன. இங்கே திரைப்படங்களில் திரைப்படம் கௌரவம் வாய்ந்த கலைச் செயல்பாடாக மாறுகிறது. இத்தகைய திரைப்பட உலகில் நுழைவதற்குக் குழந்தைகளுக்கு சிறந்த பயிற்சி தேவைப்படுகிறது. திரைப்படத்தின் மிகப் புதுமையான முகத்தை அறிமுகப்படுத்துவதற்கும் திரைப்பட இரசிப்பின் பல்வேறு கட்டங்கள் வழியாக கடந்து செல்வதற்கும் குழந்தைகளைத் திறமையடையச் செய்யும் செயல்பாடே பள்ளிக்கூடத்திலுள்ள திரைப்பட விழாக்கள்.

### கற்றல் அடைவுகள்

- சிறுபடங்கள் உருவாக்வதற்கான செயல்பாடுகளைப் பொறுப்பேற்று திரைப்படம் உருவாக்குதல்
- திரைப்படம் நாடகம் ஆகியவற்றின் நிகழ்த்துதல்களைக் கண்டு இரசித்தல்.

### கருத்து, அறிவு

- காட்சிகளின் தொடர்ச்சியே திரைக்கதை
- திரைக்கதையின் அடிப்படையில் தான் திரைப்படம் உருவாக்க வேண்டும்.
- திரைப்பட உருவாக்கத்துடன் தொடர்புடைய ஏராளமான தொழிலநுட்ப வசதிகள் உள்ளன. இத்தகைய தொழில்நுட்பங்களில் அறிவிருந்தால் மட்டுமே திரைப்

படம் உருவாக்க முடியும்.

- திரைப்படம், நாடகம் ஆகியவை இரசிப்புத் தன்மையுடைய கலைவடிவங்கள் ஆகும்.
- காட்சிகளைத் தேர்வு செய்வது, அரங்கு செயல்களின் ஒழுங்கு ஆகியவை திரைப்படம் , நாடகம் ஆகியவற்றிற்குப் புதிய பொருளை அளிக்கிறது.
- கற்றல் அடைவு

## கற்றல் செயல்பாடு

*திரைப்பட விழா*

- திரைப்பட விழாக்கள் பள்ளிக்கூடத்தின் பொதுவான ஒத்துழைப்புடன் செயல்படுத்த வேண்டிய ஒரு செயல்பாடாகும். ஆசிரியரும்,மாணவர்களும் பல்வேறு குழுக்களாகச் செயல்பாடுகளை செய்ய வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் நீண்டு நிற்கும் விழாக்களை ஒழுங்கு செய்வது நல்லது. இதற்காக தொடர்ந்து வரக்கூடிய விடுமுறை நாட்களைப் பயன்படுத்தலாம். ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று அரங்குகளில் திரைப்படங்களைக் காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைக் காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பள்ளிக்கூடத்தில் Smart Class- –யுடன் காட்சிப்படுத்தலுக்கு பொருத்தமான பிற அரங்குகளும், ஒழுங்கு செய்ய வேண்டும். இதற்கான காட்சி உபகரணங்களாகிய கணினி Projecter, மின்சார அமைப்பு ஆகியவற்றிற்கு அருகிலுள்ள பள்ளிக்கூடங்களையும் பயன்படுத்தலாம். காட்சிக்காகத் திரைப்படங்களின் ஒரு பானல் ஒழுங்கு செய்யவேண்டும். விழாவிற்கான உறுப்பினர்களின் பெயர் பதிவு, உறுப்பினர் அட்டை தயாரித்தல், திரைப்படங்களின் விவரங்கள் அடங்கிய குறிப்புகள் தயாரித்தல், துண்டு பிரதிகள், சுவரொட்டிகள் ஆகியன தயாரித்தல். திரைப்படத்தின் பல்வேறு தளங்களைக் கருத்தில் கொண்டு திறந்த பதிவேடுகளும், கலந்துரையாடல்களும் ஒழுங்கு செய்தல், விழாவில் வெளியிடப்பட்ட திரைப்படங்களின் விளக்கமான இரசிப்புகளும் அவற்றின் தொகுப்பும் மலரும் தயாரித்தல், ஆகியன விழாவுடன் தொடர்புடைய செயல்பாடுகளாகும். இதற்காகக் குழந்தைகளைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்து பொறுப்புகளை வழங்கலாம். சரியான திட்டமிடல் இத்தகைய விழாக்களின் வெற்றிக்கு முக்கியமானது.

*குறிப்பேடு( புரோஷர்) உருவாக்கம்*

- திரைப்படத்தைக் குறித்த பொதுவான விவரங்களும் விழாவில் காட்சிப்படுத்தும் திரைப்படங்களின் பொதுவான விவரங்களும் உட்படுத்தி திரைப்பட விழாவின் குறிப்பேடு உருவாக்க வேண்டும். விழாவின் தொடர்பாக நடைபெறும் திறந்த பதிவேடு, விவாதங்கள் ஆகியவற்றின் பொதுவான விவரங்களும் இதில் உட்படுத்தலாம். ஒரு சில பக்கங்கள் உள்ள சிறிய கையேடாக இதை உருவாக்கி எடுக்கலாம். கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலகுகளை இதில் உட்படுத்தலாம்.

1. முன்னுரை
2. திரைப்பட வரலாறு

-மலையாள சினிமா
-இந்திய சினிமா
-உலகத் திரைப்படம்
-ஆவணப்படம்
-ஆனிமேஷன் படங்கள்
-குறும்படங்கள்

விழாவில் காட்சிப்படுத்தும் திரைப்படங்களின் விளக்கங்களும், கதைக்குறிப்பும் ( திரைப் படத்தின் பெயர், இயக்குநர், திரைப்படத்தின் வருடம் மொழி, காலஅளவு, நாடு ஆகிய வற்றை சரியாக குறிப்பிட வேண்டும். ஒரு எடுத்துக்காட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

101 வினாக்கள்
இந்தியா/2012/106 நிமிடம்/தமிழ்

திரைக்கதை இயக்கம்
சித்தார்த் சிவா

ஒளிப்பதிவு
பிரபாத் இ. கெ

எடிட்டிங்
பிபின் பால் சாமுவேல்

இசை
எம். கெ.அர்ஜூனன்

ஒரு கிராமப்புறப் பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற பதினொன்று வயதுடைய அனில்குமார் பொக்கரா என்பவரே இந்தத் திரைப்படத்தின் முக்கிய கதாபாத்திரம் அனிலின் தந்தை சிவானந்தாவின் வேலை இழந்ததுடன் குடும்பத்தை கட்டி எழுப்பும் முயற்சியில் இருக் கிறார். அவருடைய தாயான சதி. பள்ளியில் புதிதாக வந்த ஆசிரியரான முகுந்தன் என் பவர் அனிலின் வாழ்க்கையில் புதிய திசை உணர்வை அழித்தது. 101 வினாக்கள் என்ற புத்தகம் உருவாக்குவதற்காக அனிலின் உதவியை நாடுகின்ற ஆசிரியர் ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு ரூபாய் கூலியாகத் தரளாம் என அவனுக்கு உறுதியளிக்கிறார். தனது வாழக்கை சூழலிலிருந்து வினாக்களைக் கண்டறியும் அனிலின் வாழ்கையில் 101- வது வினா திருப்பு முனையாகிறது.

- குறிப்பேட்டின் அமைப்பும் உள்ளடக்கமும் சூழலிற்கேற்ப ஒழுங்கு செய்யலாம். குறிப் பேட்டின் விவரங்கள் திரைப்படம் தொடர்பான புத்தகங்களிலிருந்தும், இணையதளத்தி லிருந்தும் எடுக்கலாம். திரைப்படத்தைக் குறித்த தகவல்களும் இவ்வாறு கிடைக்கும். திரைப்படங்களில் இருந்து சில காட்சிகளை உட்படுத்தினால் இது அழகுடையதாகும்.

*ஓப்பன் பாரம் ( திறந்தவெளி விவாதம்)*

- திரைப்படத்தின் இரசிப்பு துறைகளில் இறங்கிச் செல்வதற்கு உதவக்கூடிய ஒன்றாகும். திரைப்பட விழாவின் இடைவேளைகளில் இதை ஒழுங்கு செய்யலாம். இதற்காகத் திரைப் படத்தின் பல்வேறு துறைகளிலுள்ள நிபுணர்களையும் உட்படுத்தலாம். சாதாரணமாக ஏதே னும் ஒரு தலைப்பின் அடிப்படையிலான விவாதங்கள் இதில் நடைபெறுகிறது. விவா தக் குழுவில் உள்ளவர்களுக்குக்கும் பார்வையாளர்களுக்கும் விவாதங்களில் பங்கேற் கலாம். ஓபன் பாரத்தின் ஒழுங்கமைப்பிற்கும், நிகழ்த்துதலுக்கும் குழந்தைகளின் ஒரு குழுவிற்கு பொறுப்பை வழங்கலாம். ஆசிரியரின் மேற்பார்வையும் உறுதி செய்ய வேண் டும். ஒப்பன்பாரத்தில் விவாதிக்க வேண்டிய துறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. சூழ

லுக்கேற்ப எந்தத் தலைப்பும் விவாதத்திற்கு அளிக்கலாம்.

**திரைப்படத்தின் இரசிப்புத் துறைகள்**

திரைப்படத்தில் மனிதனும், சாதாரண வாழ்க்கையும்
சுற்றுச்சூழல்
திரைப்படத்தில் பெண்
திரைப்படத் தொழில் நுட்பம்
திரைப்பட அரசியல்
குறும்படங்களும் ,கதைகூறுவதன் சிறப்பும்
அனிமேஷன் வாய்ப்புகள்.

*திரைப்பட மேற்பார்வை*

- திரைப்பட விழாவிற்கு பின் நடைபெற வேண்டிய செயல்பாடாகும். விழாவைப் பொதுவாக மதிப்பிட்டும் திரைப்படம் தொடர்பான சிறந்த மதிப்பீடுகளும் குழந்தைகள் செய்யட்டும். திரைப்படங்களை வெவ்வேறு தளங்களில் அணுகக் கூடிய குறிப்புகள் உண்டு என்பதை ஆசிரியர் உறுதிச் செய்ய வேண்டும், குழந்தைகளின் மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் வகுப்பில் விவாதங்கள் ஒழுங்கு செய்ய வேண்டும். இந்த குறிப்புகளை உட்படுத்தி மலரும் தயாரிக்கலாம்.

*விழாவில் உட்படுத்த வேண்டிய திரைப்படங்கள்*

- கலர் ஆப் பாரடைஸ்( மஜிது, மஜிதி, ஈரான்)
- சில்டிரன் ஆப் கெவள் (மஜிது, மஜிதி ஈரான்)
- சர்க்கஸ், த கிட், மாடன் டைம்ஸ் ( சார்லி சாப்ளின்)
- தாரே செமீன்பர் ( அமீர்கான் இந்தி)
- டிரீம்ஸ் ( அகிர குறசோவா, ஜப்பான்)
- வாட் இஸ் தாட் ( குறும்படம், கிரீக் )
- ஆப் சைஸ் ( டாக்குமென்டரி)
- கிரேவ் ஆப் த பயர் பளைஸ் பச்சிலக்கூடு ( அனிமேஷன் படம்)
- கும்மாட்டி ( அரவிந்தன் மலையாளம்)
- களியொருக்கம் ( சுனில் மலையாளம்)
- டி. ஸி. தாசன் 6 பி ( மோகன் இராகவன், மலையாளம்)

*மதிப்பீடு*

- குழந்தைகளின் பங்களிப்பு. திரைப்பட இரசிப்பில் வெளியிடும் நுட்பம் ஆகியன மதிப்பீடு செய்யவேண்டும்.

# பத்தாம் வகுப்பு

## முன்னுரை

அரங்கு நிகழ்த்துதல் இரசித்தல் என நாடகத் திரைப்படக் கற்றல்களில் உயர்ந்த நிலைகளில் பத்தாம் வகுப்புக் குழந்தை சென்றடைய வேண்டும். உயர்நிலைப் பள்ளியில் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டிய அறிவுகளும் திறன்களும் முழுமையடைவதற்கான செயல்பாடுகள் இந்த வருடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நாட்டிய வழக்கு, உலக வழக்கு போன்ற அரங்க நடிப்பின் வெவ்வேறு பாடங்கள் மேற்கத்திய, கிழக்கத்திய நாடகமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான உள்ளடக்கத்தின் பாகமாகும். எளிய திரைப்படங்கள் உருவாக்குவதன் நடைமுறைப் பயிற்சி கிடைக்கும் வகையில் திரைப்பட உருவாக்கப் பணிமனையும் பத்தாம் வகுப்பில் கற்றல் செயல்பாடுகளின் பாகமாக உட்படுத்தப்பட்டுள்ளது.

## அலகு- 1

## நாடகத்தின் அரங்குமொழி- மேற்கத்தியவும், கிழக்கத்தியவும்

ஒரு சிறிய சூழல்/ நிகழ்ச்சி நடித்துக் காட்டுவதற்கு கையாளுகின்ற மேற்கத்திய, கிழக்கத்திய நடிப்புமுறைககளைக் குறித்து குறிப்பு வாசித்து உட்கொண்டு நடிப்புக்கு தேவையான ஒழுங்குகளை திட்டப்படுத்துவதற்காக மட்டும் நிகழ்த்தப்படுகிறது.

## கற்றல் அடைவு

- மேற்கத்திய கிழக்கத்திய நடிப்புமுறைகளைப் பயன்படுத்தி கதாபாத்திரங்களின் அரங்கை ஒழுங்குபடுத்துவதில் அறிவு அடைதல்.
- திரையரங்குகளின் சிறப்பகளைக் கருத்திற்கொண்டு பாடப்பகுதி பொதுக்கருத்து ஆகியன நாடகமாக வெளியிடுதல்.
- சுதந்திரமான எழுத்துநடை வளரச் செய்வதில் உட்கொண்ட அறிவுகளை நாடகம், திரைக்கதை ஆகியவை எழுதும் போது பயன்படுத்துதல்.

## கருத்து, அறிவு

- நடிப்பு முறைகள் மேற்கத்திய நாடுகளிலும், கிழக்த்திய நாடுகளிலும் வேறுபட்ட முறைகளில் வளர்ந்து வந்தது.

- மேற்கத்திய, கிழக்கத்திய முறைகளைத் தனித்தனியாகவும் இணைத்தும் அரங்கு நிகழ்த்துதலை ஒழுங்குசெய்யலாம்.
- நாடகத்திற்குப் பொருத்தாமான நடிப்புமுறையைத் தேர்வு செய்து நடிக்கும் திறன்.
- அரங்கு எழுத்து இரசிகர் ஆகியவையே திரையரங்கின் அடிப்படைக் காரணிகள்
- பார்வையாளர்களையும், எழுத்தையும் கருத்திற்கொண்ட பயிற்சியும் , நிகழ்த்து தலும் நாடகத்தைச் சிறந்த கருத்துப் பரிமாற்ற ஊடகமாக மாற்றுகிறது.
- திரையரங்கின் சிறப்புகளை இணைத்து நாடகத்தை நிகழ்த்தும் திறன்.
- ஒருநுட்பத்தின் தன்மையைப் புரிந்து கொண்டால் சுயமாக ஒரு எழுத்து நடையைக் கையாள இயலும்.
- திரைக்கதை எழுதும் திறன்.

## குறிப்பு

நடிப்பைப் பொதுவாக நாட்டிய வழக்கு, உலக வழக்கு என இரண்டாக வகைப் படுத்தலாம். சாதாரணமான உயிரூட்டும் செயல்பாடுகளைச் செய்வதற்கு ஒலி, அசைவு, பாவம், வேஷம், ஆகியவற்றைப் பயன்படுத்துவது உலக வழக்கா கும். உயிரோட்டமுள்ள(Realistic) நாடகங்களில் நடிகர்கள் உலக வழக் கைப் பின்பற்றுகின்றனர். நாட்டிய வழக்கு உலகவழக்கிலிருந்து உருவான தாகும். சாதாரண ஒலி, அசைவு பாவங்களை ஒழுங்குபடுத்தி ஒருவகையில் ஓரங்கசம்கிருதா ஒலிஒழுங்கு, பாவநடை ஆகியவற்றைத் திட்டப்படுத்துகி றது. மொழிக்கு இணையான இலக்கண முறைகளும் உலகளாவ படித்தால் மட்டும் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றாகும் நாட்டிய வழக்கு.

நடிப்பிற்கு ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு முறைகள் வளர்ந்து வந்துள் ளன. அடிப்படைத் தன்மைகளில் உள்ள இணையான மேற்கத்திய கிழக்கத் திய என்ற பெரிய பிரிவிற்கு நேராகக் கொண்டு செல்கிறது.

பாவ உருவாக்கம் வழியாக இரசிகரில் இரசிப்புத் தன்மையை உருவாக்குதல் என்ற நோக்கயே கிழக்கத்திய நாட்டிய அறிவியலின் அடிப்படை. நாட்டிய வழக்கின் அடிப் படையிலான நடிப்புமுறையில் கிழக்கத்தியர்கள் நாடகநிகழ்த்துதலில் ஈடுபடுகின்ற னர். முறையாகப் படித்து, பிம்பங்களைப் பயன்படுத்தி நடிகர்கள் நடிப்பார்கள்.

ஆனால் மேற்கத்திய முறையில் உலகவழக்கிற்கு முக்கியத்துவம் உள்ளது. பொது இடங்கள், ஏராளம் மக்கள்நெருக்கடி நிறைந்த வியாபார இடங்கள் ஆகியன நிகழ்த்த வேண்டி வருவதால் மேற்கத்திய முறைக்குப் பொருத்தமானது உலக வழக்காகும்.

அரசியல் உத்தியின் அகத்தளங்கள், போர் போன்ற ஏராளமான மக்கள் கூடு கின்ற காட்சிகளை மேற்கத்தியர்கள் நேரடியாகக் காட்சிப்படுத்தும் போது கிழக் கத்தியர்கள் அவற்றை குறிப்புகளில் வைத்து நிகழ்த்திகின்றனர். கதைகூறுவதில் மேற்கத்தியர்கள் முக்கியமாக கோரசினைப் பயன்படுத்துகின்றனர். கூறுவதுடன்

முக்கிய காட்சிகளை நேரடியாக நடிக்கவும் செய்கின்றனர். மேற்கத்தியர்கள் காட்சிகளின் இடை வேளைகளில் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துவதற்காக வித்தைக் காரர்களை அல்லது விகடம் செய்பவர்கள அரங்கில் கொண்டு வருவது வழக்கம். கேரளத்தின் இசை நாடக இயக்கம்- அறிமுகம் செய்ய வேண்டும். ஏ. கே. நம்பியார்.

## செயல்பாடு

- குழந்தைகளை நான்கு குழுக்களாகப் பிரித்தல். புகழ்பெற்ற ஒவ்வொரு மேற்கத்திய ,கிழக்கத்திய நாடகங்களின் இரு நாடகப் பகுதிகள் வீசம் இந்த செயல்பாட்டின் முன்னேற்பாடாக ஆசிரியர் ஒழுங்குபடுத்த வேண்டும். மேற்கத்திய நாடகம் கிடைத்த ஒரு குழுவிடம் அதைக் கிழக்கத்திய முறையிலும். கிழக்கத்திய நாடகம் கிடைத்த குழுவிடம் அதை மேற்கத்திய முறையிலும் நிகழ்த்தும்படிக் கூறவும். மீதி இரு குழுக்களுடன் அவர்கள் கற்பனைத் திறனுக்கேற்ப மேற்கத்திய அல்லது கிழக்கத்திய அல்லது இரண்டும் கலந்த முறையில் நிகழ்த்தும் படி கூறுதல். நிகழ்த்துதலுக்குப் பின் அரங்க மொழியின் நடை மாற்றங்களைக் குறித்து விவாதித்தல்.
- ஒவ்வொரு குழுவும் நாடகநிகழ்த்துதலில் வந்தடைந்த படிநிலைகளை விளக்குதல். இந்தச் செயல்பாடுகளில் நேரடியான அறைகூவல்கள், கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். மேற்கத்திய கிழக்கத்திய நடிப்புமுறைகள் குழந்தைகள் உட்கொண்டார்களா என்பதை ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும். சிறந்த இயக்கம், நடிப்பு. சிறந்த அரங்க நிகழ்த்துதல் ஆகியவற்றையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

### பிற்சேர்க்கை- நாடகப் பகுதிகள்

பாஸன் எழுதிய 'மத்யமவ்யாயோகம்' என்ற நாடகத்தின் ஒரு பகுதி

(மூன்று புத்திரர்களுடனும் பத்தினியுயனும் கேசவதாசன் வருகிறார். பின்னால் கடோற்கசனும்))

விருத்தன்: போ! ஆராணிவர்?

வாரஞ்சும் தருணார்க்கரஸ்மிகர-
வியாகீர்ணம்மாம் கேசவும்
பாரம் பூகுடியால் திளங்ஙிய விசா-
லாபிங்கமாம் கண்ணுமாய்
ஸ்ஃபாராஞீ களசூத்ரமார்னு ருசிரத்
துமின்ன லோடொத்தெழும்
நீ ஏந்தம் புதரம் கணக்கொடு பூமான்
கல்பாந்தருத்ரோபமன்

ஒன்னாமவன்: போ! அச்சா, ஆரானிவன்!
கிரகயுகநிபம் நேத்ரம்

பீனம் விசாலமுரக்ஸ்தலம்
கனககபிசம் கேசம்
மஞ்ஞுச்சதாமூடு பட்டுமாய்
இருளெதிர்நிறம் பூண்டோ
னுத்யுத்தபாணடரதம்ஸ்ட்ரனிந்
னொரு பனிதிகீருள்
சேருன்ன கார்முகில் போலவே

இரண்டாமவன்: ஆராணிவன்?
களபரதஸனதம்ஷ்ட்ர நப்வர்ணன்
கரிகரபாகு கலப்பமுக்கனுக்கரன்
ஹதஹுதவவஹதீப்த நங்வலிப்பூ
திரிபுரஹரோலக்கட்ரோஷமென்ன போலே!

மூனாமன்: அச்ச, நம்மெ பீடிப்பிக்குன்ன இவனாரானு?
பச்சிக்கொட்டுக்கு புரு-
இந்த, த்ரிப்ரவராக்கி வஜ்ரசம்பாதம்
மிருகஜாதிக்கு மிருகேந்திரன்
புருஷாக்குதி பூண்ட ம்ருத்யுவிவன்

பிராமணி: ஆர்ய, நம்மெ சந்தபிக்குன்ன இவனாரானு?

கடோல்கசன்: ஹே பிராமண, நில்க்கூ, நில்க்கூ
ஸம்தஸ்த்ரதாரசுதரட்சணசக்தியில்லாஞ்
ஞென்னெபயன்னு த்ருதிவிட்டயி போகயானோ-
தார்ட்ச்யாக்ரபட்ச பவனோத்ததரோஹவக்னி-
யேற்றார்த்தனாயிணயோடொத்தொரு பாம்புபோலே
ஹே, பிராமன, போகான் பாடில்ல போகான் பாடில்ல

விருத்தன்: பிராமணி பேடிக்கேண்ட, கிடாங்ஙளெ
பேடிக்கேண்ட விவேகத்தோடு கூடியானு
இவன்றெ வாக்கு

கடோல்கசன்: ஹா, கஷ்டம்!
ஸதவிப்ரரீயுழியிலெங்ஙுமென்னும்
ஸம்புஜ்யரானென்னறிவுண்டு; பட்சே
சேராத்தொரிகார்யவுமஸ்தசங்கம்
செய்யேனமென்னாய் மம மாத்யலாக்கால்

விருத்தன்: பிராமணி, ஓர்க்குன்னில்லே, த்தரபவான்
ஜலக்சின்னமுனி பறஞ்ஞுது, ராட்சஸரில்லலாத்ததல்ல
ஈ காடு, சூட்சிச்சு நடக்கணம் என்னு ஆ பயம் தண்ணெயானு
எதிரிட்டது.

பிராமணன் : எந்தாணிப்போல் ஆர்யன் ஒரு சத்திரியனெப்போல காணப்பெடுண்டது?

விருத்தன்: மத்தயபாக்யனாய ஞான் எந்து செய்யவேண்டு?

பிராமணி : நமக்கு நிலவிளிக்காம்

ஒன்னாமன் : அம்மே, ஆரெ உத்தேசிச்சானு நிலவிளிக்குக?

இருள்நிறமொரு திக்பதம் மறய்க்கும்
தருநிர திங்ஙியஞ்னு சூன்யமல்லோ
புருகக்டுகஸம்ககீர்ணமாமீ-
யொருவன மிங்ஙதி தீரரே வசிக்கூ!

விருத்தன் : பிராமணி பேடிக்கேண்ட, பேடிக்கேண்ட; 'அதிதீரரே வசிக்கூ' என்று கேட்டதினால் எனிக்குபயம் நீங்ஙியமட்டாயி. இவிடெ ஏறெ தூரத்தாயிரிக் கில்ல பாண்டவாச்ரமம் பாண்டவன்மாராகட்டெ

ஸமரகுதுமார்னோர் தீனரில் குரியுன்னோர்
ஸிரிதலில் மமதபூண்டோர் சாகஸம் செய்துபோன்னோர்
இதுவித மெமெழுமுக்ராகாரதுஞ்சேஷ்டிதன்மார்க்-
குதயமுசிததண்டம் நல்குவான் த்ராணியுள்ளோர்.

ஏஹிம்ஹஸி : அசு, அட்ய்ள்ந னம்ரஸ்மட்க்ஷிம்பீ இள்ரீஹில் ற்லம்ஹில் ஹில்.

ஒன்னாமன் : அச்ச. அவிடெ பாண்டவன்மார் இல்லென்னு தோனுன்னு?

விருத்தன் : உண்ணி நீங்ஙென அறிஞ்னு?

ஒன்னாமன் : அச்சா, எல்லாவரும் போயிட்டில்ல. ஆச்சரம ஏட்சய்க்கு மத்யமனெ நிர்த்தியிட்டுண்டத்ரெ.

விருத்தன் : ஹா! நாம் நிராசராயி! ஆவட்டெ உண்ணி, இவனோடு அபேட்சிச்சு.

ஒன்னாமன் : வேண்ட, அதுகொண்டு கார்யமில்ல

விருத்தன்: உண்ணி நிர்வேதவிரோதியாணல்லோ ப்ரார்த்தன ஆவட்டெ, நமக்கு நோக்காம், வேறெ புருஷ ஞங்ஙள்க்கு மோசனமுண்டோ?

கடோல்கசன் : மோசனமுண்டு. நிச்சயம் செய்தால்.

விருத்தன் : எந்து நிச்சயம்?

கடோல்கசன் : எனிக்கு மான்யாய ஒரம்மயுண்டு. அவர் என்னோடு ஆக்ஞா பிச்சிரிக்குன்னு. எனிக்கு நோம்பருதியில் பாரணய்க்கு ஒரு மனுஷ்யனெ ஈ காட்டிலெங்கானும் அன்வேஷிச்சு கொண்டு வரணும் என்னு அதினு அங் ஙயெ எனிக்கு கிட்டி..

ஸதியாம் பத்தினியுமாயிரு-

சூதரொடுமங்ஙய்க்கு விடுதி நேரிடாம்;
குருலாகலம் நினச்சி–
ட்டொரு சூதனெயெனிக்கு விட்டுதன்னேக்கூட

பிற்சேர்க்கை 2

யூரிடிப்பிஸின் ஹெக்குப என்ற நாடகத்தின் ஒரு பகுதி

**காட்சி:**

திரேஸ்யன் செர்ஸணீஸ் கரை. விசாலமான கூடாரங்கள் பின்புலத்தில் டிரோஜன் மகளிரின் இல்லங்கள், நேரம் உதயத்திற்கு முன் மேலிருந்து போளிடோரஸின் ஆன்மா உள்ளே வருகிறது..

போளிடோரஸ் :

டிரோயின் அரசனான பிராயாமினுடையவும் ஹெக்குபினுடையவும் மகனும் எஞ்சியுள்ள வாரிசான நான் போளிடோரஸின் ஆன்மா இறந்தவரின் குழியிலிருந்து தெய்வங்கள் போகுமிடத்திற்கு வந்திருக்கிறது.

கிரேக்கர்களின் ஒன்றிணைந்த சக்தியின் முன்னால் டிரோய் பணிந்து விடும் என்று அஞ்சிய என் தந்தை என்னை ஆபத்திலிருந்து காத்து இரகசியமாக இங்கே வந்து சேர்ந்தார். இந்தத் திரேஸில் குதிரைக்காரர்களை வலிமையால் அடக்கி வாழ்கின்ற வளம்மிக்க சமதளப் பிரதேசமான சேர்ஸனீஸின் அரசர் போளிமெஸ்டரின் அருகில் என்றாவது டிரோய் அழிந்து விட்டால் எஞ்சியுள்ள தன் புத்திரர்களின் பாதுகாப்பிற்காக என்தந்தை என்னுடன் ஒரளவில் தங்கமும் அனுப்பினார். ஆயுதம் தாங்கவோ வேல் ஏறியவோ இயலாத கறுத்த குள்ள மூத்த மகனான நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். டிரோயின் கோட்டைக்கு கேடுவராமல் பெருமையுடன் நிற்க முடிந்த வரை, என் சகோதரன் ஹெக்டர் போரில் திறமை காட்டி நிற்கும் வரை என் தந்தையின் நண்பரின் நுட்பமான பார்வையின் முன்னால் செழித்து வளர்ந்த ஒரு பச்சைக் கொடி போலே நான் வளர்ந்து வந்தேன். ஆனால் டிரோய் வீழ்ந்ததும், ஹெக்டர் கொல்லப்பட்டதும் எங்கள் உணவிடங்கள் மண்வெட்டியாலும் வேலாலும் அழிக்கப்பட்டதும் அப்போலோ தேவன் சொந்தம் கைகளால் கட்டிய பலிமேடையில் அகிலஸின் மகன் கைகளால் என் தந்தை பிராயம் இறந்து வீழ்ந்ததும் அவர் நண்பர் தன் முகமூடியைக் கழற்றி விட்டுள்ளார். பேராசையால் ஊக்குவிக்கப்பட்டு அவர் என்னைக் கொன்று உடலைக் கடலில் வீசினார். இங்கே விதும்பாமல் சரியாக அடக்கம் செய்யப்படாமல் அலைகளிலும், நுரைகளிலும் மூழ்கி, அங்கேயும் இங்கேயும் என என் இறந்த உடல் கிடக்கிறது.

இப்போது உடல் முத்திபெற்று துன்புறுத்தல்களும் அச்சமும் கலந்த மூன்று கொடிய நாட்களை நான் செலவழித்து விட்டேன். சேர்ஸனீஸிலிருந்து டிரோய்க்கு வந்த அம்மாவின் தலைக்கு மேல் வட்டமிடும் உருவமற்றவனாக இங்கே இந்த திரேஸியன் கரையில். சொந்தமான கப்பல்களின் அரு

காமையில் மனம் வெறுத்திட உற்சாகமில்லாமல் கிரேக்கப் படை காத்துக் கிடக்கிறது.புறப்படுவதற்குத் தொடங்கிய கப்பல்களை கல்லறைக்கு மேல் தோன்றிய அகிலஸின் பிரேதம் தடை செய்து நிறுத்தியது. எனது சகோதர பொளிக்ஸினைப் பரிசாகத் தரவேண்டுமாம். இறந்தவன் கல்லறையை இனி மைப்படுத்த உயிர்வாழும் நபரின் இரத்தம் அவனுக்காக கிடைக்கும். பரி சாகப் பணிவுடன் அர்ப்பணிக்கும் பரிசுப் பொருளாக அவனின் தோழர் கள் அதனை அளிப்பார்கள், பாவம் அம்மா அவர்களின் எஞ்சிய இரு பிள்ளைகளின் இறப்பினை இன்று காணப்போகிறார். என் சகோதரி கொல் லப்படுவாள். என் அடக்கப்படாத உடல் ஒரு அடிமையின் காலின் கீழே அலைகளால் வந்து சேரும். தெய்வங்களிடம் வேண்டியது இது மட் டுமே-என் அம்மாவைக் காணவேண்டும்.

அவர் கைகளால் நிகழ வேண்டும் என் உடல் அடக்கம்.- என் வேண்டு கோள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருத்திறது. நான் இதோ போகிறேன்.

கனவில் என் ஆன்மாவைக் கண்டு நடுங்கி, அகமெமனின் கூடாரத்திலி ருந்து சோர்ந்து சோர்ந்து நடந்து வரும் அம்மாவை நான் இதோ கீழே பார்க்கிறேன்.

(கூடாரத்திலிருந்து ஹெக்குபே வருகிறான். வாசலின் அருகில் அவர் சோர்ந்து விழுகிறார். அருகில் நிற்கும் டிரோஜன் மகளின் நேராக கைகளை நீட்டுகிறார்)

-அம்மா,

பாவம் அரசே உயிர் வாழ்தல் தவிர ஆடம்பரமும் அலங்காரமும் அகவு ணர்வும் அனைத்தும் இழந்த முதியராணி. இனி இந்த வாழ்க்கை கொடுப் பது கசப்பும் அடிமைத் தனமும் தனிமையான முதுமையும்.

இந்த வாழக்கையில் ஒரு காலத்தில் சுகம் அனுபவித்ததற்கு துன்புறுத்தல் கள் பதிலாகத் தந்த ஏதோ ஒரு தெய்வம் அழிக்கிறது இப்போது.

ஹெக்கூப:

முதுமையின் ஆதரவின்மையே!

எழுவதற்கு இயலாத முதுமையும் பலவீனமும்-

டிரோஜின் மகளிரே எனக்கு உதவுங்கள்

டிரோயின் மகாராணியாக வீற்றிருந்த காலத்தில் எனக்கு நீங்கள் தந்த அதே

கைகளை எனக்கு நேராக நீட்டுங்கள்.

உங்கள் கைகளால் எனக்கு ஆதரவு தாருங்கள், இந்த உணர்வற்ற கால்க ளுக்கு நடப்பதற்கு சக்தி தாருங்கள்.

இரவில் ஒளிவிடும் ஸியூஸின் ஒளியான ஒளிவிடும் நட்சத்திரமே!

இதோ உயர்ந்தது எவரின் ஆன்மா,

இந்த இருளில் நிகழ்வது எத்தைகைய கொடுமை?

கனவு தேவதையே தேவி, பூமி

உன் கிருஷ்ணநிறச் சிறகுகள் வாலில் போலே

சுற்றுப்புறத்தை பயமுறுத்தும்!
எழுவதற்கு இயலாத முதுமையும் பலவீனமும்!
டிரோஜன் மகளிரே எனக்கு உதவுங்கள்,
என் குழந்தைகளின்-திரேஸின்
போளிடோராஸினுடையவும் என் மகள்
போளிக்ஸியினுடையவும் இறந்த ஆன்மாக்களை-
கொடும் காட்சியைச் திரும்பியெடுப்பாய்!
சொந்தம் பிதாவின் நண்பன் வளர்க்கும்,
திரேசின் பனியில் வாழும்,
என் குடும்பத்தின் உயிருடன் வாழும்
இறுதி நங்கூரமாம்
என் உண்ணியை, காப்பாய்.
இந்த நாட்டைக் காப்பாய், தெய்வங்களே,
என் மகனைக் காப்பாய்!
அச்சத்திற்கு மேல் அச்சம்
அவசரம், அதுவே என் கனவில்!
முன்னொரு போதும் இந்த இதயம்
இந்தளவு அச்சத்தால் நடுங்கியதில்லையே!
கனவு தேவதையே ஹெலனஸ்,
உன் உதவி எனக்கிப்போது வேண்டும்!
உதவுவாய் கஸான்ட்ரா,
என் கனவுகளின் பொருளறிய
எனக்கு உதவுவாய்!

என் கால்முட்டுகளின் இடையிலிருந்து ஒரு மான் குட்டியை ஒரு புள்ளி மான் குட்டியை, இரத்த நிறம் பூண்ட நிறங்கள் உள்ள ஒரு செந்நாய் கருணையின்றி பிரித்தெடுத்து கொண்டுபோய் இழுத்தறுத்து அழித்து விட்டதே!

தொடர்ந்து மீண்டும் உயர்ந்தது மற்றொரு கொடூரம்:
டிரோயில் உள்ள அதிர்ஷ்டமற்ற
மகளிரிலிருந்து ஒருவரை பரிசாக
வேண்டுமெனக் கேட்டு கூக்குரலிட்டு
அகிலஸின் பேய் அவரின்
கல்லறையின் மேல் நடப்பது நான் கண்டு
தெய்வங்களே, என் வேண்டுகோளே
இந்தக் கனவைத் திருப்பி எடுப்பாய்
என் குழந்தைகளைக் காப்பாய்!

(அடிமைகளாக டிரோஜியாவின் மகளிர்கூட்டம் வருகிறது. அவர்கள் தனித் தனியாக நின்று பேசுகின்றனர்)

கூட்டத்தினர்:

–ஹைகூப நாங்கள்
விரைவாக வந்திருக்கிறோம்
–விதி எங்களைக் கொண்டுசேர்த்த
–கூடாரங்கள் விட்டு நாங்கள் வந்திருக்கிறோம்.
–ஜெயித்து வந்த கிரேக்கர்கள்
எரித்து அழித்த டிரோயியாவின்
வீடுகளிலிருந்து பறித்தெடுத்த அடிமைகள்!
–உனக்கு நாங்கள் அவலச் செய்தி கொண்டு வருகிறோம்.
–உன் சுமை இறக்க எங்களால் ஆகாது
–சுமப்பதற்குக் கடினமானதை நாங்கள்
மீண்டும் கொண்டு வருகிறோம்
–இதோ நிறைந்த சபையில்
கிரேக்கர்களின் விதி கேட்டுவிட்டோம்.
–தங்களின் மகள் இறக்க வேண்டுமாம்.
–உயிருடன் கொல்ல வேண்டுமாம்
–அகிலனின் கல்லறை மேல்!
–பாய்கள் விரித்து கப்பல்கள்
பயணத்திற்குத் தயாராய போது
மின்னும் படையாடை அணிந்த அகிலஸ்
கல்லறையிலிருந்து எழுந்து அவற்றைப்
பிடித்து நிறுத்தினார் அலறினாராம்
'ஹோ, படைக் கப்பல்களே, என் கல்லறையில்
வெகுமதி அர்ப்பணிக்காமல் நீங்கள்
எங்கே பயணம்?'
–கிரேக்கர்கள் ஒன்றாக
விவாதம் தொடங்கினர்
பலிவேண்டும் ஒருவரெனில்
கூடாதென்று ஒருவன்.
–தங்களுக்காக உங்கள்
மகளைக் கஸான்ட்ராவின்
அகமெம்னன் வாதிட்டபின்
–தொடர்ந்து ஏதன்சின் தெஸ்யூஸின்
இரு புத்திரர்கள் எழுந்து நின்று பேசினர்.

அகலஸின் கல்லறையில்
சூடுரத்தம் விடவேண்டுமென்பதே
அவர்களின் கருத்து
அகலஸின் வீரத்தைவிடப் பெரிதோ
கஸான்ட்ராயின் காதல் என்று
அவர் கேட்டனர்.
அவ்வாறு சமபலத்துடன்
விவாதம் தொடர்ந்தது–
–இறுதியாக அவனுகுக்குரிய வாய்ப்பு
சொற்களில் தேன்நிறைத்து மக்களை
அசைக்கும் கொடும்வஞ்சகன் ஓடீசியஸ்.
அவன் வென்றான்.
அகிலஸின் சுயமதிப்பின் முன்னால்
ஓர் அடிமையின் உயிருக்கு என்ன விலை
என்பதே கேள்வி
–கிரேக்கத்திற்காக டிரோயி மண்ணில் இறந்து வீழ்ந்த
கிரேக்கர்களோடும் கிரேக்கர் நன்று
காட்டினர் எனக்கதைகள் இறந்து வீழ்ந்தவர்
இறந்தோர் உலகுக்குச் சென்றனர் சொல்லக்கூடாது
என அவன் விவாதித்தான்
–அவன் இதோ வருகிறான்
உங்களின் மார்பிலிருந்து செல்ல மகளைப்
பிடித்து மாற்றி கொண்டு போ
–ஆலயங்களுக்குச் செல்வீர்!
–தேவாலயங்களுக்குச் செல்வீர்!
–அகமெம்னன் கால்களில் விழுவீர்!
–சொர்க்கத்தில் தெவங்களிடம் இறைஞ்சுவீர்!
–பிரேத உலகங்களின் தேவர்களை!
அவள் மரணத்தை விலக்க உங்களின்
பிரார்தனைகளால் முடியாமல் வந்தால்
அவளுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த
அர்த்தனகளால் முடியாமல் வந்தால்
பூமியில் முகம் கவிழ்த்துக் கிடக்கும்
குழந்தையை
அவளின் குரலில் உடைந்த மின்னும்
பொன் மாலையிலிருந்து வீழும்
இரத்தத் துள்ளிகள் கறுத்த மண்ணில்
கறை புரட்டுவதை காணவேண்டி வரும்.

# அலகு- 2 திரைப்படம்

திரைப்படத்திலும் நாடகத்திலும் உள்ள நடிப்புமுறைகளை அறிமுகப்படுத்துதல். திரைப்பட உருவாக்கத்தின் பயன்பாட்டு தளங்களைப் புரிந்துகொள்ளுதல் ஆகிய இலக்குகளை அடைவதற்கு உதவக்கூடிய செயல்பாடாகும்.

## கற்றல் அடைவு

- அரங்கிலும் புகைப்படக் கருவியின் முன்னிலும் நடிப்பதற்கான அறிவுகளைப் பெறுதல்.
- பிற கலைவடிவங்களின் வாய்ப்புகளை நாடகம் , திரைப்படம் ஆகியவை உரு வாக்குவதில் பயன்படுத்துதல்.
- சுதந்திரமான எழுத்து நடையை வளரச்செய்வதில் உட்கொண்ட அறிவுகள் நாட கம், திரைக்கதை ஆகியவை எழுதும் போது பயன்படுத்துதல்.
- நாடகம் திரைப்படம் ஆகியவற்றைப் பார்த்து இரசித்து விமர்சனத்துடன் கூடிய விவாதங்கள் செய்தல்.
- நாடகத்தில் சமூக முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.

## கருத்து அறிவு

- நாடகம் தொடக்கம் முதல் முடிவு வரையுள்ள நேரம் வரை தொடர்ச்சியான நடிப் புக் கலையாகும்.
- தேர்வு செய்யப்பட்ட சூழல்களில் பழகுவதே திரைப்படத்தில் நடிகர் செய்வது.
- எடிட்டிங் நேரத்தில்-------- திரைப்படம் உருவாகிறது.
- அரங்கிலும், புகைப்படக் கருவியின் முன்னிலும் நடிப்பை வேறுபடுத்தி அறியக் கூடிய திறன்
- நாடகம், திரைப்படம் ஆகியவற்றின் நிகழ்த்துதலை எல்லா கலைவடிவங்களும் உதவ இயலும்.
- கலைகளைக் குறித்த பொதுவானம் சிறப்பானதுமான அறிவுகள் நாடகம் திரைப்ப டம் ஆகியவை ஒழுங்குபடுத்துவதற்கு சிறந்தமுறையில் பயன்படுகிறது.
- கலைகளை நாடகம், திரைப்படம் ஆகியவற்றில் இணைக்கும் திறன்.
- நாடகம் , திரைப்படம் ஆகியவை இரசிப்புத் தன்மையுடையது.
- எல்லா படைப்பாற்றல் சார்ந்த படைப்புகளும் இரசிகர்களின் மதிப்பீடு வழியாக முழுமையடைகிறது.
- இரசிப்புத்திறன்
- விமர்சனம் எழுதும் திறன்.

### நடிப்பு - நாடகத்திலும் திரைப்படத்திலும்

ஆங்கிகம், வாசிகம், சுவாதிகம், ஆகாரியம் போன்ற நால்வகை நடிப்புக ளையே அரங்கில் நிகழ்த்தும் நடிகரும் வெள்ளித் திரையில் அசையும் நடிகரும் செய்கிறார்கள் என்றாலும் வெவ்வேறு அனுபவங்கள் வழியாக இருவரும் கடந்துசெல்கின்றனர். அரங்கில் நிகழ்த்துவதுடன் நாடகம் முழு மையடைகிறது. நாடக நடிகர் பார்வையாளர்கள் முன்னே மாறிமாறி வரும் சூழல்களுக்கேற்ப மின்னி மறையும் பாவ வெளியீடுகள் வழியாக கதா பாத்திரங்களை அழகாக நிகழ்த்த வேண்டும். ஒரு காலத்தில்(Time) ஒரு (Space) இடத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட அரங்கில் அதினுடைய எல்லைகளின் உள்ளே நடித்தல் என்பது நாடக நடிகரின் முக்கியமான ஒரு கடமையாகும். ஆனால் திரைப்படம் பல இடங்களில் வைத்து (Location) காட்சிப்படுத்தக்கூடிய பல காலங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச் சிகளின் பல்வேறு பாவங்களை நடிகர் நடிக்கிறார். திரைப்படத்தில் நடிகர் ஈடுபடும் நடிப்பிற்கு அல்ல நிகழ்ச்சிகளுக்கு தொடர்ச்சி இருப்பதில்லை. படஇணைப்பு கட்டத்தில் மட்டுமே திரைப்படத்தின் தொடர்ச்சியும் வளர்ச் சியும் உருவாகிறது.

அரங்கிலுள்ள எல்லா மக்களுக்கும் புரிந்துகொள்ளும் வகையில் பாவத் தெளிவுடன் உள்ள நடிப்பை நாடகத்திலிருந்து எதிர்பார்க்கும் போது திரைப் பட நடிகருக்குச் சூழலுக்கேற்ப பழகினால் போதும். பார்வை யாளர்களிடமிருந்து நடிகர்களுக்கான தூரத்தை புகைப்படக் கருவி நிச்சயிக் கிறது. பார்வையாளரும் நாடகநடிகர்களுக்கும் இடையிலான தூரம் நிலையானது

நாடக நடிகர் கதையினுடையவும், கதாபாத்திரத்தினுடையவும் பரிணா மங்களை ஒவ்வொரு நிமிடம் அறியவும் தானாக மாறிக்கொண்டேயிருக் கவும் செய்வார். கதை அல்லது கதாபாத்திரத்தை அறியாமலேயே நடிக ருக்குத் திரைப்படத்தில் நடிக்க இயலும். இயக்குநரின் அறிவுரைகளைக் கடைபிடித்தால் மட்டும் போதும்

## செயல்பாடு

- நடிப்பு திரைப்படத்திலும் நாடகத்திலும் என்ற குறிப்பை விவாதித்தல், பாடப்பகு தியிலோ வெளியிலோ உள்ள ஒரு பகுதி/ கருத்து நிகழ்த்துதலுக்காக தேர்வு செய் யலாம்

  -ஒரு குழு அதை நாடகமாக்கி நிகழ்த்தத் தயாராதல்.

  -வேறொரு குழு திரைப்படமாக மாற்றி நிகழ்த்துதலுக்குத் தயாராதல்.

  -குறிப்பிட்ட காலஅளவிற்குப் பின்பு இருகுழுக்களுக்கிடையே நிகழ்த்துதலும் மதிப்பீடும் நடைபெறுகிறது.

-முதல் குறிப்பை மீண்டும் விவாதித்தல்

நடிப்பு

படைப்பாற்றல்

நடிகர்

இயக்குநர்

தொழில்நுட்பம்

நாடகம்/ திரைப்பட நிகழ்த்துதலின் நிகழ்வறிக்கையை டிஜிட்டலாகத் தயாரித்தல். இதற்காகப் புகைப்படங்கள் பயன்படுத்தலாம்.

*செயல்பாடு 2*

*திரைப்பட பணிமனை*

சிறிய படங்களை உருவாக்குவதற்கான நடைமுறைப் பயிற்சியை இந்தச் செயல்பாடு இலக்காகக் கொண்டுள்ளது. ஒரு கருத்தை காட்சி வடிவில் வெளியிடும்போது அது திரைப் படமாக மாறுகிறது. ஏராளமான தொழில்நுட்ப நிலைகளை கடந்து ஒரு திரைப்படம் பார் வையாளர்கள் முன் வந்தடைகிறது. ஏதேனும் ஒரு நிகழ்ச்சியின் காட்சிப்படுத்துதல் திரைப் படமாவதில்லை. ஒழுங்காக ஒரு கருத்து உணரச் செய்யும் வகையில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ள காட்சிகளின் தொடர்ச்சியே திரைப்படம். ஒலியும் இசையும் சரியாக இணை யும் போது திரைப்படம் முழுமையடைகிறது. ஒரு கருத்து திரைப்படத்திற்கு இணங்கும் வகையில் காட்சிகளாக மாற்றி அதைக் காட்சிப்படுத்தி ஒழுங்காக எடிட் செய்து ஒலி இணைப்புச் செய்யும் செயல்கள் வழியாகக் குழந்தை கடந்து செல்லும் வகையில் இந்தச் செயல்பாட்டை ஒழுங்கு செய்தல். திரைப்படப் பணிமனைக்குத் தேவையான முன்னேற் பாடுகளுடன் ஒரு நாள் நீண்டு நிற்கின்ற செய்ல்பாடாகச் செய்வது நல்லது. 45 நிமிட நேரமுள்ள சிறிய கதைப்படங்கள் தயாரிப்பது நல்லது.

படிநிலை 1 திரைக்கதை எழுத்து

ஏற்றுக்கொண்ட கருத்தைக் குழுவில் விவாதித்தல், கருத்தை நிகழ்சிகளாக மாற்றி வரிசையாக எழுதுதல். ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் காட்சிகளாக எழுதுதல். ஒவ்வொரு காட்சிக்கும் தேவையான கதாபாத்திரங்கள்,உரையாடல்கள் பிற எபக்டுகள் ஆகியன எழுதிச் சேர்த்தல்.

*திரைக்கதை எழுத்து*

கருத்தைக் காட்சிகளாக மாற்றக்கூடிய செயல்பாடே திரைக்கதை எழுத்து. திரைப்படத்தி லுள்ள காட்சிகளும் ஒலிகளும் இணையாகக் குறிப்பிட்டு திரைக்கதை உருவாக்கலாம். பாடப்பகுதியிலுள்ள கதைகள், திரைக்கதை தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளலாம். திரைக் கதை எழுதுவதன் முன்னேற்பாடாக புகழ்பெற்ற சில திரைக்கதைகளை வகுப்பில் வாசித்து விவாதம் செய்யலாம். இலக்கிய நூலிலிருந்து மாறுபட்ட வெளிப்படையான காட்சிகள் விளக்கத்தை எளிமைப்படுத்துகிறது. கதாபாத்திரங்களின் மனப்பான்மைகளும், பிரதிபலிப்புகளும் வெவ்வேறு செயல்பாடுகள் வழியாகக் காட்சிப்படுத்த வேண்டும்.

திரைக்கதை தொடர்பான பொதுவான விவாதங்களுக்குப் பின் குழந்தைகள் இரு குழுக் களாக ஏதேனும் சிறுநோக்கத்திற்காக திரைக்கதை உருவாக்கட்டும். தலைப்பை தேர்வு செய்வதில் ஆசிரியரின் சரியான ஈடுபாடு தேவை. உருவாக்கிய திரைக்கதைகளைப்

பொதுவாக வெளியிடவும். காட்சிப்படுத்தும் போது ஏற்படும் தொழில்நுட்ப பிரச்சனைகளையும், கருத்து தெளிவுடன் தொடர்புடைய விஷயங்களையும் சுட்டிக்காட்டி சீரமைக்கவும் வேண்டும். பள்ளிக்கூடத்தின் உள்ளேயும் வெளியேயும் கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்திக் காட்சிப்படுத்துகின்ற முறையில் உருவாக்கினால் காட்சிப்படுத்துதல் எளிதாக இருக்கும். செயலின் தொடர்ச்சியைக் குறிப்பிடும் ஏதேனும் காட்சிகளிலிருந்து செயலை முழுமையாக புரிந்துகொள்வதற்கான இரசிகரின் திறன் காட்சிகளை உருவாக்கும் போது கருத்திற் கொள்ளவேண்டும். ஒரு குழந்தை வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு வந்தடைவதை சுட்டிக்காட்டுவதற்கு முழுமையான காட்சிகள் தேவையில்லை. மாறாகத் தயாராவதும், இறங்குவதும் பள்ளியை வந்தடைவதுமான காட்சிகள் மட்டும் போதும்.

எழுதியும் விவாதங்களுக்குப் பின் சீரமைத்து மாற்றி எழுதியும் திரைக்கதை வடிவத்தை முழுமையடையச் செய்ய வேண்டும். தயாரித்த திரைக்கதை அடிப்படையிலான காட்சிப்படுத்துததலே அடுத்த நிலை

*திரைப்படம் காட்சிப்படுத்துதல்*

திரைப்படம் காட்சிப்படுத்துவதற்கு அனுபவம் மிக்க ஒரு புகைப்படக் கலைஞரின் உதவியை நாடலாம். அவரின் உதவியுடன் முன்னரே தயாரித்த காட்சிகளை ஒழுங்குபடுத்தவும், பயன்பாட்டுத்தன்மையின் அடிப்படையில் சீரமைக்கவும் செய்யலாம். தேவையான முன்னேற்பாடுகளுக்குப் பின்பு காட்சிப்படுத்தலை தொடங்கலாம். பல்வேறு வகையிலான புகைப்படக்கருவிகள் காட்சிப்படுத்தலின் தொழில்நுட்ப நிலைகள், புகைப்படக் கருவியின் பயன்பாடு, பல்வேறு வகை ஷாட்டுகள் ஷாட்டுகளின் பொருளும் சிறப்பும் போன்றவற்றை அனுபவம்மிக்க திரைப்படத் தொண்டர்களின் முன்னிலையில் நேரடியாகப் புரிந்துகொள்ளலாம். காட்சிப்படுத்துதலின் போது முன்னரே தயாரித்த திரைக்கதையின் குறைகளைக் குறித்து குழந்தைகள் உணர்வடையவும் செய்வார்கள்.

**படிநிலை- 2 கதைப்பலகை**

ஓர் இடத்தில் பல காலங்களாக நடைபெறும் காட்சிகளை வேறுபடுத்துதல். ஒவ்வொரு காட்சிக்கும் விளக்கங்களை உட்படுத்தி கதைப்பலகை தயாரித்தல்.

**படிநிலை 3 காட்சிப்படுத்துதல்**

கதைப்பலகைக்கு ஏற்ப காட்சிப்படுத்த வேண்டிய இடங்களைத் கண்டுபிடித்தல். ஒவ்வொரு இடத்திலுள்ள காட்சிகளை முழுவதும் காட்சிப்படுத்துதல்.

*படஇணைப்பு*

படஇணைப்பு அல்லது எடிட்டிங் என்பது திரைப்படத்தை பொறுத்த வரையில் மிக முக்கியமாகும். அனுபவம் வாய்ந்த ஒரு பட இணைப்பாளரின் சேவையை இந்த நிலையில் பயன்படுத்தலாம். அவருடைய அறிவுரையின்படி காட்சிப்படுத்தப்பட்ட காட்சிகளை மீண்டும் ஒழுங்கு செய்து பார்வையாளரின் பக்கத்திலிருந்து ஷாட்டுகளின் கால அளவைத் தேவைக்கேற்பச் செய்யலாம். கதையின்/ நிகழ்ச்சியின் தொடர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் பல்வேறு காட்சிகளைத் துண்டாகவும், இணைத்தும் முன்னேறும் வகையில் படஇணைப்புச் செயல்முறை தொழில்நுட்ப மேன்மை தேவைப்படும் ஒரு கலையாகும். குழந்தைகள் காட்சிப்படுததிய காட்சிகளிலிருந்து அவர்களின் கருத்திற்கேற்ப காட்சிகளைச் சேர்க்கவும் தவிர்க்கவும செய்யலாம். காட்சிப்படுத்திய எல்லா காட்சிகளும் திரைப்படத்

திற்குத் தேவையில்லை என்பது இந்தக் கட்டத்தில் குழந்தைகளுக்கு புரிந்துகொள்ள லாம்.

படஇணைப்பு செய்வதற்கான பல்வேறு கணினி மென்தளங்களும் குழந்தைகள் அறிமுகப்படவேண்டும். இவற்றை நன்றாகச் செய்யவேண்டுமெனில் முறையான பயிற்சி தேவைப்பட்டாலும் இதோடு தொடர்புடைய பொதுவான உணர்வும் தொழில்நுட்ப நிலை களும் குழந்தைகளால் புரிந்து கொள்வதற்கு இந்தக் கட்டத்தில் இயலும். பள்ளிக்கூ டத்திலுள்ள கைபுகைபடக் கருவியில் காட்சிப்படுத்துகின்ற காட்சிகளை எடிட் செய் யக்கூடிய மென்தளங்களை குழந்தைகளுக்குப் பயன்படுத்தாலாம்.

***படிநிலை 4 எடிட்டிங்***

திரைக்கதைக்கேற்ப காட்சிகள் மீண்டும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இசை, எபக்டு கள் ஆகியன சேர்த்துப் பட இணைப்பை முழுமையாக்கலாம்.

*ஒலிஇணைப்பு ( டப்பிங்)*

படஇணைப்பிற்குப் பின்பு திரைப்படத்துக்கு தேவையான உரையாடல்கள் இணைக் கப்படுகிறது. நடித்த ஆட்களே ஒலியை கொடுக்க வேண்டும் என்பதில்லை. காட்சிக ளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட உரையாடல்கள் தேவையான ஒலி குரல் உள்ள குழந்தை களால் திரைப்படத்தில் இணைப்பதற்கு ஆடியோ எடிட்டிங் ஸ்டுடியோவின் உதவியை நாடலாம். தேவையான கருவிகளும் வெளியிலிருந்துள்ள பிற ஒலிகளும் தடைநிற் காத ஒரு அறை இருந்தால் பள்ளிக்கூடத்திலேயே டப்பிங் ஸ்டுடியோவை ஒழுங்கு செய்யலாம்.

பொருத்தாமான மேற்கத்திய இசையும் பிற சிறந்த ஒலிகளும் இந்தக் கட்டத்தில் திரைப் படத்தில் உட்படுத்தவேண்டும்.

*டைட்டில்ஸ் ( தலைப்பு)*

திரைப்படத்தின் டைட்டில்ஸ் தயாரிப்பது வேறொரு செயல்பாடாகும். திரைப்படத்தின் பெயர், இயக்கம், தயாரிப்பு, உதவி போன்ற திரைப்படத்துடன் இணைந்த அனைவரு டையவும் பெயர்களை திரைப்படத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் கொடுக்கலாம். பல் வேற கிராபிக்ஸ் மென்தளங்களின் உதவியுடன் இதைச் செய்யலாம். தமிழில் தயாரிக்கப் பட்ட திரைப்படம் பிறமொழியினருக்குப் பார்க்கும் வகையில் ஆங்கில அடிக்குறிப்பு கள் கொடுக்கலாம். இதுவும் இந்தக் கட்டத்தில் செய்யவேண்டியதாகும்.

*திரைப்படக் காட்சி*

பல்வேறு படிநிலைகளை கடந்து உருவாக்கப்பட்ட திரைப்படத்தை பள்ளிக்கூடத்தில் உள்ள குழந்தைகளுக்காகக் காட்டலாம். இரசிகரின் கருத்துகளும், அறிவுரைகளும், திரைப் படத்துடன் தொடர்புடைய தொடர் செயல்பாடுகளுக்கு சிறந்ததாக அமையும். திரைப் பட உருவாக்கத்தில் பல்வேறு படிநிலைகளில் செயல்பட்ட குழந்தைகளுக்கு அவரு டைய அனுபவங்களை பங்கிடவும் செய்யலாம்.

# பிற்சேர்க்கை-1 : செயல்பாட்டு நாட்காட்டி

## ஓவியக்கலை- எட்டாம்நிலை

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | 1 | இயற்கையை நுட்பமாக உற்றுநோக்கி காட்சிப்படுத்துவதற்கான திறன் பெறுகின்றனர். | 2 |
| ஜூலை | 2 | இயற்கைப் பற்று அழகுப்பார்வை ஆகியவை உறுதியடைகிறது. | 2 |
| ஆகஸ்ட் | 3 | ஓவியம் வரைதலில் நிழலினுடையவும் ஒளியினுடையவும் முக்கியத்துவத்தை ஆழமாகப் புரிந்துகொள்கின்றனர். | 2 |
| செப்டம்பர் | 4 | கேரளக் கலை வரலாற்றைச் சுருக்கமாகப் புரிந்துகொள்கின்றனர். | 2 |
| அக்டோபர் | 5 | மனித உருவங்களின் காட்சிப்படுத்துதலை பாவ அசைவுகளுடன் வரைகின்றனர். | 2 |
| நவம்பர் | 6 | சமூக நன்மைகள் சமூகப் பிரச்சினைகள் அடிப்படையில் நடை சார்ந்த வரைதல் உத்தி சார்ந்த படங்கள் வரைகின்றனர். | 2 |
| டிசம்பர் | 7 | கணினி கிராஃபிக்ஸ், அனிமேஷன், எடிட்டிங் வாய்ப்புகளை அறிதல் | 2 |
| ஜனவரி | 8 | முப்பரிமாணக் கலை வடிவங்கள் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி உருவாக்குகின்றனர். | 2 |
| பிப்ரவரி | 9 | கற்பனை சார்ந்த சுதந்திர ஓவியம் வரைதல் வழியாகக் கருத்தை வெளியிடுகின்றனர். | 2 |
| மார்ச் | 10 | கலை படைப்புகளும் கலை சான்றுகளும் சேகரித்தல். | 2 |

# ஓவியக் கலை- ஒன்பதாம் நிலை

| *மாதம்* | *அலகு* | *கற்றல் அடைவுகள்* | *பிரிவேளை* |
|---|---|---|---|
| ஜூன் | 1 | கருத்துகள் உற்றுநோக்கி படைப்பாற்றல் சார்ந்த ஓவியங்கள் வரைகின்றனர். | 2 |
| ஜூலை | 2 | ஓவியத்தை உற்றுநோக்கி விமர்சனத்துடன் பிரதிபலிக்கின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 3 | ஓவியம் வரைதலில் நிழலினுடையவும் ஒளியினுடையவும் முக்கியத்துவத்தை ஆழமாகப் புரிந்துகொள்கின்றனர் | 2 |
| செப்டம்பர் | 4 | மனித உருவங்கள் உட்பட்ட ஓவியங்கள் வரைந்து வண்ணம் தீட்டுகின்றனர். | 2 |
| அக்டோபர் | 5 | ஓவியங்கள் உற்றுநோக்கி வரைவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள ஊடகங்களைப் பிரித்தறிகின்றனர் | 2 |
| நவம்பர் | 6 | ஓவிய சிற்பக் கலை வரலாற்றை நெருக்கமாக அறிந்து கொள்கின்றனர். பல்வேறு ஊடகங்கள் பயன்படுத்தி ஓவியம் வரைகின்றனர். | 2 |
| டிசம்பர் | 7 | நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தி ஓவியம் வரைகின்றனர். | 2 |
| ஜனவரி | 8 | புகைப்படக்கருவி, வீடியோ புகைப்படக் கருவி பயன்படுத்தி குறும்படங்கள் உருவாக்குகின்றனர். | 2 |
| பிப்ரவரி | 9 | சிந்தனையும். சிரிப்பும் தூண்டக்கூடிய கருத்துகளின் அடிப்படையிலான தற்கால முக்கியத்துவம் வாய்ந்த கேலிச்சித்திரங்கள் வரைகின்றனர். | 2 |
| மார்ச் | 10 | கலை படைப்புகளை இரசிக்கவும் பாதுகாக்கவும் செய்கின்றனர். | 2 |

# ஓவியக் கலை- பத்தாம் நிலை

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | 1 | படவாசிப்பு வழியாக விமர்சனத்துடனும் தன்னம்பிக்கையுடனும் பிரதிபலிக்கின்றனர். | 2 |
| ஜூலை | 2 | தன்னுடைய கருத்துகளும் நிலைகளும் தெளிவுபடுத்துகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 3 | கருத்தை உட்கொண்டு ஓவியங்களும் சிற்பங்களும் உருவாக்குகின்றனர். | 2 |
| செப்டம்பர் | 4 | ஓவிய சிற்பக்கலை வரலாறு அறிந்துகொள்கின்றனர். | 2 |
| அக்டோபர் | 5 | கலை, காலத்திற்கேற்ற மாற்றங்களுக்கு உட்பட்டது எனப் பிரித்தறிகின்றனர். | 2 |
| நவம்பர் | 6 | ஓவியக்கலையுடன் தொடர்புடைய மென்தளங்கள் பயன்படுத்தி வரைகின்றனர். | 2 |
| டிசம்பர் | 7 | சுதந்திர வரைதல் வழியாகச் சமூகத்துடன் எதிர்வினையாற்றுகின்றனர். | 2 |
| ஜனவரி | 8 | சிந்தனையைத் தூண்டுகின்ற கேலிச்சித்திரங்களும் காரிக்கேச்சரும் வரைகின்றனர். | 2 |
| பிப்ரவரி | 9 | போட்டோகிராபி, வீடியோகிராபி வாய்ப்புகளைப் பயன்படுத்தி குறும்படங்கள் உருவாக்குகின்றனர். | 2 |

# இசை- எட்டாம்நிலை

| மாதம் | அலகு | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | 1 | நடிப்பு  முக்கியத்துவம் வாய்ந்த பாடல்களைப் பாடுகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | நடிப்பு முக்கியத்துவம் வாய்ந்த பாடல்களைப் பாடுகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | வெவ்வேறு இசைப்பிரிவுகளின் வெவ்வேறு தாளங்களில் உள்ள பாடல்களை இணைத்து வெளியிடுகின்றனர் | 2 |
| செப்டம்பர் | 2 | வெவ்வேறு இசைப்பிரிவுகளின் வெவ்வேறு தாளங்களில் உள்ள பாடல்களை இணைத்து வெளியிடுகின்றனர் | 2 |
| அக்டோபர் | 3 | வட்டார இசைக்கருவிகளை அறிமுகம் செய்யவும் அவற்றைக் குறித்து பிரதிபலிக்கவும் செய்கின்றனர். | 2 |
| நவம்பர் | 3 | வட்டார இசைக்கருவிகளை அறிமுகம் செய்யவும் அவற்றைக் குறித்து பிரதிபலிக்கவும் செய்கின்றனர். | 2 |
| டிசம்பர் | 4 | இசைக்கச்சேரிகளில் ( நிகழ்த்துதல்) பயன்படுத்தும் பக்கவாத்தியம் துணைபக்கவாத்தியம் ஆகியன குறித்த குறிப்புகள் தயாரித்து வெளியிடுகின்றனர். | 2 |
| ஜனவரி | 4 | இசைக்கச்சேரிகளில் ( நிகழ்த்துதல்) பயன்படுத்தும் பக்கவாத்தியம் துணைபக்கவாத்தியம் ஆகியன குறித்த குறிப்புகள் தயாரித்து வெளியிடுகின்றனர். | 2 |
| பிப்ரவரி | 5 | கீதங்கள், எளியகீர்த்தனைகள், பஜன்,அஷ்டபதி, வஞ்சிப்பாடல், கசல் ஆகியவை தேர்வு செய்து பாடுகின்றனர். | 4 |

# இசை- ஒன்பதாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன்<br>ஜூலை<br>ஆகஸ்ட் | 1 | கர்நாடக இசை , இஸ்துஸ்தானி இசை ஆகிய இசைப் பிரிவுகளைக் குறித்து சில இசை வடிவங்களைப் பாடுகின்றனர். | 5 |
| ஆகஸ்ட்<br>செப்டம்பர்<br>அக்டோபர் | 2 | அறிமுகமான பாடல்கள் வழியாக இராகங்களைப் பிரித்தறிகின்றனர்( திரைப்படம், நாடகம், தனிப்பாடல்கள்) | 4 |
| அக்டோபர்<br>4+1<br>நவம்பர்<br>டிசம்பர் | 3 | சுவரஜதி, வர்ணங்கள், கீர்த்தனைகள், பதங்கள்,கசல், பஜனை ஆகியவை பாடுகின்றனர். | |
| ஜனவரி<br>பிப்ரவரி<br>பிப்ரவரி | 4 | பல்வேறு தினவிழாக்களில் தேர்வு செய்யப்பட்ட பாடல்களுக்கு மெட்டமைத்து வெளியிடுகின்றனர். | 5 |

# இசை- பத்தாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன்<br>ஜூலை<br>ஆகஸ்ட் | 1 | செவ்வியல் இசையின் அடிப்படையிலான தேசபக்திப்பாடல்கள் பாடுகின்றனர். | 3 |
| செப்டம்பர்<br>அக்டோபர் | 2 | பாடல்களுக்கு மெட்டமைத்து ஒழுங்குபடுத்தி வெளியிடுகின்றனர். | 4 |
| நவம்பர்<br>டிசம்பர் | 3 | கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகியவற்றில் புகழ்பெற்ற இசை வல்லுநர்களைக் குறித்து அறிந்துகொள்கின்றனர் | 4+1 |
| ஜனவரி<br>பிப்ரவரி<br>மார்ச் | 4 | இந்துஸ்தானி இசைப்பிரிவிலும், கர்நாடக இசைப்பிரிவிலும் பயன்படுத்தக்கூடிய இசைக்கருவிகளைக் குறித்த அறிவைப் பங்கிடுதல். சிறந்த வாத்தியக்கருவி வல்லுநர்களைக் குறித்து அறிந்து கொள்கின்றனர் | 5 |

# நடனம்- எட்டாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | 1 | கேரளத்தின் பாரம்பரிய நடனவடிவங்களைப் பிரித்தறிகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | கேரளத்தின் பாரம்பரிய நடனவடிவங்களைப் பிரித்தறிகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | துள்ளல் கலை- பல்வேறு பிரிவுகள் ஒற்றுமை வேற்றுமைகளைப் பிரித்தறிகின்றனர் | 2 |
| செப்டம்பர் | 2 | துள்ளல் கலை- பல்வேறு பிரிவுகள் ஒற்றுமை வேற்றுமைகளைப் பிரித்தறிகின்றனர். 2 | |
| அக்டோபர் | 3 | முகநடிப்பு வழியாக வெவ்வேறு உணர்வுகளை நிகழ்த்துகின்றனர். | 2 |
| நவம்பர் | 3 | முகநடிப்பு வழியாக வெவ்வேறு உணர்வுகளை நிகழ்த்துகின்றனர். | 2 |
| டிசம்பர் | 4 | வெவ்வேறு உறுப்புகள் வழியாகக் கருத்துப் பரிமாற்றம் செய்கின்றனர். | 2 |
| ஜனவரி | 4 | வெவ்வேறு உறுப்புகள் வழியாகக் கருத்துப் பரிமாற்றம் செய்கின்றனர். | 2 |
| பிப்ரவரி | 5 | அடவுகள் முத்திரைகள், நடிப்புமுறைகள் இவை இணைத்து முறையாகப் பாடல்கள்,கவிதைகள் ஆகியவற்றின் காட்சி உருவாக்கம் நடத்துதல். | 2 |
| மார்ச் | 5 | அடவுகள் முத்திரைகள், நடிப்புமுறைகள் இவை இணைத்து முறையாகப் பாடல்கள்,கவிதைகள் ஆகியவற்றின் காட்சி உருவாக்கம் நடத்துதல். | 2 |

# நடனம்- ஒன்பதாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | 1 | உலகவழக்கு, நாட்டியவழக்கு ஆகிய நடிப்புமுறைகளைக் குறித்த தகவல்கள் சேகரித்து வெளியிடுகின்றனர் | 2 |
| ஜூலை | 1 | உலகவழக்கு, நாட்டியவழக்கு ஆகிய நடிப்புமுறைகளைக் குறித்த தகவல்கள் சேகரித்து வெளியிடுகின்றனர் | 2 |
| ஆகஸ்ட் | 2 | நடனத்தின் ஒரு பதம் வெளியிடுகின்றனர். | 2 |
| செப்டம்பர் | 2 | நடனத்தின் ஒரு பதம் வெளியிடுகின்றனர். | 2 |
| அக்டோபர் | 3 | அறிமுகமானப் பாடல்களுக்குப் பொருத்தமான நடன உருவாக்கம் செய்கின்றனர். | 2 |
| நவம்பர் | 3 | அறிமுகமானப் பாடல்களுக்குப் பொருத்தமான நடன உருவாக்கம் செய்கின்றனர். | 2 |
| டிசம்பர் | 4 | சுத்த நடன வடிவங்களான புஷ்பாஞ்சலி, ஜதிசுவர் போன்ற ஏதேனும் ஒன்றை வெளியிடுகின்றனர். | 2 |
| ஜனவரி | 4 | சுத்த நடன வடிவங்களான புஷ்பாஞ்சலி, ஜதிசுவர் போன்ற ஏதேனும் ஒன்றை வெளியிடுகின்றனர். | 2 |
| பிப்ரவரி | 5 | அரைசெவ்வியல் முறையிலுள்ள அறிமுகமான பாடல்களுக்கு ( பஜனை, பக்திப் பாடல்கள் போன்றவை) ஒழுங்காக பொருளுணர்வுடன் நடன அமைப்பு செய்து வெளியிடுகின்றனர். | 2 |
| மார்ச் | 5 | அரைசெவ்வியல் முறையிலுள்ள அறிமுகமான பாடல்களுக்கு ( பஜனை, பக்திப் பாடல்கள் போன்றவை) ஒழுங்காக பொருளுணர்வுடன் நடன அமைப்பு செய்து வெளியிடுகின்றனர். | 2 |

# நடனம்- பத்தமாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | 1 | கேரளத்தின் நாட்டுப்புற கலைவடிவங்கள் ( ஒப்பனை, திருவாதிரை, மார்க்கம்களி) பிரித்தறிகின்றனர். | 2 |
| ஜூலை | 1 | கேரளத்தின் நாட்டுப்புற கலைவடிவங்கள் ( ஒப்பனை, திருவாதிரை, மார்க்கம்களி) பிரித்தறிகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | 2 | செவ்வியல் நடனத்தில் ஐந்து ஜாதியில் சொற்களுக்கேற்ப ஜதிகள் உண்டு என பிரித்தறிகின்றனர். | 2 |
| செப்படம்பர் | 2 | செவ்வியல் நடனத்தில் ஐந்து ஜாதியில் சொற்களுக்கேற்ப ஜதிகள் உண்டு என பிரித்தறிகின்றனர். | 2 |
| அக்டோபர் | 3 | செவ்வியல் நடனத்தில் நவரசங்களின் முக்கியத்துவம் பிரித்தறிகின்றனர். | 2 |
| நவம்பர் | 3 | செவ்வியல் நடனத்தில் நவரசங்களின் முக்கியத்துவம் பிரித்தறிகின்றனர். | 2 |
| டிசம்பர் | 4 | தேசபக்திப் பாடல்கள், கவிதை ஆகியவற்றின் காட்சி உருவாக்கம் செய்கின்றனர். | 2 |
| ஜனவரி | 4 | தேசபக்திப் பாடல்கள், கவிதை ஆகியவற்றின் காட்சி உருவாக்கம் செய்கின்றனர். | 2 |
| பிப்ரவரி | | | |
| மார்ச் | | | |

# நாடகம்- எட்டாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | கைக்கண்ணாடி, நிலைக்கண்ணாடி | கதாபாத்திரங்களின் சிறப்பகளைப் பிரித்தறிந்து நடிப்பு அமைப்பை உருவாக்குகின்றனர். | 2 |
| ஜூலை | ஓமஞ்சி, கவிதைத்துணுக்கு, பழமொழி காட்சி உருவாக்கம் | • காட்சி, பார்வை, எழுத்து விழிப்புணர்வு<br>• ஒரு கருத்தை கதைப்பகுதிகளாக மாற்றுவதற்கான திறன் வளருகிறது. | 2 |
| ஆகஸ்ட் | கவிதைத்துணுக்கு, பழமொழி காட்சி உருவாக்கம். தொடர்ச்சி | • இட-கால- நிகழ்ச்சி கதாபாத்திரங்களை இணைத்து நாடக அமைப்பை பெருக்குதல்.<br>• கதாபாத்திரங்களுக்கு காட்சிசெயல், உரையாடல் ஆகியவை தயாரித்து வெளியிடு கின்றனர்.<br>• அடிப்படை அறிவுகளை உட்கொண்டு நாடக எழுத்து திரைக்கதை ஆகியவற்றின் ரங்கபாடம் தயாரித்து வெளியிடுகின்றனர்.<br>• அடிப்படை அறிவுகளை உட்கொண்டு நாடக எழுத்து திரைக்கதை ஆகியவற்றின் ரங்கபாடம் தயாரித்து வெளியிடுகின்றனர்.<br>• வகுப்பறையில் வெளியிடும் நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றைப் பார்த்து இரசனைக் குறிப்பு எழுதுகின்றனர். | 2 |
| செப்டம்பர் | நாடக எழுத்து | | 2 |
| அக்டோபர்<br>நவம்பர் | நாடக எழுத்து தொடர்ச்சி நாடக இரசிப்பு | | 2 |
| டிசம்பர் | நாடக இரசிப்பு தொடர்ச்சி. | | 2 |
| ஜனவரி | திரைப்பட உருவாக்கம் | • திரைப்பட உருவாக்கத்தின் அடிப்படை அறிவுகளை பெற்றுக்கொள்கின்றனர்.<br>• அடிப்படை அறிவுகளை உட்கொண்டு நாடக எழுத்து திரைக்கதை ஆகியவற்றிற்கு ரங்க பாடம் தயாரித்து வெளியிடுகின்றனர். | 2 |
| பிப்ரவரி | திரைப்பட உருவாக்கம் தொடர்ச்சி | | 2 |
| மார்ச் | திரைப்படத் திருவிழா | | 2 |
| | திரைப்படத்விழா தொடர்ச்சி | | 2 |

## நாடகம்- ஒன்பதாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | பாவாயானம் | ஒவ்வொரு கதாபாத்திரத்திலும் வெவ்வேறு சிறப்புகள் உள்ளவர்கள் கதாபாத்திரங்களின் இயல்பு சிறப்புகளுக்குப் பொருத்தமான நடிப்புமுறையை வளரச்செய்வதற்கான அறிவைப் பெறுகின்றனர். | 2 |
| ஜூலை | கதையில் யார்? | • தனியாகவும் குழுவாகவும் நால்வகை நடிப்பை பயன்படுத்தி உருவாக்கங்கள் செய்கின்றனர்.<br>• கதாபாத்திரங்களை நடிக்கும் போது இடகாலங்களோடு இணையும் முறையை வளரச் செய்து பயன்படுத்துதல்.<br>• ரங்க நிகழ்த்துதலுக்கு தேவையான சமையம், இசை கோரியோகிராபி ஆகியவை பயன்படுத்துவதில் பொதுவான அறிவை அடைகின்றனர். | 2 |
| ஆகஸ்ட் | கதையில் யார்? | | 2 |
| செப்டம்பர் | கதையில் யார்? | | 2 |
| அக்டோபர் | பாடநூலிலிருந்து ஒரு நாடகம் | • தனியாகவும் குழுவாகவும் நால்வகை நடிப்பை பயன்படுத்தி உருவாக்கங்கள் செய்கின்றனர்.<br>• கதாபாத்திரங்களை நடிக்கும்போது இடகாலங்களுடன் இணையும் முறையை வளரச் செய்து பயன்படுத்துகின்றனர்.<br>• நாடகம் ( எழுத்து) திரைக்கதை ஆகியவை தயாரிக்கின்னர்.<br>• எழுத்துவடிவம், திரைக்கதை ஆகியவற்றை எழுதும் நேரத்தில் நிகழ்ச்சிகள், செயல்கள் ஆகியவை யுக்தியாகவும், படைப்பாற்றலோடும் ஒழுங்கு செய்வதற்கான அறிவை அடைகின்றனர் | 2 |
| நவம்பர் | பாடநூலிலிருந்து ஒரு நாடகம் | | 2 |
| டிசம்பர் | திரைப்படப் பணிமனை | • எளிய திரைப்படங்களை உரவாக்கும் செயல்பாடுகளில் தலைமையேற்று திரைப்படம் உருவாக்குகின்றனர்.<br>• திரைப்படம், நாடகம் ஆகியவற்றில் நிகழ்த்துதல்தள் பார்த்து இரசிக்கின்றனர். | 2 |
| ஜனவரி | திரைப்படப் பணிமனை | | 2 |
| பிப்ரவரி | திரைப்படப் பணிமனை | | 2 |
| மார்ச் | திரைப்படப் பணிமனை | | 2 |

## நாடகம்- பத்தாம் நிலை

| அலகு | | கற்றல் அடைவுகள் | பிரிவேளை |
|---|---|---|---|
| ஜூன் | காட்சிமொழி- மேற்கத்தியம் கிழக்கத்தியம் | • மேற்கத்திய, கிழக்கத்திய நடிப்புமுறைகளைப் பயன்படுத்தி கதாபாத்திரங்களின்----------ஒழுங்குசெய்வதில் அறிவுபெறுகின்றனர்.<br>• திரைப்படச்சாலைகளின் சிறப்புகளைக் கருத்திற்கொண்டு பாடப்பகுதி/ பொதுக்கருத்து ஆகியவை நாடகமாக வெளியிடுகின்றனர்.<br>• சுதந்திரமான எழுத்துநடை வளர்வதற்கு உட்கொண்ட கருத்துகள் நாடகம் திரைக்கதை ஆகியவை எழுதும் போது பயன்படுத்துகின்றனர். | 2 |
| ஜூலை | | | 2 |
| ஆகஸ்ட் | | | 2 |
| செப்டம்பர் | நடிப்பு நாடகத்திலும் திரைப்படத்திலும் | • அரங்கிலும், புகைப்படக் கருவியின் முன்னாகவும் நடிப்பதற்குள்ள அறிவுகள் பெறுகின்றனர். | 2 |
| அக்டோபர் | | | 2 |
| நவம்பர் | | | 2 |
| டிசம்பர் | திரைப்படப் பணிமனை | • பிற கலைவடிவங்களின் வாய்ப்புகளை நாடகம் திரைப்படம் ஆகியவை தயாரிப்பதில் பயன்படுத்துகின்றனர்.<br>• சுதந்திரமான எழுத்து நடை வளரச் செய்வதற்கு உட்கொண்ட அறிவுகள் நாடகம் திரைக்கதை ஆகியவை எழுதும் போது பயன்படுத்துகின்றனர்.<br>• நாடகம், திரைப்படம் ஆகியவை பார்த்து, இரசித்து விமர்சனத்துடன் விவாதிக்கின்றனர். | 2 |
| ஜனவரி | | | 2 |
| பிப்ரவரி | | | 2 |
| மார்ச் | | | 2 |

# பிற்சேர்க்கை-2 மாதிரி வினாத்தாள்

## பகுதி - A : ஓவியக்கலை

வகுப்பு : ஒன்பது

நேரம் : 2 மணிநேரம்
புள்ளி : 40

*ஆசிரியருக்கான குறிப்புகள்*

- வரைவதற்கும் வண்ணம் தீட்டுவதற்குமுள்ள பொருட்களைக் கொண்டுவருவதற்கான அறிவுரைய முன்கூட்டியே குழந்தைகளுக்கு வழங்கவேண்டும்
- ஓவியம் வரைவதற்கான டம்மி 1/4 அளவிலான அட்டைத்தாள் அளிக்க வேண்டும்.
- விடை எழுதுவதற்கான தாளும் வழங்கவேண்டும்.

1. ஒரு சிற்பம் உருவாக்கும் போது அதன் நான்கு பக்கங்களிலுள்ள காட்சியின் வரைபடம் மிகத் தேவையாகும். *(30 நிமிடம்*
   (a) ஒரு மரக்கட்டை மீது இருக்கும் பறவையின் சிற்பம் உருவாக்குவதற்கு ஏதேனும் ஒரு கோணத்திலிருந்து பார்க்கும் முறையிலான வரைபடம் வரையவும் ( பென்சில் பயன்படுத்தி வரைந்தால் போதும் கொடுக்கப்பட்டுள்ள தாளிற்கு பொருத்தமாக வரையவேண்டும்.) *(8நிமிடம்)*
   (b) சிற்ப உருவாக்கத்திற்குப் பயன்படுத்துகின்ற நான்கு ஊடகங்கள் எவை? *(2 நிமிடம்)*

2. சமகால உலகில் மிகமுக்கியமான கருத்து வெளியீட்டு ஊடகமே கேலிச்சித்திரம். விமர்சனத்துடனும், நகைச்சுவையுடனும் கருத்தை அணுகும்முறையே கேலிச்சித்திரத்தின் சிறப்பு. *(30 நிமிடம்)*
   (a) 'பட்டணத்துக் காட்சி' என்ற தலைப்பில் சிந்தனையை தூண்டக்கூடிய ஒரு படம் வரையவும். *(10 நிமிடம்)*
   (பென்சில், நீர்ச்சாயம், மெழுகு இவற்றில் ஏதேனும் பயன்படுத்தலாம்)
   (b) புகழ்பெற்ற ஓவியர்களில் உங்களுக்குத் தெரிந்த ஏதேனும் நான்கு பேரின் பெயர்களை எழுதவும்.
   அதில் ஏதேனும் ஒருவரைக் குறித்து சிறு விளக்கம். ( காலகட்டம், ஓவியத்தின் சிறப்புகள், கருத்து வெளியீட்டுமுறை வரையும் நடை, சமூக பண்பாட்டு கண்ணோட்டம் ஆகியவற்றை உட்படுத்தி) எழுதவும் *(5 நிமிடம்)*

3. (a) “கடற்கரையில்’என்ற தலைப்பின் அடிப்படையில் பாவஅசைவுகளுடன் கூடிய மனித உருவங்களை உட்படுத்திக் கற்பனையாக ஒரு படம் வரைந்து நிறம் கொடுக்கவும். *(60 நிமிடம்)* *(10 நிமிடம்)*
(கொடுக்கப்பட்டுள்ள தாளிற்குப் பொருத்தமாக வரையவேண்டும். நிறம் கொடுக்க விருப்பமான ஊடகத்தைப் பயன்படுத்தலாம், அருகிலும் தொலைவிலும் நிற்கின்ற பொருட்களின் அளவினுடையவும் நிறத்தினு டையவும் வேறுபாட்டை கருத்திற்கொண்டு வரைய வேண்டும்.)

(b) கீழே கூறப்பட்டுள்ளவர்களில் ஏதேனும் ஓவியரைக் குறித்து சிறு குறிப்பு தயாரிக்கவும் *(5 நிமிடம்)*

ராபேல்
இராஜரவிவர்மா
கெ. சி. எஸ். பணிக்கர்
நம்பூதிரி
எம். பி. தேவன்
மைக்கல் ஆஞ்சலோ

## விடைகள்

### பகுதி A : ஓவியக்கலை

1. (a) *ஓவியத்தை மதிப்பீடு செய்தல்*

- கருத்து முழுமை
- இயற்கையான பொருட்களுடன் உள்ள ஒற்றுமை
- கோடுகளின் பயன்பாடு, நிறங்களின் கலைவை
- இடத்தின் பயன்பாட்டுமுறை
- முழுமை
  - எல்லாச் சிறப்புகளும் சேர்ந்தது
  - இயன்ற அளவு சிறப்புகள் சேர்ந்தது
  - சிறப்புகள் ஓரளவு மட்டுமுள்ளது.
  - சிறப்புகள் இனியும் அடையவேண்டும்.

இவற்றைக் கணக்கில் கொண்டு 8- ற்கு எத்தனை புள்ளிகள் அளிக்கலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

(b) *டெராக்கோட்டை*

- களிமண்
- தடி
- கருங்கல்
- மார்பிள்
- பிளாஸ்டர் ஆப் பாரிஸ்

ஏதாவது 4 ஊடகங்களை எழுதினால் 2 புள்ளி

2. (a) *கேலிச்சித்திர மதிப்பீடு*

- கருத்து வெளியீடு
- வரைதல்முறை
- விமர்சனத் தன்மை
- நகைச்சுவை
- உரையாடல் சிறப்பு

  - எல்லாச் சிறப்புகளும் உட்கொண்டது.
  - இயன்ற அளவு சிறப்புகள் உட்கொண்டது.
  - ஓரளவு சிறப்புகள் உட்கொண்டது
  - இனியும் கூடுதல் சிறப்புகள் பெறவேண்டியுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு 10- க்கு எத்தனை புள்ளிகள் வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

(b) *கேலிச்சித்திர ஓவியர்கள்*

- சங்கர்
- பி. எம். கபூர்
- அபு
- ஓ, வி. விஜயன்
- யேசுதாசன்
- குட்டி
- கோபிகிருஷ்ணன்
- டோம்ஸ்
- .............

4 பெயர்களை எழுதினால் 2 புள்ளி

ஒருவரைக் குறித்த சிறுகுறிப்பிற்கு 3 புள்ளி

---

3. (a) *'கடற்கரையில்' காட்சிப்படுத்துதல்*

- தலைப்புடன் உள்ள தொடர்பு
- Back ground, Foreground - வேறுபடுத்தல்
- ஒளியினுடையவும், நிழலினுடையவும் பயன்பாடு
- பொருட்களின் ஒழுங்கு
- நிறப்பயன்பாடு/ முறை
- முழுமை

  - எல்லா சிறப்புகளும் உட்கொண்டது.
  - இயன்ற அளவு சிறப்புகள் உட்பட்டது.
  - ஓரளவு சிறப்புகள் உட்பட்டது.
  - இனியும் கூடுதல் சிறப்புகள் பெறவேண்டியுள்ளது.

  இவற்றைக் கருத்தில் கொண்டு 10- க்கு எத்தனை புள்ளி வழங்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

(b) *ஓவியர்களின் வரலாறு*

- காலகட்டம்
- பண்பாட்டு ஈடுபாடு நன்கொடைகள்

- ■ வரையும் முறை/ ஊடகம்/ நடை
- ■ ஓவியக்கலையின் நன்கொடைகள்

இவை உட்பட்ட குறிப்பு தயாரிப்பதற்கு 5 புள்ளி

மொத்த புள்ளி 40

## இசை

நேரம் : 2 மணிநேரம்

வகுப்பு : ஒன்பது

புள்ளி : 40

*ஆசிரியருக்கான பொது வரையறைகள்*

- ஒவ்வொரு வினாவுக்கும் தேவையான முன்னேற்பாடுகள் செய்யவேண்டும்
- எல்லாக் குழந்தைகளுக்கும் தேவைக்கேற்ப ஒரே நேரம் கிடைக்கிறது என்பதை உறுதி செய்யவேண்டும்.
- நேரடியாக மதிப்பீடு செய்ய வேண்டியவற்றை உடனடியாக செய்து குறிப்பிட வேண்டும்.

1. அறிமுகமான பாடல்களின் அட்டவணை அளித்தல். இதிலிருந்து ஒரே மெட்டுடைய பாடல்களைக் கண்டுபிடித்து வெளியிடுதல். *(60 நிமிடம்)*

- 'அனுராகவிலோசனனாயி.....'
- 'தலைக்குமீதே ......'
- 'ஆரேயும் பாவகாயகனாக்கும்....'
- 'ஒரு மதுரக்கினாவின்....'
- 'ஹம் தெர.....'
- 'காற்றே காற்றே ....'
- 'அழலின் ஆழங்களே...'

2. வட்டாரத்திலுள்ள சில கலைவடிவங்களின் வீடியோ காட்டுதல். பார்த்த கலைவடிவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இசைக்கருவிகளை அட்டவணைப்படுத்துதல். *(30 நிமிடம்)*

*கலைவடிவங்கள்*

1. கதகளி
2. கர்நாடக இசைக் கச்சேரி
3. கானமேளா
4. கதாபிரசங்கம்

3. (a) பாடப்பகுதியிலுள்ள கவிதைக்கு மெட்டமைத்து வெளியிடுதல். *(30 நிமிடம்)*

(b) ஒரு கவிதைக்கு மெட்டமைத்துப் பாடலாக வடிவமைக்க எவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும்?

## விடைகள் பிரிவு B : இசை

1. *ஒரே மெட்டிலுள்ள பாடல்களைக் கண்டுபிடித்தல்*

- நான்கு பாடல்கள் கண்டுபிடித்தால் - 10 புள்ளி
- மூன்று பாடல்கள் கண்டுபிடித்தால் - 7 புள்ளி
- இரண்டு பாடல்கள் கண்டுபிடித்தால் - 5 புள்ளி
- ஒரு பாடல் மட்டும் கண்டுபிடித்தால் - 3 புள்ளி

2.
- கதகளி
- கர்நாடக இசைக்கச்சேரி
- கானமேளா
- கதாப் பிரசங்கம்

  - முழுமையாக கண்டுபிடித்தால் - 10 புள்ளி
  - இயன்றளவு கண்டுபிடித்தால் - 7 புள்ளி
  - குறைந்த அளவு கண்டிபிடித்தால் - 5 புள்ளி
  - மிகக் குறைவாக மட்டும் கண்டுபிடித்தால் - 3 புள்ளி

3. (a) *கவிதைக்கு மெட்டுகண்டுபிடித்து வெளியிடுதல்*

- சரீரம்
- சுருதி
- தாளம்
- இராகம் ( மெட்டு)
- பாவம்
- ஸ்தாயி
- இலக்கியத்தூய்மை

  - எல்லா சிறப்புகளும் உள்ளன.
  - இயன்றளவு சிறப்புகள் உள்ளன
  - குறைந்தளவு சிறப்புகள் உள்ளன
  - சிறப்புகள் இனியும் அடையவேண்டியுள்ளன.

இவை அடிப்படையில் 10- க்கு எத்தனை புள்ளி எனத் தீர்மானிக்க வேண்டும்.

3. (b)
- சரீரம்
- சுருதி
- தாளம்
- இராகம் ( மெட்டு)
- பாவம்
- ஸ்தாயி
- இலக்கியத்தூய்மை

  - ஏழு எண்ணம் சரியானால் - 10 புள்ளி
  - ஏதேனும் ஐந்து சரியானால் - 7 புள்ளி
  - ஏதேனும் நான்கு சரியானால் - 5 புள்ளி
  - ஏதேனும் மூன்று சரியானால் - 3 புள்ளி

# பகுதி 3 : நடனம்

வகுப்பு : ஒன்பது

நேரம் : 2 மணிநேரம்
புள்ளி : 40

*ஆசிரியருக்கான பொது வரையறைகள்*

- மாணவர்களை ஐந்து பேர் அடங்கிய குழுக்களாகப் பிரித்துச் செயல்பாடுகளைச் செய்ய வைக்கவேண்டும்.
- நடன உருவாக்கத்திற்கு பொருத்தாமான பாடல்களைத் தேர்வு செய்ய வேண்டும்.
- பொருளைக் குறித்தும் நடிப்பு வாய்ப்புகளைக் குறித்தும் கலந்துரையாடல் செய்வதற்கான வாய்ப்பை எல்லா குழுவிற்கு சமமாக வழங்க வேண்டும்.
- உடனடியாக மதிப்பீடு செய்ய வேண்டியவற்றை அப்போதே மதிப்பீடு செய்து குறிப்பிட வேண்டும்.

1. (a) ஏதேனும் ஒரு சுத்த நடனவடிவம்( புஷ்பாஞ்சலி அல்லது ஜதிசுவரம்) நிகழ்த்துதல் ஒரு குழுவிற்கு 10 நிமிடநேரம். (15 புள்ளிகள்)

   (b) விடைஎழுதுக (5 புள்ளிகள்)

   1. நடனக் கச்சேரிகளில் முதலில் புஷ்பாஞ்சலி நிகழ்த்துவதன் காரணம் என்ன?
   2. சுத்த நடனங்களுக்கு ஐந்து எடுத்துக்காட்டுகள் எழுதுக.

2. (a) பாடலுக்கு நடன உருவாக்கம் அளிக்கவும். ஒரு குழுவிற்கு 10 நிமிடம் (15 புள்ளிகள்)

   (b) விடை எழுதுக

   1. உலக வழக்கு, நாட்டிய வழக்கு ஆகியவற்றைக் குறித்து குறிப்பு எழுதவும். (5 புள்ளிகள்)

## விடைகள்

# பகுதி C : நடனம்

1. (a)

- அடவுதூய்மை
- தாளம்
- வெளியிடும் நடை

இவற்றின் அடிப்படையில் நிகழ்த்துதலுக்கு 15 -க்கு பொருத்தமான புள்ளி அளிக்கவும். .

(b) 1. ரங்கதூய்மைக்கும் தேவபிரீதிக்கும், நடனத்திற்காக உடலை பக்குவப்படுத்துவதற்குமாக புஷ்பாஞ்சலி செய்கிறோம்

2.
1.
2.
3
4

5 எடுத்துக்காட்டுகள் எழுதினால் 3 புள்ளி
3 எடுத்துக்காட்டுகள் எழுதினால் 2 புள்ளி
1 எடுத்துக்காட்டு எழுதினால் 1 புள்ளி

2. (a)

- தாள உணர்வு
- முத்திரைகளின் ஒழுங்கு
- வெளியிடும் சிறப்பு

இவற்றின் அடிப்படையில் நடனத்திற்கு 15- க்கு பொருத்தமான புள்ளி அளிக்கவும்.

(b) *உலகவழக்கு*

சாதாரண நிலையில் மக்களுக்கு ஏற்படும் கவலைகளும் மகிழ்ச்சிகளும் பிற உணர்வுகளும், செயல்களும் குறிப்பிட்ட நிபந்தனையின்றி ( தொழில்நுட்பமல்லாத) பின்பற்றி சரியாக நடிப்பதே உலகவழக்கு

(3 புள்ளி)

*நாட்டிய வழக்கு*

நிபந்தனையின்றி அந்தந்த வரையறைகளுக்கேற்ப நிலைகள் கஸ்தங்கள், பாவங்கள், நடன அசைவுகள் ஆகியவை வழியாக நடையுடன் கூடிய நடிப்பே நாட்டிய வழக்கு

(2 புள்ளி)

## பகுதி 4 நாடகம்

நேரம் : 2 மணிநேரம்

வகுப்பு: ஒன்பது

புள்ளி :

*ஆசிரியருக்கான பொது வரையறைகள்*

- ஒவ்வொரு வினாவுக்கும் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
- எல்லா குழந்தைகளுக்கும் தேவைக்கேற்ப ஒரே நேரம் கிடைக்கிறது என்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- நேரடியாக மதிப்பீடு செய்ய வேண்டியவற்றை அப்போதே மதிப்பீடு செய்யவேண்டும்.

1. ***கதாபாத்திரத்தை நடித்தல்***

(a) குழந்தைகளை 5 அல்லது 6 பேர் அடங்கிய குழுக்களாக்கவும். ஒன்பதாம் வகுப்பு மொழிப்பாடநூலில்/ புகழ்பெற்ற இலக்கிய நூற்களிலுள்ள கதாபாத்திரங்களின் விவரங்கள் அடங்கிய சிறு குறிப்பை விநியோகித்தல். கிடைத்த காதாபாத்திரங்களின் சிறப்புகளைக் குறித்த விளக்கங்களை தனிநபராக தயாரிக்கும் படி கூறுல்

(b) தொடர்ந்து வெவ்வேறு சூழல்களைத் திட்டமிட்டு அந்தச் சூழலில் பல்வேறு கதாபாத்திரங்கள் ஒன்றுசேரும் வகையில் நடிப்பதற்குக் கூறுதல்.

*கதாபாத்திரங்களுக்கு எடுத்துக்காட்டு*

- கண்ணில் மூக்கில்லாத சூரி நம்பூதிரிப்பாடு
- ஒந்து மந்துகால் ஜி
- அப்புக்கிளி
- பொன்குரிசு தோமா

*கதாபாத்திரங்களின் சிறப்புகளின் குறிப்பு*

- கதாபாத்திரத்தின் வயது, வேடம், ஸ்தாயிபாவம், அசைவு, உரையாடல் முறை, தனித்துவம்

*சூழல்களுக்கு எடுத்துக்காட்டு*

- மரணவீடு, வேளாண்நிலம், தேநீர்கடை, பார்பர் ஷாப், குளிக்கும் இடம், ரயில்நிலையம், விபத்துப் பகுதி

---

2. ***கவிதைத் துணுக்கு/ பழமொழி காட்சிப்படுத்துதல், இரசனைக்குறிப்பு எழுதுதல்***

(a) 9 -ம் வகுப்பு மொழிப்பாட நூலில் உள்ள கவிதைத் துணுக்குகள் அல்லது புகழ்பெற்ற பழமொழிகளைப் பல்வேறு சூழல்களுக்குக் கொடுத்தல். இவற்றை வாழ்க்கைச் சூழல்களாக விரிவாக்கி நிகழ்த்துவதற்கு கூறுதல்( எழுத்து வடிவம் வேண்டாம்)

(b) ஆயத்தப்படுத்துவதற்காக 10 முதல் 15 நிமிடம் வரை வழங்கலாம். நிகழ்த்துவதற்கு 35 நிமிடம். ஒரு குழுவின் நிகழ்த்துதலை பிற குழுக்கள் தரநிர்ணயக்குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல். எல்லா நிகழ்த்துதல்களுக்குப் பின்பு தனிநபராக இரசனைக் குறிப்பு தயாரித்தல்.

---

3. ***திரைப்பட விழா ஆயத்தம்***

(a) உங்கள் பள்ளிக்கூடத்தில் 3 நாட்கள் நீண்டுநிற்கும் ஒரு திரைப்பட விழாவை ஒழுங்கு செய்யவும். பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் அருகிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் விழாவைப் பார்ப்பதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். இதற்காகப் பள்ளிக்கூடத்தில் நடைபெறவேண்டிய முன்னேற்பாடுகளை விளக்கமாகக் குறிப்பிடவும்.

## விடைகள்

1.
- ■ நால்வகை நடிப்பிற்கா வாய்ப்புகள் கருத்திற்கொள்ளப்பட்டதா?
- ■ கதாபாத்திரங்களின் பொருத்தம்
- ■ சூழ்நிலைக்கேற்ப கதாபாத்திரங்களை உருவாக்க முடிந்ததா?
- ■ நிகழ்த்துதலின் சிறப்பு/ தனித்துவம்

| | |
|---|---|
| • சிறந்த முறையில் விளக்கங்களுடன் கருத்திற் கொண்டது | 4 |
| • எல்லாம் கருத்திற் கொண்டது | 3 |
| • ஒரு சில கருத்திற்கொண்டது | 2 |
| • கூடுதல் மேம்பட வேண்டியது | 1 |

2.
- முழுமை
- கருத்துத் தெளிவு
- அமைப்பு
- மொழியழகு

| | |
|---|---|
| • உயர்ந்தநிலை | 4 |
| • திருப்தியானது | 3 |
| • சராசரி | 2 |
| • கூடுதல் மேம்படவேண்டியது | 1 |

---

3. விடைக்குறிப்பு
- ♦ தேர்வுசெய்யும் நாள்( பள்ளிநேரம் வீணாகாமல்)
- ♦ பல்வேறு அரங்குகள்
- ♦ கணினி மின்னினைப்புகளை ஒழுங்கு செய்தல்
- ♦ திரைப்படங்களின் பட்டியல் தயாரித்தல்.
- ♦ திரைப்படத்தின் சிறுவிவரங்கள (Synopsis) தயாரித்தல்
- ♦ உறுப்பினர்களின் பதிவு அட்டை
- ♦ புரோஷர்கள்/ நோட்டீஸ்/ போஸ்ட்டர்
- ♦ ஒப்பன் பாரம்/ பேட்டி
- ♦ இரசனைக்குறிப்பு தயாரித்தல்
- ♦ நிகழ்வறிக்கை
- ♦ விருந்தினர்களின் பட்டியல்
- ♦ தொண்டர்கள், பொறுப்புகள் என நிகழ்ச்சியின் முழுமையான திட்டமிடல்

- முழுமை
- ஆயத்தங்களின் ஒழுங்கான வெளியிடல்
- கூறுவதன் அழுகு
- பொறுப்புகளின் பிரிவு

| | |
|---|---|
| • எல்லா விளக்கங்களும் உட்பட்டது | 4 |
| • திருப்தியானது | 3 |
| • ஓரளவு முழுமை அடைந்தது | 2 |
| • கூடுதல் மேம்பட வேண்டியது | 1 |

## பிற்சேர்க்கை 2

*கலைக்கல்வி- பொதுத்தேர்வு*

**கலைக்கல்வி- பொதுத்தேர்வு தொடர்பான விதிமுறைகள்**

கலைக்கல்விக்கு 4 பிரிவுகள் உள்ளன

1. ஓவியக்கலை
2. இசை
3. நடனம்
4. நாடகம்

இந்த 4 துறைகளுடையவும் கற்றல் கட்டாயமானது

ஆனால் பொதுத்தேர்விற்கு இந்த 4 துறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்யலாம்.

ஒரு துறையைத் தேர்வு செய்த பின் எல்லா வினாக்களுக்கும் அந்தத் துறையில் உள்ளதாக இருக்க வேண்டும். பிற துறைகளைக் கணக்கிடக் கூடாது.

ஒரு மாதிரி வினாத்தாளைப் பாருங்கள்

**மாதிரி வினாத்தாள் கலைக்கல்வி**

வகுப்பு : 9 நேரம் : 2 மணிநேரம்

புள்ளி : 40

**பொதுவரையறைள்:**

1) இந்த வினாத்தாளில் 4 பகுதிகள் உள்ளன. பகுதி A ஓவியக்கலை, பகுதி B இசை, பகுதிC நடனம், பகுதி D நாடகம். இவற்றில் ஏதேனும் ஒரு பகுதியைத் தேர்வு செய்து அதிலுள்ள வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
2) ஒரு பகுதியைத் தேர்வு செய்தால் எல்லா வினாக்களும் அதே பகுதியிலிருந்தே எடுக்க வேண்டும்.
3) ஒவ்வொரு வினாவிற்கான நேரமும், புள்ளியும் அந்தந்த வினாக்களுக்கு நேராக அளிக் கப்பட்டுள்ளது.